# நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள்



பெ.சு.மணி

ராமகிருஷ்ணா
மிஷன்
கொழும்பு - 6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

499 543 798

# நூற்றாண்டு விழாக் காணும்

# சுவாமி விவேகானந்தர்

## சிகாகோ சொற்பொழிவுகள்

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

பெ. சு. மணி

ராமகிருஷ்ண மிஷன்
40, ராமகிருஷ்ணா சாலை
கொழும்பு—6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
704836

நூற்றாண்டு விழா
முதற் பதிப்பு : நவம்பர், 1993

வெளியிடுபவர்

© தலைவர்

ராமகிருஷ்ண மிஷன்,
40, ராமகிருஷ்ணா சாலை,
கொழும்பு-6

விலை : ரூ. 40- 00

அச்சிட்டோர் :
கவிதா அச்சகம்,
24, பஜார் ரோடு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 JAN 2022
LIBRARY

# வாழ்த்துரை-1



RAMAKRISHNA MATH
Ramakrishna Math Marg
Domalguda
Hyderabad-500 029

Phone : 63936, 63937

28th Sept, 1993

## M E S S A G E

This is an important book. The more people in India and Sri Lanka read this book, the sooner will they get the wisdom and the strength to achieve human development through the path of harmony ahd peace.

My love and best wishes go to the author.

Ranganathananda

( Swami Ranganathananda )

701836

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை-2

Sri Ramakrishna Math
16, Ramakrishna Math Road,
Mylapore, Madras - 600 004.
Post Box No : 635. ✆ : 71231, 71959

01-11.1993.

அன்பார்ந்த திரு. பெ.சு. மணி அவர்களுக்கு,

நீங்கள் இயற்றிய 'நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள்' என்னும் நூல் கொழும்பு ஸ்ரீலங்கா ராமகிருஷ்ண மிஷன் மூலமாக வெளியிடப்படும் என்பதறிந்து மிக்க மகிழ்ச்சி. ராமகிருஷ்ண இயக்கத்தைப் பற்றிய தங்கள் மற்ற நூல்களைப் போல் இதுவும் ஓர் ஆய்வு நூலாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

சுவாமி விவேகானந்தரின் 'சிகாகோ சொற்பொழிவுகள்' ஆன்மீக வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்தச் சொற்பொழிவுகளின் நூற்றாண்டு விழாவை ஆன்மீகம், சமயம் போன்ற துறைகள் மட்டுமின்றி கல்வி, கலை போன்ற துறைகளும் பல்வேறு நாடுகளும் கொண்டாடுவது அந்தச் சொற்பொழிவுகளின் பரிமாணத்தை, அவற்றின் பிரபஞ்சம் தழுவிய இயல்பைக் காட்டி நிற்கிறது. நாடு, மொழி, இனம் கடந்து இன்று சுவாமிஜியின் கருத்துக்கள் எல்லா தரப்பு சிந்தனையாளர்களின் கவனத்தையும் கவர்ந்து வருகின்றன. வரிசை வரிசையாக அவரது நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தற்காலத்தில் சுவாமிஜியின் கருத்துக்கள் எந்த அளவுக்குத் தேவை என்பதையே இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன.

இந்தச் சொற்பொழிவுகளை வேதாந்த அடிப்படையில் எடுத்துக் கூறி, அவை சமுதாயத்திற்கு எவ்வாறு இன்று இன்றியமையாதவை என்று நீங்கள் காட்டியிருப்பது ஒரு சிறந்த பாராட்டத் தக்க முயற்சி. இந்த முயற்சி இறையருளால் தக்க பலனளிக்கட்டும் என்று எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

நல்வாழ்த்துக்களுடன்,

இறைத் தொண்டில்,

(சுவாமி கௌதமானந்தர்)
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சுவாமி ஆத்மகனாநந்தா
செயலர், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு—6.

மனித நேய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நன்முயற்சி வேதகாலந் தொட்டே இவ்வுலகில் நடந்து வந்துள்ளது. இம்முயற்சியில் பல ஞானிகளும் பெரியோர்களும் தங்களது அரும்பங்கை ஆற்றியுள்ளனர். அந்த மகான்களின் வரிசையில் சமீபகாலத்தில் தோன்றிய அவதார புருஷரே பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆவார்.

மக்களை ஒன்றுபடுத்தும் மகத்தான சக்தியே சமயம் எனப்படும். ஆனால் சமயம் என்பது வெறும் கொள்கைகளோ, சடங்குகளோ, வழிபாட்டுத்தலங்களோ, அல்லது சமயச் சின்னங்களோ மட்டும் ஆகா. சமயத்தின் முடிவான நோக்கம் மனித நேயத்தை வளர்ப்பதில்தான் அமைந்துள்ளது. எனவே சமயங்களிடையே காணப்படும் புற வேற்றுமைகளைப் பொருட்படுத்தாது, அவற்றின் அகத்தே விளங்கும் ஒற்றுமையை, மனித நேயத்தை வளர்த்தல் அவசியம். இதுதான் ஸ்ரீராமகிருஷ்ணர் உலகிற்கு அளித்த மகத்தான செய்தியாகும்.

இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன், அமெரிக்காவின் சிகாகோ நகரத்தில் நடைபெற்ற உலக சர்வமத மாநாட்டில் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரதமசீடர் சுவாமி விவேகானந்தரின் திருவாயிலிருந்து இச்செய்தி திரும்பவும் இவ்வுலகிற்கு அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு காரணங்களால் பிளவுண்டு கிடக்கும் இன்றைய மனித சமுதாயத்திற்கு இச்செய்தி மிகவும் தேவையாக உள்ளது. எவ்வளவு விரைவில் மக்கள் இச்செய்தியை ஏற்றுக் கொள்கிறார்களோ அவ்வளவு விரைவில் இப்பூமியில் அமைதியும், நிறைவும் தோன்றும். இதுதான் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவு நூற்றாண்டு விழாவின் நோக்கமாகும். மனிதநேய ஒருமைப்பாட்டை வளர்க்கும் இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியின் ஒரு அங்கமாக இந்நூலை வெளியிடுவதில் நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

இந்நூலையும் அதன் ஆசிரியரையும் வாழ்த்தி, எங்களைப் பெருமைப் படுத்தியுள்ள ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் பொதுத் துணைத்தலைவர் ஸ்ரீமத்சுவாமி ரங்கநாதாநந்தஜி மகராஜ் அவர்களுக்கு எங்கள் பணிவான வணக்கங்களை சமர்ப்பிக்கிறோம். சுவாமி அவர்கள் கொழும்பு ராமகிருஷ்ண மிஷனின் தலைவரும் ஆவார் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

இந் நூலிற்கு ஒரு சிறப்பான வாழ்த்துரை வழங்கியுள்ள சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் அவர்களுக்கும் எங்களது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலின் ஆசிரியர் திரு. பெ. சு. மணி அவர்கள் ஒரு சிறந்த ராமகிருஷ்ண பக்தர்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளரும் கூட. இதுவரை சுமார் 25 ஆராய்ச்சி நூல்களையும், பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு அரசின் பாராட்டுப் பரிசில்களையும் பெற்றுள்ளார் இவர். 'இராமகிருஷ்ணர் இயக்கமும், தமிழ்நாடும்' என்னும் இவருடைய அரிய ஆய்வுநூல் தமிழ்நாடு அரசின் முதற் பரிசைப் பெற்றது என்பதும் குறிப்பிடத் தக்கது. சென்ற ஆண்டு இலங்கைக்கு இவர் விஜயம் செய்திருந்த சமயம், இப்புத்தகத்தை எழுத வேண்டும் என்று கேட்டிருந்தோம். அவ்வேண்டுகோளை அன்புடன் ஏற்று, குறுகிய காலத்திலே இப்புத்தகத்தை எழுதிமுடித்த அன்னாருக்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள் என்றென்றும் நிறைந்திருக்கப் பிரார்த்திக்கிறோம்.

கடைசியாக, இந்நூலை இவ்வளவு சிறப்பாக அச்சிட்ட கவிதா அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

இப்புத்தகத்தைப் பலர் விரும்பிப் படித்து பயன்பெற வேண்டும் என்பதே எங்கள் அவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகளின் நூற்றாண்டு விழா வெளியீடாக இந்நூல் வெளிவருகின்றது.

கொழும்பு ராமகிருஷ்ண மிஷன் செயலர் சுவாமி ஆத்மகனாநந்தாஜி மகராஜ் அவர்கள் இந்த நூலை எழுதுமாறு பணித்ததுடன், கொழும்பு ராமகிருஷ்ணமிஷன் சார்பில் இந்நூலை வெளியிடவும் ஏற்பாடு செய்தார். இந்த நூலிற்கான வாழ்த்துரைகளை ஸ்ரீமத்சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் அவர்களிடமிருந்தும், சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ஸ்மரணானந்தாஜி மகராஜ் அவர்களிடமிருந்தும் பெற்றுத் தந்தார். இத்தகைய பேராதரவையும், நல் வாய்ப்பையும் எனக்களித்த சுவாமி ஆத்மகனாநந்தாஜி மகராஜ் அவர்களுக்கு பணிவார்ந்த என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் அவர்களுக்கு, இந்நூல் எழுதுவது தொடர்பாக ஆலோசனைகள் வேண்டி நான் அக்டோபர் 1992-இல் கடிதம் எழுதினேன். அவர்களும் அக்டோபர் 12, 1992-இல் எழுதிய பதிலில் ஆலோசனைகள் பலவற்றைக் குறிப்பிட்டு வாழ்த்தினார். செப்டம்பர் 28, 1993-இல் அவர்களை நேரில் சந்தித்த பொழுதும், மேலும் ஆலோசனைகள் கூறி, வாழ்த்துரையையும் அருளினார். எளியவனை ஒரு பொருட்டாக மதித்து ஊக்கப்படுத்திய அந்தப் பேருள்ளத்தின் திருவடிகளைத் தொழுது வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ஸ்மரணானந்தாஜி மகராஜ் அவர்களிடம் மிகக்குறுகிய காலத்தில் வாழ்த்துரை வேண்டியபொழுது, அவர்கள் அன்புகூர்ந்து உடனடியாக வாழ்த்துரை வழங்கியசால் பிற்கு சிரம்தாழ்த்தி, வணங்கி நன்றியறிதலைப் புலப் படுத்துகிறேன்.

மனிதகுலத்தில் நெடிய வரலாற்றில் சமயவுணர்வும், தத்துவ நோக்கும் இடையறாது செல்வாக்கு செலுத்தி விடுகின்றன. மானுடநேயத்தையும், விவேகத்தையும் மறைக்கும் அளவிற்கு சமய, தத்துவப் பார்வைகள் பழுதடையும் பொழுது சமுதாய வளர்ச்சி தேக்கமுறு கின்றது.

இந்தக் கால கட்டங்களில் புத்தெழுச்சியையும், புதிய பார்வையையும் தரவல்ல சமய ஞானிகள் தோன்றி ஆன்மிக நெறியின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு வழிவகுத்து வருவதை யும் வரலாறு கண்டு வருகிறது. வாழையடி வாழையாக வரும் ஆன்மிக ஞானிகள் வரிசையில் சுவாமிஜியைப் படைத் தளித்தார், குருதேவர் ராமகிருஷ்ணபரமஹம்சர்.

இந்தப் படைப்பாற்றலின் சக்தி வாய்ந்ததே வெளிப் பாடாக அமைந்ததுதான், சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகள்.

இந்தச் சொற்பொழிவுகளை வரலாற்றுப் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும் எனும் ஆவலினால் எழுதப் பெற்றது, இந்த நூல். சுவாமிஜியின் சிகாகோ சொற் பொழிவுகள் உரை நடையில் அமைந்த சூத்திரங்களாகும். இவற்றை விரித்துரைத்து, வேண்டப்படும் இடங்களில் விளக்கமளித்து, முன்னும்- பின்னும் தொடர்புடைய வரலாற்றுச் செய்திகளை இணைத்து எழுதப் பெற்றது, இந்த நூல். இதனால் எளிய வாசகர்களும், சிகாகோ சொற்பொழிவுகளின் வரலாற்றுச் சாதனையைப் புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டும் எனும் வேட்கையாலும் எழுதப் பெற்றது, இந்நூல்.

இந்த நூலை எழுதுவதற்கு எனக்குப் பயன்பட்ட பல நூல்களுள், ''அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் புதிய கண்டுபிடிப்புகள்'' எனும் நூல் மிக முக்கியமானது. ஏனெனில், இந்த நூல், சுவாமிஜியைப் பற்றிய ஆய்விற் கென்றே தமது வாழ்க்கையை சமர்ப்பித்துக் கொண்ட ஒருவரின் கருமயோகத்தின் படைப்பாக வெளிவந்ததாகும்.

சுவாமிஜியின் அமெரிக்க வாழ்க்கையைப் பற்றிய செய்திகளை அகழ்ந்தெடுத்து ஆய்ந்தவர் மேரிலூயிஸ்பர்க். இவர் எழுதியதுதான் ''அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர்— புதிய கண்டுபிடிப்புகள்'' என்னும் நூலாகும்.

'புதிய கண்டுபிடிப்புகள்' எனும் பொருளுக்கேற்ப பல அரிய செய்திகளை அகழ்ந்தெடுத்தவர், மேரிலூயிஸ்பர்க். இவருடைய குரு, சுவாமி அசோகானந்தா ஆவார். குருவின் நல்வாழ்த்துடன் சுவாமிஜியைப் பற்றிய ஆய்வில் சிறந்து விளங்குபவர், மேரிலூயிஸ்பர்க். கார்க்கி எனும் பெயரையும் பெற்றவர். உபநிடதப் பேராசான் மகரிஷி யாக்ஞவல்கியருடன் ஆன்மிக சம்வாதம் புரிந்த பெண்மணி, கார்க்கியாவார்.

மேரிலூயிஸ் பர்க் அவர்கள், சுவாமிஜியின் அமெரிக்க, பிரிட்டன் முதலான அயல்நாட்டு வாழ்க்கைச் செய்திகளை அரும்பாடுபட்டுத் திரட்டி ஆறு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகள் பற்றிய பல புதிய- புதிய செய்திகளை கண்டெடுத்து உதவிய மேரி லூயிஸ்பர்க் அவர்களுக்கு என் தனி நன்றி என்றென்றும் உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் எழுதப்பெற்ற பொழுது, சில அன்பர்கள் நூல்களையும், கருத்துகளையும் வழங்கி, உதவியதற்கும் என் நன்றி உரியது.

சென்னையில் இந்த நூலை உருவாக்கும் பொறுப்பை ஏற்ற எனது நண்பர் 'பூங்கொடி' பதிப்பக உரிமையாளர் வே. சுப்பையாவிற்கும், அச்சிட்ட கவிதா அச்சக உரிமையாளர் கமலசேகரனுக்கும், ஓவியர் ஆனந்தனுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெ. சு. மணி

11, இராமகிருஷ்ணாபுரம்
2-ஆவது தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை-600033
தமிழ்நாடு, இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


வாழ்த்துரை—1
சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ்

வாழ்த்துரை—2
சுவாமி ஸ்மரணானந்தாஜி மகராஜ்

1. இந்தியத் தத்துவ ஞானத்தில் சமயப் பொறையும், பரந்த நோக்கமும் 9—37

2. சிகாகோ சர்வமத சபையின் தோற்றம் 38—51

3. சிகாகோ பயணத்தின் வித்தும், வளர்ச்சியும் 52—62

4. சிகாகோ பயண அனுபவங்களும் சோதனைகளும் 63—80

5. சிகாகோ சர்வமத சபையில் வேதாந்தச் சிங்கம் 81—103

6. மூன்றாவது சொற்பொழிவு— 'இந்து சமயம்' 104—162

7. சர்வ மத சபைக்குப் பிறகு 163—190

8. இலங்கையில் சுவாமிஜி 191—216

9. சிகாகோ வீரரின் வரவேற்பில் தமிழகம் 217—239

10. தற்காலப் பயன்பாட்டிற்கு சிகாகோ சொற்பொழிவுகள் 240—254

இணைப்பு—1 255—256

APPENDIX [1—10]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைதிருத்தம்

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 44 | 3 | Slays | Slayer |
| 44 | 5 | knew | know |
| 45 | 19 | Transendalist | Transcendentalist |
| 47 | 8 | ta | to |
| 47 | 8 | Visrbie | Visible |
| 47 | 10 | Succuring | Succouring |
| 86 | 29 | தாமஸ் எ கெம்பி | தாமஸ் எ கெம்பிஸ் |
| 131 | 16 | சுவாமி ரங்க நாதனந்தா | சுவாமி ரங்க நாதானந்தா |
| 157 | 12 | இருக்கா | இருக்க |
| 173 | 16 | po-72 | p.-72 |
| 184 | 1 | செம்டம்பர் | செப்டம்பர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலண்டனில் சுவாமிஜி - 1896

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிகாகோ சர்வ மத சபைப் பிரதிநிதியாக சுவாமிஜி
1893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தத்துவ ஞானத்தில் சமயப் பொறையும், பரந்த நோக்கமும்

## மூலவூற்று

இந்தியத் தத்துவ ஞானத்தின் தலையூற்று ரிக் வேதத்தில் தொடங்குகின்றது. ரிக் வேத காலத்தில் வரையறுப்பதில் ஆய்வாளர்களிடையே ஒருமனதான முடிவு இல்லை. கி. மு. 5000 முதல் கி. மு. 1500 வரையில் ரிக் வேத காலம் பற்றிய பல கருத்துகள் கூறப்படுகின்றன. ஆனால், ஒன்று மட்டும் கருத்து வேற்றுமைக்கு இடமில்லாமல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ரிக் வேதம் உலக சமயத் தத்துவ ஞானங்களுள் முன்தோன்றியது; அனைத்திற்கும் மூத்தது என்பதே அந்த உறுதிப்பாடாகும்.

ரிக் வேதத்தின் வேதமொழி, மிகப் பெரும் பழமை வாய்ந்த ஹீப்ரு மொழிக்கும் மூத்தது. ஹீப்ரு மொழியின் காலம் கி. மு. 1300 ஆக கூறப்படுகின்றது. வேத மொழி, சம்சுகிருத மொழிக்கும் மூத்தது. வாய்மொழி மரபாகவே தொடர்ந்தாற்போல இடையறாமல் ஆயிரம் ஆண்டுகளாக ஓதப்பெற்று பாதுகாக்கப் பெற்று வருகின்றது. வேத மொழி.

'இந்து', 'இந்து சமயம்' என்னும் சொற்கள் வேத காலத்தில் இல்லை. 'இந்து' என்ற சொல் தொடக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோள அடிப்படையில் தோன்றியது. சிந்து பிரதேசத்தில் புகுந்த பாரசீகர், அந்தப் பூகோளப் பரப்பில் வாழ்ந்தவர்களை 'இந்துக்கள்' எனக் குறிப்பிட்டனர். இந்து மதம் என்னும் சொல்லும் பிற்கால வழக்கேயாகும். 'இந்துயிசம்' (Hinduisum) என்னும் ஆங்கிலச் சொல்லும் வரலாற்று அறிஞர்களால் பதினெட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப் பெற்றச் சொல்லாகும்.

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சமயம், வைதிக சமயம் என்று பெயர் பெற்றது. இதற்கு 'சனாதன தருமம்' என்ற பெயரும் உண்டு. இந்தச் சொல்லிற்கு 'என்றுமுள தருமம் என்றும் ஒரு பொருளுண்டு. 'சனாதனம்' என்பதற்கு நாள்தோறும் புதுமை— நித்ய நூதனம்— என்ற மற்றொரு பொருளும் உண்டு.

கிறித்துவம், இஸ்லாம் முதலான மதங்களைப்போல ஒருவரால் நிறுவப்பெற்ற மதமாக சனாதன தருமம் அமையவில்லை பல பண்பாடுகளை, வழிபாட்டு முறைகளை, சம்பிரதாயங்களைக் கொண்ட ஒரு சமஷ்டி அமைப்பாக சனாதன தருமம் உருவெடுத்து, வளர்ந்தது. இதனால் வேற்றுமையில் ஒற்றுமை காணும் தத்துவ நோக்கு தொடக்கம் முதலே செல்வாக்கு பெற்று விட்டது. வழிகாட்டியாகத் திகழ்ந்துக் கொண்டிருக்கின்றது. அனைத்து மதங்களும் கடவுளிடம் அழைத்துச் செல்லும் வழிகளே என்னும் ஆன்மிகக் கோட்பாடு, இந்துமதத்தை இறுக்கமான ஒழுங்கமைவு உள்ள அமைப்பாக வளர இடந்தரவில்லை. பல்வேறு எதிரெதிரான குழுக்களை யெல்லாம் உள்ளடக்கிக் கொண்டு சிதைவுறாமல் அவற்றிடையே ஒருமைப்பாடு தோன்றி வளர்ந்தோங்க இந்து மதத்தின் பொறுமைத் தத்துவமும், பரந்த மனப் பான்மையும் பெரும் பங்காற்றியுள்ளன; பங்காற்றி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக் வேதத்தில் முப்பத்து மூன்று தெய்வங்கள் கூறப்பட்டுள்ளனவாக வேதசமய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தத் தெய்வங்களிலே பல இயற்கை அம்சங்களின் உருவகங்கள் என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

''ஒவ்வொரு பக்கத்தில் இருந்தும் விழுமியச் சிந்தனைகள் வருவதாக'' என ரிக்வேதம் உலகம் தழுவியச் சிந்தனைக்கு முதற்குரல் எழுப்பியது.

## சில சான்றுகள்

ரிக்வேதத்தின் முதல் மண்டலத்திலேயே ''பரம்பொருள் ஒன்றே, அதை அக்னி, யமன், மாசுரிஸ்வான் எனப் பலவாறாகக் கூறுவர்'' என்னும் கருத்து மலர்ந்தது. இந்தக் கருத்து, பகவத்கீதையில் பின்வருமாறு எதிரொலிக்கின்றது.

''நீ வாயு, யமன், அக்னி, வருணன், சந்திரன், முப்பாட்டனாகிய பிரமன் நீ; உன்னை ஆயிரம் முறை கும்பிடுகிறேன். மீண்டும் மீண்டும் உனக்கு 'நமோ நம: (ப. கீ. 11—39).

இவ்வாறு பல சான்றுகள் வேதங்களில் காணக் கிடைக்கின்றன. ரிக்வேதம் பத்தாவது மண்டலத்தில் 191-வது ரிக்கில் உள்ள பின்வரும் கருத்து சமூக ஒற்றுமையைக் குறிப்பிடுகின்றது.

''கூடுக, ஒருவருடன் ஒருவர் உரையாடுக;
உங்கள் உள்ளங்கள் ஒன்றுபடுக;
பழந்தெய்வங்கள், அவர்க்குரிய பங்குகளை
ஏக மனதாக பெற்று இன்புறுக;
உங்கள் குறிக்கோள் பொதுவாக இருக்கட்டும்;
உங்கள் சபை பொதுவாக அமையட்டும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமும் பொதுவாகட்டும்; சிந்தனைகளும்
ஒன்றுபடட்டும்;
உங்கள் முன்னே பொதுவான நோக்கத்தை
நான் வைக்கின்றேன்;
பொதுவான நிவேதனத்தை உங்களுக்கு
படைத்து, வணங்குகின்றேன்;
உங்கள் இலட்சியம் பொதுவாகட்டும்;
உங்கள் இதயங்கள் இணையட்டும்;
ஒன்றுபட்ட மனதுடன் அனைவரும் சேர்ந்து
இன்பமாக வாழ்வீர்.''

இந்த வேதரிஷியின் கவிதையில் உள்ள முதல் வரியை சற்று மாற்றி அதர்வவேதம் (6-64-1) ''இசைவு பெறுக, ஒன்று சேருங்கள்'' எனச் சாற்றியுள்ளது.

வேதங்கள், நான்கு வருணத்தாருக்கும் (பிராம்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர்) உரியது என்னும் கருத்தை யஜுர் வேதத்தில் (26-18) காண்கிறோம். இந்த உயர்ந்தக் கருத்து பிற்காலத்தில் தேய்வுற்றது. வேதம் ஓதும் உரிமை பிராம்மணருக்கே அமைந்தது; காலகதியில் இந்த தனியுரிமையும் தவிர்க்கப்பட்டது.

உலக நேயத்தையும் அவாவி, யஜுர் வேதம் இசைத்ததாவது :

''எல்லா ஜீவராசிகளும் நட்புறவு விழியுடன்
என்னைப் பார்க்கட்டும்;
நான் எல்லா ஜீவராசிகளையும் நட்புறவு விழியுடன்
காண்பேனாகுக;
நாம் ஒருவரையொருவர் நட்புறவு விழியுடன்
பார்ப்போமாக'' (யஜுர் வேதம், 26-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உபநிடத காலத்தில்**

வேத காலத்தை யடுத்த உபநிடத காலத்தில் பொதுவாக 'பிரம்மம்— ஆத்மா' பற்றிய ஆன்மிக ஆய்வுகள் மனிதர்கள் தங்களுக்கிடையே வளர்த்துக் கொண்ட வேறுபாடுகள் அனைத்தையும் ஆன்மிகக் கருத்தோட்டம் என்ற அளவில் நிராகரித்தன எனக் கூறலாம்.

''வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி வெவ்வேறு பெயர்களை, வடிவங்களைக் கொண்டு நேராகவும், வளைந்தும் செல்லும் பல ஆறுகள் இறுதியாக கடலில் சேர்கின்றன. இவ்வாறே பல நம்பிக்கைகளை, பல கொள்கைகளைக் கொண்ட பக்தர்கள் இறுதியில் நாமரூப பேதங்களில் இருந்து விடுபட்டு பிரம்மத்தில் ஐக்கியமாகின்றார்கள்.'' இவ்வாறு ஒரு உபநிடதம் கூறியிருப்பது வழிகள் பலவாகினும், சென்றடைய வேண்டியது ஒன்றே என்பதை உணர்த்துகின்றது.

உபநிடதங்களின் அடிப்படையில் தோன்றிய வேதாந்த சமயம் உலக நேய மதமாக தன்னைப் படைத்துக் கொண்டது. வேதாந்த சமயத்தை உலகம் தழுவிய சமயமாக அறிமுகப்படுத்தியவர் சுவாமி விவேகானந்தர் என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

**பகவத்கீதையில்**

ஸ்ரீமத் பகவத்கீதையில், இந்தியத் தத்துவ ஞானத்தின் பரந்த மனப்பான்மையையும், ஆன்மீக ஒற்றுமைக்குரிய குரலையும் கேட்கிறோம்.

ஸ்ரீமத் பகவத்கீதை ஞானயோகத்தின் 21-ஆவது சுலோகத்தின் பின்வரும் கருத்து, கவனத்திற்குரியது.

''எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன், எந்த எந்த வடிவத்தை அர்சிக்க விரும்புகின்றானோ, அவனவனுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசையா நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற் கொள்ளுகிறேன்.'' (பாரதியார் மொழி பெயர்ப்பு.) இந்த சுலோகத்திற்கு உரையெழுதிய இடத்தில் 'அண்ணா' என். சுப்பிரமணிய ஐயர் (1895—1992) பின்வரும் இரு ஒப்பு நோக்குகளைக் குறிப்பிட்டுள்ளார்.

1. ''யாதொரு தெய்வங் கொண்டீர்அத்
தெய்வமாகி ஆங்கே'' (சிவஞான சித்தியார்).

2. ''அவரவர் தமதம தறிதறி வகைவகை
அவரவரிறையவ ரென வடி யடைவர்கள்''
(நம்வாழ்வார்)

எல்லா சமய நெறிகளும் இறைவனைச் சென்றடை கின்றன என்பதை விளக்கும் மற்றொரு பகவத் கீதை சுலோகம் வருமாறு:

''யார் என்னை எப்படி வழிபடுகிறாரோ, அவர்க்கு நான் அப்படியே அருள் புரிகிறேன்; பார்த்தா, மக்கள் எங்கும் என் வழியையே பின்பற்றுகின்றனர்.'' (ஞான கர்ம ஸந்யாஸ யோகம், 11)

## மகாபாரதத்தில்

போர்க்களத்திலே தோன்றிய பரஞான மெய்க் கீதையை தன்னுள் கொண்ட மகாபாரதத்தில் 'தருமம்' பற்றிய பின்வரும் விளக்கம், சமயம் ஒன்றுபடுத்தும் சக்தி யாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த வல்லது.

''தாரணாத் தர்மம் இத்யா ஹு:; தர்மோ தாரயதி பிரஜா :'' இவ்வாறு குறிப்பிடப் பெற்ற சுலோகத்தின் பொருளாவது : ''மக்களை எது ஒன்றுபடுத்துகிறதோ, எது நிலை குலையாது தாங்குகிறதோ, அது தருமம் ஆகும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசோகன் வகுத்த சமரச நெறி

பௌத்தமும், சமணமும், வேத சமயத்தின் மேலாண்மையை ஏற்க மறுத்ததால் அவைதிக சமயங்கள் எனக் குறிப்பிடப் பெற்றன. இந்த இரு சமயங்கள், இந்தியத் தத்துவ ஞானச் செழுமைக்கு மகத்தான பங்களிப்பு அளித்தன.

பௌத்த சமயத்தைப் பரப்பியதில் மாமன்னன் அசோகன் வரலாற்றுப் புகழ் கொண்டவர். கி. மு. 272 முதல் கி மு. 232 வரையில் அரசாண்ட அசோகன் காலம், ஒரு பொற் காலமாகப் போற்றப்படுகிறது.

உலக சமயங்கள் வரலாற்றில் முதன் முதலாக ஒரு சமயப் பேரவையைக் கூட்டிய பெருமை பௌத்த சமயத்திற்கு உண்டு. புத்தர் கி. மு. 461-இல் மகா பரி நிர்வாணமடைந்தார். இதையடுத்து மகத நாட்டில் ஆட்சி புரிந்த அஜாத சத்ரு புத்த சமயத்தில் இணைந்த காலத்தில், தலைநகரான ராஜ கிருகத்தில் மகா கஷ்யப தேரோவின் தலைமையில் முதல் பௌத்த சமயப் பேரவை கூடியது. இந்தப் பேரவையில் புத்தரின் போதனைகள் திரட்டப் பெற்று, சுத்த பிடகம், விநய பிடகம், அபிதம்ம பிடகம் என வகுத்துத் தொகுக்கப் பெற்றன. இரண்டாவது பேரவை, முதல் பேரவை கூடிய நூற்றாண்டிற்குப் பிறகு வைசாலி நகரத்தில் யாசா எனும் பிக்குத் தலைமையில் கூடியது. மூன்றாவது பேரவை அசோகன் ஆட்சிக் காலத்தில் திஸ்ஸா எனும் பிக்குவின் தலைமையில் பாடலி புத்திரத்தில் கூடியது. இந்தப் பேரவை எடுத்த பல முடிவுகளில், அயல் நாடுகளுக்கு பௌத்த சமயப் பிரசாரகர்களை அனுப்புவது என்பதும், ஒன்றாகும்.

'மகாயுத்தத்திற்குப் பிறகு வெற்றியைத் துறந்த முதல் பேரரசன்' என்று வரலாற்றுப் பேரறிஞர் எச். ஜி. வெல்ஸ் என்பவரால் பாராட்டப் பெற்ற அசோக சக்ரவர்த்தி, பௌத்த சமயத்தை அயல் நாடுகளிலும், பாரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பாகங்களிலும் பரப்புவதில் முதன் முயற்சி எடுத்தார். மகேந்திரன் என்னும் தனது மைந்தனையும், சங்க மித்திரை என்னும் தனது மகளையும் இலங்கைக்கு பௌத்த சமயப் பிரசாரத்திற்கு அனுப்பினார் அசோகன். இலங்கை பௌத்த சமயத்தைத் தழுவியது.

அசோகன் பௌத்த சமயப் பிரசாரத்தை கற்றூண்களில் பிராமி எழுத்து வடிவத்தில் அமைத்ததுடன், சமயப் பொறையையும் பிரசாரம் செய்தார்.

## அசோகனின் ஓர் அரிய சிலாசாசனம்

தமது சிலாசாசனங்களில் அசோகன் என்ற பெயரைப் பொறிக்காமல் தேவநாம் பிரிய பிரிய தர்சின் என்றே பொறித்தார். இன்றைய குஜராத் மாநிலத்தில் உள்ள ஜூனகத் என்னும் நகரத்திற்கு அண்மையில் உள்ள சிலாசாசனத்தில் உள்ள பின்வரும் பகுதி, சமயப் பொறையை வலியுறுத்தி, பிற சமய வெறுப்பைத் தவிர்க்கச் சொல்கிறது.

"எல்லாப் பிரிவினரையும் சார்ந்த துறவிகளையும், இல்லறத்தாரையும் பெரிதும் மதித்து நன்கொடைகள் வழங்கி அரசன் தேவாநாம்பிரியதர்சின் கௌரவிக்கின்றார். ஆனால், எல்லா சமயப் பிரிவினர்களின் சர்வ விருத்திகளையும் மேம்படுத்துவதைக் காட்டிலும், நன்கொடைகள், கௌரவப்படுத்துதல் முதலானவற்றிற்கு தேவநாம் பிரியா அதிக மதிப்பளிக்கவில்லை. இந்த சர்வ விருத்திகளை மேம்படுத்த பல வழி முறைகள் உள்ளன. ஆனால்,இவற்றுள் மூலாதாரமானது பேசுவதில்கட்டுப்பாடு காட்டுவது. அதாவது தமது சமயப் பிரிவை அதிகமாகப் புகழ்வதும், பிறசமயப் பிரிவுகளை அதிகமாகப் பழிப்பதும் தேவையற்றதாகும். அவசியம் நேரும்பொழுது, பாராட்டுவதோ, கண்டிப்பதோ, அது மிதமாக இருக்க வேண்டும். இதற்குப் பதிலாக, பிற சமயத்தினருக்கு சில காரணங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காக உரிய மரியாதையைத் தரவேண்டும். இவ்வாறு ஒருவன் நடந்தால் தன்னுடைய சொந்த சமயத்தை வளர்ப்பதுடன், பிற சமயங்களுக்கும் நன்மைகள் செய்தவன் ஆகின்றான். வேறுவிதமாக நடந்தால், தனது சொந்த சமயத்திற்கு தீங்கிழைப்பதுடன், பிற சமயங்களுக்கும் தவறிழைத்தவனாகின்றான். தன்னுடைய சமயத்தைப் புகழ்ந்து பெருமைப் படுத்துவதற்காக, பிற சமயங்களைக் கண்டனம் செய்பவன், உண்மையிலேயே தனது சொந்த சமயத்திற்கு தீங்கிழைக்கின்றான். ஆகவே நா காப்பது பாராட்டுதலுக்குரியது.

''பிற சமயங்களின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து பின்பற்றவும் வேண்டும். மக்கள் பல சமயங்களைப் பற்றி நன்றாகப் புரிந்துக்கொண்டு, நல்வாழ்விற்குப் பாடுபட வேண்டும் என்பது தேவாநாம் பிரியாவின் விருப்பம். ''[Rock Edict XII; Select Asokan Epigraphs, Sachchidananda Bhattacharya, M.A., 1960 Published by, Firma K. L. Mukhopadhyay' Calcutta, P. 94-95]

அசோகனின் இந்த சிலாசாசனக் கருத்துகள் பௌத்த சமயப்புனித நூலான சுத்த நியாதத்தில் கூறப்பெற்றுள்ளன பேச்சில் கட்டுப்பாட்டையும் (சம்யமம்), தூய்மையையும் (சுத்தி) பேணவேண்டும் என்று சுத்தநிபாதம் கூறியதையே அசோகன், ''உண்மை ஒன்றே, அது எல்லோராலும் போதிக்கப்படுகின்றது, உண்மையானத் தூய்மை சுயக் கட்டுப்பாட்டைத்தான் ஆதாரமாகக் கொண்டது'' என விளக்கியுள்ளதாக பேரறிஞர் ஆர். ஜி. பண்டார்கர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பௌத்த சமய தர்ம மகாமத்ரர்கள் செய்ய வேண்டிய பணிகளுள் ஒன்றாக, ''எல்லா சமயங்களிலும் சம விருத்திகள் வளர ஊக்கமளித்து, சமயங்களுக்குள் ஒருவரையொருவர் மதித்து ஒழுகவும் தூண்டவேண்டும்'' என்று அசோகனுடைய ஒரு கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவமஹிம்ந : ஸ்தோத்திரம்

இந்தத் துதிப்பாடலை இங்கு குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் யாதெனில், இதில் இருந்து சில வரிகளை சுவாமி விவேகானந்தர் தமது சிகாகோ சொற்பொழிவில் எடுத்தாண்டுள்ளார் என்பதினாலேயே ஆகும். சிவபெருமானின் மகிமையைப் போற்றி வழிபடும் பாடல்களின் தொகுப்பான, இந்த நூல் சம்சுகிருத இலக்கியத்தில் மிகச்சிறந்ததாகக் கருதப்படுகின்றது. ஏறக்குறைய கி.பி. 9-ஆம் நூற்றாண்டிற்கு உரிய இந்தத் தோத்திரம், சிவராத்திரியில் சிறப்புடன் ஓதப்படுவது.

குருதேவர் இராமகிருஷ்ண பரஹம்ஸர், இந்தத் துதிப் பாடல்களைப் பாடும் பொழுதெல்லாம் பக்தி பரவசத்தால் சமாதியில் ஆழ்ந்து விடுவார். சுவாமி விவேகானந்தர், சிறு வயதிலிருந்தே சிவமகிம்ந ஸ்துதியை ஓதி வந்துள்ளார்.

இதில் உள்ள பின்வரும் பாடல், இந்திய தத்துவ ஞானத்தின் சமய ஒற்றுமையையும், பரந்த நோக்கையும் வெளிப்படுத்துகின்றது.

த்ரயீ ஸாங்க்யம் யோக :
பசுபதி மதம் வைஷ்ணவ மிதி ।
ப்ரபின்னே ப்ரஸ்தானே
பர மிதம் அத: பத்ய மிதி ச ।
ருசீனாம் வைசித்ரீயாத்
ருஜு குடில நாநா பத ஜுஷாம்
ந்ருணா மேகோ கம்யஸ்
த்வமஸி பயஸாம் அர்ணவ இவ ॥

இப்பாடலின் பொருள் பின் வருமாறு :

''மூன்று வேதங்கள் (ரிக், ஸாம, யஜுர் வேதங்கள்), சாங்க்யம், யோகம், பாசுபதம், வைணவம் என பல ஞான மார்க்கங்கள் உள்ளன. நதிகள், கடலில் கலப்பது போல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணகத்தார் செல்லும் நெறி நேராகவும், வளைந்தும் இருந்தாலும், அவரவர் இயல்பிற்கு ஏற்ப இந்த வழி நல்லதா, அந்த வழி நல்லதா என வேறுபட்டாலும், இறைவனே அந்த மார்க்கங்கள் அனைத்தும் உன்னிடமே வந்தடைகின்றன என நான் சாற்றுகின்றேன்.''

சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் தமது முதல் நாள் சொற்பொழிவில் மேற்காணும் துதிப்பாடலின் பின்னிரு வரிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டினார்.

ஆறு, கடல் குறியீடுகளைக் கொண்டு ஒரே கடவுள் தத்துவத்தை கம்பராமாயணம் பாடல் ஒன்றும் உணர்த்து கின்றது. பரம் பொருள் ஒன்றேயாக இருந்தும், பல சமயத் தாரும் பலவாறு பெயரிட்டழைக்க மாறுபடுதலைப் போலச் சரயு நீர்ப் பெருக்கு முதலில் ஒன்றேயாக இருந்தும் பிறகு ஏரி, தடாகம் முதலிய பல பெயர்களை அடைந்தது என கவிச்சக்ரவர்த்தி கம்பநாடர் பின்வரும் பாடலில் விளக்கியுள்ளார்.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலும் இயம்பரும் பொருள் ஈ
தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதோறும் பரந்த
சூழ்ச்சிப்
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும் போல்
பரந்ததன்றே.

## பதினொரன்றாம் நூற்றாண்டில்

ஜகந்நாத மிஸ்ரா என்பவர் படைத்த அனுமான் நாடகம் என்னும் நூலில், நாமரூப பேதங்கள் பலவாறாக இருந்தாலும் பரம் பொருள் ஒன்றே என்னும் செந்நெறி பின்வருமாறு ஓதப்பட்டுள்ளது.

''தீமையை ஒழிக்கும் உலகப் பரம்பொருளே! உன்னை, சைவர்கள் சிவன் என்றும், வேதாந்திகள் பிரம்மம் என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்கள் புத்தர் என்றும், சமணர்கள் அர்ஹத் என்றும், சடங்குகளை வற்புறுத்தும் மீமாச்சைக் கொள்கையினர் கர்மம் என்றும், பலவாறாக அழைத்தாலும் எங்கள் இதயங்களின் பிரார்த்தனைகளை ஏற்று அருள் புரிவாயாக.''

## அக்பரின் 'தீன் இலாஹி'

இந்திய தத்துவ ஞானம் சந்தித்த பிற சமயத் தத்துவ ஞானங்களுள் இஸ்லாமிய தத்துவ ஞானம் பெரும் அறைகூவலாக அமைந்தது. இந்தியாவில் இஸ்லாம் ஏற்படுத்திய நெருக்கடிகள் பரந்த அளவில் வரலாற்றுத் தாக்கங்களை விளைவித்தன. இதன் தொடர்பாக நேருஜியின் பின்வரும் கருத்து இங்கு நினைவுகூரத் தக்கது.

''அரசியல் வெற்றி என்ற நோக்கில் இந்தியாவிற்கு இஸ்லாம் வந்தபோது போராட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தப் போராட்டத்தில் இரண்டு விளைவுகள் ஏற்பட்டன. ஒரு பக்கம் அது இந்து சமுதாயத்தைத் தனக்குத்தானே ஆமைபோல் தன் ஓட்டுக்குள் முடங்கச் செய்தது. இந்து சமுதாயம் தனக்குத்தானே அடைப்பும் போட்டுக் கொண்டது. இதேபோல் தங்களுக்குத் தாங்களே அடைப்புப் போட்டுக் கொண்ட ஒரு முறையோடு முஸ்லிம்கள் வெளியேயிருந்து வந்து சேர்ந்தார்கள். இவ்வாறாக தமக்குத் தாமே அடைப்புப் போட்டுக் கொண்ட இரண்டு முறைகள் ஒன்றையொன்று சந்தித்தன. ஒன்றை மற்றொன்று வேரோடு அழிக்கவோ, வெல்லவோ இரண்டிற்கும் வல்லமையில்லை. முந்தி வந்தவர்களையெல்லாம் தன்னுள்ளே ஏற்று அடக்கிக் கொண்டது போலவே முஸ்லீம்களை ஏற்க இந்து சமுதாயத்தால் முடியவில்லை. எனவே, இந்திய வரலாற்றின் இடைக்காலத்தில் ஒரு மகத்தான பிரச்னை ஏற்பட்டது.''

இஸ்லாம் மார்க்கத்தைத் தொடர்ந்து இந்தியாவில் பரவத் தொடங்கிய சூஃபித்துவம் (சூஃபிஸம்), இந்து—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய சமூக அமைப்புகளிடையே எதிரும்- புதிருமான மோதல் சூழலைத் தணிக்கை செய்தது; சகிப்புத் தன்மை வளர பாடுபட்டது; சமாதான சகவாழ்வுத் தத்துவத்திற்கு ஊக்கமளித்தது.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து, கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி வரையில் இராக், பாரசீக நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து வந்த இஸ்லாமிய சுய அனுபூதி ஞானிகள் (Mystics) அன்பு நெறியைப் பரப்பினார்கள். இவர்களுடைய தத்துவ விளக்கங்கள், பிரசார மொழிகள், அணுகுமுறைகள் இந்து சமய உணர்வுகளுக்கு முற்றிலும் அந்நியமாக இருக்கவில்லை. குறிப்பாக இறைவனுடன் தனிப்பட்ட முறையில் ஆன்மிக அனுபவ உறவுடன் இணைவதில் சூஃபிகள் பின்பற்றிய முறை, இந்து சமய ஜீவாத்மா பரமாத்மாக் கோட்பாட்டிற்கு ஒத்திசைவாகத் தோன்றியது. இறைவனை நாயகியாகவும் அடியாரை நாயகனாகவும் கொண்டு ஆன்மிக அநுபூதியில் திளைத்தனர் சில சூஃபி ஞானிகள். இதனால் சூஃபி ஞானிகளின் கல்லறைகளை இந்துக்களும், இஸ்லாமியருடன் சேர்ந்து வழிபடும் வழக்கம் தோன்றியது. சென்னையில் இருந்து வெளிவந்த 'பிரம்மவாதின்' எனும் ஆங்கில மாத இதழிற்கு நவம்பர் 23, 1895-யில் சுவாமிஜி எழுதிய கடிதத்தில் சூஃபிஸம் பற்றிய பின்வரும் கருத்து கூறப்பட்டுள்ளது.

''சூஃபி சமயம் என்பது, வேதாந்தத்தால் மென்மைப் படுத்தப்பட்ட, அழகுபடுத்தப்பட்ட இஸ்லாம் சமய மாகும்.''

ஒன்பதாம் நூற்றாண்டில் பயாஜிட் எனும் சூஃபி ஞானி வேதாந்தக் கடவுள் தத்துவத்தால் கவரப்பட்டார். ''நானே கடவுள் எனப் பொருள்படும் 'ஃபனா' எனும் கொள்கையைப் பிரகடனப்படுத்தினார், பயாஜிட். இதையே விளக்கமுற 'அனல் ஹக்' (நானே கடவுள்) எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தை மன்சூர் அல்-ஹலாஜ் எனும் சூஃபிஞானி பிரசாரம் செய்தார். இது, ''அகம்பிராம்மாஸ்மி'' எனும் உபநிடதத்தின் தாக்கத்தைப் பெற்றது.

இளமைக் காலத்தில் காபூலில் வாழ்ந்தபொழுது, அக்பருக்கு இஸ்லாமிய ஷியா போதனைகளுடன், பாரசீக சூஃபிக் கவிஞர்களின் சுயானுபூதி ஞானத்தத்துவத்தையும் அறிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டது.

கி. பி. 1556-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற காலம் முதல் கி. பி. 1605-இல் இறக்கும் வரையில் அக்பர் பல்வேறு சமயத்தத்துவங்களைப் புரிந்துக்கொள்ள ஊக்கம் காட்டினார் என வரலாறு கூறுகின்றது. அரசியல் காரணங்களுக்காக அக்பர் ராஜபுத்ரர்களுடன் கொண்ட திருமண உறவுகள், இந்து-இஸ்லாமிய சமய உறவுகளையும் ஊக்குவித்தன.

கி. பி. 1580-இல் ''ஸுல்ஹ்-இ-குல்'' எனும் சர்வ சமய சமரசக் கோட்பாட்டை உருவாக்கினார், அக்பர். அபுல்ஃபாஸல் எழுதிய 'அக்பர்நாமா' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில் இந்தக் கோட்பாடு பற்றி விவரமாகக் கூறப்பட்டுள்ளது. 1679-இல் ஔரங்சீப்பிற்கு, சிவாஜி, சில முஸ்லீம் அரசர்கள் மேற்கொண்ட சமய சகிம்புணர்வை எடுத்துக்காட்டி ஒரு கடிதம் எழுதினார். இதில் அக்பரின் 'ஸுலஹ்-இ-குல்' கோட்பாட்டை ''வியக்கத்தக்க உலக சமரசம்'' எனப் பாராட்டியதுடன், அக்பர், ''உலக ஆன்மிக குருவாக புகழ்பெற்றார்'' என்றும் சிவாஜி குறிப்பிட்டுள்ளார். (''The Secular King Speaks Out''—The Hindu, பிப்ரவரி 4, 1993, P. 9.)

'ஸுலஹ்-இ-குல்'லின் வளர்ச்சியாக, கி. பி. 1582-இல் தீன் இலாஹி,— தெய்வ நம்பிக்கை—எனும் பெயரில் புதிய சமயத்தைப் படைத்து அதன் தலைவராக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார், அக்பர். அக்பர் சாம்ராஜ்யத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரமாக சிலகாலம் விளங்கிய பெடேபூர் சிக்ரியில் அமைந்த பொதுத் தொழுகையிடத்தில், இஸ்லாமிய சன்னிப்பிரிவைச் சார்ந்த உலேமாக்கள். சூஃபி ஞானிகள், இந்து சமயப் பண்டிதர்கள், பார்சி சமய அறிஞர்கள், சமணர்கள், கோவாவைச் சார்ந்த கத்தோலிக கிறிஸ்துவ பாதிரிகள் ஆகியோர் அக்பர் தலைமையில் கூடி கருத்து பரிமாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டனர்.

'தீன் இலாஹி' சமயக் கோட்பாடுகளைப் பற்றி அபுல்பாஸல், அப்துல்காதிர் பதாவுனி ஆகியோர் எழுதிய நூல்களில் அறிய முடிகின்றது. அக்பர், தம்மை ஓர் இஸ்லாமியர் எனக்கூறிக் கொள்ளாமல், ''தீன் இலாஹி'' சமயத்தைச் சார்ந்தவர் என்றும் கூறிக்கொண்டதாக வரலாற்றுச் செய்தி உள்ளது.

அரசாங்கச் செலவில் புதிய மசூதிகளை கட்டவோ அல்லது பழைய மசூதிகளைப் பழுது பார்த்து புதுப்பிக்கவோ தடை விதித்தார், அக்பர், காஷ்மீரில் ''ஏக இறைக் கொள்கை''யினர் வழிபாட்டிற்காக ஒரு கோயிலை அக்பர் கட்டினார். 'அயினி அக்பரி'யில் அபுல்ஃபாஸல் இந்தச் செய்தியைக் குறித்துள்ளார். இந்துக்களுக்கு எதிரான 'யாத்திரை வரி', 'ஜஸியா வரி' முதலானவற்றை ஒழித்தார், அக்பர். அனைத்து மத சம்பிரதாயங்களையும் மதித்தார். தமது மகன் மூரத், கிறிஸ்துவ சமயத்தைக் கற்கவும் ஏற்பாடு செய்தார். சில குறிப்பிட்ட நாள்களில் பசுக் கொலைக்குத் தடை விதித்தார். சில நாள்களில் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்த்தார், இஸ்லாமியப் பண்டிகைகள் அல்லாதனவற்றையும் கொண்டாடினார். அதர்வவேதம், ராமாயணம், மகாபாரதம் ஆகியனவற்றை பாரசீக மொழியில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்தார்.

'தீன் இலாஹி' அரசவையில் ஒரு சிறிய குழுவினர் மட்டும் பின்பற்றும் சமயமாக விளங்கியது. அரசியல், நிருவாகச் சக்தியைக் கொண்டு தீன் இலாஹியை தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்ராஜ்யம் முழுவதிலும் பலவந்தமாகத் திணிக்க அக்பர் விரும்பவில்லை. அக்பரின் 'தீன் இலாஹி'யை சுவாமி விவேகானந்தர், வீட்டின் வரவேற்பறையில் கூடும் கூட்டமாக (Parlour meeting) வருணித்துள்ளார்.

ஷேக் அகமது சிர்ஹிண்ட் (1564—1624) அக்பருடைய தீன் இலாஹியைக் கடுமையாக எதிர்த்தார். பாகிஸ்தான் அரசாங்கப் பாடநூல்களில் அகமது சிர்ஹிண்ட் பின் வருமாறு பாராட்டப் பெற்றுள்ளார்.

''அகமது ஸிர்ஹிண்ட், மாபெரும் இஸ்லாமிய ஞானியும், பேரறிஞரும் ஆவார். அக்பரின் முயற்சியை எதிர்த்து, துணைக் கண்டத்தில் இஸ்லாம் சமயத்தின் புகழை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டார். முகலாய சக்ரவர்த்தி அக்பர் அறிமுகப்படுத்திய 'தீன் இலாஹி' அழிவு நோக்கிய முயற்சியாகும், தீன் இலாஹியின் ஒரே குறிக்கோள், இஸ்லாம் சமயத்தைச் சிதைப்பதாகும். அகமது ஸிர்ஹிண்ட், தமது முழு ஆற்றலையும், உயிர்ச் சக்தியையும் கொண்டு தீன் இலாஹியை எதிர்த்தார்'' [' Akbar in Pakistan Text books''— Mubark Ali, Social Scientist, November 9—10, 1992, P. 72]

தீன் இலாஹியை உருவாக்கிய அக்பரைக் கண்டனம் செய்ததோடு அல்லாமல் ஔரங்சீப்பைப், பாராட்டுவதில் பாகிஸ்தான் பாடநூல்கள் ஆர்வம் காட்டியுள்ளன.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், தீன் இலாஹியை பின்வருமாறு பாராட்டியுள்ளார்.

''அப்புதிய சமயம் எல்லா மாயத் தோற்றங்களையும் கோட்பாடுகளையும் கடந்து, ஓர் உலகப் பொதுப் பயனை உண்டாக்கும் வண்ணம் உபநிஷதங்களின் செல்வாக்கினால் முழுதும் உந்தப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தது,'' (இந்தியாவின் இதய ஒலி—டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தமிழில் வி. எஸ். வி. இராகவன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1984—ப. 239).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்பர் மறைவோடு, தீன் இலாஹியும் மறைந்தது. ஆனால் அக்பரின் கொள்ளுப்பேரன் தாரா ஷிகோவ் சமயப் பொதுமைக்கும், பரந்த நோக்கிற்கும் பாடுபட்டது, வரலாற்றில் பதிவாகியுள்ளது.

## தாரா ஷிகோவ் (1615—1659)

ஷாஜஹானின் புதல்வரான தாராஷிகோவ், சூஃபி தத்துவத்திலும், இந்து சமய ஞானிகள் கொள்கைகளிலும் நன்கு தேர்ந்தவர். சமஸ்கிருதம், பாரசீகம் இரண்டிலும் புலமை பெற்றவர். இந்து – இஸ்லாமிய நல்விணக்கத்திற்கு பாலமாகத் திகழ்ந்தவர். வேதாந்தம், சூஃபி தத்துவங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்து, ''இரு சமுத்திரங்களின் சங்கமம்'' என்று பொருள் பெறும் ''மஜ்மா-உல்-பஹ்ரெயின்'' என்னும் நூலை பாரசீக மொழியில் வெளியிட்டார். இதை, சமஸ்கிருத மொழியிலும் மொழிபெயர்த்தார். வேதங்களையும், உபநிடதங்களையும் பாராட்டியுள்ளார். உபநிடதங்களை, ''புனித திருக்குரானுக்கு ஒப்பாக, ஒற்றுமைக் கடலின் ஊற்றாகவும், இறைவனுடைய நூல்கள்'' என்றும் தாராஷிகோவ் புகழ்ந்துள்ளார். ஐம்பத்திரண்டு உபநிடதங்களையும், பகவத்கீதையையும், யோக வாசிஷ்டத்தையும் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

'அனுபூதி ஞானவழி' (Mystic path) என்னும் அவருடைய கவிதை நூலில் உள்ள பின்வரும் கருத்துகள், இந்து சமயதத்துவ ஞானத்துடன் இயைபு கொள்கின்றன.

1. ''பரம்பொருள் பெருங்கடலை ஒத்தது. தண்ணீரின் பல வடிவங்களைப் போன்றவை ஆத்மாக்களும், பொருள்களும். கடல் உள்ளுக்குள் கடைந்தும், பொங்கியும் தன்னை அலைகளாக, நீர்த்துளிகளாக, நீர்க்குமிழ்களாக மாற்றிக் கொள்கிறது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ''கடலுக்கும் தனக்கும் உள்ள பிரிவை நீர்த்துளி உணராதவரையில், நீர்த்துளியாகவே இருக்கும். ஒருவன் தன்னை பரம்பொருளாக அறியாத வரையில், படைக்கப் பட்டவனாகவே அமைகின்றான்.''

மேலேயுள்ள கருத்துகள் பரமாத்மா- ஜீவாத்மா பற்றிய உபநிடதச் சிந்தனைகளை ஒத்துள்ளன. சமய அடிப்படை வாதத்தை வலியுறுத்தும் இஸ்லாமிய சமய முல்லாக்களைக் கண்டித்து, தாராஷிகோவ் கூறியதாவது :

''எங்கு முல்லா இல்லையோ, அங்கு சுவர்க்கம் உள்ளது. அங்கு முல்லாவுடைய விவாதம், தர்க்கம் கூச்சல் எதுவுமே கேட்காது. முல்லாவின் கூப்பாடுகளில் இருந்து உலகம் விடுதலை பெறட்டும். அவருடைய ஆணைக்கு எவரும் செவிசாய்க்க வேண்டாம். முல்லா இருக்கும் நகரத்தில் புத்திசாலி எப்பொழுதுமே தங்கமாட்டார்.''

ஔரங்கசீப் ஆட்சியில், தாராஷிகோவ் அரசுரிமைப் போராட்டத்தில் கொல்லப்பட்டார். இஸ்லாம் சமயத்தில் விரோதியாகவும் தாரா ஷிகோவ் கருதப்பட்டார். ''தாரா ஷிகோவ் தில்லி ஆட்சி பீடத்தில் வீற்றிருந்தால், இந்திய வரலாறு வேறு விதமாக இருந்திருக்கும்'' என 1962-இல் இந்திய அரசாங்கம் நியமித்த ''உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாட்டுக் குழுவின்'' அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**கபீர், குருநானக், தாது**

வட பாரதத்தில் பதினைந்து, பதினாறாவது நூற்றாண்டுகளில் பரவிய நிர்குண—சகுண பக்தி இயக்கங் களில், நிக்குண பக்தி இயக்கத்தின் தத்துவ ஞானம் சமயப் பொதுமையையும், விரிந்த நோக்கையும் எடுத்தோதியதில் முன் நின்றது.

கபீர் (1440-1518), குருநானக் (1409-1538), தாது (1544-1603) ஆகியோர் சூஃபித்துவ ஞானிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறைகளிலும், கருத்துவெளியீட்டு முறைகளிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒத்திசைவாக விளங்கினர்.

இந்த மூவரும் இந்து—இஸ்லாம் சமயங்கள் இரண்டிலும் இருந்த பிற சமயக் காழ்ப்பாளர்களைக் கண்டித்துள்ளனர். ''நாங்கள் இந்துக்களும் அல்லர், இஸ்லாமியர்களும் அல்லர், இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர்கள்'' என்னும் கருத்தை இவர்கள் பரப்பினார்கள்.

1604-இல் குரு அர்ஜுன் அவர்களால் தொகுக்கப் பெற்ற சீக்கிய மத புனித நூலான 'குரு கிரந்த சாகெப்' பில் கபீரின் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள், ''நாங்கள் இந்துக்களும் அல்லர், முஸ்லீம்களும் அல்லர், கடவுளின் குழந்தைகள்,'' என்பதும் ஒன்றாகும். இதே கருத்தை குருநானக், பின்வருமாறு கூறினார். ''இந்து என்றோ, முஸ்லீம் என்றோ வேறுபாடு கிடையாது. உலகில் இருப்பவர், மனிதர்தான்.'' மற்றொரு சமய சமரச ஞானியான தாதுவும், சமயம் பிரிவுகளற்றத் தத்துவத்தைக் குறிக்கும் ''நிர்பக்'' என்னும் கோட்பாட்டை பிரசாரம் செய்தார்.

### தாயுமான சுவாமிகள்

தமிழகத்தில் வேதாந்த— சித்தாந்த சமரசத்தையும், இந்துமதத்தின் அறுவகைச் சமயங்களிடையே சமரசத்தையும் வளர்க்கும் தத்துவ ஞானத்தை பதினெட்டாம் நூற்றாண்டில் வலியுறுத்தியவர், தாயுமான சுவாமிகள், ''சமயகோடிகள் எல்லாம், தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?'' எனும் வினாவை எழுப்பி பரம்பொருளின் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மையை உணர்த்தினார் தாயுமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜாராம் மோகன்ராய் (1772—1833)

'புதிய இந்தியாவின் விடிவெள்ளி' என்னும் வரலாற்றுப் புகழ் கொண்ட ராஜா ராம் மோகன்ராய் இந்தியாவின் புத்தெழுச்சிக்கும், நவீனதத்துவத்திற்கும் சமய - சமூகத் துறைகளில் பற்பல முதல் தொடக்கங்களை ஏற்படுத்தியவர்.

இந்திய தத்துவ ஞானத்தின் வேதாந்த சமயத்துள் 'பிரம்மம்' பற்றியத் தத்துவக் கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டு சமயங்களிடையே ஒற்றுமையுணர்வையும், அனைத்துலக சமயம் பற்றிய கண்ணோட்டத்தையும் உருவாக்கப் பாடுபட்டார் ராஜா ராம் மோகன்ராய்.

1815-இல் அவர் தொடங்கிய 'ஆத்மிய சபா'வில் இறைமை ஆய்வியல் தொடர்பான பல சமயத் தத்துவங்கள் விவாதிக்கப்பட்டன. 1828-இல் அவர் நிறுவிய 'பிரம்ம சமாஜம்' வேதாந்த சமயத்தின் உருவமற்ற பரம்பொருள் வழிபாட்டை ஆதாரமாகக் கொண்டது. ஒரே இடத்தில் பல்வேறு சமயத்தினரும் ஒன்று கூடி அந்தந்த சமயத்தின் புனித நூலில் இருந்து பிரார்த்தனைகளை ஓதி வழிபட்டனர். இது ஒரு முதன் முயற்சியாகவும் கருதப்படுகிறது. ராஜா ராம்மோகன்ராய், ''நிராகார பிரம்மத்தை'' (உருவமற்ற பிரம்மத்தை) ஏற்றுக் கொண்டார். ஆனால் 'நிர்க்குண பிரம்மத்தை' ஏற்றுக் கொள்ளாமல், ''சகுணபிரம்மத்தை'' வழிபட்டார். இதற்காக அவரே வங்கமொழியில் துதிப்பாடல்களை இயற்றினார்.

பிரம்ம சமாஜியான கவிஞர் இரவீந்திரநாத்தாகூர் ராஜா ராம் மோகன்ராயின் ''பிரம்ம தத்துவத்தை'' ப் பற்றி பின் வருமாறு விளக்கியுள்ளார்:

''ராஜா ராம்மோகன்ராய் அந்தப் பரம் பொருளையே அழியாத சத்தியத்தையே—தெளிவாக்கினார். அந்தப் பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளையே அவர் அந்த நாட்டு வழக்கம், மக்களின் பழக்கம் என்ற சிக்கலில் இருந்து விடுவித்து, வங்காளிகளுக்கோ, பாரத நாட்டினருக்கோ மட்டுமின்றி உலகத்தார் அனைவருக்கும் காட்டினார். அந்தப் பரம்பொருளை அவர் உணர்ந்தது, நம் பழைய முனிவர்களைப் போலவே.''

'பிராமணிகல் மேகஸைன்' என்னும் தமது ஆங்கில இதழில் இந்து மதத்தின் சமயப் பொறையை பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''இந்தப் பூமியில் வாழும் மனிதர்களில் இந்துக்களைப் போன்று சகிப்புத் தன்மை உடையவர்கள் யாரும் இல்லை என்பது உலகமறிந்த உண்மையாகும். தெய்வத்தின் அருளுக்கு அனைவரும் பாத்திரமானவர்கள் என்று இந்து மதம் போதிக்கிறது. ஒவ்வொரு மதப் பிரிவிலும் உள்ள நல்லனவற்றையெல்லாம் மதிக்கிறது, இந்து மதம்.''

கிறித்துவ சமயத் தத்துவத்தில் ஆழ்ந்த பயிற்சி பெற்றவர், ராஜா ராம் மோகன்ராய். ''பரமபிதா, தேவகுமாரன், பரிசுத்த ஆவி'' என்னும் மூன்று நிலை தெய்வாம்சக் கோட்பாடு கிறித்துவ சமயத்தில் 'டிரினிடேரியனிஸம்' என்று குறிப்பிடப்படும். இது, ராஜா ராம்மோகன் ராயிற்கு உடன் பாடன்று. ''மதம் மாறிய மூன்று சீனர்களும், மிஷனரிகளும்'' என்னும் சிறு நூலில் டிரினிடேரியனிஸத்தை நகைச்சுவையுடன் கண்டித்துள்ளார். அவர் 'யூனிடேரியனிஸம்' என்னும் ஒரே தெய்வாம்சக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டார். 1823-இல் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து கல்கத்தாவில் ''யூனிடேரியன் சர்ச்''சை அமைத்தார். ''கிறிஸ்துவின் வழிமுறை'' (Precepts of Jesus) என்னும் நூலில் இயேசு நாதரின் போதனைகளை—அற்புதச் சித்தாடல்களைத் தவிர்த்து— தொகுத்து வெளியிட்டார், ராம்மோகன்ராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் வயதிலேயே பாட்னாவில் புகழ் பெற்ற இஸ்லாமிய சமய நிறுவனத்தில் இஸ்லாமிய மார்க்கத்தை கற்றறிந்தார் ''துஹ்ஃபக்துல் முவஹ்ஹிதின்'' என்னும் ஏக இறைக் கொள்கையை பாரசீக மொழியில் எழுதி, அரபு மொழி முன்னுரையுடன் வெளியிட்டார்.

ராஜா ராம் மோகன்ராய் உபநிடதங்களை, வேதாந்த சூத்திரங்களை வங்க மொழியில் மொழி பெயர்த்து, சமய விவாதங்களை வங்க மொழியில் ஊக்குவித்ததும் குறிப்பிடத் தக்கது.

அனைத்துலகச் சமய உணர்வினராகத் தம்மை உருவாக்கிக் கொண்டு, சமய ஒப்பாய்வின் முன்னோடியாக விளங்கியவர், ராஜா ராம்மோகன்ராய்.

## இராமலிங்கம் சுவாமிகள் (1823—1874)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சர்வ மத சமரசத்தை எடுத்தோதியுடன், சமயங் கடந்த ஆன்மிக நேயத்தை மிகத் தெளிவாக உணர்த்தியவர் இராமலிங்க சுவாமிகள். முதலில் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்று கொண்டிருந்த இவர் ஆத்மானுபூதி வளர்ச்சி நிலையில் சைவ சமயத்தையும், பிற சமயங்களையும் கடந்து ஆன்மிக நிலையை எய்தியதை அவருடைய ''சமரச சுத்த சன்மார்க்க சத்தியம்:பெருவிண்ணப்பத்தில்'' பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார், இராமலிங்க சுவாமிகள்.

''சைவம், வைணவம், சமணம், பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களில் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவ சித்தி விகற்பங்களென்றும், அவ்வச் சமயங்களில் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், உள்ளபடியே எனக்கறிவித்து அச்சமயச் சாரங்களைச் சிறிதும் அனுட்டியாற்றடை செய்வித் தருளினீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1865-இல் அவர் ''சமரச சுத்த சன்மார்க்க சங்கம்'' என்னும் அமைப்பை நிறுவியதும் அவருடைய ஆன்மிக வளர்ச்சியின் உச்சக் கட்டமாகும். 'சுத்த சன்மார்க்கம்' பற்றிய அவருடைய பின்வரும் விளக்கம், சமயங் கடந்த ஆன்மிக ஒருமைப்பாட்டு நிலையை புரிந்துக் கொள்ள உதவுகின்றது.

''சுத்த சன்மார்க்க''மாவது குணநிர்க்குண வாச்சிய லட்சியயர்த்தமாகிய சமய மதங்களின் அனுபவமன்று. சுத்த சன்மார்க்கமென்பது சத் சன்மார்க்கமேயாம். சுத்த மென்பது ஒன்றுமில்லாது. ஆதலால், சுத்தமென்பது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன் வந்தமையால், முன் சொன்ன சமய மதங்களைத் தாண்டியது. அதன் அனுபவங்களையும் கடந்தது.''

''எம் மதமும் சம்மதம் என்றார் இராமலிங்க சுவாமி'' என பாரதியாரும் குறிப்பிட்டுள்ளார்.

## இராமகிருஷ்ண பரமஹம்ஸர் (1836—1886)

'சிகாகோ சர்வமத சபை' என்னும் பெயரில் அனைத்துலக சமய அவை 1893-இல் கூடியதற்கு முன் பாகவே தமது ஆன்மிக வாழ்க்கையை ஓர் அனைத்துலக சமய அவையாக ஆத்ம சாதனைகள் வழியே உலகறியச் செய்தவர் குருதேவர் இராமகிருஷ்ண பரமஹம்சர். சிகாகோ வீரராக கல்கத்தா திரும்பிய சுவாமி விவேகானந்தர் கல்கத்தாவில் தமக்களிக்கப்பெற்ற வர வேற்புரைக்கு பதிலளித்துப் பேசிய பொழுது, இராம கிருஷ்ணர் வாழ்க்கை முழுவதுமே ஒரு சர்வமத சபை என்பதை பின் வருமாறு உணர்த்தினார்.

''உலகத்தில் எந்த ஒரு நாட்டிலும் பல்வேறு பிரிவினர் களிடையே சகோதரத்துவ உணர்வும், அனைத்துலச் சமயம் பற்றிய கருத்துகளும் விவாதத்திற்குக் கொண்டு வரப்படு வதற்கு முன்பாகவே, இந்த நகரத்தின் பார்வையில் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வாழ்க்கை முழுவதையுமே சர்வமத சபையாக அமைத்து வாழ்ந்துக் கொண்டிருந்தார்.''

தமது தன்னேரில்லாத குருநாதர் வாழ்க்கையின் ஸ்ரீபாஷ்யமாக தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட முதற் காரணத்தினாலேயே சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வ மதசபையில் அனைத்துலக சமய சமரசக் கண்ணோட்டத்தில் மாபெரும் வெற்றி வீரராக வாகை சூடினார்.

''இந்து சமயம், இஸ்லாம், கிறித்துவம் முதலான பல சமயங்களை ஆத்ம சாதனங்களாகப் பயின்றேன். இந்து சமயத்தில் உள்ள பல பிரிவுகளின் வழிகளையும் பின்பற்றினேன். பல வழிகளையும் பின்பற்றி பலரும் சென்றாலும் ஒரே கடவுளை நோக்கித்தான் செல்கிறார்கள் என்பதைக் கண்டேன். நீங்களும் எல்லா நம்பிக்கைகளையும் முயற்சி செய்ய வேண்டும்; மாறுபடும் வழிகளைக் கடந்து செல்ல வேண்டும்.'' இவ்வாறு இராமகிருஷ்ணர் தமது சீடர்களுக்கும் உபதேசம் புரிந்தார்.

ஆத்ம சாதனங்கள் வழியே அந்தந்த மதத்திற்குரிய ஒழுகலாறுகளை அந்தந்த மதவுணர்வு ஒன்று மட்டுமே விளங்கக் கடைப்பிடித்து அநுபூதி நிலையில் தரிசனம் செய்தவர் இராமகிருஷ்ணபரமஹம்சர். உலக சமய ஞானிகள் எவருடைய வாழ்க்கை வரலாற்றிலும் காணப் பெறாத அற்புத ஆன்மிக சாதனையை பலரறிய, பாரறிய பகிரங்கமாக நிகழ்த்திக் காட்டியவர் இராமகிருஷ்ண தேவர். இதனால்தான் அவருடைய வாழ்க்கையே ஒரு சர்வமத சபை என்றும் பேருண்மையின் இலக்கியமாக வரலாற்றுப் புகழ் கொண்டு விட்டது. இவருக்கு முன் ஞானிகள் பலர் ஒரு நெறிமரபைப் பின்பற்றி அதன் வழியே இறையனுபூதியைப் பெற்றனர்.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஒப்பற்ற ஆத்ம சாதனைகளின் மூன்று தன்னேரில்லாச் சிறப்புகளைப் பற்றி சுவாமி தபஸ்யானந்தாஜி மகராஜ் கூறியுள்ளதாவது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முதலாவதாக ஒரு சாதனையின் ஒழுங்குமுறையில் இருந்து மற்றொன்றிற்குச் செல்வதில் அவர் காட்டிய பேரார்வம், 'ஒரு போஜனப் பிரியன் பல வகையானச் சுவைகளையுடைய உணவுகளை உண்டு மகிழ்வது போல் ஆன்மிகத்துறையில் தாமும் ஒரு போஜனப் பிரியன்' என்று அவர் கூறிக்கொள்வார். அந்தந்த சமய உண்மைகளை ஆத்மாநுபூதியாக பெற அவர் காட்டிய வேகம், இரண்டாவது சிறப்பம்சமாகும். எந்த ஒரு சாதனையையும் சாதிக்க அவர் மூன்று நாட்களுக்குமேல் எடுத்துக் கொண்டதில்லை. சாதாரணமாக ஒரு சாதகர் தமது வாழ்க்கை முழுவதையும் இத்தகைய ஒரு ஆத்ம சாதனைக்கு பயன் படுத்துகிறார்கள் என்பதும் நினைவிற்குரியது. ஆத்ம சாதனத்தில் ஈடுபடுவதற்கு முன்பாகவே ஆத்மபோதம் பெற்றிட்ட மூன்றாவது சிறப்பம்சம் இவருக்குரியது. பைரவி பிராம்மணி, தோதாபுரி முதலானவர்கள் பயிற்று வித்த ஆத்ம சாதனங்களில் இந்த மூன்றாவது சிறப்பம் சத்தைக் காண்கிறோம். தமது இந்த அனுபவத்தை அவரே 'பூசணிக்காய் முதலில் வருகிறது பிறகே மலர் வருகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளார்.''

குட்டிக் கதைகள் மூலம் தத்துவச் சிக்கல்களை முட்டறுத்து உணர்த்தும் அவருடைய எளிமை கொஞ்சும் அமுத மொழிகளில் சர்வ சமயப் பொதுமை நோக்குகள் ஒளி வீசுகின்றன பின்வருவன, இரு சான்றுகள்.

1. ''ஒரே பொருளானத் தண்ணீரைச் சிலர் ஜலம் என்றும், சிலர் அஹ்வா என்றும், சிலர் பாணி என்றும் கூறுவதுபோல், பரம்பொருள் ஒன்றையே சிலர் கடவுள் என்றும், சிலர் அல்லா என்றும் சிலர் ஹரி என்றும் அழைக்கின்றனர்.''

2. ''ஓர் ஆற்றில் குளிக்கும் துறைகள் பல இருக்கின்றன. உலகிலுள்ள ஒவ்வொரு மதமும் அப்படிப்பட்ட துறைகளில் ஒன்றாகும். உன்னுடையது உயர்ந்தது, மற்றவை தாழ்ந்தவை என்று சொல்லாதே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மூலம் ஒவ்வொரு மதமும், அனைத்து உலக மதங்களும் உண்மையான ஆன்மிக சக்திகளாக பெரு முயற்சிகளுடன் பாடுபட்டு வருகின்றன. ஒரு கிறித்துவர், மேலும் சிறந்த ஒரு கிறித்துவராகவும், ஓர் இஸ்லாமியர், மேலும் சிறந்த ஓர் இஸ்லாமியராகவும், ஓர் இந்து, மேலும் சிறந்த ஓர் இந்துவாகவும் விளங்க, அனைத்தையும் தழுவும் அவருடைய ஆன்மிகத்தின் தாக்கம் காரண மாகின்றது.''இவ்வாறு சுவாமிரங்கநாதானந்தாஜி மகராஜ் விளக்கமளித்து, இந்த விளக்கத்தின் நித்ய எதிரொலியாய் கிழக்கு—மேற்கில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண திருமடங்களில் இசைக்கப்பட்டு வரும் பின்வரும் துதிப்பாடல் விளங்கு கின்றது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஓம் ஸ்தாபகாய தர்மஸ்ய ஸர்வதர்ம ஸ்வரூபிணே!
அவதார வரிஷ்டாய ராமக்ருஷ்ணாய தேநம :!!

இந்த இன்னிசைப் பாடலின் விளக்கம், பின்வருவது :

''ஓம். தர்மத்தை (சமயத்தை), நிலைபேறு பெறச் செய்ய (இவ்வுலகத்திற்கு) வந்தவரே; அனைத்து தருமங் களின் (உலக சமயங்களின்) பண்புருவானவரே; தெய்வீக அவதாரங்களுள் தலை சிறந்தவரே, ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரே உங்களுக்கு வணக்கம்.''

இந்த அருட்பா, சுவாமி விவேகானந்தரால் ஸ்ரீ இராமகிருஷ்ணர் வழிபாட்டிற்காக இயற்றப் பெற்றது என்பதும் நினைவிற்குரியது.

### பாரதியார் பார்வையில்

இந்தியத் தத்துவ ஞானத்தின் சர்வமத சமரச நெறியை தமது காலத்தில் வளர்த்து செழுமையூட்டியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (1882—1921). இவர் வேதாந்த மதத்தின் வேரினைக் கண்டவர். இதனால் சர்வமத சமரசநெறிப் பாடலை இயல்பாகவே படைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலைப் பெற்றவர். தமது சுயசரிதைக் கவிதையிலே சர்வமத சமரசநெறி கூறும் பின்வரும் பாடலை இறுதியில் அமைத்து முடித்தார் ;

''பூமியிலே, கண்டம் ஐந்து, மதங்கள் கோடி!
புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்,
சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்
சநாதனமாம் ஹிந்து மதம், இஸ்லாம், யூதம்,
நாமமுயர் சீனத்துத் 'தாவு' மார்க்கம்;
நல்ல ''கண்பூசி'' மதம் முதலாம் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே;
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங் கொன்றே'!

**சமயங்கள் வரலாற்றில்**

**கறைபடிந்த பக்கங்களும் உண்டு**

இந்தியத் தத்துவ ஞானத்தின் ஒளிமயமான கருத்து களை நினைவு கூரும் பொழுது, உலக சமயங்கள் வரலாற்றிலும் இந்திய நாட்டுசமயங்கள் வரலாற்றிலும் சமயங்கள் பெயரால் நிகழ்ந்த போர்கள், கொலைகள், கொடுமைகள் யாவும் நினைவு கூரப்பட வேண்டும். ஏன் எனில் வரலாற்றில் பதிவாகிவிட்ட அந்தக் கறைபடிந்த பக்கங்கள் மீண்டும் எழுதப்படக் கூடாது.

சுவாமிஜி அவர்கள் ''உலக சமயத்தின் இலட்சியம்?'' எனும் தலைப்பில் பேசிய பேச்சொன்றில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட சக்திகள் எங்கும் எதிலும் வெளிப்படுவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சமயங்களிலும் இந்த முரண்படும் சக்திகள் வெளிப்படுவதைப் பற்றி பின்வருமாறு கூறினார்:

''மானுடம் எப்பொழுதும் அறியாத அன்புடைமையின் உச்சக் கட்டம் சமயத்தில் இருந்து வருகின்றது. மானுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த பேய்த்தனமான வெறுப்பும் சமயத்தில் இருந்து தான் வருகின்றது. உலகம் எப்பொழுதும் கேள்விப்படாத அமைதியின் விழுமியச் சொற்கள் சமயத்துறையைச் சார்ந்தவர்களிடமிருந்து வருகின்றன. வெறுப்பு மிகும் பழிச் சொற்களும், சமயத்தைச் சார்ந்தவர்களிடமிருந்து வருகின்றன.''

இவ்வாறு சுவாமிஜீ குறிப்பிட்டதுடன், உலக சமய நோக்கு ஒன்றே சமய சமரசத்தையும், ஆக்கத்தையும் அளிக்க வல்லது என்பதையும் குறிப்பிட்டார்.

'உலகளாவிய மதம்' என்று பெருமை பேச வேண்டுமானால் ஒரு மதம் பூகோளப் பரப்பில் உலகளாவியதாக மட்டும் இருந்தால், அது உண்மையான உலகளாவிய மதமாகாது. ஒரு மதம், அது தோன்றிய நாட்டில் இருந்து வெளியே பரவுவதற்கு, அரசியல், பொருளாதார ஆதிக்கங்கள் துணைக் காரணங்களாக அமைந்ததை வரலாற்றில் காண்கிறோம். அகிம்சையையும், அமைதி நெறியையும் கொண்டு பரவிய பௌத்த சமயத்தையும் வரலாற்றில் காண்கின்றோம்.

'வேற்றுமைகளில் ஒற்றுமை' என்னும் நல்லிணக்கப் பண்பே, உலகளாவிய மதத்திற்குரிய தேர்வு பாடமாக அமைய வேண்டும்.

''புனிதத்தன்மை, தூய்மை, இரக்கம் முதலானவை உலகத்தில் எந்த மதத்தினுடைய தனி யுரிமைகள் அல்ல. ஒவ்வொரு மதமும் மிகவுயர்ந்த பண்பார்ந்த ஆண்களையும் பெண்களையும் தோற்று வித்துள்ளது'' என சுவாமி விவேகானந்தர் கூறியதைப் போல் ஒவ்வொரு சமயமும் வலியுறுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

வேண்டப்படுவது, மத சகிப்புத்தன்மை மட்டுமன்று; என் மதத்தில் சேர்ந்தால்தான் உய்வுண்டு, இல்லையெனில் உய்வில்லை என்னும் பிற சமய வெறுப்புக் குரலின் ஒழிப்பும் வேண்டப் படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தோறும் ஒலித்துக் கொண்டேயிருக்க வேண்டிய சமயப் பொதுமைக் குரலும், உள்ளார்ந்த ஒற்றுமைக்குரலும் சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் முழக்கத்தில் எதிரொலித்தன.

இந்த முழக்கத்திற்கு, நூற்றாண்டு விழா எடுப்ப தென்பது, இந்தியத் தத்துவ ஞானத்தின் உலகளாவிய சமயக் கண்ணோட்டத்திற்கு எடுக்கும் நூற்றாண்டு விழாவும் ஆகும்.

உலக வரலாறு, எவ்வளவோ பேருரைகளைக் கேட்டதுண்டு; பதிவு செய்ததுண்டு. ஆனால், சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவு போன்று நூற்றாண்டு விழா காணும் சொற்பொழிவு இருக்க இயலுமோ எனும் வியப்பு மேலோங்கித் தான் இருக் கின்றது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ சர்வ மத சபையின் தோற்றம்

## கனிஷ்கன் காலத்தில்

ஒரு மதத்தின் பெயரால் மகாசபை கூட்டப்பெறும் வழக்கத்தை பௌத்த சமயம் தொடக்கி வைத்ததை முன்பே அறிந்தோம். இந்த வழக்கம், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவின் குஷான் வம்ச ஆட்சியைத் தோற்றுவித்த கனிஷ்கன் என்னும் பேரரசனால் தொடரப் பட்டது. இவனுடைய பேரரசு, மத்ய ஆசியா, ஆப்கானிஸ்தான், காஷ்மீர், சிந்து, பீகார், மால்வா முதலிய பிரதேசங்களை உள்ளடக்கியது. பலவித இனங்கள், பல சமயங்கள் கொண்ட தனது பேரரசில் சமய சமரச நோக்கைக் கொண்டிருந்தான், கனிஷ்கன். இவன் பௌத்த சமயத்தின் மகாயானப் பிரிவைச் சார்ந்தவன். எனினும் பிற சமயங்களை மதிக்கத் தெரிந்தவன். சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகியவைற்றை நல்லிணக்கப் பார்வையுடன், மதித்தான். அவன் வெளியிட்ட நாணயங்களில் இந்திய, ஈரான், கிரேக்க தெய்வ வடிவங்களை பொறித்தான்.

காஷ்மீரில் குந்தளவனம் என்னுமிடத்தில் பௌத்த சமயத்தின் மகாசபையைக் கூட்டினான். இந்த மகா சபையில் 'அர்ஹத்' என்னும் பௌத்த சமய ஞானிகள் கலந்துக் கொண்டனர். இவர்கள் எண்ணிக்கை 499 என்று கூறப்படுகின்றது. இந்த சபையில் ஓர் நூற்றாண்டு காலமாக நிலவிய பௌத்த சமய உட்பிணக்குகள் விவாதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. பதினெட்டு பிரிவுகளும் உண்மையான கொள்கையைக் கொண்டதாக இந்தச் சபையில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

## ஹர்ஷர் காலத்தில்

வட இந்தியாவில் தோன்றிய பேரரசுகளுள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய ஹர்ஷ வர்த்தனன் பேரரசும் ஒன்று. இவன் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 606—கி. பி. 636) கன்னோஜ் நகரத்தில் ஒரு சமயப் பேரவைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. புத்தரின் தங்கச் சிலையுடன் கூடிய ஒரு கோபுரம் நூறடி உயரத் திற்கு கட்டப்பட்டது. சமயப் பேரவையின் உறுப்பினர் களை ஹர்ஷரே தேர்ந்தெடுத்தார். ஆயிரம் பௌத்த பிக்குகளும், ஐந்நூறு பிற சமயத்தினரும் சமயப் பேரவையில் கலந்துக் கொண்டனர். இந்த அவையின் தலைவராக அப்பொழுது அங்கிருந்த சீனயாத்ரீகன் யுவான் சுவாங் அரசரால் நியமிக்கப்பட்டார். இந்த அவை இருபத்தொன்று நாள்கள் நடந்தது. யுவான் சுவாங் கருத்துகளை எதிர்த்துப் பேச அரசர் எவரையும் அனுமதிக்க வில்லை. இதனால் அதிருப்தி கொண்ட ஹீனயானப் பிரிவினரும், பிறரும் விவாதத்தில் கலந்துக் கொள்ள வில்லை. இறுதி நாளில் கோபுரம் தீப்பற்றி ஏற்பட்ட குழப்பத்தில் ஒருவன் கையில் கத்தியுடன் அரசனை நோக்கி விரைந்ததாகவும், அவன் பிடிபட்டதாகவும், பிற சமயத் தினர் தூண்டுதல் காரணமாக கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறாக கன்னோஜ் சமயப் பேரவை குழப்பத்தில் முடிந்தது.

## தில்லியில் ஒரு சர்வ சமய மாநாடு

இந்திய சமய வரலாற்றில் முதன் முறையாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் சர்வ சமய மாநாடு ஒன்று தில்லியில் கூட்டப் பெற்றது. 1857-ஆம் ஆண்டு சிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியில் இந்து- இஸ்லாமிய மதவுணர்வுகள் வெடித்தெழுந்ததைக் கண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், சமய உணர்வுகளில் தலையிடாமல் ஒதுங்கி நிற்க முன் வந்தது. 1877-இல் தில்லியில் விக்டோரியா மகாராணி, இந்தியப் பேரரசியாக முடிசூட்டிக் கொண்டதைக் கொண்டாட ஒரு விழா— 'தர்பார்'— ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் தொடர்பாக ஆங்கிலம் கற்ற பிரிட்டிஷ் அரசு விசுவாசிகள் இந்திய சமயங்களிடையே சமரசத்தை உருவாக்க ஒரு சர்வ சமய மாநாட்டை கூட்டினர்.

இந்து, இஸ்லாம், கிறித்துவம், பார்சி முதலான சமயங்களைச் சார்ந்தவர்கள் அழைக்கப்பட்டனர். பொதுவான ஒரு சமயக் கோட்பாட்டை உருவாக்க விவாதம் நிகழ்ந்தது. பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ சந்திர ஸென், இஸ்லாமியர் தலைவர் சையது அகமதுகான், ஆர்ய சமாஜத் தலைவர் சுவாமி தயானந்த சரஸ்வதி. முன்ஷி அல்காத்ரி உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

சுவாமி தயானந்த சரஸ்வதி, பண்டைய வேதநெறி சமயக் கோட்பாட்டை, அவர் கண்ணோட்டத்தில் கண்டவாறு, பொது சமயக் கோட்பாடாக ஏற்க வேண்டும் என வற்புறுத்தியதால், இந்த சர்வ சமய மாநாடு தோல்வியுற்றது.

இந்தியாவில் நிகழ்ந்தது போன்று உலகில் வேறெந்த நாட்டிலாவது சமயப் பேரவைகள் நிகழ்ந்துள்ளனவா என்பது தனி ஆய்விற்குரியது.

1893-இல் சிகாகோவில் நடைபெற்றது போன்ற சர்வ மத சபை உலகத்தின் எந்தப் பகுதியிலும், நிகழ்ந்ததில்லை. இந்த உண்மையை சுவாமி விவேகானந்தர் அவர்களே தமது முதல் நாள் சொற்பொழிவில் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால், இந்த சர்வ மதசபை கொலம்பஸ் அமெரிக்காவைக் "கண்டுபிடித்த" நானூறாவது ஆண்டு விழாத் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலம்பஸ் தாக்கம்

ஸ்பெயின் நாட்டரசின் உதவியுடன் கிறிஸ்டோபர் கொலம்பஸ் (1461—1506), ஆகஸ்ட் 3, 1492-இல் 'சாண்டமேரியா', 'நினா', 'பிண்டா' என்னும் மூன்று கப்பல்களுடன் புறப்பட்டு, மேற்கொண்ட கடற்பயணத்தில் அக்டோபர் 12, 1492-இல் தென் அமெரிக்காவின் பஹாமஸ் என்னும் தீவில் இறங்கினான். இந்த நிகழ்ச்சியை அமெரிக்காவைக் கண்டுபிடித்த மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியாக வெள்ளையர்கள் கொண்டாடினர்.

கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டுபிடித்ததை தகுந்த முறையில் கொண்டாட வேண்டும் என்னும் பொது மக்கள் கோரிக்கைக்கு இணங்கி, ஐக்கிய அமெரிக்க நாடுகள் காங்கிரஸ் 1890, ஏப்ரல் 25-இல் ஒரு சட்டத்தை இயற்றியது. கலைகள், தொழில்கள், நாட்டின் உற்பத்திகள், பொருள்கள், முதலானவற்றை விளக்கும் ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய இந்தச் சட்டம் வகை செய்தது. அப்பொழுது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஹாரிசன் இந்தக் கண்காட்சிக்காக பத்து மிலியன் டாலரை அனுமதித்தார். திட்டமிடப் பெற்ற செலவு இருபத்திரண்டு மிலியன் டாலராகும். இந்தக் கண்காட்சி 1893 மே முதல் தேதியில் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி கிளீவ்லண்ட் திறந்து வைத்தார்.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த நானூறாவது விழாவை முன்னிட்டு சர்வ தேச கண்காட்சியாக அறிவிக்கப்பட்டது.

200 ஏக்கர் பரப்பில், மிச்சிகன் ஏரிக்கரை ஓரமாக இரண்டு மைல்கள் நீளத்தில் இந்த உலகக் கண்காட்சி அமைந்தது. அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சியின் சக்தியை உலகிற்கு எடுத்துக் காட்டவும் இந்த உலகக் கண்காட்சி பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. விஞ்ஞானம் பொருளாதாரம், கல்வி, சமயம், தொழில் முதலான பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளின் வளர்ச்சிக் கட்டங்களையும் பற்றி விவாதிக்க தனித்தனி அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதும் குறிப் பிடத்தக்கதாகும். 'உலக கொலம்பியன் கண்காட்சி என்றும்' 'கொலம்பஸ் அரங்கு' என்றும் பெயர் சூட்டப் பெற்று கொலம்பசின் செல்வாக்கு உயர்த்திக் காட்டப் பட்டது.

கொலம்பஸ் ''சாதனைகள்'' பற்றிய மறு பரிசீலனை வரலாற்று ஆய்வாளர்களால் நிகழ்த்தப் பெற்று வருகின்றது. கொலம்பஸ் 'புதிய உலகத்தைக்' கண்டு பிடித்த ஐந்நூறாவது விழாவை 1992-இல் அமெரிக்க அரசாங்கம் கொண்டாடிய பொழுது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து லத்தீன் அமெரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பலநாட்டு முற்போக்கு இயக்கங்கள், பத்திரிகைகள் நூல்களையும், கட்டுரைகளையும், வெளியிட்டன. கொலம்பஸ் இனவெறி பிடித்த இனப்படுகொலைகாரனாக வும், காலனியாதிக்க முன்னோடியாகவும், பொருளாதாரச் சுரண்டல் கொள்ளைக்காரனாகவும், அடிமை வியாபாரத் தின் பாதுகாவலனாகவும் சித்தரிக்கப்பட்டான். இதற்கான சான்றுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. குறிப்பாக கத்தோ லிக்கச் சமயத்தின் டொமினிகன் சபையைச் சார்ந்த லாகாஸாஸ் என்னும் பாதிரியார் கொலம்பஸ் செய்த கொடுமைகளை, செவ்விந்தியர்களை கொன்று குவித்த கொடுமைகளை, விரிவாக எழுதியுள்ளார். நேர்முகமான அனுபவத்தைக் கொண்டு எழுதினார், லா காஸாஸ். செவ்விந்தியர்களிடையே கிறித்துவ சமயத்தைப் பரப்பச் சென்ற இவர், செவ்விந்தியர்களின் பாதுகாவலராகவும் செயலாற்றினார். இவர் மறைந்த மூன்னூறு ஆண்டு களுக்குப் பிறகு, ரோமன் கத்தோலிக சமயக் குரவமர் வரிசையில் சேர்ப்பதற்கான முதற்படியான பரமண்ட லத்தில் பேரின்ப நிலையை எய்தச் செய்யும் சடங்கு வாடிகன் சமயப் பீடத்தில் தொடங்கப்பட்டது. இதில் வியப்பென்னவென்றால், லா காசஸ்ஸுக்குப் பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்டோபர் கொலம்பஸ் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், ''புதிய உலகம்'' கண்டு அங்கு பரமபிதாவின் செய்தியைப் பரப்ப, பரமபிதாவால் தேர்ந்தெடுக்கப் பட்டவர், கொலம்பஸ் என்று வாடிகளின் வரலாற்று விளக்கம் கூறியது.

## சிகாகோ சர்வமத சபைக்கு முன் அமெரிக்காவில் இந்துசமயத் தாக்கம்

அமெரிக்காவில் இந்து சமயச் சிந்தனைகளை அறிமுகப் படுத்தியவர்களுள் ரால்ப் வால்டோ எமர்சன் (1803-1882) ஒருவர். ''எமர்சனுடைய கொள்கைகள் அநேக அமிசங் களில் வேதாந்தக் கொள்கைளை ஒத்திருக்கின்றன'' என 'வீர விளக்கு' வ. வே. சு ஐயர் (1881—1925) குறிப் பிட்டுள்ளார். எமர்சனின் 'செல்ப் ரிலையன்ஸ்' என்னும் நூலைத் தமிழில் 'தன்னம்பிக்கை' என்னும் தலைப்பில் மொழி பெயர்த்து வெளிட்டவர் வ. வே. சு. ஐயர்.

சுவாமி விவேகானந்தர், 'பக்தியோகம்' என்னும் தலைப்பில் ஆற்றிய பேருரையில் எமர்சனின் கருத் தொன்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார். 1900 பிப்ரவரி 1-இல் அமெரிக்காவில் ''மகாபாரதம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்திய பொழுது எமர்சனைப் பற்றி பின் வருமாறு கூறியுள்ளார்.

''எமர்சன் அகத்தெழுச்சியின் தோற்றுவாயை அறிய வேண்டுமானால் கீதையைப் பாருங்கள். அவர் கார்லைலைச் சந்தித்தார். கார்லைல் அவருக்குக் கீதையைக் கொடுத்தார்.''

'பிரம்மா' என்னும் எமர்ஸன் கவிதையில் பகவத் கீதையின் சாங்கிய யோகத்தின் 19-வது சுலோகத்தின் பின் வரும் கருத்து எதிரொலித்துள்ளது.

''ஆத்மாவை கொலையாளி என்றும் கொலையுண்பா னென்றும் எண்ணும் இருவரும் அறியாதார். ஆத்மா கொல்லுவதுமில்லை, கொலையுண்பதுமில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்தை எதிரொலிக்கும் 'பிரம்மா' கவிதையின் பகுதி, பின்வருவது:

If the red slays thinks he slays
Or if the slain thinks he is slain
They knew not well the subtle ways
I keep and pass and turn again

பகவத்கீதை கி.பி. 1785-இல் சார்லஸ் வில்கின்ஸ் என்பவரால் முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. பகவத் கீதையின் முதல் ஆங்கிலப் பதிப்பு எமர்ஸன் கடைசி காலத்தில் வாழ்ந்த வீட்டில் பாதுகாக்கப்பட்டது, என்பதும் குறிப்பிடத்தக்கது.

1838-இல் ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் எமர்ஸன் செய்த தத்துவப் பேருரையில் இறைவன், மனிதன், இயற்கை ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள இயைபு விளக்கப்பட்டது. மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத்தை விளக்குமிடத்தில் உபநிடதச் சிந்தனை யோட்டமான ஆத்மா-பிரம்மம் பற்றிய கருத்தமைப்பு உறவாடுகின்றது.

எமர்ஸனின் நெருங்கிய நண்பரான ஹென்ரி டேவிட் தோரோ (1817-1862) இந்தியத் தத்துவங்கள், பகவத் கீதை ஆகியவற்றில் பெரும்பற்று கொண்டவர். 1849-இல் வெளிவந்த இவருடைய "A week on the concord and merrimack River" என்னும் நூலில் இந்தியத் தத்துவங்கள், கீதையின் புகழ்மிக்க எழுச்சியுடன் கூறப்பட்டுள்ளது. தோரோவின்ஒரு கருத்து பின்வருவது :

"உபநிடதம், பகவத்கீதையின் வியக்கத்தக்க உலகத் தோற்றம் பற்றியத் தத்துவ அறிவில் மூழ்கி எழுந்த எனக்கு நம் நவீன உலகத்தையும், இலக்கியத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இவை பலவீனமாயும், முக்கியத்துவம் அற்றதாகவும் தெரிகிறது. காளிதாசனின் சாகுந்தலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மநுதர்ம சாஸ்திரத்தையும் தோரோ குறிப்பிட்டுள்ளார். சீனர்கள், இந்துக்கள், பாரசீகத்தவர்கள், ஹீப்ருக்கள் ஆகியோரின் புனித நூல்களில் இருந்து தொகுத்து ''ஓர் இணைப்பு பைபிளை'' வெளியிடலாம் என்றும் பரிந்துரை செய்தவர் தோரோ. அந்த அளவிற்கு ஆசியாக் கண்ட உணர்வு மிக்கவராயிருந்தார். இவருடைய மற்றொரு நூல் ''Walden or life in the woods'' *(1854)*. இவ்விரு நூல்களையே அவர் எழுதினார்.

எமர்ஸனும், தோரோவும் கன்கார்ட் என்னும் ஊரில் வாழ்ந்தவர்கள். சுவாமி விவேகானந்தர் 'மகாபாரதம்' பற்றிய தமது உரையில் ''Concord Movement'', 'Concord party' என்று குறிப்பிட்டார். இவ்விரண்டு குறிப்புகளும் பகவத்கீதையின் செல்வாக்கைச் சுட்டிய பொழுது கூறப் பெற்றன. ''அமெரிக்காவின் பரந்த நோக்குடைய இயக்கங்கள் ஏதாவதொரு வழியில் 'கன்கார்ட் குழு'விற்கு கடமைப்பட்டுள்ளன'' என்றும் சுவாமிஜி குறிப்பிட்டுள்ளார். கன்கார்ட்டில் தோரோவும் எமர்ஸனும் தொடங்கிய அனுபவங் கடந்த அறிவின் மூலதத்துவ ஆய்வு இயக்கம் (Transendalist Movement) ஆன்மீக இந்தியாவை அமெரிக்காவில் அறிமுகப்படுத்தியது.

இந்தக் கன்கார்ட் இயக்கத்தின் தாக்கத்தை, வால்ட் விட்மன் *(1819—1892)* என்னும் அமெரிக்கக் கவிஞரிடமும் காண்கிறோம். ''இந்தியச் சிந்தனையின் நீர்ப்பாய்ச்சலினால் வளர்த்த மரத்தில் பூத்த மலராக'' எமர்சனின் 'பிரம்மா' என்னும் கவிதை வருணிக்கப்படுகின்றது. வால்ட் விட்மன், இந்தக் கவிதையை விமர்சனம் செய்த பொழுது, ''பிரம்மா'' என்னும் இந்தியத் தெய்வம் நீக்கமற நிறைந்து விளங்கும் தெய்வம், இதனுள் மாயை (Illusion), மனோபாவம் (Fancy) முதலான ஒவ்வொன்றும் முடிவில் பழைய நிலைமைக்குத் திரும்பி ஒடுங்குகின்றது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்மன்னுடைய ''புல்லின் இதழ்கள்', (Leaves of Grass—1855) என்னும் வசன கவிதையை எமர்சன், ''பகவத்கீதை, நியூயார்க் ஹெரால்ட் இரண்டின் கலவையாகும்'' என வருணித்தார்.

சுவாமி விவேகானந்தர் 1897-இல் லாகூர் சென்ற பொழுது அங்கிருந்த அவருடைய நண்பர் தீர்த்தராம் கோஸ்வாமியின் நூலகத்தில் இருந்து 'புல்லின் இதழ்கள்' கவிதையை எடுத்துப் படித்ததாகவும், விட்மன்னை 'அமெரிக்க சந்யாசி' என்று கூறியதாகவும் ஒரு செய்தி அவருடைய வாழ்க்கை வரலாற்று நூலில் உள்ளது.

விட்மன், எமர்ஸனுடைய சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கின்றார். ''பண்டைய இந்து கவிதைகளை'' படித்துள்ளதாக அவரே ஒப்புக் கொண்டுள்ளார்.

'லீவ்ஸ் ஆப் கிராஸ்' தவிர விட்மன்னுடைய Song of Myself, Passage to India, Salut au Mondel, Starting from Paumanok crossing Brooklyn Ferry முதலான கவிதை நூல்களில் வேதங்கள், கீதையின் தத்துவக் கூறுகளைக் காண முடிகின்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ''விட்மன்னைப் போல வேறெந்த அமெரிக்கரும் கீழ்த்திசை வுணர்வை (Oriental spirit) புரிந்துக் கொள்ளவில்லை'' என கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கூறினார். ஆசிய கண்டத்தின் சமய - ஆன்மிக வுணர்வு, ''கீழ்த்திசையுணர்வாக'' கூறப்பட்டுள்ளது. விட்மன்னிடம் எமர்ஸனின் தாக்கம் உள்ளது என்றும் ஆய்வாளர் சாற்றியுள்ளதும், இங்கு நினைவிற்குரியதாகும்.

விட்மன் வைத்திருந்த கீதை நூலின் பக்கங்களில் ஆங்காங்கே அவர் கைப்பட எழுதியக் குறிப்புகளும், விளக்கங்களும் உள்ளன என்னும் சான்று ஒன்றே விட்மன்னிடம் கீதை செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதை வலியுறுத்தப் போதுமானது. அவருடைய ''Song of Myself'' என்னும் கவிதையில் கீதையில் விளக்கமுறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா- பிரம்மம் ஐக்கியம் எதிரொலிக்கின்றது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

''பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச
துஷ்க்ருதாம் !
தர்ம ஸம்ஸ் தாபனர்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||''

என்னும் கீதையின் அவதாரத் தத்துவத்தின் எதிரொலியை விட்மன்னுடைய 'Song of Myself' என்னும் கவிதையின் பின் வருமிடத்தில் கேட்கின்றோம்.

"I rise from age ta age and take, Visrbie
Shape, and move a man with man,
Succuring the good"

'In Passage to India' என்றும் கவிதையில் (1871) விட்மன் வெளிப்படுத்தும் இறையுணர்வுகள் கீதை வழியே துலங்குகின்றன.

மேற்கண்டவாறு, எமர்ஸன், தோரோ, வால்ட் விட்மன் ஆகியோர் சிகாகோ சர்வமத சபைக்கு முன் இந்து சமயத்தத்துவங்கள் சிலவற்றை தங்களது படைப்புகளில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தியிருந் தாலும், அவையெல்லாம் அமெரிக்க மக்கள் பலரிடையே எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

சிகாகோ சர்வமத சபையின் தோற்றமும், அங்கு சுவாமி விவேகானந்தரின் ஆன்மிக முழக்கமும் இந்து சமயத்தின் உலகநேயப் பண்பையும், உயர்தோங்கிய ஆன்மிகச் சிகரங்களையும் பலரறிந்து பாராட்ட வைத்தன.

## சர்வ மத சபையின் தோற்றம்- சில குறிப்புகள்

சிகாகோ உலகக் கண்காட்சியில், உலக சமயங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து ஒரு சர்வமத சபையைக் கூட்ட சார்லஸ் கரோல் போன்னி என்பவர் விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சாசன, பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பற்றி பல நூல்களை இயற்றியவர், போன்னி. சர்வதேச சட்டம் ஒழுங்கு பற்றிய அமைப்பின் தலைவர். மனித சமுதாயம் ஒற்றுமையுணர்வைப் பேணி வளர்க்க உலக மதங் களிடையே நட்புறவு காணவும், இதன் மூலம் கடவுள் நம்பிக்கையும். சமுதாயத் தொண்டும் மேலோங்கவும் போன்னி சிந்தித்தார். ஆனால், சர்வமத சபை பற்றிய ஏற்பாட்டிற்கு, உலகக் கண்காட்சியின் தலைவர் மறைத் திரு ஜான் ஹென்றி பரோஸ் உண்மையிலேயே திட்ட மிட்டார். உலகம் முழுவதிலும் இருந்து மூவாயிரம் பேர்கள் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து மேற்படி ஆலோசனைக் குழுக் களில் மூவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 'இந்து' பத்திரிகை யின் ஆசிரியராகப் புகழ் பெற்ற ஜி. சுப்பிரமணிய ஐயர், பிரம்ம சமாஜத்தைச் சார்ந்த பி. பி. நாகர்கர் (பம்பாய்), பிரதாப் சந்திர மஜீம்தார் (கல்கத்தா) ஆகியோர் அந்த மூவர் ஆவர். பம்பாயில் சமண சமய ஆசாரியரான ஆத்ம ராம்ஜி, கல்கத்தாவில் பௌத்த சமய மகாபோதி சொஸை டியின் பொதுச் செயலாளர் அனகாரிக தம்மபாலா ஆகியோருடன் சிகாகோ சர்வ மதசபை அமைப்புக்குழு தொடர்பு கொண்டது.

ஜி. சுப்பிரமணிய ஐயரின் 'இந்து' பத்திரிகையில் சிகாகோ சர்வமத சபை ஏற்பாடு சம்பந்தமான செய்திகள் வெளிவந்தன. இதன் வழியாக சுவாமி விவேகானந்தர் முதன்முதலில் சிகாகோ சர்வமத சபையைப் பற்றி அறிந்தி ருக்கக் கூடும்.

1891-இல் முதன் முதலில் நியமிக்கப்பட்ட அமைப்புக் குழுவில் கிறித்துவ புராட்டஸ்டண்ட் சமயப் பிரிவினர் பெரும்பான்மையினராக இருந்தனர்.

சர்வமத சபையியின் நோக்கங்களைப் பற்றி, வெளி யிடப் பெற்ற அறிக்கையில் முக்கியக் கருத்துகள் பின் வருவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வரலாற்றுப் புகழ் கொண்ட உலக சமயப் பிரதிநிதி களை வரலாற்றில் முதன்முறையாக ஒரு மாநாட்டில் ஒன்று கூட்ட வேண்டும்.

2. பலவிதமான சமயங்களின் முக்கிய உண்மைகள் எவை, அவை பொதுவாக எப்படி போதிக்கப்படுகின்றன என்பதை மக்களுக்கு மனதில் பதியும் வகையில் எடுத்துக் கூறுதல்.

3. கிறித்துவ சமய உலகத்தின் பல்வேறு கிளைகள் மற்றும் ஒவ்வொரு சமயத்தின் தனிச்சிறப்பான உண்மை களைப் பற்றிப் பேச தகுதிவாய்ந்தவர்களை அழைத்து உரையாற்ற ஏற்பாடு செய்தல்.

4. தற்கால பெரும் பிரச்னைகளைப் பற்றி விவாதித்தல். குறிப்பாக மதுப்பழக்கம், தொழில், கல்வி, செல்வம், வறுமை முதலான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண சமயம் எவ்வாறு உதவும் என்பதைத் தக்கவர்கள் உரை களைக் கொண்டு அறிதல்.

5. நிலையான உலக சமாதானத்தைப் பெறுவதற்கு, உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டையும் தோழமையுணர்வு கொள்ளச் செய்தல்.

சர்வ மதசபை பற்றிய அறிவிப்புக்கு பொதுவாக ஆதரவு திரண்டது. பொதுவாக கிறித்துவ சமயம் ஒன்றே உண்மையான ஆற்றல் வாய்ந்த சமயம் என்பதை எடுத்துக் காட்ட 'சர்வ மதசபை'யைப் பயன்படுத்திக் கொள்ள, அமைப்பாளர்கள் எண்ணினர். பொதுக்குழுவின் தலைவர் பரோஸ் வெளியிட்ட பின்வரும் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது;

''கிறித்துவ சமயம், பிற எல்லா சமயங்களையும் அகற்றும் ஆற்றலைப் பெற்றது என நாங்கள் நம்பு கின்றோம். ஏன் எனில் அந்த சமயங்களில் உள்ள எல்லா உண்மையும் கிறித்துவ சமயத்தில் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் விமோசனம் அளிக்கும் கடவுளையும் கொண்டது.'' பரோஸ், சிகாகோவின் முதல் பிரஸ்பை டெரியன் சர்ச்சின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிகாகோ சர்வமத சபையில் நேரடியான அனுபவம் பெற்ற சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வ மதசபை கூட்டம் பெற்றதின் உள்நோக்கத்தை பின்பு விளக்கி யுள்ளார். இந்தியா திரும்பியதும் கல்கத்தாவில் தமக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பிற்கு அளித்த பதிலுரையில் 'உள் நோக்க'த்தை பின்வருமாறு அம்பலப்படுத்தியுள்ளார்:

''சர்வமத சபையைக் கூட்டியது மகத்தானது என்பதில் சந்தேகமில்லை. ஏற்பாடு செய்தவர்கள் நமது நன்றிக்குரிய வர்கள்; நம்மிடம் அன்பு காட்டிய அவர்கள் நம் பாராட்டுக் குரியவர்கள். ஆனால் ஒரு செய்தியை விளக்க விரும்புகின் றேன். அவர்களுக்கு ஒரு குதிரை தேவைப்பட்டது; அதன் மீது சவாரி செய்ய விரும்பினார்கள்.''

கல்கத்தா 'உத்போதன்' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் 'சிகாகோ சர்வமத சபை'யைப் பற்றி சுவாமிஜி எழுதியதாவது;

''சிகாகோ சர்வமத சபையில் ரோமன் கத்தோலிக் கர்கள் செல்வாக்கு ஓங்கியிருந்தது. புராட்டஸ்டண்ட் சமயத்தைக் காட்டிலும் தங்கள் சமயம் உயர்ந்தது என்பதை திறுவ ரோமன் கத்தோலிக்கர்கள் எதிர்பார்த் தார்கள். அவையில் கூடியிருந்த கிறிஸ்துவர்கள், இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள் மற்றும் பிற உலக சமயங்களின் பிரதிநிதிகளின் பலவீனங்களை பகிரங்கப் படுத்தி, தங்கள் உயர்வை நிலைநாட்ட விரும்பினார்கள். ஆனால், முடிவு வேறுவிதமாக அமைந்து விட்டது. இதனால் மீண்டும் ஒரு சர்வமத சபையைக் கூட்டுவதற்கு ரோமன் கத்தோலிக்கர்கள் எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கினர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோவில் இருந்து 1895-இல் எழுதிய கடிதத்தில், ''கிறித்துவ சமயத்தின் உயர்வைக் காட்டுவதற்காகவே, சர்வமத சபை கூட்டப் பெற்றது'' என்று சுவாமிஜி குறிப்பிட்டார்.

எவரும் எதிர்பார்க்காத நிலையில் சிகாகோ சர்வமத சபையில் வேதாந்த சமயத்தின் வெற்றிக் கொடியை பட்டொளி வீசப் பறந்திடச் செய்தார், சுவாமி விவேகானந்தர்.

சிகாகோ வீரராக மலர்வதற்கு முன்பு, அமெரிக்கா விற்குப் புறப்பட கப்பல் ஏறுவதற்கு முன்பு சுவாமி துரியானந்தரிடம் பின்வருமாறு குறிப்பிட்டது, வியப்பிற்குரிய தீர்க்கதரிசனமாகி விட்டது.

''சர்வமத சபை இதற்காக (தம்மைச் சுட்டிக்காட்டி) கூட்டப்படுகிறது. இவ்வாறு என் மனம் சொல்லுகிறது. மிக விரைவிலேயே இது நிரூபணமாகும்.''

University of Jaffna
04 JAN 2022
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ பயணத்தின் வித்தும், வளர்ச்சியும்

உலக வரலாற்றில் பதிவாகியுள்ள பல பயணங்கள், புதிய வரலாறுகளைப் படைத்துள்ளன. 1893-இல் சுவாமி விவேகானந்தர் மேற்கொண்ட சிகாகோ பயணம் புதிய வரலாற்றைப் படைத்தது.

புதிய வரலாற்றைப் படைக்கும் பேராற்றல் சுவாமி விவேகானந்தரிடம் பொதிந்துள்ளது என்பதை குருதேவர் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் அமுத மொழியில் அறிகின்றோம். நரேந்திரனாக, தம்மிடம் ஞான வேள்வி இயற்ற வந்த பொழுதே குருதேவர், அருமைச் சீடரின் பேராற்றலைப் பற்றி பின்வருமாறு பாரறிய பகிரங்கப் படுத்தினார்.

''நரேன், தன்னுடைய அறிவாற்றலாலும், ஆன்மீக வலிமையாலும் உலகின் அடித்தளத்தை அசைக்கப் போகும் காலம் வரும்.''

பரமஹம்சரின் இந்த தீர்க்க தரிசன மெய்யுரையை, பிற்காலத்தில் நரேந்திரனாக இருந்து விவேகானந்தராக மாறிய காலத்தில், பின்வருமாறு தமது சகோதரத் துறவியிடம் நினைவு கூர்ந்தார்.

''சகோதரரே, குருதேவர் என்னைப் பற்றிக் கூறியதை ஓரளவு புரிந்து கொள்ளத் தொடங்குகிறேன். உண்மையிலேயே என்னிடம் அவ்வளவு சக்தி உள்ளது. உலகத்தையே புரட்சிகரமாக ஆக்குவேன் என நான் உணர்கின்றேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதேவர் தமது ஆன்மீக அருட் செல்வம் அனைத்தை யும் நரேனிடம் வழங்கிவிட்டு 'வறியவ'ராக தம்மை வருணித்துக் கொண்டது, வரலாற்றுச் செய்தியாகும்.

குருவிடம் பெற்ற ஞானக் களஞ்சியத்தை மேன் மேலும் வளப்படுத்திக் கொண்டார், விவேகானந்தர். பாரதத்தின் பரந்து விரிந்து கிடக்கும் நிலப்பரப்பை, அதன் பல்வேறு வகைப்பட்ட மக்கட் சமுதாயத்தை நேருக்கு நேர் சந்தித்து அனுபவ ஞானம் பெற 1890 ஜூலை முதல், 1893 மே வரையில் சுவாமி விவேகானந்தர் பரிவிராஜகராக புனிதப் பயணம் மேற்கொண்டார். இதனால், இந்தியாவின் மனசாட்சியாக, இந்து சமயத்தின் பரிபூரணப் பிரதியாக சிகாகோவில் பொலிவுற்றார்.

சிகாகோ பயணத்தின் வித்து எவ்வாறு, எப்பொழுது, சுவாமி விவேகானந்தர் திருவுள்ளத்தில் இருப்பு கொண்டது எனும் ஆய்வு இன்றியமையாததாகும்.

சுவாமிஜி குஜராத் பிரதேசத்தில் நவம்பர் 1891 முதல். ஏப்ரல் 1892 வரையில் பரிவிராஜகராக பாதயாத்திரை செய்த காலத்தில் சிகாகோ பயணத்திற்கான முன்னறிவிப்பு கள், அறிகுறிகள் வெளிப்பட்டன.

''குஜராத்தில் சுவாமி விவேகானந்தர் பயணங்கள்'' என்னும் ஆங்கிலக் கட்டுரையில் சுவாமி நிகிலேஸ்வ ரானந்தாஜி மகராஜ் (வேதாந்த கேசரி மே, 1993) போர்பந்தர் நகரத்தில் சுவாமிஜி தமது குறிக்கோள் பணித் திட்டத்தை முதன் முறையாக உணர்ந்தார் என்று குறிப் பிட்டுள்ளார். ''தமது குறிக்கோள் பணித்திட்டம் என்ன, அது எங்கு எப்படித் தொடங்கும் என்பதைப் பற்றி தற்சமயம் தெளிவாகத் தெரியவில்லை'' என்று சுவாமிஜி, போர்பந்தர் மகாராஜாவிடம் கூறினார். இந்த சமஸ் தானத்தின் திவானாகப் பணியாற்றிய சங்கர் பாண்டுரங்க பண்டிட் என்பவர் (1840—1894) வேதங்களில் நிறை புலமை பெற்றவர். சுவாமிஜியின் வேத ஞானத்தைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்தார். சுவாமிஜியின் புலமையாற்றல் வெளியுலகம் அறிந்து பயன்பெற வேண்டும் என சங்கர் பாண்டுரங்க பண்டிட் பேராவல் கொண்டார். தமது பேராவலை, பணிவார்ந்த வேண்டுகோளாக, பின்வருமாறு சுவாமிஜி யிடம் சமர்ப்பித்தார்.

''சுவாமிஜி, இங்கு தங்கள் திறமையைப் புரிந்துக் கொள்வோர் வெகு சிலரே இருக்கக்கூடும். இதனால் இங்கு தங்கள் பணிக்கு அதிக வாய்ப்பில்லை என அஞ்சுகிறேன். ஆகவே, தாங்கள் மேல்நாட்டிற்குச் செல்வதினால் பயன் உண்டு. தங்களையும், தங்களுடையத் தனித்தகுதியையும் மேல்நாட்டினர் புரிந்துக் கொள்வர். தாங்கள் சனாதன தருமத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து, மேலைநாட்டுப் பண்பாட்டின் மீது ஒளிபாய்ச்ச நிச்சியமாக முடியும்,'' திவானின் இந்த வேண்டுகோள் சுவாமிஜி அந்தரங்கத்தின் எதிரொலியாகவும் அமைந்தது.

லிம்ப்டி சமஸ்தானத்தின் தாகூர் சாகேப்பும், சுவாமி விவேகானந்தர் மேல்நாட்டிற்குச் சென்று இந்து சமயப் பிரசாரம் செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

ஜுனாகத் சமஸ்தானத்தின் திவான் ஹரிதாஸ் விகாரி தாஸ் தேசாய் (1840—1895) சுவாமிஜியின் அதியற்புத ஆளுமைக்கு ஆட்பட்டவர். சுவாமிஜியின் உள்ளங்கவர்ந்த மூத்தோர்களுள் ஒருவர். சுவாமிஜியிடம் மேல்நாட்டிற்கு சென்று இந்து சமய உண்மைகளை உலகறியச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கால கட்டத்தில் சிகாகோ சர்வமத சபையைப் பற்றி சுவாமிஜி அறிந்திருக்கக்கூடும். ''1892-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சுவாமிஜி, சிகாகோ சர்வமத சபையைப் பற்றி முதலில் அறிந்திருப்பார்'' என மேரிலூயிஸ்பர்க் குறிப்பிட்டது, ஏற்கத்தக்கது.

சுவாமிஜியின் பரிவிராஜகப் பயணம் மத்யபிரதேசத்தில் தொடர்ந்தபொழுது, அங்கு காண்ட்வா என்னும் ஊரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபு ஹரிதாஸ் சட்டர்ஜியின் விருந்தினராக இருந்தார். சிகாகோ செல்ல வேண்டும் எனும் சிந்தனை இங்கு தீவிர மடைந்தது. ''எவராவது பயணச் செலவிற்கு ஏற்பாடு செய்து, எல்லாம் நல்லபடியாக முடிந்தால்தான் சிகாகோ செல்லலாம்'' என ஹரிதாஸ் சட்டர்ஜியிடம் குறிப்பிட்டார் இது, ஒரு சிந்தனையோட்டமாகத் தெறித்ததேயல்லாமல் ஒரு திட்டமாக உருவாகவில்லை.

சுவாமிஜியின் சிகாகோ பயண வித்தின் வளர்ச்சியை பெல்காம் நகரப் பயணத்தில் காண்கிறோம். அங்கு காட்டிலாகா அதிகாரியாகப் பணியாற்றிய பாபு ஹரிபாத மித்ராவின் வீட்டில் சுவாமிஜி ஒன்பது நாட்கள் தங்கியிருந் தார். ஹரிபாத மித்ரா தமது நாட்குறிப்பில் சுவாமிஜியின் சிகாகோ பயணம் பற்றியக் குறிப்பை எழுதி வைத்துள்ளார். அக்டோபர் 25, 1892-இல் எழுதப் பெற்ற பின்வரும் குறிப்பு தக்க ஒரு சான்றாகும்.

''தங்களுடன் காட்டில் ஒரு முகாமில் சில நாட்கள் தங்க வேண்டும் எனும் விருப்பம் எனக்குண்டு. ஆனால், சிகாகோ சர்வமத சபை நடைபெறவுள்ளது; நான் போவதற்கான வாய்ப்பு ஏற்பட்டால் போவேன்'' என சுவாமிஜி என்னுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது கூறினார். நான் பயணச் செலவிற்காக நிதி திரட்ட விரும்பினேன். ஆனால் சுவாமிஜி விரும்பவில்லை. பணத்தைத் தீண்டவோ, பண உதவி பெறுவதோ கூடாது என அவர் விரதமெடுத்திருந்தார்.''

தமது சுற்றுப் பயணத்தில் சுவாமிஜி சந்தித்த சமஸ் தானாதிபதிகளில் மைசூர் சமஸ்தானாதிபதியும் ஒருவர். அக்டோபர், 1892-இல் இவரிடம் சுவாமிஜி, அமெரிக்கா சென்று வேதாந்தத்தைப் பிரசாரம் செய்ய விரும்புவதாகக் கூறினார். மைசூர் மகாராஜா, பயணச் செலவிற்காக பத்தாயிரம் ரூபாய் தருவதற்கு முன்வந்தார். இங்கும் சுவாமிஜி அந்த உதவியை ஏற்கவில்லை. ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பயணம் பற்றிய இறுதி முடிவெடுக்க காலம் கனியவில்லை எனக் கருதினார், சுவாமிஜி.

மைசூரையடுத்து, திருவனந்தபுரம் சுவாமிஜி சென்ற பொழுது, அங்கும் சிகாகோ பயணம் பற்றிய பேச்சு நிகழ்ந்துள்ளது. திருவனந்தபுரத்தில் திருவாங்கூர் இளவரசருக்குக் கல்வி கற்பித்து வந்த பேராசிரியர் கே. சுந்தரராமையர், சுவாமிஜியுடன் நெருங்கிப் பழகினார். சுவாமிஜியை ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுமாறும் கேட்டுக் கொண்டார். ''இதுவரை பொதுக் கூட்டத்தில் பேசிப் பழக்கம் இல்லை; எனவே பேச்சு வெற்றிகரமாக அமையாது'' எனக் காரணம் கூறி மறுத்துவிட்டார், சுவாமிஜி. இந்தச் சந்தர்ப்பத்தில் சுந்தரராமையர், ''தாங்கள் கூறியது உண்மையானால், மாபெரும் சபையான சிகாகோ சர்வமத சபையில் எப்படிப் பேசப்போகின்றீர்கள்'' எனக் கேட்டார். இந்தக் குறிப்பும் சிகாகோ பயணச் சிந்தனையோட்டத்தின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது.

இராமநாதபுரம் ராஜா பாஸ்கர சேதுபதி (1868—1903), சமயப் பற்றும், புலமையும் பெற்றவர். வேதாந்தம் சைவ சித்தாந்தம் இரண்டிலும் ஈடுபாடு கொண்டவர். மதுரையில் சுவாமிஜி, பாஸ்கர சேதுபதியைச் சந்தித்தார். சிகாகோ சர்வமத சபை கூட விருப்பதை பாஸ்கர சேதுபதி அறிவார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய நாட்குறிப்பில் (ஜனவரி 25, 1893) ''இங்கிலாந்து, அமெரிக்கா போக விரும்புதல்'' எனும் ஒரு குறிப்பு உள்ளது. சுவாமி விவேகானந்தரை, சிகாகோ செல்லுமாறு பாஸ்கர சேதுபதி தூண்டினார். பாஸ்கர சேதுபதி, தம்மை சிகாகோ செல்லுமாறு தூண்டியதைப் பன்முறைக் குறிப்பிட்டு பாராட்டியுள்ளார். இவற்றுள் சில, பின்வருவன:

1. ''நான் சென்னையிலிருந்த போது, அங்குள்ள மக்கள், மைசூர் மகாராஜா, ராமநாதபுரம் ராஜா ஆகியோரின் ஆதரவுடன் தாங்களாகவே என்னை சிகாகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள்.''

2. ''அமெரிக்க நாட்டில் நடைபெறும் சர்வ சமய மாநாட்டுக்குச் செல்லும் எண்ணத்தை என்னுள் தூண்டியவர் இவரே. (இராமநாதபுரம் ராஜா).''

3. ''சீரும் சிறப்பும் மிக்க ராமநாதபுரத்து ராஜாவின் விருந்தினனாக இம்மதுரை மாநகரில் தங்கியுள்ளேன். சிகாகோவிற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் விதைத்தவர் ராமநாதபுரம் ராஜாவே.''

மேற்காணும் முதல் பாராட்டுரை 1893-லும், பிற இரண்டும் 1897-லும் கூறப்பெற்றன.

பாஸ்கர சேதுபதி வேண்டுகோளுடன், சிகாகோ பயணச் செலவிற்கும் உதவுவதாகக் கூறினார். ஆனால் சுவாமிஜி அப்பொழுது முடிவெடுக்காததால் பாஸ்கர சேதுபதியின் பண உதவியை ஏற்கவில்லை. தமது பரிவிராஜகப் பயணத்தின் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தார் சுவாமிஜி. இராமேஸ்வரம், கன்யாகுமரி போக வேண்டியிருந்தது. பிறகுதான் சிகாகோ பயணம் பற்றிய இறுதி முடிவெடுக்க வேண்டும்.

## கன்னியாகுமரிச் செய்தி

சுவாமிஜியின் பரிவிராஜகப் பயணத்தின் இமயச் சிகரமாகத் திகழ்ந்தது, அவர் மூன்று நாட்கள் 1892 டிசம்பர் இறுதியில் கன்னியாகுமரிப் பாறையில் செய்த தியானம். புத்தகயாவில் தனிமைத் தவத்தில் இருந்து எழுந்த புத்தரோடு, கன்னியாகுமரிப் பாறைத் தியானத்தில் இருந்து எழுந்த சுவாமி விவேகானந்தரை ஒப்பிட்டார், சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் அவர்கள். அவருடைய எதிர்காலப் பணிகளைப் பற்றிய முடிவுகள் இங்குதான் எடுக்கப் பெற்றன. சிகாகோ பயணம் பற்றிய முடிவும், இந்த முடிவுகளுள் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னைச் சீடர் குழாமும் சிகாகோ பயண ஏற்பாடுகளும்

சுவாமி விவேகானந்தருக்கு முதன் முதலில் ஒரு சீடர் குழு சென்னை நகரத்தில் உருவானதை ரோமன் ரோலாந்தும் குறிப்பிட்டுள்ளார். 1893-இல் தோன்றிய இந்தச் சீடர் குழுவினர் பெயர்கள், வருமாறு: அழகிய சிங்கப் பெருமாள், டாக்டர் எம். சி. நஞ்சுண்டராவ், சி. சிங்காரவேலு முதலியார்· ஜி. ஜி. நரசிம்மாச்சாரி, ஜி. வெங்கடரங்காராவ் இவர்களை 'சென்னைச்சிறுவர்கள். என்று அன்புடன் அழைப்பார், சுவாமி விவேகானந்தர். சிகாகோ பயண ஏற்பாடுகளில் 'சென்னைச் சிறுவர்கள்' பங்களிப்பைப் பாராட்டியுள்ளார், சுவாமி விவேகானந்தர்.

சென்னை நகரத்தில் சிகாகோ பயணம் பற்றிய தமது எண்ணத்தை பகிரங்கமாக அறிவித்தார், சுவாமிஜி. உடனடியாக சென்னைச் சீடர்கள் பொதுமக்களிடையே பயணச் செலவுகளுக்காக, நன்கொடைத் திரட்டத் தொடங்கினர். ஐந்நூறு ரூபாய் திரட்டப்பெற்றது. இதற்கு முன் சமஸ்தானாதிபதிகள் பணவுதவியை மறுத்து வந்த சுவாமிஜி, நடுத்தர வர்க்கத்தின் அன்புக் காணிக்கையை மறுக்க, உணர்ச்சி வயப்போட்டு போனார். சிகாகோ பயணத்திற்கு அன்னை காளியின் அனுமதி வேண்டுமே என அகம் குழைந்தார். அனுமதி வரும்வரை காத்திருக்க விரும்பினார். இதனால் அன்பர்களின் எளிய காணிக்கையை ஏற்க இயலாது எனக் கூற நேர்ந்தது. திரட்டிய நன்கொடையை ஏழை எளிய மக்களுக்கு தானம் செய்யச் சொல்லிவிட்டார். 'சென்னைச் சிறுவர்களும்' சுவாமிஜியின் முடிவை ஏற்றனர்.

இந்த நிலையில் ஹைதராபாத் செல்ல வேண்டியிருந்தது. அங்கு ''மேல்நாட்டில் என் குறிக்கோள் பணித்திட்டம்'' என்னும் தலைப்பில் பேசினார். சிகாகோ பயண நோக்கங்களைத் தெரிந்துக்கொள்ள அந்தப் பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய குறிப்புகள் கூட கிடைக்காமல் போனது பேரிழப் பாகும். சிகாகோவில் உரையாற்றுவதற்கு முன் பேசப் பட்ட பேச்சு என்பதால் அந்தப் பேச்சு குறிப்பிடத்தக்க தாகின்றது.

சுவாமிஜி, மீண்டும் சென்னை வந்தபிறகு, சென்னைச் சீடர்கள் சிகாகோ பயணச் செலவிற்காக நன்கொடை திரட்டும் பணியில் ஊக்கமுடன் ஈடுபட்டனர்.

''இந்திய ஏழை எளிய மக்களுக்காக நான் மேல்நாடு செல்லப் போவதால், அந்த மக்களிடமிருந்தே நன்கொடை வரட்டும்'' என சுவாமிஜி கருதியதற்கு ஏற்ப சீடர்களும் வீடு-வீடாய்ச் சென்று கையேந்தி சிறுக—சிறுக பணம் திரட்டினர். நான்காயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது. மைசூர் மகாராஜா, இராமநாதபுரம் அரசர் ஆகியோரிட மிருந்து எதிர்பார்த்த அளவிற்கு பணம் வரவில்லை. சமஸ்தானத்தின் பிரிட்டிஷ் ஏஜெண்டுகளிடம் கொண்ட அச்சம் காரணமாக இருக்கலாம். தெய்வ அருளின் தூண்டுதலாகவும் இந்த நன்கொடை அமைகின்றதோ என்றும் சுவாமிஜி சிந்திக்க வேண்டியதாயிற்று.

முடிவெடுக்க முடியாமல் குருதேவர் அருளாசிக்காகக் காத்திருந்தார். அந்த அருளாசியும் கிடைத்து விட்டது. ஆம்; கனவுக் காட்சியாக கடலில் குரு தேவர் இருந்துக் கொண்டு சுவாமிஜியை சைகை காட்டி அழைத்து கடலில் சென்று கொண்டிருந்தார். கடல் தாண்டும் சிகாகோ பயணத்திற்கு இந்தக் காட்சி இசைவளித்து விட்டது.

கண் விழிப்புடன், சிகாகோ பயண விழிப்பும் இணைந்தது. பயண ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்கி னார். பரிவிராஜகப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் தூய அன்னை சாரதாதேவியாரிடம் நல்லாசியைப் பெற்றது போல, சிகாகோ பயணத்திற்கும் பெற விரும்பி அன்னைக்கு தன் திட்டத்தைக் குறிப்பிட்டு கடிதம் எழுதினார். அன்னையின் ஆசியும், அனுமதியும், கிடைத்தவுடனேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தப் பரவசத்தில் பயணத்திற்குத் தயாராகி விட்டதை அறிவித்தார்.

சிகாகோ பயணத்திற்கு பம்பாயில் இருந்து 1893 மே 31—இல் கப்பலில் ஏறுவது என்று முடிவாகி விட்டது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் சென்னையில் சுவாமிஜியின் பயண ஏற்பாடுகள் இறுதி வடிவம் பெற்று வந்த நிலையில் எதிர்பாராத விதமாக சுவாமிஜியின் அணுக்கச் சீடரான கேத்ரிமன்னரின் தனிச் செயலாளர் ஜக்மோகன்லால் சுவாமிஜியை கையோடு கேத்ரி அழைத்துச் செல்ல, சென்னை வந்துவிட்டார். முன்பு மகப்பேறு வேண்டி சுவாமிஜியின் ஆசி பெற்ற கேத்ரி மன்னருக்கு, அந்த மகப் பேறு வாய்த்தது. இதற்காக மன்னர் எடுத்த விழாவில் ஆண்மகவை வாழ்த்த சுவாமிஜி வேண்டப்பட்டார்.

அரசவையில், மன்னர் தமக்கு புத்திர பாக்கியம் அருளிய சுவாமிஜிக்கு நன்றி கூறியதுடன், சனாதன தருமத்தின் கொள்கைகளைப் பரப்ப சுவாமிஜி சிகாகோ செல்கிறார் என்பதையும் குறிப்பிட்டு தானும் மகிழ்ந்து, அவையோரையும் மகிழ்வித்தார். சுவாமிஜி, குழந்தையை வாழ்த்தருளினார்.

சுவாமிஜியை வழியனுப்பக் கூடிய அவையில் கேத்ரி மன்னர் சுவாமிஜியிடம் சமர்ப்பித்த வேண்டுகோள் ஒன்றும் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுவிட்டது. சுவாமிஜி தமது பரிவிராஜக வாழ்க்கையில் விவிதிசானந்தர், சச்சிதானந்தர் முதலான பல பெயர்களை வைத்துக் கொண்டார். சிகாகோ பயணத்தில் இருந்து சுவாமிஜி தம்மை விவேகானந்தர் என அறிவித்துக் கொள்ள வேண்டும் என கேத்ரி மன்னர் விடுத்த வேண்டுகோளை சுவாமிஜி ஏற்றார்.

கேத்ரி மன்னர், சிகாகோ பயணத்திற்கான ஏற்பாடு களைச் செய்தார். சுவாமிஜியை பம்பாயில் கப்பலேற்றும் வரை உடன் இருந்து தொண்டு புரிய தனது செயலர் ஜக்மோகன்லாலையும் அனுப்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் ஆபுசாலை ரயில் நிலையத்தில் சகோதரத் துறவிகளான சுவாமி பிரம்மானந்தரையும், சுவாமி துரியானந்தரையும் தற்செயலாகச் சந்தித்தார் சுவாமி விவேகானந்தர். அவர்களிடம் தமது சிகாகோ பயணத்திற்கான காரணத்தை பின்வருமாறு விளக்கினார்.

''நான் இந்தியா முழுவதும் பயணம் செய்தேன். ஐயகோ! என் சொல்வேன், சகோதரர்களே! மக்களின் கொடிய வறுமையை என் கண்களில் கண்டு துயருற்றேன். என் கண்களில் பெருகிய நீரைக் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை. அவர்களுடைய வறுமையையும், துன்பங்களையும் அகற்ற முதலில் முயற்சி செய்யாமல், அவர்களிடம் மதத்தைப் போதிப்பது பயனற்றது என்பது என் உறுதியான முடிவாகும். இந்தக் காரணத்திற்காகவே, இந்திய ஏழை மக்களின் விமோசனத்திற்கு வழிதேட நான் அமெரிக்கா சென்று கொண்டிருக்கின்றேன்.''

பல ஆண்டுகளுக்குப் பிறகு, சுவாமி துரியானந்தர் சுவாமிஜியின் முற்கூறிய கருணை மொழி, புத்தரின் சொற்களும், உணர்வுகளும் போன்றே ஒத்திருந்தது என நினைவு கூர்ந்தார்.

கேத்ரி மன்னரின் தனிச் செயலருடன் 1893 மே 31-இல் பம்பாய் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தார் சுவாமி விவேகானந்தர். கேத்ரி மன்னர், முதல் வகுப்பு பயணச் சீட்டையும், அணிந்துக் கொள்ள ஆரஞ்சு வண்ணத்தில் மேலங்கியையும், காவிநிறத்தில் தலைப்பாகையையும் தனிச் செயலர் மூலம் வழங்கியிருந்தார். வழிச் செலவிற்கு பண உதவியும் செய்தார்.

கப்பலின் மேல் தளத்தில் இருந்து, தாய்த்திரு நாட்டின் தரிசனத்தை உள்ளுணர்வில் கண்டார். ஞானத்திலே, பரமோனத்திலே, தவவேகத்திலே, தனியோகத்திலே, உயர் தியாகத்திலே சிறந்த நாட்டின் வீறார்ந்த விழுமிய ஆன்மிக ஞானச் சுடராக, சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ பயணத்தால் புதிய வரலாறு படைக்கப் புறப் பட்டு விட்டார்.

''கீழை நாட்டின் அறிஞர் பெருமான் ஒருவர், அரசாங்கத்தின் உதவியில்லாமல், அழைக்கப்படாமல், எந்த ஒரு சமய அமைப்பின் ஆதரவில்லாமல், ஆழம் காண வியலாத கடலால் பிரிக்கப் பெற்ற இந்தியாவில் இருந்து மேற்கொண்ட பயணம் முதல் தடவையாக நவீன இந்தியாவின் வரலாற்று ஏடுகளிலும் அமெரிக்காவின் சமய வரலாற்றிலும் பதிவாகியது. 1893-இல் சிகாகோ சர்வமத சபையில் குறுகிய போட்டி உணர்வுகள் மேலோங்கிய சமய விவாதங்களிடையே அமைதியையும், சமய நல்லிணக்கத்தையும் தாங்கியச் செய்தியை ஏந்திக் கொண்டு சென்றார்.'' இவ்வாறு சுவாமி அபேதானந்தர், தமது சகோதரத் துறவியின் சிகாகோ பயணத்தின் வரலாற்றுப் பாத்திரத்தை விளக்கியுள்ளார்.

முப்பதாவது வயதில் முன்பின் அறியாத நெடுந் தொலைவில் உள்ள அயல் நாட்டிற்கு அவர் தனி மனித ராக மட்டும் செல்லவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பல யுகங்களின் பிரச்னைகளையெல்லாம் சந்தித்து வெற்றிப் பயணப் பாதையில் முன்னேறிக் கொண்டே யிருக்கும் ஆன்மிகப் பாரம்பர்யத்தின் உருவமாகவும் சென்றார். குருதேவர், தூய அன்னை சாரதாதேவி, சகோதரத் துறவிகள், அவர் சந்தித்த சான்றோர்கள், அவரைப் பற்றிக் கேள்வியுற்ற மக்கள் ஆகியோரின் இனிய நல்வாழ்த்துகளை ஏற்றுக் கொண்டு புறப்பட்டார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ பயண அனுபவங்களும் சோதனைகளும்

கடல் கடந்து செல்வதை ''பாபச் செயலாக்கி,'' மக்களை கிணற்றுத் தவளைகளாக்கிய மூடத்தனத்தை சுவாமிஜி, வாய்ப்பேற்பட்ட பொழுதெல்லாம் சாடியுள்ளார். செப்டம்பர் 20, 1892-இல், சிகாகோ புறப்படுவதற்கு எட்டு மாதங்களுக்கு முன்பாகவே, கேத்ரி சமஸ்தானப் பேரறிஞர் பண்டிட் சங்கர்லாலுக்கு எழுதிய கடிதத்தில் அயல்நாட்டுப் பயணத்தின் முக்கியத்துவத்தை, தேவையை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''பிராம்மணர்கள், சமயகுருமார்கள் எனும் பொறுப்பில் தொலைதூரத் தேசங்களுக்கு தரை வழியாகவோ, கடல் வழியாகவோ பயணங்களை மேற்கொண்டதில்லை. கடல் கடந்து பயணங்களை மேற்கொண்ட மக்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பெரும்பாலும் வர்த்தகர்கள். ஆனால் இவர்களுடைய அறிவுபூர்வமான வளர்ச்சிக்குரிய மனவாற்றலை, புரோகிதச் சூழ்ச்சிமுறை பறித்துவிட்டது. இதனால் வர்த்தகர்கள் தாங்கள் கண்டவற்றை, தங்கள் அனுபவங்களை மிகைப்படுத்தியும், வினோதமாகவும் வெளிப்படுத்தினர். ஆகையால், நாம் கண்டிப்பாக பயணம் செய்யவேண்டும்; அயல்நாடுகளுக்குச் செல்ல வேண்டும். மற்ற நாடுகளில் சமூகத்தை இழுத்துச் செல்லும் இயந்திரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை நாம் கண்டிப்பாக கண்டறிய வேண்டும். உண்மையிலேயே நமது நாட்டின் மீது நமக்கு அக்கறை இருக்கவேண்டுமானால், மற்ற நாடுகளின் மனவோட்டங்களில் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய சுதந்திரமான வெளிப்படையானத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.''

சுவாமிஜி தமது பயண அனுபவங்களையும், தமக்கேற் பட்ட சோதனைகளையும் வரலாற்றுச் செய்திகளாக விளங்கத்தக்க வகையில், தமது எழுத்துகளில் உடனுக்குடன் பதிவு செய்துள்ளார்.

ஜப்பான் நாட்டில் யோகஹாமா நகரின் ஓரியண்ட் ஓட்டல் முகவரியில் இருந்து ஜூலை 10, 1893 நாளிட்டு, சென்னைச் சீடர்களான அழகிய சிங்கப்பெருமாள், பாலாஜி, ஜி. ஜி. நரசிம்மாச்சாரி முதலானோருக்கு எழுதிய கடிதத்தில் கொழும்பு முதல் ஜப்பான் வரையில் தமது அனுபவங்களை சுவைபடச் சித்தரித்துள்ளார், சுவாமிஜி. சுருக்கமாகச் சில செய்திகளைத் தொகுத்தறிவோம்.

கொழும்பு நகரில் ஒருநாள் தங்கியபொழுது நகரத்தைச் சுற்றிப் பார்த்ததில் பௌத்த ஆலயம் ஒன்றில் பிரம்மாண்ட மான புத்தர் பெருமான் சிலை படுத்த நிலையில் கண்டு மகிழ்ந்தார்.

கப்பலின் 'கேப்டன்', சுவாமிஜிக்கு பினாங்கில் இருந்து சிங்கப்பூர் செல்லும் வழியில் உயர்ந்த மலைகள் கொண்ட சுமத்திராத்தீவின் காட்சிகளைக் காண்பித்தார். ஒரு காலத்தில் கடற்கொள்ளைக்காரர்களாயிருந்து, பிறகு அமைதியான குடிமக்களாக மாறிய பினாங்கு மக்களைப் பற்றியும் சுவாமிஜி அறிந்துக் கொண்டார்.

சுவாமிஜி சிங்கப்பூரில் தாம் கண்டு அனுபவித்த தாவரவியல் தோட்டத்தைப் பின்வருமாறு வருணித் துள்ளார்.

''பலவகையான பனை மரங்கள், மிக அற்புதமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. 'பயணிகள் பனை' எனப்படும் விசிறி யொத்தமட்டை கொண்ட பனை மரங்கள் இங்கு ஏரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக வளர்ந்துள்ளன. கொட்டைப் பலா மரங்களும் நிறைந்துள்ளன. சென்னையின் மாமரம் போல இங்கு பிரபலமான மாங்கோஸ்பீன் ஏராளமாகவுள்ளன; என்றாலும் மாம்பழத்துக்கு இணையாகா. இங்குள்ள மக்கள் தமிழ் மக்களைப் போலப் பூமத்திய ரேகைக்கு அருகே வாழ்ந்த போதிலும், சென்னை மக்களில் அவர்கள் பாதிக்கருமைகூட இல்லை. சிங்கப்பூரில் அழகிய அருங் காட்சியகமும் உள்ளது.''

பயணக் குறிப்புகளில் ஒரு நாட்டின் எளிய மக்களுடைய வாழ்க்கைக் கூறுகளை விளக்கும் வித்தகம் தமக்கும் கைவந்த கலை என்பதை சுவாமிஜி, ஹாங்காங் நகர சீனப்பெண் தொழிலாளியை வருணிக்குமிடத்தில் பின் வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

''கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சப் பட்டதும், பயணி களை கரைக்குக் கொண்டு செல்ல படகுகள் நூற்றுக் கணக்கில் சுற்றிவந்து முற்றுகை யிடுகின்றன. படகிலேயே படகோட்டியின் குடும்பம் வசிக்கின்றது. படகோட்டியின் மனைவி சுக்கான்களில் ஒன்றைக் கையாலும், மற்றொன்றைக் காலாலும் இயக்குகின்றாள். இவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுடைய முதுகில் ஒரு குழந்தையைக் கட்டிக் கொண்டிருப்பதை காண்பீர்கள். சீனக் குழந்தையின் கைகளையும், கால்களையும் சுதந்திர மாக விட்டுக் கட்டியிருப்பார்கள். குழந்தையின் தாய் தன் முழு சக்தியையும் கொண்டு படகை வலிக்கும் போதும், சுமைகளைத் தூக்கிச் செல்லும் போதும், அற்புதமான சுறுசுறுப்புடன் படகிலிருந்து படகாகக் குதித்துத் தாவிச் செல்லும்போது, சீனக்குழந்தை அவளுடைய தோளில் அமைதியாக ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதைக் காண மிக்க விநோதமாயிருக்கும். எந்த நிமிடத்திலும் சீனக் குழந்தையின் சின்னஞ்சிறு மண்டையும் அதிலுள்ள சிண்டும் அனைத்தும் நொறுங்கிவிடும். ஆபத்து இருக்கிறது. ஆனால், அந்தச் சின்னஞ் சிறு குழந்தை, இதையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இந்தப் பரபரப்பான வாழ்க்கையில் எதுவும் அவனுக்கு கவர்ச்சியாக இல்லை. உழைப்பு வெறியிலேயே உழன்றுக் கொண்டிருக்கும் அன்னை அவ்வப்பொழுது கொடுக்கும் அரிசி அப்பத்தின் 'உடற்கூறு' என்ன என்று பிட்டுப் பிட்டுப் பார்ப்பதிலேயே அந்தக் குழந்தை திருப்தியடைகின்றான். இந்தச் சீனக்குழந்தை ஒரு வேதாந்தி. உங்களுடைய இந்தியக் குழந்தை தவழக் கற்பதற்கு முன்னலேயே, சீனக் குழந்தை அமைதியாக வேலை செய்யப் பழகுகிறான். 'அவசியமேற்பட்டால் இதைச் செய்யத்தான் வேண்டும்' எனும் தத்துவத்தை அந்தக் குழந்தை வெகு நன்றாக அறிந்திருக்கிறது.

இந்தியர்களும், சீனர்களும் பதனப்படுத்தப்பட்ட இறந்த உடல் போன்ற நாகரீகத்திலே இருப்பதற்குக் காரணம் என்னவென்றால் மிதமிஞ்சிய வறுமையும் ஒன்றாகும். அன்றாடத் தேவை எனும் பயங்கரப் பிரச்னை ஒரு சாதாரண இந்து அல்லது சீனனை வேறெதைப் பற்றியும் சிந்திக்க அனுமதிப்பதில்லை.''

இவ்வாறு வாழ்க்கைக் கூறுகளைக் கூர்ந்து நோக்கி விளக்குவதில் சுவாமிஜியின் பரிவும், ஆற்றலும் பல இடங்களில் வெளிப்பட்டுள்ளன.

சீனா, ஜப்பானில் தமக்கேற்பட்ட அனுபவங்களை வெறும் செய்திகளாகப் பகிர்ந்துக் கொள்ளாமல், சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளாகவும், தூண்டுதல்களாகவும் சுவாமிஜி பகிர்ந்துக் கொண்டார்.

## வெளியே வாருங்கள்

தமது கடிதத்தின் இறுதியில் அவர் குறிப்பிட்ட பின் வரும் சமூகச் சிந்தனைகள், சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபட முன்வருமாறு இந்தியர்களை அறைகூவியழைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஜப்பானியர்களுக்கு, இந்தியா நல்லன யாவும் நிறைந்து கனவுலகமாகத் தெரிகின்றது. ஆனால் உண்மை யில் நாம் எவ்வாறு இருக்கின்றோம்... ஐரோப்பிய மூளை யுழைப்பில் சிதறிய சில துணுக்குகளைக் கொண்ட புத்தகங் களை ஜீரணிக்கவும் முடியாமல் கைகளில் ஏந்திக் கொண்டு கடற்கரையில் உலாவிக் கொண்டிருக்கின்றோம். முப்பது ரூபாய் குமாஸ்தா வேலைக்காக அலைந்துக் கொண்டிருக் கின்றோம். இந்திய இளைஞனின் உச்சமட்ட ஆசை, ஒரு வக்கீலாகுவதுதான். ஒவ்வொரு மாணவரும், பட்டினிக் குழந்தைகளின் பட்டாளம் காலடிகளில் கதறிக் கொண்டி ருக்க, 'சோறு, சோறு' எனக் கேட்டுக் கொண்டிருக் கின்றான். உங்களுடைய புத்தகங்கள், பட்டதாரி அங்கிகள் பல்கலைக்கழகப் பட்டங்கள் யாவையும் மூழ்கடிக்கும் அளவிற்கு கடலில் நீர் இல்லையா?

''வெளியே வாருங்கள், மனிதர்களே! முன்னேற்றத் திற்கு என்றுமே முட்டுக்கட்டையாகும் குருமார்களை உதைத்துத் தள்ளுங்கள். ஏனெனில் அவர்கள் திருந்த மாட்டார்கள்; அவர்கள் உள்ளங்கள் ஒருபோதும் விரிவடையா. அவர்கள் நூற்றாண்டுக் காலமான மூட நம்பிக்கை, கொடுமையின் வழித் தோன்றல்கள், குருமார் சூழ்ச்சி முறையை ஒழித்துக் கட்டுங்கள்; வெளியே வாருங்கள், மனிதர்களே! உங்களுடைய சின்னஞ் சிறு குழி களை விட்டு வெளியே வாருங்கள்; அயல் நாடுகளைப் பாருங்கள்; நாடுகள் முன்னேற்றப் பாதையில் செல்வதைப் பாருங்கள்; மனிதனை நீ நேசிக்கின்றாயா? உன்னுடைய நாட்டை நேசிக்கின்றாயா? ஆம் என்றால், வருக; உயர்ந்த மேலானவற்றிற்கு நாம் போராடுவோம். உனக்கு நெருக்க மானவர், அன்பிற்குரியவர் கூவியழைத்தாலும் திரும்பிப் பார்க்காதே! முன்னோக்கிப் பார், பின்னோக்கிப் பார்க் காதே?

''குறைந்த அளவில் ஓராயிரம் இளைஞர்களின் தியா கத்தை இந்தியா எதிர்பார்க்கின்றது. ஆம்; ஆண்மையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திண்மையும் கொண்ட இளைஞர்களைத்தான், முட்டாள்களை அல்ல. புதிய மாற்றம் காண வாழ்வா—சாவா எனப் போராடத்தக்க தன்னலமற்ற நேர்மையான மனிதர்கள் எத்தனை பேரை சென்னை வழங்கப் போகின்றது? ஏழைகளிடம் பரிவு, பசித்த வயிறுகளுக்கு உணவு, மக்கள் அனைவருக்கும் புத்தொளி தர இறுதி வரை போராடும் மனிதர்கள் தேவை. நமது முன்னோர்கள் கொடுமைகளால், விலங்குகளாக்கப்பட்ட மனிதர்களுக்காக போராட எவ்வளவு பேர் இருக்கின்றீர்கள்.''

அயல் நாட்டுப் பயணச் சிந்தனைகளில் தாய் நாட்டின் மீட்சிக்கு சங்கநாதம் செய்தார், சுவாமி விவேகானந்தர். சிகாகோ பயணச் சிந்தனைகளின் சிறப்பம்சங்களில், இதுவும் ஒன்று,

ஜப்பானை விட்டுப் புறப்பட்ட சுவாமிஜி, பசிபிக் மகா கடலைத் தாண்டி பிரிட்டிஷ் கொலம்பியாவில் வான் கூவரில் வந்திறங்கினார். அங்கிருந்து சிகாகோவிற்கு ரயில் பயணம் செய்தார். கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர், ஹாங்காங், காண்டன், நாகசாகி, கோப், ஒஸாகா, இயோடோ, டோக்கியோ, யோகாஹாமா முதலான நகரங்களைக் கடந்து அமெரிக்கா வந்தார்.

## சிகாகோ நகரத்தில்

1893 ஜுலை 28-இல் அதாவது சர்வமத சபை கூடுவதற்கு ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே சிகாகோ நகரத்திற்கு வந்து விட்டார், சுவாமி விவேகானந்தர். ஒரு காலத்தில் மீனவர்கள் குடிசைகள் மட்டுமே நிறைந்திருந்த சிகாகோ, கால வளர்ச்சியில் அமெரிக்காவின் மூன்றாவது பெரிய நகரமாகி விட்டது. மிச்சிகன் ஏரிக்கரையில் அமைந்த சிகாகோ, உலகக் கண்காட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாகோ நகரம் சென்றதும், சுவாமிஜி, உலகக் கண்காட்சி தகவல் அறிவிப்பு அலுவலகத்தில், சர்வமத சபையைப் பற்றிக் கேட்டார். அங்கு அவருக்கு பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. முதலாவதாக, சர்வமத சபை, செப்டம்பர் நடுவில்தான் கூடும்; இரண்டாவதாக சர்வமத சபையில் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் ஆதாரச் சான்றுக் கடிதம் இல்லாமல் எவரும் பிரதிநிதியாக அனுமதிக்கப்பட மாட்டார். மூன்றாவதாக, பிரதிநிதியாகப் பதிவு செய்து கொள்ள காலம் கடந்து விட்டது.

## சோதனைகள்

முதன் முதலாக சுவாமிஜிக்கு ஏற்பட்ட இந்த சோதனைகள் அவர் சற்றும் எதிர்பாராதவை. சிகாகோ பயணத்திற்கு ஏற்பாடு செய்த சென்னை சீடர்கள், கேத்ரீ, ராமநாதபுரம், மைசூர் மகாராஜாக்கள், சமஸ்தானத் திவான்கள், உற்சாகம் நிறைந்த பக்தர்கள் முதலானோர் சர்வமத சபையைப் பற்றிய விவரங்களை முறையாகக் கேட்டறியவில்லை.

தமக்கு ஏற்பட்ட இந்தச் சோதனையைப் பற்றி 1894-இல் தமது சென்னை சீடருக்கு எழுதிய கடிதத்தில் கூறியதாவது : ''சென்னை சிறுவர்கள் வற்புறுத்தியதை ஏற்று நான் சர்வமத சபைக்கு வந்தது முட்டாள்தனம் என்று நினைக்கிறேன். அவர்கள் பார்க்கப்போனால், சிறுவர்களே. அவர்களுக்கு நான் என்றும் கடமைப் பட்டவன்தான். ஆனால், அவர்கள் எவ்வித நிருவாகத் திறமையில்லாத ஆர்வம் மிக்க இளைஞர்கள். எவ்வித ஆதாரச் சான்றுக் கடிதம் இல்லாமல் இங்கு வந்து விட்டேன்.''

''சுவாமிஜியும், அவருடைய சீடர்களைப் போலவே உலக நடைமுறைகளைப் பற்றி சாதாரணமாகவே அறிந் திருந்தார். தெய்வீக அழைப்பின் பேரில் செல்வதால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதத் துன்பமும் வழியில் ஏற்படாது என்று உண்மையிலேயே அவர் நம்பினார். அமைப்புத் திறன்களைப் பெற்றிராத இந்து சமயத்தைப் போலவே, அதன் அறிவிக்கப்படாத பிரதிநிதியாகச் சென்றவரும் முறையான ஆதாரச் சான்றுகள் இல்லாமல், உலகச் செல்வத்தாலும் சக்தியாலும் வலுவான காவலுக்குட்படுத்தப்பட்ட கதவுகளைத் திறந்து உள்ளே நுழையச் சென்றார்.'' இவ்வாறு சகோதரி நிவேதிதாவும் பிற்காலத்தில் சுவாமிஜிக்கு ஏற்பட்ட முதல் சோதனையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கடுத்த சோதனையாக அவர் கொண்டு வந்த கைச்செலவுக்கான பணமும் கரையத் தொடங்கியது. அவரும், அவருடைய நண்பர்களும் நினைத்ததற்கு மாறாக அமெரிக்காவில் அன்றாட வாழ்க்கைச் செலவு மிக உயர்ந்து ஊதாரித்தனமாக இருந்தது. 1893 ஆகஸ்ட் 20-இல் அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில், பின்வருமாறு, தமக்கு ஏற்பட்ட பண நெருக்கடியை விவரித்துள்ளார்.

''நான் இங்கு செய்ய வேண்டிய செலவு மிக மோசமாகவுள்ளது. 170 பவுண்டுகளை பணத்தாள்களாகவும், 29 பவுண்டுகளை நாணயங்களாகவும் என்னிடம் நீ கொடுத்தது, உனக்கு நினைவிருக்கலாம். ஆக, இவையெல்லாம் சேர்ந்து 130 பவுண்டுகள். சராசரியாக எனக்கு ஒரு பவுண்டு பணம் செலவாகின்றது. நமது நாட்டு நாணய மதிப்பில் ஒரு சிகரெட்டின் விலை எட்டணா ஆகின்றது. அமெரிக்கர்கள் பெரும் பணக்காரர்கள். பணத்தை தண்ணீர் போல் செலவு செய்கின்றார்கள். அவர்கள் இயற்றும் சட்டங்கள் காரணமாக பொருள்கள் விலையேறிக் கொண்டே போகிறது. உலகத்தில் வேறெந்த நாடும் இதை அணுக இயலாது. சாதாரண கூலியாள் நாளொன்றுக்கு ஒன்பது அல்லது பத்து ரூபாய் சம்பாதிக்கின்றான். புறப்படுவதற்கு முன் கொண்டிருந்த பசுமையான எண்ணங்கள் யாவும் உருகிப் போகின்றன. ஒத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதவைகளை எதிர்த்து இப்பொழுது நான் போராட வேண்டியுள்ளது.

''இந்த நாட்டை விட்டு, இந்தியாவிற்குத் திரும்பி விடலாம் என நூறு தடவை எண்ணினேன். ஆனால், இறைவன் திருவுள்ளத்தை நினைத்து, உறுதியாக இருக்கின்றேன். நான் எந்த வழியையும் பார்க்கவில்லை, ஆனால் இறைவனுடைய வழி நடத்துதல் இருக்கின்றது. வாழ்வாயினும் சரி சாவாயினும் சரி வந்த குறிக்கோளை நிறைவேற்ற உறுதியெடுத்துக் கொள்கிறேன்.''

சிகாகோவில் இருந்த தியோசாபிகல் சொஸைடியின் உதவியை நாடினார், சுவாமிஜி. இந்தியாவிடம் நெருங்கிய நட்பு கொண்டுள்ள தியோசாபிகல் சொஸைடி, இந்தியராகிய தமது பணக் கஷ்டத்தைத் தீர்க்கும் என நினைத்தார், அவர். ஆனால், அந்தச் சங்கமோ, ஒரு நிபந்தனை விதித்தது. சுவாமிஜி, தியோசாபிகல் சங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால் பணவுதவி செய்வதாக நிபந்தனை விதித்தது. அந்த அமைப்பின் பல கொள்கைகள் சுவாமிஜிக்கு உடன்பாடானவை அல்ல. இந்த நிலையில் தியோசாபிகல் சொஸைடி உதவி செய்ய மறுத்துவிட்டது.

வேறு வழியில்லாமல் சென்னை நண்பர்களுக்கு பண உதவி கேட்டு தந்தி கொடுத்தார்.

சிகாகோ செலவிற்கு ஈடு கொடுக்க முடியாத நிலைமை மோசமான சமயத்தில், வாழ்க்கைச் செலவு சற்று குறைவாகவுள்ள பாஸ்டன் என்னும் ஊருக்குச் செல்லுமாறு ஒருவர் ஆலோசனை கூறினார். சிகாகோவில் இருந்து புறப்பட்டு பாஸ்டனுக்கு ரயிலில் பயணமானார், சுவாமிஜி.

'இறைவன் விட்ட வழி' எனும் நம்பிக்கை வீண் போகவில்லை. அவர் பயணம் செய்த ரயில் பெட்டியில் மிஸ் காடே ஸன்பர்ன் என்பவர் உருவில் 'இறைவன்விட்ட வழி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. அந்த அம்மையார் பாஸ்டன் நகரத்தையடுத்த ஒரு கிராமத்தைச் சார்ந்தவர்.

சுவாமிஜியின் தெய்வீக ஆளுமை, அந்த அம்மையாரிடம் பெருமதிப்பைத் தோற்றுவித்தது; உரையாடத் தொடங்கினார். வேதாந்தத்தின் மகத்தான உண்மைகளை அமெரிக்காவில் எடுத்துரைக்க வந்த ஓர் இந்து சந்யாசியிடம் தாம் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்ந்த மிஸ்காடே ஸன்பர்ன் சுவாமிஜியிடம் பெருமதிப்பு கொண்டார். சுவாமிஜியை தமது இல்லத்தில் வந்து தங்குமாறு அழைத்தார்; ''ஒருவேளை உங்களுக்கு சாதகமான ஒரு திருப்பம் ஏற்படக் கூடும்'' எனும் நல் வாக்கையும் மொழிந்தார் மிஸ்காடே ஸன்பர்ன்.

ஐம்பத்து நான்கு வயதான காடே ஸன்பர்ன், நூலாசிரியரும், விரிவுரையாளரும் ஆவார். பணவசதியும், விருந்தோம்பும் மன வளமும் பெற்றவர். அவருடைய ''இளங்காற்று புல்வெளி'' (Breezy Meadows) என்றும் பசுமையான பண்ணையில் சுவாமிஜி விருந்தினராக இருந்தார்.

காடே ஸன்பர்ன் விருந்தினரானதைப் பற்றி சுவாமிஜி அழகிய சிங்கப் பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிட்டார்.

''பாஸ்டன் நகரத்தருகே மூத்த பெண்மணியின் விருந்தினராக இப்பொழுது தங்கியுள்ளேன். தற்செயலாக அவரை ரயில் வண்டியில் சந்தித்தேன். அவர் தம்முடன் வந்து தங்குமாறு அழைத்தார். அவருடன் தங்குவதால் எனக்கு ஒருநாள் செலவான ஒரு பவுண்டு மீதமாகின்றது. அவரும் தமது நண்பர்களை அழைத்து என்னை 'இந்தியாவில் இருந்து வந்துள்ள ஓர் அதிசயமாக' காட்டினார். இதையெல்லாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசி, குளிர், என்னுடைய வினோதமான உடை காரண மாக தெருக்களில் செல்வோர் எழுப்பும் பேச்சுகள் முதலானவற்றை நான் எதிர்க்க வேண்டியிருந்தது.''

காடே கேட்டுக் கொண்டதற்கிணங்க, அமெரிக்க முறையிலே உடைகளை அணிந்துக் கொண்டார். இதனால் அவரை 'அதிசயமாக'ப் பார்த்து நகைச்சுவையுடன் பேசப்பட்டது குறைந்து போயிற்று. ஆனால், உடைகளுக் காக அவர் செலவு செய்ததால், கையிருப்பு கணிசமாகக் குறைந்தது. பொது மேடைகளில், அமெரிக்க உடையைத் தவிர்த்து, காஷாய அங்கியையும், தலைப்பாகையையும் அணிந்தார்.

இங்கு தொடக்கத்தில் சுவாமிஜியை சந்திக்க வந்தோர், இந்து சமயப் பழக்க வழக்கங்களைப் பற்றி, கிறிஸ்துவ மிஷனரிகள் வெளியிட்ட சில துண்டுப் பிரசுரங் களைப் படித்து விட்டு, குத்தலும், கிண்டலுமாகக் கேள்விகள் கேட்டனர். அவற்றிற்கெல்லாம் பொறுமை யுடன் உண்மையான விளக்கங்களை அளித்தார், சுவாமிஜி.

சுவாமிஜி சந்தித்த மற்றொரு பிரசாரம், 'ரமாபாய் வட்டம்' என்னும் அமைப்பைச் சார்ந்தவர்கள், இந்தியப் பெண்களின் நிலைமையைப் பற்றிப் பரப்பியப் பொய்ப் பிரசாரம். பம்பாயில் பண்டிதை ரமாபாய் 1882-இல் பெண்கள் முன்னேற்றத்திற்காக 'ஆர்ய மகளிர் சமாஜம்' என்னும் அமைப்பை நிறுவினார். இளம் வயதிலேயே விதவையாகி விட்ட ரமாபாய், விதவைப் பெண்கள் முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்தினார். ஆங்கிலக் கல்வியில் புலமை பெற்றார். கிறித்துவ சமயத்தில் சேர்ந்தார். அமெரிக்கா சென்றார். 1887—1889 களில் இந்திய விதவைகளுக்காக நிதி திரட்டினார். இந்த வகையில் 'ரமாபாய் வட்டங்கள்' உருவாகின.

ரமாபாய் வட்டங்களில் மிகைப்படுத்தப் பெற்ற இந்தியப் பெண்கள் துன்பங்களை சுவாமிஜி மறுத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நிலையை எடுத்துரைத்து வந்தார். மெட்காப் மகளிர் மன்றத்தில் அவர் பேசிய முதல் பேச்சு வெற்றிகர மாகியது.

இளங்காற்று புல்வெளிப் பண்ணையிருந்த மெட்காப் நகரில் சுவாமிஜி, பேராசிரியர் ஜான் ஹென்றிரைட் என்பவரைச் சந்தித்தார். ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் கிரேக்க மொழிப் பேராசிரியரான ஜே. எச். ரைட் அவர்களின் சந்திப்பு, காடே முன்பு சொன்ன 'சாதகமான திருப்பத்தை' ஏற்படுத்தியது.

## பேராசிரியர் ரைட்

மிஸ் காடே ஸன்பார்ன், சுவாமிஜியிடம் பேராசிரியர் ரைட்டை அறிமுகப்படுத்தினார். அனிஸ்குவாம் என்னும் பேராசிரியரின் ஊரில் 1893 ஆகஸ்ட் மாத இறுதியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. பேராசிரியர் வீட்டில் சுவாமிஜி நான்கு நாட்கள் தங்கினார்.

''பொழுது போவது தெரியாமல் இராப்பகலாக பேசினோம். சமயத்தைப் பற்றிப் பேசினோம். இது ஒரு வகையான மறுமலர்ச்சி. வியக்கத்தக்க புத்திசாலி அவர்; தமது வாதங்களை அடுக்கடுக்காக வைத்தார்; வாதத் திறமை யோட்டத்தில் அவருடன் இணைந்து போவதோ அல்லது அவரை முந்திக் கொண்டுச் செல்வதோ இயலாது.'' இவ்வாறு சுவாமிஜியின் உரையாடல் ஆற்றலை பேராசிரியர் ரைட்டின் மனைவி வருணித்துள்ளார்.

பேராசிரியர், சுவாமிஜியின் இந்து சமய ஞானத்தை அறிந்து, சர்வமத சபையில் சுவாமிஜி பிரதிநிதியாகக் கலந்துக் கொள்ள வேண்டும் என தமது ஆவலை வெளியிட்டார். ''இதன் மூலமாக தாங்கள் இந்த நாட்டில் பெருமளவில் அறிமுகமாவீர்கள்'' என்றும் சுவாமிஜியிடம் குறிப்பிட்டார் பேராசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியருக்கு பதிலளிக்கையில் தம்மிடம் எவ்விதத் தகுதிச் சான்றுகளும் இல்லை என சுவாமிஜி தமக்கேற்பட்ட சோதனையை விளக்கினார். சுவாமிஜியை மாமேதை யாகக் கண்டுணர்ந்த பேராசிரியர் பரவசமுடன் கூறிய தாவது :

''சுவாமிஜி தங்களிடம் தகுதிச் சான்றுகளைக் கேட்பது, சூரியனிடம், அது ஒளி வீசுவதற்கு உரிமை பெற்றுள்ளதா என்று கேட்பதற்கு ஒப்பாகும்.''

பேராசிரியர் எவ்வளவு துல்லியமாய்க் கணித்துள்ளார்! சொல்வீச்சு அலங்காரத்தில் நிற்காமல், பேராசிரியர் செயலாற்றலையும் வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தார். சிகாகோ சர்வமத சபையில் கலந்துக் கொள்ளும் பிரதிநிதி களைத் தேர்வு செய்யும் குழுவின் தலைவர் டாக்டர் பரோஸுக்கு, பேராசிரியர் எழுதிய கடிதத்தில் பின் வரும் கருத்தை குறிப்பிட்டார்.

''கற்றறிந்த நமது பேராசிரியர்கள் அனைவரும் சேர்ந்து அறிந்திருப்பதைக் காட்டிலும், கற்றறிந்த ஒருவர் இதோ இவர்தான்.''

டாக்டர் பரோஸ், தமது நண்பர் என்பதில் சற்று உரிமையுடன், சுவாமிஜியின் அறிவாற்றலை அவரிடம் விளக்கினார், பேராசிரியர் ரைட். சுவாமிஜியின் பண நெருக்கடியையும் நன்கறிந்த பேராசிரியர் சிகாகோ செல்ல ரயில் பயணச் சீட்டையும் வாங்கிக் கொடுத்தார். அறிமுகக் கடிதங்களையும் அளித்தார்.

பேராசிரியரின் தோழமையை பெரிதும் போற்றினார் சுவாமிஜி. இதை பேராசிரியருக்கு சுவாமிஜி எழுதிய கடிதங் களில், காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகாகோவில் மீண்டும் ஒரு சோதனை

சிகாகோ ரயில் நிலையத்தில் சுவாமிஜிக்கு மீண்டும் ஒரு சோதனை ஏற்பட்டது. டாக்டர் பரோஸின் முகவரியை வழியில் எங்கேயோ தொலைத்து விட்டார். பரோஸ் பெயரைக் குறிப்பிட்டு, அவருடைய முகவரியை அறிந்துக் கொள்ள முயன்றார். பயன் இல்லை. ஏன் எனில் ரயில் நிலையம் இருந்த இடத்தில் ஜெர்மானியர் அதிகமாக வசித்தனர். சுவாமிஜி ஆங்கிலத்தில் கேட்டறிய முடியவில்லை. தங்குவதற்கு ஏதேனும் ஓட்டல் அருகில் இருக்கின்றதா என்று கேட்கவும் முடியவில்லை. மொழி வேற்றுமை அந்த அளவிற்கு சதி செய்து விட்டது.

வேறு வழியில்லாமல் ரயில் நிலையத்தில் சரக்குகள் ஏற்றுமிடத்தில் இருந்த மிகப்பெரிய பெட்டி காலியாக இருந்ததைக் கண்டார், சுவாமிஜி. குளிரின் தாக்குதலில் இருந்து தப்பிக்க அந்தப் பெட்டிக்குள் முடங்கிக் கொண்டார். என்ன சோதனை? அடுத்த சில நாள்களில் முழங்கப் போகும் வேதாந்தச் சிங்கம், கேட்பாரற்று, அனாதையாக, பெட்டியில் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தது. இரவு, விடியாமலா போகும். விடிந்தது. சுவாமிஜியின் சோதனைக்கும் விடியல் கிட்டாமலா போய்விடும். தெய்வம், அடியார்களுக்கு விதிக்கும் சோதனைகளுக்கு தனி வரலாறே உண்டு.

பொழுது விடிந்ததும், அவருடைய வயிற்றுப் பசியும் விழித்துக் கொண்டது. சந்யாச தருமத்திற்கு ஏற்ப கையேந்தி உணவு தேடப் புறப்பட்டுவிட்டார். நாகரீகக் கோலம் துலங்க அமைந்த ஏரிக்கரைச் சாலை வழியே தூய்மையான தண்ணீர் மணத்தை இலவசமாக முகர்ந்துக் கொண்டு மேலே சென்றார். சர்வமத சபைக்கு வழியும், வயிற்றுக்கு உணவும் கேட்டுக்கொண்டே மாடமாளிகைகள் நெடிதுயர்ந்த அந்தச் சாலையில் எவரும் இவரை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அழுக்கேறிய ஆடைகள், மழிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாத முகம் கொண்ட நிலையில் சுவாமிஜியை, ஒரு நாடோடியாகத்தான் பார்த்தவர்கள் புறக்கணித்தார்கள். சக்தி வாய்ந்த டாலர்களைச் சம்பாதிக்க ஆயிரக்கணக்கான வழிகளை அறிந்த அந்த நகரத்து மக்கள், துறவிகள் வறுமையையோ அல்லது சமயவுணர்வு கொண்டோர் கையேந்தி இரந்து சம்பாதிப்பதையோ அறிந்தவர்கள் அல்ல இந்த நிலையை சுவாமிஜி அன்று அறியவில்லை. களைத்துப் போய் நடைபாதை ஓரத்தில் சாய்ந்துவிட்டார். இந்தக் காட்சியை, அங்கிருந்த எதிர்வீட்டு ஜன்னலில் இருந்து, ஒரு புண்ணிய ஆத்மா பார்த்துவிட்டது. அந்த வீட்டுத் தலைவி ஹேல் அம்மையார் சுவாமிஜியை கனிவுடன் அழைத்து ''தாங்கள் சர்வமத சபைக்கு வந்துள்ள பிரதிநிதியா'' என்றும்உசாவினார்.

களையிழந்த சுவாமிஜி முகத்திலே கோடி மின்னல் ஊடாடியது. சுவாமிஜியின் திருச்செவிகளில் அந்தப் புண்ணியவதியின் கேள்வி தேனெனப் பாய்ந்தது. தமக்கு ஏற்பட்ட சோதனைகளை விவரித்தார். அந்தக் கேள்வி யுடன், அந்த அம்மையார் தாயினும் சாலப்பரிந்து அளித்த காலையுணவும் அமுதமாயிற்று. சற்றே இளைப்பாறிய பிறகு அந்த மாதரசி சுவாமிஜியை டாக்டர் பரோஸிடம் அழைத்துச் சென்றார். பரோஸ், அந்தப் பெண்மணியின் நெருங்கிய நண்பர். சுவாமிஜி கொண்டுவந்த அறிமுகக் கடிதம், சர்வமத சபையில் அவர் ஒரு பிரதிநிதியாகக் கலந்துக் கொள்வதற்கான, நல்வாய்ப்பிற்கு இறுதி வடிவம் கொடுத்தது. செப்டம்பர் 11-இல் நடைபெறப்போகும் சர்வமத சபையில் கலந்துக்கொள்ள செப்டம்பர் 2-இல் தான் முறையான அநுமதி பற்றிய அறிவிப்பு சுவாமிஜி யிடம் சேர்க்கப்பட்டது.

## சிகாகோ பேருரைகளுக்கு முந்திய சில உரைகள்

''வேதாந்தச் சிங்கம் முழங்கட்டும்'' எனும் சொற் றொடரை பொருளழகு புலப்பட வகுத்தளித்த சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தர், சிகாகோ சர்வமத சபையில் முழங்குவதற்கு முன்பாக பல இடங்களில் ஆற்றியச் சொற்பொழிவுகளும் குறிப்பிடத்தக்கன. இதன் தொடர்பாக மேரி லூயிஸ் பர்க் எழுதியுள்ள பின் வரும் குறிப்பும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

''சர்வமத சபைக்கு முன்பாக பொது இடங்களில் மூன்று முறைகளும், தனியார் வீட்டில் இரு முறைகளும் பேசியிருந்தாலும், தமது நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் இவை பற்றி அவர் குறிப்பிடவில்லை. இந்தப் பேச்சுகளை, தமக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகக் கருதினாரேயல்லாமல், இந்தியாவிற்கோ, இந்து சமயத்திற்கோ அளிக்கப்பட்ட கௌரவமாக அவர் கருதவில்லை. இதனாலேயே இந்தப் பேச்சுகளைப் பற்றி தமது நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் சுவாமிஜி ஏதும் குறிப்பிடவில்லை.''

சரடோகா எனும் ஊரில் உள்ள ''அமெரிக்கன் சோஷல் சயின்ஸ் அசோசியேஷன்'' எனும் அமைப்பின் செயலாளரான மிஸ்டர் சன்பர்க் அழைப்பை ஏற்று அந்த அமைப்பில் சுவாமிஜி உரையாற்றினார். ''இந்தியாவில் இஸ்லாமியர் ஆட்சி'', ''இந்தியாவில் வெள்ளியின் பயன்பாடு'' என்னும் இரு தலைப்புகளிலும், மற்றொரு தலைப்பிலுமாக மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தினார், சுவாமிஜி. 1893 செப்டம்பர் 6-இல் சுவாமிஜி நிகழ்த்திய மூன்றாவது சொற்பொழிவின் தலைப்பை அறிய முடியவில்லை. இந்த பேரிழப்புடன், மூன்று சொற்பொழிவுகளின் உள்ளடக்கங்களைப் பற்றியும் அறிய வாய்ப்பற்றுப் போய்விட்டது. ஆனால், சொற்பொழிவுகள் நிகழ்ந்த கூட்டங்களைப் பற்றியப் பத்திரிகைச் செய்திகள் மட்டும் கிடைத்துள்ளன. இவற்றைக் கண்டெடுத்து உதவிய மேரிலூயிஸ் பர்க் நன்றிக்குரியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி ஆன்மிக நோக்கிற்கு இணையான சமூக விஞ்ஞான நோக்கும் கொண்ட வரலாற்றாசிரியர் என்றும் புகழ் பூத்தவர்.

1893 செப்டம்பர் 6-இல், ''டெய்லி சரடோகியன்'' என்னும் பத்திரிகையில் முதல் இரண்டு கூட்டங்களைப் பற்றியும், செப்டம்பர் 7-ல் மூன்றாவது கூட்டத்தைப் பற்றியும் செய்திகள் வெளிவந்தன.

இந்தச் செய்திகளில், சுவாமிஜி சமூக விஞ்ஞானத்தில் ஆர்வம் மிக்கவர் என்றும் மதிநுட்பமும், மனங்கவரும் தன்மையும் வாய்ந்த சொற்பொழிவாளர் என்றும் பாராட்டுரைகள் கூறப்பட்டுள்ளன.

தனியார் வீட்டில் பேசிய பேச்சுகளில், பேராசிரியர் ஜே. எச். ரைட்டின் வீட்டில் பேசியது, தேசபக்த மெய் ஞானியின் பேச்சாக அமைந்தது. நியூ இங்கிலாந்தில் அனீஸ் கூவாம் என்னும் சிற்றூரில் பேராசிரியர் ரைட்டின் வீட்டில் ''வரலாறு கண்ட வஞ்சம்'' என்னும் தலைப்பில் 1893 ஆகஸ்ட் 27-ல் பேசினார்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் அடக்கு முறையை அம்பலப்படுத்தியும், ஏழை மக்கள் துன்பங் களைப் பற்றியும் சுவாமிஜி உணர்ச்சி பொங்கிட உரையாற் றினார். இந்திய சிப்பாய் புரட்சியின் வீரப் பெண்மணியாய் விளங்கிய ஜான்சி ராணியியை போற்றிப் பரவினார். ஆங்கிலேய ஆட்சியினரைத் தாக்கி சுவாமிஜி பேசியதாவது:

''என் நாட்டின் மக்கள் மீது ஆண்டவன் அருள் சொரியவில்லை. அவர்கள் ஏழை மக்களுக்கு இரக்கம் காட்டவில்லையே? அவர்களுடைய இரக்கமற்ற தீச் செயல்கள் ஏழை மக்களை மிகவும் சிறுமைப் படுத்தி விட்டன. ஆண்டவன் வஞ்சம் தீர்ப்பவன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் மனிதன் நம்பிக்கை வைக்காமல் இருக்கலாம். ஆனால், சரித்திரத்தில் மீண்டும், மீண்டும், காட்சியளிக்கிற வஞ்சத்தை இவனால் மறுக்க இயலுமா; ஆங்கிலேயருக்கும் இந்நிலை வரத்தான் போகிறது.''

சாரகோடாவில் பேசிய பேச்சுதான், சுவாமிஜியின் சிகாகோ சர்வமத சபைக்கு முந்திய கடைசிப் பேச்சாகும்.

சிகாகோவிற்கு எந்த ஊரில் இருந்து, எந்தத் தேதியில் ரயிலில் சுவாமிஜி புறப்பட்டார் என்பதைப் பற்றித் திட்ட வட்டமான செய்தி இல்லை. செப்டம்பர் 7 அல்லது 8-ந் தேதி புறப்பட்டு அடுத்து நாள் சிகாகோ வந்தடைந்தார் என்று கூற முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிகாகோ சர்வமத சபையின் கீழைநாட்டுப் பிரதிநிதிகள் சிலருடன்
(இடமிருந்து வலம்) நரசிம்மாசார்யா, லட்சுமி நாராயணன்,
சுவாமிஜி, தம்மபாலர் - 1893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வமத சபைப் பிரதிநிதிகள் சிலருடன் சுவாமிஜி - 1893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ சர்வமத சபையில் வேதாந்தச் சிங்கம்

1893 செப்டம்பர் 11-ல், திங்கட்கிழமை காலை 10 மணி அளவில், சிகாகோ நகரத்தின் மிச்சிகன் அவென்யூவில், கலை நிறுவனத்தின் கொலம்பஸ் மன்றத்தில், சிகாகோ சர்வமத சபை கூடியது. செப்டம்பர் 11 முதல் பதினேழு நாட்கள் தொடர்ந்து செப்டம்பர் 27 வரையில் நடைபெற்ற சிகாகோ சர்வமத சபை, உலக சமய வரலாற்றிலேயே கூட்டப்பெற்ற முதல் சர்வமத சபையாகும்.

நாள்தோறும் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரையில் மூன்று அமர்வுகளாக, கூட்டம் ஏற்பாடாகியது. ஓர் அமர்விற்குரிய காலம் இரண்டரை அல்லது மூன்று மணி நேரம் ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு பேச்சாளரும் தமது சொற்பொழிவை அரைமணி நேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும். தலைவர் அனுமதியின் பேரில் கால நீடிப்பு வழங்கப்பட்டது.

சர்வமத சபை, ஒரு கருத்தரங்கமாக நிகழ்ந்தது. உலக சமயங்கள் அனைத்தும் பங்கு கொண்ட இந்தக் கருத்தரங்கில் பேசப்பட்ட தலைப்புகள், இருவகைகளாக அமைந்தன. முதலாவது வகையில், கடவுள் பற்றிய கோட்பாடு, மனிதன் பற்றிய கோட்பாடு, சமயத்தின் முக்கியத்துவம், அருள்வெளிப்பாட்டுச் செய்தி, தெய்வீக அவதாரம், இறவாமைத்தத்துவம் முதலானவை அடங்குவன. இந்த வகைக்குட்பட்ட பேச்சுகள் இரண்டாம் நாள் முதல் பத்தாவது நாள் வரை அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது வகைப்பாட்டில், குடும்ப வாழ்க்கை, கலைகள், விஞ்ஞானங்கள், மானுடநேயம், நீதிநெறிகள், கிறித்துவ மிஷனரி வழிமுறைகள் முதலான நடைமுறைச் சமூகப் பிரச்னைகளில் சமய உறவுத் தொடர்பான பேச்சுகள் அடங்குவன. இவை எஞ்சிய ஏழுநாட்களுக் குரியன.

மேலை நாடுகளில் பெரும்பான்மையான மக்கள், கிறித்துவ சமயமே, உண்மையான சமயம் என்று நம்பிக் கொண்டிருந்தக் காலத்தில், கிறித்துவம் அல்லாத எட்டு சமயங்கள் கலந்துக்கொண்ட சர்வமத சபை புதிய விழிப்பை ஏற்படுத்தியது. இந்துசமயம், சமணம், பௌத்தம், யூதமதம், கன்பூஷியஸ்மதம், ஷிண்டோமதம், ஜராதுஷ்ட்ர சமயம், இஸ்லாம் ஆகிய எட்டு சமயங்கள் உலகின் பல்வேறு இனமக்களின் ஆன்மிகநெறிகளை விளக்குவதுடன், அவை சார்ந்த சமூக, கலை, இலக்கிய, விஞ்ஞான பண்பாட்டு வரலாற்றுகளையும் உணர்த்தவல்லன. இந்த உண்மையை அறியவும், சர்வமத சபை வாய்ப்பளித்தது.

இந்தியாவில் இருந்து பிரம்ம சமாஜத்தின் பிரதிநிதி களாக கல்கத்தா பிரதாப் சந்திரமஜூம்தார், பம்பாய் நாகர்கர், சமண சமயத்தின் சார்பில் வீர்சந்த் காந்தியும், தியோசாபிகல் சொஸைடி எனப்படும் பிரம்ம ஞான சபையின் பிரதிநிதிகளாக அன்னிபெசண்ட்டும், சக்ர வர்த்தியும், இலங்கை மகாபோதி சொஸைடியின் சார்பில் அனகாரிக தர்மபாலாவும் மற்றும் மணிலால் துவேதி, நரசிம்மசார்யா, லட்சுமி நாராயணன் என்பவர்களும் சிகாகோ சர்வமத சபையில் கலந்துக் கொண்டனர்.

இவர்களுடன் சுவாமி விவேகானந்தரை தனியாகக் குறிப்பிட்டுக் கூறவேண்டியுள்ளது. ஏன் எனில், சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை வரலாற்றில் சுவாமி நிகிலா னந்தா மகராஜ் சுட்டிக் காட்டிக் காட்டியது போல், ''சுவாமி விவேகானந்தர் எத்தக் குறிப்பிட்ட சமய உட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவின் பிரதிநிதியாகக் கலந்துக் கொள்ளாமல், வேதங்கள் கூறும் அனைத்துலக சமயத்தின் பிரதிநிதியாகக் கலந்துக் கொண்டார். மானுடம் முழுவதின் சமயப் பேரார் வத்தைப் பற்றி பேசினார்.'' சர்வமத சபையில் அவருடைய தோற்றமும் காண்பேரைக் கவர்ந்தது. சுமார் ஆறடி உயரமும், அதற்கேற்ற அழகிய மேனியமைப்பும், நீண்டு தொங்கி ஒளியுமிழ்ந்த ஆரஞ்சு வண்ண அங்கியும், காவிநிற தலைப்பாகையும், அவருடைய மன்மத ஸ்வரூபத்தை வியப்பாக்கியது. மேடையில் அமர்ந்தோரின் வரிசைக் கிரமத்தில் அவர் முப்பத்தொன்றாம் இடத்தில் வீற்றிருந்தார்.

சபை அரங்கில் கூடியிருந்த சற்றேறக்குறைய ஏழாயிரம் மக்கள், மேடையில் நிகழ்ந்த பிரதிநிதிகளின் அணி வகுப்பைக் கண்டு களித்தனர். ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் மிக்குயர்ந்த சமயகுரு கார்டினல் கிப்பன்ஸ் மேடையில் நடுநாயகமாகத் தலைமை ஏற்றார். கிறித்துவச் சமயத்தின் பிற பிரிவுகளான பிராட்டஸ் டண்ட், பழைய கிரேக்கத் திருச்சபை முதலானவைகளும் மேடையில், கீழை நாட்டுச் சமயப் பிரதிநிதிகளுடன் அமர்ந்திருந்தனர்.

கிறித்துவ சமயத்தின் சில பிரிவினர் சர்வமதசபை ஏற்பாட்டை எதிர்த்துள்ளனர். பிரிஸ்பைஸ்டிரியன் எனும் கிறித்துவ சமயப் பிரிவினர், கிறித்துவ சமயத்திற்கு சமமாக பிறசமயங்களை அழைத்துக் கூட்டுவதை எதிர்த்தனர். அமெரிக்க கிறித்துவ சமய இதழ்கள் சிலவும் பிரிபைஸ்டிரியன் நோக்கிலே சர்வமத, சபை ஏற்பாட்டைக் கண்டித்தன. இத்தகைய எதிர்ப்பின் உச்சக் கட்டமாக பிரிட்டனைச் சார்ந்த காண்டர்பரி ஆர்ச்பிஷப், சிகாகோ சர்வமத சபையை ஏற்பாடு செய்த குழுவிற்கு எழுதியக் கடிதத்தில் தமது எதிர்ப்பை பின்வருமாறு வெளியிட்டார்

''சர்வமத சபைக்கு வரவிருக்கும் பிற சமய உறுப்பினர்கள் கோரிப் பெறும் உரிமையையும் சரிசம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையையும், கிறித்துவ சமயம் எவ்வாறு ஏற்க முடியும்? இது எனக்குப் புரியவில்லை.''

இத்தகைய எதிர்ப்புகளைச் சமாளிக்க டாக்டர் பரோஸ், மாபெரும் காப்பியக் கவிஞன் மில்டனின் பின் வரும் கருத்தை ஆதாரமாகக் காட்டினார்.

''மில்டன் கொள்கை வழியே சர்வமத சபை ஏற்பாடு செய்யப்பட்டது. அதாவது இந்தப் பூமியின் மேற்பரப்பின் மீது பலவித கருத்துக் காற்று வீசினாலும், உண்மையே களத்தில் நிலைநிற்கும். இந்த உண்மையின் வலிமையை நாம் தவறாகச் சந்தேகித்து தீங்கிழைக்கின்றோம். பொய்மை நெருங்கிப் போராடினாலும், பகிரங்கப் போட்டியில் உண்மை வீழ்ச்சியுறுமா?'' இங்கு ''உண்மை'' என்பது 'கிறித்துவம்' என்றும், ''பொய்மை'' என்பது பிறசமயக் கொள்கை என்றும் நுட்பமாக உணர்த்தப் பட்டுள்ளது.

இவ்வாறு சில, பல சிக்கல்கள் சூழ்ந்த போதிலும் சிகாகோ சர்வமத சபையின் கூட்டம் குறித்த நாளில், மணியோசையுடன் தொடங்கியது. சபையில் நிறுவப் பெற்றிருந்த 'நியூ லிபர்டி பெல்'' (புதிய சுதந்திர மணி) மீது பின் வரும் வாசகம் பொறிக்கப் பட்டிருந்தது. ''நீங்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துக என்னும் புதிய கட்டளையை உங்களுக்கு நான் வழங்குகின்றேன்.'' இந்த வாசகத்தைத் தாங்கிய மணி, சரியாக பத்துமணி அளவில் பெருமிதத்துடன் பத்துமுறை மணி அடிப்பு ஓசையை எழுப்பியது. ஒவ்வொரு மணி அடிப்பு ஓசையும் சர்வமத சபையில் கூடிய ஒவ்வொரு மதத்தைக் குறிப் பிட்டது.

## முதல் நாள் சபை

பிரதிநிதிகளை வரவேற்று எழுவர் பேசவும், அதற்கு எட்டு பிரதிநிதிகள் பதிலளித்துப் பேச சபை தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கத் திருச்சபையின் ஆர்ச் பிஷப் ஜன்டே என்னும் பிரதிநிதி முதன் முதலில் பேச அழைக்கப்பட்டார். அவர், "எல்லா மனிதர்களையும் படைத்தவர், அனைவருக்கும் பொதுவானவர். ஆகவே, நம் எல்லோருக்கும் அவர் கடவுளின் தந்தையம்சம் ஆவார்" எனக் குறிப்பிட்டு அமெரிக்க நாட்டையும், மக்களையும் வாழ்த்தி அமர்ந்தார்.

சபையின் தொடக்க நாள் நடவடிக்கைளைச் சுருக்கமாக வருணித்து சுவாமிஜி, அழகிய சிங்கப்பெருமாளுக்கு நவம்பர் 23, 1893-ல், எழுதியதாவது :

"சர்வமத சபை தொடங்கிய காலைப் பொழுதில், நாங்கள் எல்லோரும் கலை மாளிகை என்றழைக்கப் பெற்ற கட்டிடத்தில் கூடினோம். அங்கு பெரிதும், சிறிதுமான தற்காலிக அறைகள் கட்டப் பெற்றிருந்தன. அங்கு அனைத்து நாடுகளில் இருந்தும் வந்தவர் குழுமியிருந்தனர். இந்தியாவில் இருந்து பிரம்ம சமாஜத்தைச் சார்ந்த மஜூம் தார், பம்பாய் நாகர்கர், அன்னிபெசன்ட்டுடன் தியோசாபியைச் சார்ந்த சக்ரவர்த்தி ஆகியோர் இருந் தனர். இவர்களுள் நானும் மஜூம்தாரும் பழைய நண்பர்கள்; சக்ரவர்த்தி, என்னை அறிந்தவர். அங்கு ஆரவாரம் மிக்க ஊர்வலம் நிகழ்ந்தது. நாங்கள் எல்லோரும் மேடையில் அணிவகுத்து நின்றோம். கீழே ஒரு மன்றம்; மேலே ஒரு பேச்சு மேடை; பண்பாட்டில் சிறந்த ஆறு அல்லது ஏழாயிரம் ஆண்— பெண்களின் பெருந் திரளானக் கூட்டம், மேடையில் பன்னாட்டு அறிஞர்கள்; இந்தக் காட்சியைச் சற்று நினைத்துப் பாருங்கள்!

"பொது மேடையில் பேசியறியாத நான் இந்த மகத் தானக் கூட்டத்தில் பேசவேண்டும்! இசை, சடங்கு, பேச்சுக்கள் மூலம் சபை தொடங்கியது. பேராளர்கள் ஒருவர் பின் ஒருவராக அறிமுகப்படுத்தப் பட்டார்கள். எனக்கோ இதயம் படபடவென்று அடித்துக் கொண்டி ருந்தது; நாக்கு கிட்டத்தட்ட வறண்டு போய் விட்டது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையான அச்சவுணர்வு என்னைப் பற்றிக் கொண்டதால் காலையில் பேசத் துணிவற்று இருந்தேன்.

சபையின் காலை நேரப் பகுதியில் பிரதாப் சந்திர மஜூம்தாரும், சக்ரவர்த்தியும் பேசினார்கள். "மஜூம்தார், சக்ரவர்த்தி சிறப்பாகப் பேசினார்கள், அவையோர் பாராட்டுதல்களைப் பெற்றார்கள். அவர்கள் பேசுவதற்கு முன்பே திட்டமிட்டு பேச்சுகளை அமைத்துக் கொண்டு விட்டார்கள்" என சுவாமிஜி குறிப்பிட்டார்.

## மஜூம்தார்

இந்த விடத்தில் பிரதாப் சந்திரமஜூம்தார் (1840—1905) பற்றிய சில குறிப்புகளை அறிதல் அவசியமாகும். சுவாமி, பிரம்ம சமாஜத்தில் இருந்த காலத்தில் மஜூம்தார் நட்பு ஏற்பட்டது. பிரம்ம சாஜத் தலைவர் கேசவ சந்திரஸென்னின் மிக நெருங்கிய நண்பர் மஜூம்தார். பிரம்ம சமாஜத்தில் யூனிடேரியன் கிறித்துவ சமயப் பிரிவின் தாக்கம் மேலோங்க காரண கர்த்தாக்களுள் மஜூம்தாரும் ஒருவர். அமெரிக்க யூனிடேரியன் கிறித்துவ சமய அமைப்புகளுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டு 1874-இல் அமெரிக்காவில், சுவாமிஜி அமெரிக்காவிற்கு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே, சமயப் பிரசாரம் செய்து புகழ் பெற்றவர். பேச்சாற்றல் மிக்கவர். இவருடைய பேச்சாற்றலுக்கு சான்றாக ஒரு புள்ளி விவரம் கூறப்படுவதுண்டு. அதாவது மூன்று மாதங்களில் எழுபது சொற்பொழிவுகளை, ஐம்பது யூனிடேரியன் சர்ச்சுகளில் நிகழ்த்தி, நான்காயிரம் மக்களை மகிழ்வித்தவர், இவர் என்பது ஒரு புள்ளி விவரம்.

1883—இல் வெளிவந்த இவருடைய "ஓரியண்டல் கிறைஸ்ட்" (கீழ்த்திசை ஏசுநாதர்) என்னும் நூலால் பெரும்புகழ் எய்தியவர். டாக்டர் பரோஸ் இந்த நூலை கிறித்துவ சமய ஞானி தாமஸ் ஏ கெம்பி "இமிடேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஃப் கிறைஸ்ட்'' என்னும் பனுவலுடன் ஒப்பிட்டுப் பெருமைப்படுத்துவார். சுவாமிஜியின் உள்ளங்கவர்ந்த நூல்களுள் 'இமிடேஷன் ஆஃப் கிறைஸ்ட்' என்ற நூலும் ஒன்றாகும் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

கேசவ சந்திரஸென், இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போற்றத் தொடங்கிய காலத்தில், அவருடைய 'இந்தியன் மிரர்' என்னும் பத்திரிகையில் (ஏப்ரல் 16, 1876) மஜூம்தார், இராமகிருஷ்ண பரமஹம்சரைப் புகழ்ந்து எழுதியுள்ளார்.

சிகாகோ சர்வமத சபையில், உலக சமயங்களின் பிறப்பிடமான ஆசியாவின் பெருமையை விளக்கும் நோக்கில், ''ஆசியாவிற்குக் கடன்பட்ட உலக சமய வுணர்வு'' (The Religious Debt to Asia) என்னும் தலைப்பில் பேசினார். அவருடைய பேச்சாற்றலை ஒரு நூலாசிரியர் பின்வருமாறு வருணித்துள்ளார்.

''அறிவாற்றல் மிக்க பேச்சு; கட்டுக்கோப்பானப் பேச்சு; துல்லியமானச் சொற்களைக் கொண்ட பேச்சு; திட்டமிட்ட குரல் எழுச்சியும், முறையையும் கொண்ட பேச்சு; மனதைக் கவர்ந்த பேச்சு'' (The Brahmo Samaj and the Shaping of the Modern Indian Mind, 1979, David Kopf, P. 21]

இவ்வாறு மேடைப் பேச்சாற்றலில் வல்லவர் எனப் புகழ் பெற்ற பிரதாப் சந்திர மஜூம்தார், மேடைப் பேச்சிற்கு புதியவராகப் புகுந்த சுவாமி விவேகானந்தரின் நாள் சொற்பொழிவின் காரணமாக தமது புகழைப் பறிகொடுத்து விட்டார்.

''அடுத்த நாள் எல்லா பத்திரிகைகளும், என்னுடைய பேச்சுதான் அன்று வெற்றிகரமாக அமைந்தது என்று எழுதின. அமெரிக்கா முழுவதற்கும் அறிமுகமாகி விட்டேன். புகழ் பெற்ற உரையாசிரியரான ஸ்ரீதரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட "ஊமையை தங்கு தடையற்ற பேச்சாளராக மாற்றும் சக்தியுள்ளவள் சரஸ்வதி" என்பது உண்மையாகி விட்டது" இவ்வாறு சுவாமிஜி எழுதியுள்ளார்.

"உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினில் ஒளியுண்டாம்" எனும் மகாகவி பாரதியாரின் வாக்கிற்கு விளக்கமாகத் திகழ்ந்தார், சுவாமிஜி. தெய்வீக ஒளியின் தவிர்க்க முடியாத நியதி, மஜும்தாரை புறங்காண வைத்தது. ஆனால் மஜும்தார் தமக்கு ஏற்பட்ட தோல்வியை, விளையாட்டுப் போட்டிக்குரிய பெருந்தன்மையுடன் ஏற்காமல், "பொறாமைக் காய்ச்சலால், சுவாமிஜியைப் பற்றிப் பழிதூற்றத் தொடங்கி விட்டார்.

மஜும்தார் தம்மிடம் "பொறாமைக் காய்ச்சல்" கொண்டதாக சுவாமிஜியே இருவிடங்களில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் மட்டுமன்று, இந்தியா திரும்பியதும் கல்கத்தாவிலும் சுவாமிஜியைப் பற்றி பொய்யுரைகளை அள்ளி வீசினார்.

"இந்து சமயத்தின் ஆழத்திற்கும் இனிமைக்கும் வாழ்ந்துக் கொண்டிருக்கும் சான்றாக விளங்கும் தூய்மை மிக்க புனிதர், இவர்" என இராமகிருஷ்ண பரமஹம்சரை 1879-ல் பாராட்டியவர் மஜும்தார் [Rama Krishna As We Saw Him, 1992, Edited By Swami Chetanananda, Advaita Ashrama, Calcuta. P. 390). இந்தப் புனிதர் உருவாக்கிய சுவாமி விவேகானந்தரை தூற்றித் திரிந்தார், மஜும்தார். ஆனால், இவையெல்லாம் ஒளியைக் கண்டு ஓடிய இருள் போல் ஆகிவிட்டது.

"என்னைத் தூற்றியதின் காரணமாக, அமெரிக்காவில் மஜும்தார் பெற்றிருந்த சிறிதளவான செல்வாக்கில் முக்கால் பங்கை இழந்து விட்டார்" என சுவாமிஜியே தமது கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் பேச்சின் மந்திர சக்தி

சிகாகோ சர்வமத சபையில் தெய்வீகக் கட்டளையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட சுவாமிஜி, சபையின் முதல் நாள் சொற்பொழிவில் உரையாற்ற மிகுந்த கூச்சத்துடன் தயக்கம் காட்ட வேண்டியதாயிற்று. சபையின் தலைவர் சுவாமிஜியை காலை அமர்விலேயே பேசுவதற்கு பல முறை அழைத்தும், 'பிறகு பேசுகிறேன், பிறகு பேசுகிறேன்' என ஒத்திப் போட்டுக் கொண்டிருந்தார். தலைவருக்கு குழப்பம் ஏற்பட்டது; சுவாமிஜியால் பேச இயலுமோ எனவும் வியப்புற்றார். பிற்பகல் அமர்வில் நான்கு பேச்சாளர்கள் பேசிய பிறகு சுவாமிஜியை மீண்டும் பேசுமாறு வற்புறுத்தி அழைத்தார், சபைத்தலைவர் டாக்டர் பரோஸ். மேற்கொண்டும் காலதாமதம் செய்ய விரும்பாமல் கலைமகளை மனதில் துதித்துக் கொண்டு இருக்கையை விட்டு எழுந்தார். எதிரே பரந்துக் கிடந்த அவையை வீரத் திருவிழியாலே நோக்கினார். இதற்கு முன் அச்சத்தால் உலர்ந்து போயிருந்த நாக்கு வீறு பெற்று அசைந்தது; மந்திரச் சொற்கள் ஒலித்தன. ஆம்; ''அமெரிக்க நாட்டு சகோதரிகளே, சகோதரர்களே'' என்பவைதாம், அந்த மந்திரச் சொற்கள். இதைவிட ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

சுவாமிஜி அடுத்த சொற்களைப் பொழிவதற்கு முன்பாக, அவை முழுவதும் எழுந்து நின்றது; எல்லையற்ற மகிழ்ச்சி அலைகளில் நீந்தியது; இரண்டு முழு நிமிடங்களாக ஆனந்த பரவசத்தில் கரஒலியை எழுப்பிக் கொண்டேயிருந்தது. சுவாமி இன்ப அதிர்ச்சியுற்றார்.

சுவாமிஜிக்கு முன்பு பேசியவர்கள், அவையினரை சம்பிரதாயமான முறையிலேயே விளித்தனர். ''கனவான்களே! சீமாட்டிகளே'' என்ற பாணியில் பேச்சைத் தொடங்கினர். ஆனால், சுவாமிஜி ''சகோதரிகளே, சகோதரர்களே'' என்று அழைத்ததும், அதில் பாய்ந்து பரவிய ஆன்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம் அவையோரை அன்புப் பிடியில் கட்டுண்ட வைத்தது, சம்பிரதாயமான அந்நிய பாவம் விலகிட, உடன் பிறப் பொத்த உறவுமுறை மேவியது.

சுவாமிஜியின் எஞ்சிய சிகாகோ பேருரைகளுக்கு வெற்றி முரசொலியாக, முழங்கின, அந்த மந்திரச் சொற்கள். ''நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரம் 'என்ப'' எனும் தொல் காப்பிய நூற்பாவின் விளக்கமாய் அமைந்தன, அந்த மந்திரச் சொற்கள்.

சிகாகோ சர்வமத சபையில் கலந்துகொள்ள கால தாமதமும், நிச்சியமற்றத் தன்மையும் ஒருபுறத்தில் எதிர் நிலை அம்சங்களாக அமைந்தன. காலையில் பேசிய இந்தியப் பிரதிநிதிகளான சக்ரவர்த்தி, மஜூம்தார் போன்று சொற்பொழிவுகளைத் திட்டமிட்டு தயாரித்துக் கொண்டுவர முடியாதச் சூழலில் சுவாமிஜியின் முதல் உச்சாரணமே அவையை இன்பகரமாக உலுக்கிவிட்ட தென்றால், அதற்குரிய சூட்சம காரணம், குருதேவர் இராமகிருஷ்ண பரமஹம்சரின் கருவியாக சுவாமிஜி விளங்கினார்.

வேதாந்தத்தின் சர்வாத்மபாவம் சுவாமிஜியை அப்படி பேசவைத்தது. அவர் வேதாந்தச் சிங்கமல்லவா?

தமது முதல் நாள் பேச்சிற்கு ஒரு தலைப்பு தராமல், சுவாமிஜி பேசினார் என்றாலும், எடுத்த எடுப்பிலேயே இந்து சமயத்தின் மூத்த பழமையின் நெடுங்காலச் செய்தியை பின்வருமாறு சுட்டிக் காட்டினார்.

''உலகிலுள்ள துறவொழுக்க நிலயங்களிலே மிகப் பழமை வாய்ந்த நிலையத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்; எல்லாச் சமயங்களுக்குத் தாயாகிய சமயத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து இந்து சமயத்தின் சர்வ சமய சமரச நெறிக் கண்ணோட்டத்தை முதல் நாள் கூட்டத்திலேயே உணர்த்திட பின்வருமாறு பேசினார் :

''பிறருடைய கொள்கையை வெறுத்து ஒதுக்காத பண்புடைமை, அக்கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற பொதுநோக்கு என்ற இரண்டினையும் உலகிற்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமை பாராட்டுகின்றேன். எல்லாச் சமயங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அது மாத்திரமல்ல; எல்லாச் சமயங்களையும் உண்மை மார்க்கங்களென நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம்''

மதக் காழ்ப்புணர்ச்சியில் உலக அளவில் ஒரு காலத்தில் அச்சுறுத்தப்பட்ட யூத மதத்தினரையும், சொந்த நாட்டிலேயே வேரொடு பிடுங்கி எறியப்பட்ட சொராஸ்திய மதத்தினரையும் வரவேற்று புகலிடம் அளித்து ஆதரித்ததும் இந்திய நாடே என்பதையும், சர்வமத சபையின் சிந்தனைக்கு பின்வருமாறு சமர்ப்பித்தார், சுவாமிஜி.

''உரோமருடைய கொடுஞ் செயலினாலே தமது பரிசுத்த தேவாலயம் சின்னா பின்னப்பட்ட ஆண்டிலே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்த கலப்பில்லாத இஸ்ரவேல் சாதியாரில் மிஞ்சியிருந்தவர்களை நாங்கள் அன்பினோடு அணைத்துக்கொண்டோம் என்பதனை உங்களுக்கு எடுத்துச் சொல்லும் பெருமை எனக்கு உண்டு. மகத்துவம் பொருந்திய சொராஸ்திய சாதியாரிலே எஞ்சியிருந்தோர்க்குப் புகலிடங் கொடுத்து இன்றும் பாதுகாத்து வருகிற ஒரு சமயத்துக்கு யான் உரியவன் எனப் பெருமை கொள்கிறேன்.''

பிற மதத்தினரை அகதிகளாக்காமல், அகதிகளாக வந்த பிற மதத்தினரை வரவேற்று வாழ்வளிப்பது, இந்தியப் பண்பாடு என்பதை சுவாமிஜி தமது முதல் நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிவிலே வலியுறுத்தினார். இந்த வரலாற்று உண்மையை வாய்ப்பேற்படும் பொழுதெல்லாம் எடுத்தோதி வந்தார் சுவாமிஜி.

கி. பி. முதல் நூற்றாண்டில் ரோம் நாட்டு சக்ரவர்த்தி இஸ்ரவேல் நாட்டின் தலைநகரமான ஜெருசலத்தைக் கைப்பற்றி, யூதர்களை அடக்கி ஒடுக்கினான். இந்த பண்டைய வரலாற்று நிகழ்ச்சியைத்தான், ''உரோமருடைய கொடுஞ் செயலினாலே'' என்னும் குறிப்பால் உணர்த்தினார், சுவாமிஜி.

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் பண்டைய பாரசீகத்தில் அரபு பிரதேசத்தில் இருந்து அலை அலையாக வந்து தாக்கிய இஸ்லாம் சமய ஆதிக்கத்தால் உலகப் பழம் பெரும் சமயங்களில் ஒன்றான சொராஸ்திய மதம், தனது பிறந்த மண்ணை விட்டு வெளியேறி, இந்தியாவில் தஞ்சம் புகுந்தது. சொராஸ்திய மதத்தின் புனித நூலான ஜென்ட் அவெஸ்தாவும், ரிக்வேதக் கருத்துகள் பலவும் ஒத்திசைவு கொண்டன என்பதும் நினைவிற்குரியது. கருத்துகள் மட்டுமல்லாமல், மொழி அமைப்பிலும் ஒற்றுமை அம்சங்கள் உள்ளன.

மேற்கூறப் பெற்ற இரு வரலாற்று நிகழ்ச்சிகளை மீண்டும் சுவாமிஜி தமது ''வேதாந்தத்தின் மெய்யுணர்வும் அதன் தாக்கமும்'' எனும் சொற்பொழிவில் (பாஸ்டன் நகரில் பேசியது) பின் வருமாறு விளக்கியுள்ளார் :

''இந்துக்களால் சமய ஒடுக்குமுறை இந்தியாவில் என்றும் நிகழ்த்தப்படவில்லை. உலக சமயங்கள் அனைத்திடத்திலும் வியத்தற்குரிய பெரு மதிப்பை வெளிபடுத்தினர், இந்துக்கள். தங்கள் சொந்த நாட்டில் இருந்து, ஹீப்ருக்கள் விரட்டப்பெற்ற பொழுது, அவர்களுக்கு தஞ்சமளித்தனர், இந்துக்கள். இதன் விளைவாக மலபாரில் யூதர் குடியிருப்பு தோன்றியது. பாரசீக மக்கள் கிட்டத்தட்ட பெரும் அழிவிற்கு ஆட்பட்ட பொழுது, எஞ்சிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் இந்தியா வந்தபொழுது அவர்களையும் இந்துக்கள் வரவேற்றனர். அவர்கள் இன்றும் எங்களால் நேசிக்கப் பெற்று எங்களுள் ஒரு பகுதியாக, பார்சிகள் எனப் பெயர் பெற்றிருக்கிறார்கள்.''

தொடர்ந்து உரையாற்றுகையில், இளம் வயது முதற் கொண்டு தாம் ஓதியுணர்ந்த சிவமகிம்ந :தோத்திரத்தில் இருந்து பின்வரும் பகுதியை, சம்சுகிருத மொழி வளமும், தமது சங்கீதக் குரலும் இணைய இசைத்தார்.

''எண்ணுமிரு நிலத்தெழுந்த பலநதியு
மிறுதியில்வந் தெறிநீர் வேலை
நண்ணுகின்ற வியல்பது போற் பலவேறு
தகைமையராய் ஞான நாடும்
மண்ணகத்தோர் செல்லுநெறி செம்மையதாய்க்
கோடணையாய் மருவுமேனும்
புண்ணியனே நினையடையு மார்க்கமவை
யனைத்துமெனப் புகல்வன் யானே!''

இந்தத் தோத்திரப்பாவின துதி சிவபெருமான் மீது அமைந் திருந்தாலும், சர்ம சமய சமரச நெறியை ஆதார சுருதி யாகக் கொண்டது.

'சர்வமத சபை' எனும் பெயருக்குரிய விளக்கத்தை கேட்போர் மனதில் பதியவைக்க மேலும் சான்றுகளை எடுத்துரைத்தார், சுவாமிஜி.

போர்க்களத்தே பிறந்த பரமெய் ஞானக் கீதையில் இருந்து ஒரு சான்றை முதல்நாள் பேருரையிலே எடுத் தாண்டார், சுவாமிஜி. ''இதுவரை ஒரு காலத்திலும் ஏற்படாத மகாமகத்துவம் பொருந்திய சர்வ சமய ஆராய்ச்சிக் கழகமாகிய இம்மகா சபையானது கீதையிலே கூறப்பட்டிருக்கும் ஒரு பெரிய அற்புதமான உண்மையைத் தெளிவுபடுத்தி வற்புறுத்துகின்றது'' என்பதை விளக்க பகவத் கீதை நான்காம் அத்யாயத்தில் ஞான கர்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸந்நியாஸ யோகத்தில் வரும் பதினோராவது சுலோகத்தை ஆங்கிலத்தில் எடுத்துரைத்தார். மகாகவி பாரதியாரின் தமிழாக்கத்தில் இந்த சுலோகத்தைப் பார்ப்போம்.

''யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ, அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன். பார்த்தா, மனிதர் யாங்கனும் என் வழியையே பின்பற்றுகிறார்கள்.''

இதே தத்துவ ஞானத்தின் பிரதிபலிப்பை பகவத் கீதை ஏழாம் அத்யாயத்தின் ஞான விஞ்ஞான யோகத்தின் இருபத்தொன்றாவது சுலோகத்தில் பின்வருமாறு அறிகின்றோம்.

''எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன், எந்த எந்த வடிவத்தை அர்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அசையா நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்'' (மகாகவி பாரதியார் மொழி பெயர்ப்பு)

இந்து சமயத் தத்துவ ஞான வரலாற்றில் பகவத் கீதைக்குரிய ஒரு தனிச் சிறப்பம்சத்தைப் பற்றி சுவாமிஜீ, 1897—இல் கல்கத்தா ஆலம் பஜார் இராமகிருஷ்ணா மிஷனில், சீடர்களுக்காக எடுத்த வகுப்புகளில் வங்காள மொழியில் குறிப்பிட்டுள்ளார். 'கீதையைப் பற்றியச் சிந்தனைகள்' எனும் தலைப்பில் சுவாமிஜி பேசியதில் அந்தத் தனிச் சிறப்பம்சம் பின்வருமாறு விளக்க முறுகின்றது.

''பகவத்கீதை தோன்றுவதற்கு முன்பு யோகம், ஞானம், பக்தி முதலானவற்றை வலியுறுத்தி வந்தவர்கள் தங்களுக்குள் பூசலிட்டுக் கொண்டார்கள். அவரவர் வழியே உயர்ந்தது என கோஷமிட்டார்கள். இந்தப் பல வகையான வழிமுறைகளை ஒன்றுபடுத்தி சமரசம் காண யாரும் முன்வரவில்லை. கீதையின் ஆசிரியர்தான் இந்த வழிமுறைகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் நிலவிய பல்வேறு பிரிவுகளில் இருந்து சிறந்தன வற்றைத் திரட்டி, அவற்றை கீதையில் இழையோடச் செய்தார்.''

இதைத் தொடர்ந்து சுவாமிஜி கூறிய பின் வரும் கருத்தும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

''தங்களுக்குள் போராடிக் கொண்டிருந்த பல்வேறு பிரிவுகளிடையே முழுமையான சமரசத்தை கிருஷ்ணரும் ஏற்படுத்தத் தவறியவிடத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமகிருஷ்ண பரமஹம்சர் முழுமையாக நிறைவேற்றினார்.'' [Thoughts on the Gita, 12—வது பதிப்பு, 1992, அத்வைத ஆசிரமம், கல்கத்தா, பக்.7]

'நடமாடும் சர்வமத சபை' யாக இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர் காலத்தில் மட்டுமல்ல, வரலாற்றிலேயும் முதன்மை பெற்றுத் திகழ்ந்ததை மேற்காணும் சுவாமிஜியின் விமர்சனம் அறிவிக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடத்தில் சுவாமிஜி கொண்டிருந்த வழிபாடு உணர்வையும், குறைத்து மதிப்பிடக் கூடாது.

சிகாகோ சர்வமத சபையில் கீதையை மேற்கோளாகக் காட்டிய சுவாமிஜி, தமது குருநாதரை மேற்கோளாகக் காட்டாததையும் கூர்ந்து நோக்க வேண்டும். இவ்வாறு கூர்ந்து நோக்கி, சகோதரி நிவேதிததை, பின் வருமாறு கூறியுள்ளார்.

''அவருடைய குருநாதரின் வரலாற்றைப் பற்றிக் கூறு வதற்குரிய சந்தர்ப்பம் வாய்க்கப் பெற்றிருந்தும், அதை அவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இவற்றிற்கு மாறாக இந்தியாவின் சமயவுணர்வு வெள்ளந்தான் அவர் மூலம் வழிந்தது.''

இந்த சமயவுணர்வு வெள்ளம், உலக சமய வயல் களிடையே சமரசநெறிப் பயிரைச் செழிப்படையச் செய்யத் தக்கது என்பதை கீதையைக் கொண்டு உலகறிய உணர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினார், சுவாமிஜி. உலக வரலாற்றில் நிகழ்ந்துக் கொண்டு வரும் பலவகையான அழிவுப் போராட்டங்களில், மதங்கள் காரணமாக நிகழ்ந்தப் போராட்டங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதையும் பின்வருமாறு விளக்கினார், சிகாகோ வீரர், சுவாமி விவேகானந்தர்.

''மத விகற்பங்களும், மதச் சண்டைகளும், அவற்றினின்று ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் அழகிய பூவுலகத்தை நெடிது பற்றியிருந்தன. இந்த மண்ணுலகத்தை அவை கொடுஞ் செயலினாலே நிறைத்துவிட்டன. மீண்டும் மீண்டும் மானிட உதிரத்தை எங்கும் பரவச் செய்து, நாகரிக வாழ்க்கையை அழித்து மக்கட் கூட்டத்தினரைத் திகைக்கும்படி செய்துவிட்டன. இந்தக் கொடிய பேய்கள் தோன்றாதிருந்தால் மக்கட் கூட்டமானது இப்பொழுது இருக்கின்ற நிலையினும் பார்க்க மிகவும் உன்னதமான நிலையில் இருந்திருக்கும்.''

பிற சமயங்களிடம் சமரசவுணர்வு கொள்ளுதல் என்பதோடு, அந்த சமயங்களும் உண்மையானவையே என்பதுதான் சர்வ சமய சமரச நெறியின் ஆதாரசுருதியாகும். இந்த சுருதியை சிதைக்கும் மதச் சண்டைகளின் பேய் ஓலங்களும் ஒழிய வேண்டிய, ஒழிக்கப்பட வேண்டியத் தேவையை சர்வமத சபையில் சுவாமிஜியைப் போல் உணர்த்தியவர் எவருமிலர் என்பதை முதல்நாள் கூட்டத்திலேயே புரிந்துக் கொள்கிறோம்.

*1893*, செப்டம்பர் 11-இல் சமய நல்லிணக்கக் கோட்பாட்டை வலியுறுத்தியதற்கு முன்பாக செப்டம்பர் 2-லேயே தமக்கு ஆதரவளித்த பேராசிரியர் ரைட்டிற்கு எழுதிய கடிதத்திலும் வலியுறுத்தியுள்ளார், சுவாமிஜி. இந்தக் கடிதத்தில் பேராசிரியர் ரைட்டிற்கு ஓர் ஆங்கிலக் கவிதையைப் புனைந்தளித்தார் சுவாமிஜி. இந்தக் கவிதையே சுவாமிஜியின் முதல் ஆங்கிலக் கவிதையென்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தக் கவிதையின் இறுதி வரிகள் பின்வருவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்கள் கடவுளே, பழம்பெரும் தீர்க்கதரிசிகளே
அனைத்து சமயநெறிகளும் உங்களிடமிருந்தே
வருகின்றன
வேதங்கள், பைபிள், குரான் யாவும்
துணிந்து இணைந்து உங்கள் புகழ் இசைக்கின்றன''

மேடைப் பேச்சுக் கலையின் சிகரத்தில் நின்று, தமது முதல்நாள் சொற்பொழிவை முடித்து வைத்தார், சுவாமிஜி. காலையில் பத்து மதங்களைக் குறிப்பிட அடிக்கப் பெற்ற பத்து மணியோசைகளை, சர்வமத சபையின் இலட்சிய மணியோசையாக ஒலிக்க வேண்டும் என பின் வருமாறு பேச்சுக் கலையில் நுட்பம் விளங்க முழங்கினார்.

''இன்று காலையிலே இந்த மகாசபை கூடும் பொழுது அடித்த மங்கல மணியானது, மூடக் கொள்கைகளின் சாவு மணியாகுக. வாளினாலோ, எழுது கோலினாலோ, ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ் செயலானது அகன்று விடுக. ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்லுகின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக.''

சிகாகோ சர்வமத சபையின் மணியோசையுடன் பலத்த போட்டியிட்ட சுவாமிஜியின் வெங்கல மணிக் குரலோசையும், அந்தக் குரலோசையில் வெளிப்பட்ட ஆற்றல் மிக்க ஆங்கிலமொழி வீச்சும், இலட்சிய ஆவேசம் மிக்க உரை வளமும், அவையோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன.

சர்வமத சபையில் முதல் நாளில் சுவாமிஜிக்குப் பிறகு நான்கு சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. காலையிலும், பிற்பகலிலுமாக மொத்தம் இருபத்து நான்கு பேச்சுகள் அமைந்தன. இவையனைத்திலும் சுவாமிஜியே அன்றைய மாவீரராக விளங்கினார். சுவாமிஜி பேசுவாரோ, மாட்டாரோ என ஐயமுற்ற சபைத் தலைவர் டாக்டர் பரோஸ், சுவாமிஜியின் பேச்சாற்றலைக் கண்டு, கேட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தார். அவையில் இருந்த பிளட்கெட் எனும் அம்மையார் தமது அனுபவத்தைப் பதிவு செய்த பொழுது, ''என்னருமை இளைஞனே, நீ உண்மையிலேயே தெய்வம் தான்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாராம்.

இவ்வாறு முதல்நாள் பேச்சிலேயே, புகழின் உச்சிக்குச் சென்று விட்ட சுவாமிஜி, அன்றிரவு அவர் தங்கிய ஆடம்பர வசதிகள் கொண்ட ஒரு வீட்டில், வெறும் தரையில் படுத்துக் கொண்டு இந்திய மக்களின் வறுமையையும், துன்பங் களையும் நினைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார். புகழ் அலைகள் தாலாட்டிக் கொண்டிருந்தச் சூழலில், சுவாமிஜியின் பேருள்ளம், இந்தியாவின் ஏழை எளிய மக்களைப் பற்றியே சிந்தித்தது. அவர்கள் விமோசனத் திற்காக வழிகாணத் துடிதுடித்தது: கண்ணீர் விட்டது. பெயரும் புகழும் வட்டமிட்டுக் கொண்டிருந்த பேரானந் தத்தில் திளைக்காமல், சுவாமிஜி தாய்நாட்டு மக்களின் துன்பத் துயரங்களை நினைத்து கசிந்துருகினார், தமக்கேற்பட்ட புதியச் சூழலை சுவாமிஜி எதிர்கொண்டது, அவருடைய சம திருஷ்டியை விளக்க வல்லது.

முதற் சொற்பொழிவின் மாபெரும் வெற்றி, தொடர்ந்து வலம் வரத் தொடங்கியது.

## இரண்டாவது சொற்பொழிவு

முதற் சொற்பொழிவைப்போல, இரண்டாவது சொற் பொழிவு, எழுதி வைத்துப் படிக்கப்பட்டாமல், வாயுரை யாக சிறிய அளவில் அமைந்தது. ஆனால், இந்தச் சொற் பொழிவு இந்திய நாட்டின் நாட்டுப்புறப் பண்பாட்டின் அரிய பெருமையை விளக்கியது. முதல்நாள் சொற் பொழிவில் தத்துவ ஞானநூல்களில் இருந்து விளக்கங்கள் எடுத்தாளப்பட்டன. இரண்டாவது சொற்பொழிவில் இந்தியாவில் கற்றறியாத ஏழை, எளிய மக்களிடையே வழங்கப் பெற்று வரும் மக்கட் கதை மரபு வழி வந்த நீதிக் கதையொன்று எடுத்தாளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் சொற்பொழிவில் ஞானப் புலமையின் பேரொளி வீசியத்தைப் போன்று, இரண்டாவது சொற்பொழிவில் நாட்டுப்புற எளிய புலமையின் ஞானவொளி வீசியது. பழமொழிக் கதைகள், குட்டிக் கதைகள், நீதிக் கதைகள் முதலானவை இந்தியக் கதை இலக்கிய மரபில் நெடுங்காலமாகச் செல்வாக்கு பெற்று வருகின்றது.

உலகின் பல பாகங்களிலும், நீதிக்கதைகள் மரபார்ந்த செல்வமாகத் திகழ்ந்து வருகின்றது. இந்தியாவில் இருந்து பரவிய நீதிக்கதைகளின் செல்வாக்கை உலகளாவிய நிலையிலும் காண முடிகின்றது என்றும் ஆய்வாளர் கூறுவர் பறவைகளும், மிருகங்களும் பிறபிராணிகளும், பேசிக் கொள்ளும் கதைகள் உலகெங்கிலும் பொதுத் தன்மைகளைப் பெற்றுள்ளன. இவற்றுள் பஞ்சதந்திரக் கதைகள், ஈசாப்புக் கதைகள், இதபோதேசக் கதைகள் முதலானவை குறிப்பிடத்தக்கன, இந்தியக் கதைகள் பல, பாரசீக மொழி பெயர்ப்புகள் வாயிலாக மேற்கு ஆசியா, ஐரோப்பாவில் பரவின.

சுவாமி விவேகானந்தர், சிகாகோ சர்வமத சபையில் இந்தியநாட்டு பழங்கதை மரபுச் செல்வத்தில் இருந்து 'கிணற்றுத் தவளை' கதையை எடுத்துரைத்து, சமயவுணர்வில் விரிந்த நோக்கு தேவை என்பதை வலியுறுத்தியுள்ளார். இதனால், இந்தியநாட்டின் பழங்கதை மரபின் ஆன்மிக வளத்தை மேலை நாட்டினர் அறிய வாய்ப்பளித்தார், சுவாமிஜி.

இந்த 'கிணற்றுத் தவளை' கதை சுவாமிஜியின் குருநாதர் இராமகிருஷ்ண பரமஹம்சர் உபகதைகள் மூலமாக அரிய பெரிய தத்துவ நுட்பங்களை விளங்க வைப்பதில் தன்னிகரற்று விளங்கியவர் இராமகிஷ்ணர் பரமஹம்சர் என்பது அனைவரும் அறிந்ததொன்றாகும்.

அறிவிலிகளின் மதப்பித்தை விளக்குமிடத்தில் பரமஹம்சர் கூறிய கதைகளில் ஒன்று, ''கிணற்றுத் தவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை'' யாகும். அவருடைய அமுத மொழிகளிலேயே அந்தக் கதையைப் பின் வருமாறு அறிவோம்.

''ஒரு கிணற்றில் ஒரு தவளை வெகுகாலமாக வசித்து வந்தது. அது அங்கேயே பிறந்து வளர்ந்த போதிலும் சின்னஞ் சிறு தவளையாகவே இருந்தது. ஒரு நாள் சமுத்திரத்தில் வசித்த வேறொரு தவளை வந்து அந்தக் கிணற்றில் குதித்தது.

''நீ எங்கிருந்து வருகிறாய்?'' என்று கிணற்றுத் தவளை கேட்டது.

''நான் சமுத்திரத்திலிருந்து வருகிறேன்'' என்றது கடல் தவளை.

''சமுத்திரமா! அது எவ்வளவு பெரியது?'' என்று கேட்டது கிணற்றுத் தவளை.

''அது வெகு பெரியது'' என்று வந்த தவளை கூறிற்று.

கிணற்றுத் தவளை தன் காலை நீட்டி, ''உன் சமுத்திரம் இவ்வளவு பெரிதாக இருக்குமா?'' என்றது.

''அது இன்னும் பெரியது'' என்றது கடல் தவளை. கிணற்றுத் தவளை அப்பால் கிணற்றின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குத் தாண்டிக் குதித்து, ''உனது கடல் இவ்வளவு பெரிதாக இருக்குமா?'' என்று கேட்டது.

''நண்பா, கிணற்றைக் கடலுக்கு எப்படி ஒப்பிட முடியும்?'' என்றது கடல் தவளை.

கிணற்றுத் தவளை, ''எனது கிணற்றைக் காட்டிலும் பெரிது ஒன்றும் இருக்க முடியாது. இதைக்காட்டிலும் பெரியது ஒன்று எது? இவன் பொய்யன், இவனை விரட்டி விடவேண்டும்'' என்று சொல்லிக் கொண்டது.

விரிந்த நோக்கம் இல்லாதவன் விஷயமும் இப்படிப் பட்டதே. அவன் தனது சிறிய கிணற்றில் உட்கார்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு முழு உலகமும் தனது கிணற்றினைக் காட்டிலும் பெரியதன்று என நினைக்கிறான்.

சுவாமிஜி இதே கதையை சர்வமத சபையில் செப்டம்பர் 15-இல், "யாம் உடன்படாதிருப்பது ஏன்?" (Why We Disagree) என்னும் தலைப்பில் பேசியபொழுது எடுத்தாண்டார். இந்தக் கதைதான், அன்றைய அவருடைய பேச்சாக அமைந்தது.

கதையைக் கூறத்தொடங்கியதற்கு முன்பு சுவாமிஜி உரைத்த ஒரு குறிப்பு வருமாறு:

"நான் உங்களுக்கு ஒரு சிறுகதை சொல்லுகிறேன். சிறிது முன்பாக மிகவும் அழகாகப் பேசி முடித்த பேச்சாளர் ஒருவர், "ஒருவரையொருவர் நிந்திப்பதை ஒழித்து விடுவோமாக" எனக்கூறி வேறுபாடுகள் எக்காலத்திலும் அதிகரித்துக் கிடப்பதை எண்ணி மனம் வருந்தினார். இந்த வேறுபாட்டினது காரணத்தைத் தெளிவுபடுத்துகிற ஒரு கதையை உங்களுக்குச் சொல்லலாமென நான் நினைக்கின்றேன்."

இந்தக் குறிப்புரையைத் தொடர்ந்து, சுவாமிஜி கிணற்றுத்தவளை கதையைக் கூறினார். கதையின் பின்னுரையாக தமது கருத்தைப் பின் வருமாறு குறிப்பிட்டார், சுவாமிஜி.

"எப்போதும் இத்தகைய இடைஞ்சலே இருந்து வருகிறது. நான் ஓர் இந்து. என்னுடைய சிறிய கிணற்றுக்குள்ளே இருந்து கொண்டு உலக முழுவதும் எனது சிறிய கிணறென்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். கிறிஸ்துவன் தனது சிறிய கிணற்றில் இருந்து கொண்டு உலகம் முழுவதும் தனது கிணறென்று எண்ணுகிறான். முகம்மதியன் தனது சிறிய கிணற்றினுள் இருந்து கொண்டு அதுவே உலக முழுவதுமென எண்ணுகிறான். நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சிறு சிறு உலகங்களின் எல்லைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறித்து விடுகிற பெரிய முயற்சியிலே முற்பட்டு நிற்கின்ற அமெரிக்க வாசிகளாகிய உங்களுக்கு நான் நன்றி கூறு கின்றேன். மேல் வருங் காலத்தில் உங்கள் நோக்கத்தை நீங்கள் அடைவதற்கு ஆண்டவன் உங்களுக்கு உதவி புரிவானாக.''

விரிந்து பரந்த கடல் போன்ற சமய உணர்வு வேண்டும், குறுகிய கிணறு போன்ற சமய உணர்வு வேண்டாம் என்பதை மிக எளிமையாக விளக்க இந்திய நாட்டு மக்கட் மரபு சார்ந்த பழங்கதையை சர்வமத சபையில் சுவாமிஜி அறிமுகப் படுத்தினார். அத்துடன் இந்திய நாட்டின் சிந்தனை மரபிலே எவ்வளவு எளிமையாகத் தத்துவச் சிக்கல் முட்டறுக்கப்படுகின்றது, என்பதையும் சர்வ மத சபையில் உணர்த்தினார் சுவாமிஜி.

கதை சொல்லும் திறனில் கேலியும், குத்தலுமாக கூறுவதும் அடங்கும். இந்தத்திறம் சுவாமிஜியிடம் இந்தக் கதையில் பின்வருமாறு வெளிப்பட்டுள்ளது.

''ஒரு கிணற்றிலே தவளை வசித்து வந்தது. அது அங்கு நீண்ட காலமாக உயிர்வாழ்ந்து வந்தது. அது, அங்கே பிறந்து அங்கே வளர்ந்து வந்தது. ஆயினும் அது சிறிய தவளையே. அதனுடைய கண்கள் இருந்தனவா இல்லாதுபோயினவா என ஆராய்வதற்குப் பரிணாம வாதிகள் (Evolutionists) ஒருவரும் அக்காலத்தில் அவ் விடத்தில் இல்லை. ஆயினும் நம்முடைய கதையின் பொருட்டாக அத்தவளைக்குக் கண்கள் இருந்தனவென்றே வைத்துக் கொள்வோம். நாள்தோறும் அது புழுக்களையும் கிருமிகளையும் அகற்றி இக்காலத்திலுள்ள நுண்ணுயிரிகள் விஞ்ஞான ஆய்வாளர்களை (Bacteriologists) ஒப்ப மிகவும் வலிமையோடு வாழ்ந்து வந்தது.''

இங்கு சுவாமிஜி, பரிணமவாதிகளையும், நுண்ணு யிரிகள் விஞ்ஞான ஆய்வாளர்களையும் அங்கச்சுவைமேவ குறிப்பிட்டுள்ளார். சுவாமிஜியின் இலக்கிய ஆளுமையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு கூறுகளில் கதை சொல்லும் திறமும் ஒன்று என்பது வெளிப்பட்டது. நாட்டுப்புறக் கதையைச் சொல்லவந்த இடத்திலும் விஞ்ஞான உணர்வை சற்றே நினைவுறுத்தும் பாங்கும் குறிப்பிடத்தக்கது.

''சுவாமி விவேகானந்தரும் அவருடைய பணியும்'' எனும் சுவாமி அபேதானந்தருடைய நூலில் (1924) இந்தக் ''கிணற்றுத் தவளை'' கதை பிற்சேர்க்கையாகத் தரப் பட்டுள்ளது. பதிப்பாளர் (ராமகிருஷ்ண வேதாந்தமடம், கல்கத்தா) அடிக்குறிப்பில், ''இந்தக் கதை சுவாமி அபேதானந்தர் அவர்களாலேயே இந்த நூலில் சேர்ப்பதற் காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது'' என்று கூறப்பட்டுள்ளது. சுவாமிஜியின் சகோதரத்துறவியான சுவாமி அபேதானந்தர் ஆன்மீக மேதாவிலாசம் மிக்கவர். அவர் இந்தக் கதையைத் தேர்ந்தெடுத்ததும் எண்ணத்தக்கது. ''விரிவடைதல் வாழ்க்கை, சுருங்குதல் இறப்பு'' என சுவாமிஜி கூறி வந்தார். இவ்வுண்மையையும் விளக்குவது, இந்தக் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது சொற்பொழிவு
# "இந்து சமயம்"

முதலிரண்டு சொற்பொழிவுகளைப் போலல்லாது மூன்றாவது சொற்பொழிவு எழுதிப் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரையாகும். டாக்டர் நோபிள் என்பவர் தலைமையில் செப்டம்பர் 19-இல், ''கேட்டார்ப் பிணிக் குந்தகையவாய்க், கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்'' எனும் வள்ளுவர் வாக்கு விளக்கம் பெற படிக்கப் பெற்ற கட்டுரை. ''Paper on Hinduism'' எனும், இந்து சமயம் பற்றியக் கட்டுரை மூன்றாவது சொற்பொழிவாக அமைந்தது. சர்வமத சபையின் ஒன்பதாம் நாள் பிற்பகல் கூட்டத்தின் சுவாமிஜி தமது ஆய்வுக் கட்டுரையைப் படித் தார். ''கூட்டத்தின் இறுதியில்'' என்னும் குறிப்பிற்கு ஒரு சிறப்புக் காரணமுண்டு. அதாவது, அவையோர் சுவாமிஜியின் சொற்பொழிவிற்கு தனி முக்கியத்துவம் அளித்தனர். சுவாமிஜியை முதலில் பேசவிட்டு விட்டால். பேச்சு முடிந்ததும், அவையின் கூட்டம் பெருமளவு கலைந்து போய்விடும். இதைத் தவிர்ப்பதற்காக அவர் கூட்டத்தின் இறுதியில் உரையாற்ற ஏற்பாடாகியது. இது பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளில் செய்திகள் வெளி வந்துள்ளன.

''நார்த்தாம்ப்டன் டெய்லி ஹெரால்ட்'' எனும் பத்திரிகையில் (ஏப்ரல் 11, 1894) வெளிவந்த பின் வரும் செய்தி, சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்க அவையோர் காட்டிய பேரார்வத்தை விளக்கவல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நிகழ்ச்சி நிரலில் விவேகானந்தர் பேச்சு இறுதியில் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கு முன் அவரை பேச அழைப்பதில்லை. காரணம் என்னவெனில், கூட்டம் முடியும் வரை மக்கள் கலையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஒரு நாள் ஒரு பேராசிரியர் சலிப்பேற்படும் வகையில் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். கூட்டம் நூற்றுக் கணக்கில் கலையத் தொடங்கியது. அப்பொழுது ஓர் அறிவிப்பு தேவைப்பட்டது. ''விவேகானந்தர் பேச விருக்கின்றார்'' என்பதுதான் அந்த அறிவிப்பு. அந்த அறிவிப்பு பரந்து பட்ட அவையோரைக் கட்டிப் போட்டது. குறிப்பிடத்தக்க மனிதரான விவேகானந்தரின் பதினைந்து நிமிட பேச்சைக் கேட்க ஆயிரக் கணக்கில் மக்கள் பல மணி நேரங்கள் காத்திருந்தனர்.'' [Swami Vivekananda In America New Discoveries Marie Lousie Burke, 1966 P, 74]

இந்தியாவில் இருந்து வந்த பிற இந்து பிரதிநிதிகள் சர்வமத சபையில் கலந்துக் கொண்ட போதிலும், சுவாமிஜி தான் இந்து சமயப் பிரதிநிதியாக, அதன் உலக சமயக் கண்ணோட்டத்தின் பிரதிநிதியாக, சிறப்பெய்தினார். பிற இந்து பிரதிநிதிகள் சில சங்கங்கள், சர்ச்சுகள், பிரிவுகள் சார்பாகக் கலந்துக் கொண்டார்கள்.

நரசிம்மாசார்யா என்பவர், பட்டியல் போட்டு சில குறிப்புகளைப் படித்தார். ''ஒருவருக்கும அதில் ஒரு சொல் கூட புரியவில்லை'' என சுவாமிஜி குறிப்பிட்டுள்ளார். மணிலால் என் துவேதி என்பவர் இந்தியத்தத்துவம், இந்து சமயம் பற்றி தத்துவ இலக்கண ரீதியாக ஒரு கட்டுரையைப் படித்தார். ஆனால் அவரும் கட்டுரை வாசிப்பை குறைத்துக் கொண்டு முடிக்க வேண்டியதாயிற்று. சுவாமிஜி தான் சர்வமத சபையின் ஆதார சுருதியான சர்வமத சமரச சுருதியை தமது இந்து சமய ஆய்வுக் கட்டுரைக்கு ஆதாரமாக அமைத்துக் கொண்டார். அத்துடன் இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தின் மூலவித்தான வேத சமயத்தின் திட்ப—நுட்பங்களை எளிமையாக, புரியும் வகையில், விளக்கினார்.

''அசுவினி தேவர்களே! ஒளியின் தலைவர்களே!
என்னுள் இனிய தேனை நிரப்புங்கள்;
அதனைக் கொண்டு உலக மக்கள் திரள் அனைத்திற்கும்
தெய்வீகச் சொற்களை நான் பேசுவேன்''

என அதர்வன வேதக் கவிதையொன்று (6-9, 2) இசைத்ததற்கு ஏற்ப சுவாமிஜி உலக சமரச சமயமான இந்து சமயத்தைப் பற்றிப் பேருரை நிகழ்த்த முற்பட்டார். இதே கருத்துடன், ''என்னுடைய மக்களுக்கு மட்டுமல்லாமல், அயல் நாட்டு மக்களுக்கும் வேதத்தை நான் எடுத்தோத வேண்டும்'' எனும் யஜுர் வேதத்தின் கருத்திற்கும் (9—1—19) சான்றாக நின்றார், சர்வ மதசபையில் சுவாமிஜி.

கிறித்துவ சமய பிரசாரகர் சிலர் அமெரிக்காவில், உருவ வழிபாடு பற்றிய இந்துக்களின் விநோதமான, விசித்திரமான நம்பிக்கைகள் என்று பலவற்றையும், பலதெய்வ வணக்கங்களைப் பற்றியும், இரத்த பலிகளைப் பற்றியும் எடுத்துரைத்து, இதுதான் இந்து மதம்'' என்று ஒரு கருத்தோட்டத்தை உருவாக்கி வைத்திருந்தனர். இந்தச் சூழலில் அவையோரும் சர்வமத சபையில் இந்து சமயம் பற்றி அறிய ஆவல் கொண்டிருந்தனர்.

சுவாமிஜி தமது செறிவார்ந்த, சுருக்கமான ஆய்வுக் கட்டுரையின் அடிப்படையாக, பின்வரும் கருத்துகளை விளக்கும் வகையில் அமைத்துக் கொண்டார்.

''ஒவ்வொரு ஜீவான்மாவும் உள் நிறைந்த தெய்வத் தன்மையுடையது. அகத்தேயும் புறத்தேயும் சார்ந்து நிற்கும் பிரகிருதியை அடக்கி, உள் நிறைந்த தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயங்களின் நோக்கமாகும். கருமம், பூசனை, பிராணனை லயப்படுத்துதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான நூலாராய்ச்சி—என்னுமிவற்றால் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, யாவற்றினாலுமோ இதனைச் செய்து நிறைவேற்றிச் சுதந்திரராய் இரு. இதுவே சமயத்தின் முழு உண்மை. கொள்கைகளும், கருமங்களும், நூல்களும், கோயில்களும், பிறவும் இதற்கு உதவி செய்யும் சாதனங் களாய் அமைந்து நிற்பன. (சுவாமி விவேகானந்தர் ஞான தீபம், சுடர்-2; ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4; 1964—பக். 4)

ருத்யார்ட் கிப்ளிங் எனும் மேனாட்டு அறிஞன் வலியுறுத்தி வந்த பின்வரும் வெறுப்புப் பிரசாரத்திற்கு மறுப்புரையாக சுவாமிஜியின் ஆய்வுரை அமைந்தது.

''கிழக்கு, கிழக்கு தான்
மேற்கு, மேற்கு தான்
அவ் விரண்டும்
ஒருபோது சந்திக்காது.''

சுவாமிஜி தமது பேருரையில் கூட்டிணைப்புக் கோட் பாட்டு அடிப்படையில் கிழக்கு—மேற்கு, வேதமயம்—உலக சமயம்; சமயம்—விஞ்ஞானம்; சடப்பொருள் — மனம்; உருவவழிபாடு— அருவவழிபாடு; மானுட மேம்பாடு— ஆன்மிக உரிமை வேட்கை; முதலானவற்றை விளக்கினார்.

தொடக்கத்திலேயே வேதசமயத்தின் மிக மூத்தத் தனிச்சிறப்பை விளக்கினார். வரலாற்றுக் காலத்திற்கு முற் பட்ட காலத்தில் தோன்றிய இந்து சமயம், ஜராதுஷ்ட்ரர் சமயம், யூதசமயம் ஆகிய மூன்றுள், இந்து சமயம் மட்டும் இடையறாத வளர்ச்சி பெற்று அவ்வப்பொழுது வலிமையைப் புதுப்பித்துக் கொண்டு வந்ததைப் பின்வரு மாறு எடுத்துரைத்தார்.

''இந்தியாவிலே ஒன்றன்பின் ஒன்றாகப் பல மதங்கள் எழுந்து வேதசமயத்தின் அடித்தளத்தையே அசைத்தன போலத் தோன்றினாலும், வேதசமயமானது பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகம்ப அதிர்ச்சியினாலே அகன்ற கடல் நீர் மீண்டும் வந்து ஒன்று கூடுவது போலக் கலகம் நீங்கிய பின்பு ஆயிரமடங்கு வலிமையோடு உட்பிரிவுகளனைத்தினையும் தாய்ச் சமய மாகிய தன்னோடு ஒன்று கூட்டிப் பொலிவுற்று விளங் கியது.''

இந்து சமயத்திற்கு வேதங்களே ஆதாரம் என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, வேதங்களைப் பற்றியும், வேதரிஷி களைப் பற்றியும் சுவாமிஜி பின்வருமாறு விளக்கினார்.

''ரிஷிகள் கண்டறிந்த ஞானக் காட்சிகளின் தொகுப் பாக வேதங்களை இந்துக்கள் தங்கள் சமயமாகக் கொண்டனர். அவர்கள் வேதங்கள் முதலுமற்றது; முடிவு மற்றது என நம்புகின்றார்கள். ஒரு புத்தகத்துக்கு முதலும் முடிவும் இல்லாதிருக்க முடியுமா என இங்கு கூடியுள் ளோருக்கு நகைப்புக்கிடமான பொருந்தாக் கூற்றாகத் தோன்றக் கூடும். ஆனால், வேதங்கள் என்றால் புத்தகங்கள் என்று கருத வேண்டாம். வெவ்வேறு காலத்திலே வெவ்வேறு மக்களால் கண்டறியப் பெற்ற ஆன்மிக முடிவுகள் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்ற களஞ்சியமே அவை பூமியின் புவியீர்ப்புச் சக்தியைப் பற்றிய விதியினை விஞ்ஞானிகள் கண்டு பிடித்ததற்கு முன்னமேயே, அந்தச் சக்தி இருந்தது; மக்கள் எல்லோரும் அதை மறந்துவிட்ட பின்பும் அது இருக்கும். ஆன்மிக உலகத்தின் விதிகளும், அத்தகையனவே. ஓர் ஆன்மாவுக்கும் மற்றோர் ஆன்மாவுக்கும் இடையேயுள்ள தார்மிக, ஒழுக்க, ஆன்மிக உறவுகளும், தனிமையாகிய ஆன்மாக் களுக்கும், அவ்வான்மாக்களுக்குத் தந்தையாயிருப்ப வருக்கும் இடையேயுள்ள தொடர்புகளும் கண்டறியப் படுவதற்கு முன்பு இருந்தன. அவற்றை மறந்து விட்டாலும், அப்பொழுதும் அவை நிலைபேறாக இருப்பனவேயாம்.

''இந்த விதிகளைக் கண்டுபிடித்த ரிஷிகளை நாங்கள் முழுநிறைவெய்தியவர்கள் என மதித்துப் போற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றோம். இவர்களுள் மிகவுயர்ந்தோர் சில பெண்பாலார் எனும் செய்தியை இந்த அவையில் நான் மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.''

சுவாமி ரங்கநாதானந்தா அவர்கள் வேதகால ரிஷிகளைப் பற்றிக் கூறுமிடத்தில், ''இந்த ரிஷித்துவம், ஆன்மிக உண்மைகளை கண்டறியும் ஆற்றல் என்பது ஒரு தேசிய இந்திய ஏக போகமன்று; இது ஓர் உலக இயற்காட்சியாகும் என இந்தியச் சிந்தனை கருதுகின்றது'' என ரிஷித்துவத்தின் உலகப் பொதுமையைக் குறிப்பிட்டுள்ளார். [Eternal Values for A Changing Society, Vol-1 P-35]

சுவாமிஜி வேதகால பெண் ரிஷிகளைப் பற்றி சிகாகோ சர்வமத சபையில் குறிப்பிட்டதும், கவனிக்கத்தக்கது. அமெரிக்காவில் இந்தியப் பெண்களைப் பற்றி ரமாபாய் வட்டத்தினராலும், சில கிறித்துவ மிஷனரிகளாலும் எதிர் நிலையான கண்டனக் கருத்துகள் மட்டும் பிரசாரம் செய்யப்பட்டு வந்தன. வேதகால சமூக அமைப்பில் ஆணும், பெண்ணும் கல்வி உட்பட பல துறைகளிலும் சம உரிமை பெற்று வாழ்ந்த மிகப் பழைய வரலாற்றுச் செய்தியை அறிய வைத்தார், சுவாமிஜி. பெரும்பான்மையான பெண் ரிஷிகளின் கவிதைகள் ரிக்வேதத்தில் உள்ளன. அதர்வன வேதத்தில் மூன்று பெண் ரிஷிகளின் கவிதைகளும் கிடைத்துள்ளன கிட்டத்தட்ட இருபத்தெட்டு பெண் ரிஷிகள் வேத இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளனர். [சங்ககால ஔவையாரும், உலகப் பெண்பாற் புலவர்களும் முதற் பதிப்பு, 1977, ஆசிரியர், பெ. சு. மணி; பக் 24]

கவிஞர் ரவீந்தரநாத்தாகூர், தமது ஐரோப்பா சுற்றுப் பயணத்தின் பொழுது, புகழ்பூத்த நூலாசிரியர் ரோமன் ரோலாந்தைச் சந்தித்தார். இந்தியாவைப் பற்றி விவரமாக அறிந்துக் கொள்ள அந்தந் பிரெஞ்சு அறிஞர், ரோமன் ரோலந்து, கவிஞர் தாகூரிடம் கேட்டார். அதற்கு ரத்தினச் சுருக்கமாக தாகூர், ''இந்தியாவை அறிந்துக் கொள்ள வேண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானால், சுவாமி விவேகானந்தரை அறிந்துக் கொள்ளுங்கள்'' என பதிலளித்தார். இதே பாணியில் கூறவேண்டுமானால் ''இந்து சமயத்தை அறிய வேண்டுமானால், சுவாமி விவேகானந்தரை அறிந்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறத்தக்க வகையில் தமது இந்து சமயம் பற்றிய ஆய்வை நிகழ்த்தினார், சுவாமிஜி.

சுவாமிஜி இளம் வயதிலேயே மேலைநாட்டு தத்துவங்கள் பலவற்றில் புலமை பெற்றவர். அங்கு தோன்றி வளர்ந்த விஞ்ஞானப் புதுமை வளர்ச்சியை அறிந்து வைத்தவர். இந்தியாவில் பரிவிராஜகப் பயணத்தில் தமது சமய சாத்திரத் தத்துவங்களை பலரிடம் விவாதித்து ஆழங் கண்டவர். பொதுமக்கள் தொடர்பில் சமய ஞானத்தை நேரில் அனுபவித்து அறிந்தவர். அனைத்திற்கும் மேலாக குருதேவரால் செழுமையுறப் பண்படுத்தப்பட்டவர். இத்தகையப் பல்வேறு காரணங்களால் வேற்றுமைகளிடையே ஒற்றுமையைக் கண்டறியும் நுண்மாண் நுழைபுலம் வாய்க்கப் பெற்றவர். இதனால் கூட்டிணைப்புத் தத்துவத்தில் ஆராவேட்கை கொண்டவர்.

## சமயமும் — விஞ்ஞானமும்

சமயத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைப் பாங்கை விளக்கியும் சர்வமத சபையில் பேசினார், சுவாமிஜி. பேரறிஞர் ரோமன் ரோலாந்து குறிப்பிட்டவாறு, ''அவர் மனிதசக்தி அனைத்தையும் ஒத்திசைவுடன் ஒருங்கிணைக்கும் உருவகமாகத் திகழ்ந்தார்.'' [விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு (ஆங்கிலம்) 1, மூன்றாம் பதிப்பு, அத்வைத ஆச்ரமம், கல்கத்தா, பக். 310]

''சமய உணர்வற்ற விஞ்ஞானம், முடமாகும், விஞ்ஞான உணர்வற்ற சமயம் குருடாகும்'' என அமெரிக்க ஞானி எமர்சன் குறிப்பிட்டதை நினைவு கூர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் ஆன்மிக— விஞ்ஞான நோக்குகளைப் பயில வேண்டும். சமய— விஞ்ஞான கூட்டிணைப்பைப் பற்றி சுவாமிஜி சர்வமத சபையில் பேசியதில் ஒரு பகுதி வருமாறு:

''விஞ்ஞானம் என்பதே ஒற்றுமையைக் கண்டறிவதே யாகும். பூரணமாகிய ஏகத்துவத்தை கண்டடைந்த உடனே விஞ்ஞானம் தனது எல்லையை அடைந்து மேற் செல்லாது நின்றுவிடும். எந்த ஒரு பொருளிலிருந்து மற்றெல்லாப் பொருள்களும் ஆக்கப்படுகின்றனவோ அதனைக் கண்டு பின்னர் வேதியியல் முன்னேற்றமடைவதை யொழித்து நின்றுவிடும். எல்லா வலிமைகளும் தோற்றுவதற்கு மூலமாகவிருக்கின்ற ஒரு வலிமையைக் கண்டறிந்தவுடனே இயற்பியல் தனது தொழிலை முடித்துக் கொண்டு நிலைபெற்றுவிடும். மரணமே காட்சியாகவிருக்கின்ற பிரபஞ்சத்திலே நிலைபெற்ற ஒரே உயிராகவுள்ள ஒருவனைக் கண்டறிந்த உடனே சமய ஆராய்ச்சியும் முழுநிறைவு பெற்றுவிடும். அவ்வொருவனே என்றும் மாறுதலடைகின்ற உலகத்திலே மாறுபாடின்றி நிலை பெற்ற ஆதாரமாயிருப்பவன். எல்லா ஆன்மாக்களும் தோற்றத்தளவில் வேறு வேறாகக் காணப்படுவதற்கு இடமாக நின்ற ஒரே ஆத்மா அவனே. பன்மை, இருமை ஆகிய இவற்றினைக் கடந்து முடிவாகிய ஒருமை அடையப் படுகின்றது. சமயம் அதற்கு அப்பாற் செல்லமாட்டாது. இதுவே அனைத்து விஞ்ஞானத்தின் இலக்காகும்.''

சமயத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் இடையே உள்ள உறவை மேலும் விளக்கமாக தனியொரு சொற்பொழிவாக, பின்னர் அமெரிக்காவில் பேசியுள்ளார் சுவாமிஜி. ஆன்மிக வகுப்பறையில் பேசப்பட்ட அந்தப் பொழிவின் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் ஒரு பகுதி, பின் வருவது.

''தத்துவ உண்மைகளை, சமயம் ஆராய்கின்றது; வேதியியல் மற்றும் இயற்கை விஞ்ஞானங்கள் பௌதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் உண்மைகளை ஆராய்கின்றது. வேதியியலைக் கற்க விரும்பும் ஒருவன் படிக்க வேண்டிய புத்தகம், இயற்கையின் புறநிலையைப் பற்றியதாகும். சமயத்தைக் கற்கவிரும்பும் ஒருவன் படிக்க வேண்டிய புத்தகம் அவனுடைய சொந்த மனமும், இதயமும் ஆகும். முனிவர்கள், உள்ளுக்குள் இருக்கும் புத்தகத்தைப் படிப்பதால், பெரும்பாலும் பௌதிக விஞ்ஞானத்தைப்பற்றி அறியாமலிருக்கிறார்கள். விஞ்ஞானி, வெளியேயுள்ள புத்தகத்தைப் படிப்பதால், சமயத்தைப்பற்றி பெரும்பாலும் அறியாதவனாகின்றான்.''

சுவாமி விவேகானந்தர் கருத்துகளில் தோய்ந்து உறைந்து அவற்றின் தன்னேரில்லாத ''பாஷ்யகர்த்தா'' வாக (உரைவிளக்க அறிஞராக) விளங்கிக் கொண்டிருக்கும் சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் அவர்கள், ''சுவாமி விவேகானந்தரின் விஞ்ஞான—சமய கூட்டிணைப்பு'' என்னும் பொருளில் ஆங்கிலப் மொழியில் செய்துள்ள ஆய்வில், முடிவுரையாக பின்வரும் தெளிவார்ந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

''விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும் மோதல் இல்லை; முழுமையான வாழ்க்கைத் தன்னிறைவிற்கு தூண்டுதல் அளிக்கும் சிறந்த சமூக அமைப்பை நிறுவ அழைத்துச் செல்லவும், ஆன்மிக வளர்ச்சியில் மனிதனுக்கு உதவி செய்வதற்கும், விஞ்ஞானமும், சமயமும் கருத்தொருமித்த குறிக்கோளைக் கொண்டுள்ளன. இவையிரண்டில் ஒவ்வொன்றும் தன்னளவில் குறைவுபட்டும், உதவியற்றும் உள்ளது. பழைய நாகரீகங்கள், சமயத்தில் இருந்து மட்டுமே வழிகாட்டும் நெறிகளைப் பெற்றுக் கொண்டன; இவற்றின் சாதனைகள் நிறைவற்று, கட்டுப்பட்டும் இருந்தன. நவீன நாகரீகம், விஞ்ஞானத்தை மட்டும் நம்பியுள்ளது. இதனுடைய சாதனைகளும் நிறைவற்று, கட்டுப்பட்டும் அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்றுக்கொன்று ஆதாரமான இந்த இரண்டு துறைகளின் ஆன்மிக சக்திகள் மனித வாழ்க்கையில் ஒன்றுபட வேண்டும். இதன் மூலம் முழுமையாக ஒருங்கிணைந்த மனிதர்கள் உருவாக்கப்படுவார்கள். இதன் விளைவாக பூரணத்துவம் வாய்ந்த மனித நாகரீகம் மலர உதவி கிடைக்கும். இதற்காக, காலம் கனிந்து காத்திருக்கின்றது. இந்தச் சிந்தனையையே இக்காலத்திற்கு மிகப்பெரிய நன்கொடையாக சுவாமி விவேகானந்தர் வழங்கி உள்ளார்.''

கிழக்கு, மேற்கின் பரஸ்பர பரிமாற்றங்களில் சமயமும் விஞ்ஞானமும் பெறவேண்டிய முக்கியத்துவத்தையும் பலவிடங்களில் சுவாமிஜி வலியுறுத்தியுள்ளார். ''அத்வைத வேதாந்தம் ஏற்றம் மிக்க விஞ்ஞான பூர்வமான சமயமாகும்'' என முழங்கி, விஞ்ஞானமும், சமயமும் தம் முன் நேசக்கரம் நீட்டி கை குலுக்கிக் கொள்ளும் என்றும், நம்பிக்கை தெரிவித்தார், சுவாமிஜி.

## ஆத்ம தத்துவம்

இந்திய ஆன்மிக வாழ்க்கையின் சாரம், ஆத்ம தத்துவத்தில் அடங்கியுள்ளது என வேதம் சாற்றுகின்றது. ''ஆத்மா வா அரே த்ருஷ்டவ்ய:'' என்பது வேத வாக்கு; அதாவது இந்த ஆத்மா சாக்ஷாத்காரத்திற்குரியது; அனுபவிப்பதற்குரியது ஆகும். இந்து சமயத் தத்துவ சிந்தனை மரபில் ''ஆத்ம வித்யா'' பலவித நோக்குகளில் மிக முக்கியப் பங்கை வகிக்கின்றது. சர்வமத சபையில் ஆன்மா பற்றிய விளக்கத்தை சுவாமிஜி பின்வருமாறு அளித்தார்.

''சமதூரத்திலே செல்லுகின்ற இரண்டு இயக்கங்கள் இங்கு உள்ளன. ஒன்று மனத்தினைச் சார்ந்தது. மற்றொன்று சடத்தினைச் சார்ந்தது. சடமும் அதனிடத்தினின்று பரிணமித்த பொருள்கள் அனைத்தினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுபடுத்துவனவாயின் ஆன்மா என்று ஒன்று வேண்டிய தில்லை. ஆனால் எண்ணங்கள் சடத்தினின்று தோன்றின வென நிறுவுதல் இயலாததாகும். தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியின்படி ஏகவாதத்தைக் கைகொள்ள வேண்டு மாயின் ஏகான்மவாதம், ஏகசடவாதத்திலும் பார்க்க நியாய முறைக்கு ஏற்புடையதாகும். ஆயினும் ஈண்டு இவ்விரண்டும் வேண்டப்படா......

"தான் ஒரு சித்துப் பொருள் என ஓர் இந்து நம்புகின் றான். வாளானது இவனைப் பிளக்கமாட்டாது; நெருப்பு இவனைத் தகிக்க மாட்டாது; நீர் இவனைக் கரைக்க மாட்டாது. ஒவ்வொரு ஆன்மாவும் எல்லை காணவொண் ணாத ஒவ்வொரு சக்கரத்தை நிகர்த்தது. உடலே சக்கரத்தின் மையம். இந்த மையம் ஓர் உடலத்திலிருந்து மற்றோர் உடலத்திற்கு மாறுவதே மரணமெனப்படுவது. மேலும் ஆன்மாவானது சடப்பொருளுக்கு உரிய நிபந்தனை களால் கட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது தனது தன்மை யிலேயே சுதந்திரமுடையது; எல்லையற்றது; பரிசுத்த மானது; பூரணத்தத்துவமுடையது; ஏதோ ஒரு காரணத் தினாலே சடலத்தோடு கட்டுப்படுத்தி தன்னைச் சடமென நினைக்கின்றது.

"சுதந்திரமும் பூரணத்துவமும் உடைய பரிசுத்த ஆன்மா சடலத்தினால் ஏன் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிற தென்பது அடுத்த வினாவாகும். பரிபூரணனாகிய ஆன்மா தான் குறைவுடையவன் என்னும் நம்பிக்கை கொண்டு என்ன காரணம் பற்றி மயக்குற்றது? இத்தகைய வினா இருத்தல் கூடாதென்பது சொல்லி இந்துக்கள் இவ்வினாவை கடத்தி விடுகிறார்களெனப் பிறர் சொல்லக் கேள்விப்படு கின்றோம். ஒருசார் பூரணத்துவத்தை அடைந்த ஒரு சில சீவர்களைக் காட்டிப் பெரிய சாஸ்திரீகமாகிய வார்த்தை களை உபயோகித்துச் சில தத்துவ சாஸ்திரிகள் இதற்கு மறுமொழி கூற முயல்கின்றனர். பெயரிட்டுரைப்பது, விளக்குவதாகாது; வினா முன்னிருந்தபடியே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபூரணம் எங்ஙனம் தனது நிலைமையிலிருந்து குறைவு படுதல் கூடும்? பரிசுத்தம் பொருந்திய உயர் தனிப்பொருள் தனது நீர்மையிலே அணுவளவேனும் வேறுபடுவது எங்ஙனம் ஆகும்?

''இந்து இயல்பாகவே உண்மை கூறுபவன். ஆதலினாலே விதண்டாவாதத்தினுட் புகாது வினாவை ஆண்மையோடு முன்னிட்டு ''நான் அறியேன்'' என்று விடை கூறுகிறான். ''பரிபூரணனாகிய ஆன்மா சடத்தினாற் கட்டுப் படுத்த தன்னை குறைவுடையவனாகக் கருதுவது எவ்வண்ணம் எய்தியதோ, யான் அறியேன்'' என்கின்றான். அங்ஙனமாயினும் காரியத்தளவிலே உண்மை மாறுபடாதிருக்கிறது. ஒவ்வொருவரும் தமது உள்ளத்து உணர்விலே தம்மை உடலாகக் கருதுகின்றனர். ஒருவன் தன்னை உடலாகக் கருதுவது எதனால் எய்தியது என்பதை விளக்குவதற்கு இந்து முயலவில்லை. இது ஆண்டவனுடைய சித்தத்தினால் எய்தியது என்று சொல்லுவது மறுமொழியாகாது. இந்து ''நானறியேன்'' என்று சொல்லுவதிலும் பார்க்க இது சிறந்த விளக்கம் ஆகாது.

''மனிதனுடைய ஆன்மா நித்தியமானது; அமிர்த்தத்துவமுடையது; பூரணமானது; எல்லையற்றது; மரணமென்பது ஒருடலிலிருந்து மற்றோருடலுக்கு இடம்பெயரும் நிகழ்ச்சியேயாம்.''

''மகாவாக்கியங்கள்''

ஜீவாத்மா- பரமாத்மா எனும் ஆழமானத் தத்துவப் பயிற்சியின் திறவு கோல்களாக வேதங்களில் நான்கு ''மகாவாக்கியங்கள்'' அமைத்துள்ளன. 'மகாவாக்கியங்கள்' எனும் சொல், பொருட் சிறப்பைக் குறிப்பது. ரிக், யஜுர், சாம, அதர்வன வேதங்கள் ஒவ்வொன்றுடன், இணைந்த உபநிடதங்களில் இந்த 'மகாவாக்கியங்கள்' கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்வேதத்திலுள்ள ஐத்ரேய உபநிடதத்தில் கூறப் பெற்றுள்ள ''ப்ரக்ஞானம் பிரம்ம'' என்பது பரிசுத்தமான அறிவே பிரம்மம் என அறிவிக்கின்றது. இது லட்சண வாக்கியம், அதாவது வரைவிலக்கணத்தைக் கூறுவதாகும்.

சுக்ல யஜுர் வேதத்தின் ப்ரஹத்தாரண்ய உபநிடதத்தில் வரும் ''அகம் பிரம்மாஸ்மி'', ''நான் பிரம்மம்'' எனும் பொருளைத்தருவது. இது அனுசந்தான வாக்கியமாகும்; அதாவது பயிற்சிக்குரிய வாக்கியமாகும்.

சாமவேதத்தில் உள்ள சாந்தோக்ய உபநிடதத்தின் ''தத்துவம் அஸி'' என்பது ''நீ அதுவாய் இருக்கிறாய்'' எனும் பொருளைக் குறிப்பது. இது உபதேச வாக்கியமாகும்.

அதர்வண வேதத்தின் மாண்டூக்ய உபநிடதத்தின் ''அயம் ஆத்மா பிரம்ம'' என்பது ''இந்த ஆத்மா, பிரம்மம்'' எனும் பொருளைத் தருகின்றது. இது அனுபவ வாக்கியமாகும்.

இவையேயல்லாமல் வேறு பல உபநிடத அருளுரைகளும் ஆத்மா பற்றிய விளக்கங்களை எடுத்துரைக்கின்றன. 1897 சனவரியில் இலங்கை யாழ்ப்பாணத்தில் ''வேதாந்தம்'' எனும் தலைப்பில் பேசிய பேச்சில் 'ஆத்மா' வைப் பற்றித் தெளிவுபடக் கூறியுள்ளார் சுவாமிஜி. 'ப்ரஸ்தானத்ரயம்' எனும் உபநிடதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத் கீதையைக் கொண்டும், சைவ சித்தாந்தத்தைக் கொண்டும், குருதேவர் ராமகிருஷ்ணர் வாழ்க்கையையும், வாய்மொழியைக் கொண்டும் இந்து சமயம் கூறும் ஆத்மதத்துவத்தை அறிந்துக் கொள்ள முடிகிறது.

ஆத்ம சிந்தனை ஒரு மாபெரும் மரபாக, இந்து சமயத்தில் விளங்குவது போல் பிற சமயங்களில் விளங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தர், இந்த மரபை சர்வமத சபையில் எடுத்துரைத்தது, இந்து சமயத்தின் மேன்மையை, தனித்தன்மையை குன்றின் மேலிட்ட விளக்கெனத்திகழ வைத்தது.

"அமிர்தத்துவமாகிய
ஆனந்தத்தினது மக்களே'

ஆத்ம தத்துவத்தை சர்வமத சபையில் விளக்கிக் கொண்டு வந்தபொழுது, ரிக்வேத மந்திரம் ஒன்று வருணிக்கும் "ஆத்மஸ்ய புத்ரா:" எனும் சொற்றொடரின் ஆன்மிகப் பொருட் சிறப்பை பரவசமுடன் எடுத்தோதினார் சுவாமிஜி. "ஆத்மஸ்யபுத்ரா:" என்பதின் பொருள்தான், "அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தினது மக்களே" என்பதாகும்.

ரிக்வேதத்தில் (9/93/9), "ஸ்ருண வந்து விஸ்வே அம்ருதஸ்ய புத்ரா:; ஆயேதா மானி திவ்யானி தஸ்து:" என்று மனிதனுக்குள் உறைந்திருக்கும் தெய்வத்தன்மை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. "அழிவற்ற அமரர்களாகிய அனைத்து மக்களே, கேளுங்கள்; தெய்வீக இயல்புகளின் உடைமையாளர்களே" என்று ரிக்வேதத்தில் ஓதப்பட்டுள்ளது. சுவேதாஸ்வதரா உபநிடதங்களிலும் பின்வருமாறு எடுத்தாளப்பட்டுள்ளது.

ஸ்ருணவந்து விஸ்வே அம்ருதஸ்ய புத்ரா:
ஆ யே தாமானி திவ்யானி தஸ்து:
வேதாஹ மேதம் புருஷம் மகாந்த
மாதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்
தமேவ விதித்வா அதிமிருத்யுமேதி
நான்ய: பந்தா அயநாய:
[சுவேதாஸ்வதரா உபநிடதம்—2- 5; 3-8]

இதன் பொருள் வருமாறு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அழிவுற்ற அமரர்களாகிய அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தின் மக்களே! தெய்வீக இயற்கைகளின் உடைமையாளர்களே! சூரியனைப்போல் சுயமான பிரகாசம் உடையவனும், அவித்தையாகிய இருளுக்கு அப்பாற்பட்டவனுமாகிய அந்த மகா புருஷனை நான் அறிவேன். அவனை அறிவதனால் மட்டுமே மனிதன் மரணத்தைக் கடந்தவனாகின்றான். இந்த இலக்கிற்கு வேறு வழியில்லை.''

மனிதனுக்குள் உறைந்துள்ள தெய்வத் தன்மையைப் பற்றி அதர்வன வேதமும் பின்வருமாறு கூறியுள்ளது. ''மனிதனுடைய உடல் படைக்கப்பட்ட பொழுது, தெய்வங்கள் அவனுள்ளே நுழைந்தன.''

சுவாமிஜி மேற்படி வேதரிஷியின் கவிதையை ஓதி விட்டு பின்வருமாறு பேரின்பப் பெருக்கிலே திளைத்து கூறியதாவது :

''அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தினது மக்களே'—இது, எவ்வளவு இனிமையும் மனத்திறனுக்கு நம்பிக்கை தருகின்ற பெயராகவிருக்கிறது! சகோதரர்களே! அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற்கு உரியவர்களென்னும் அந்த இனிய பெயரிலே நான் உங்களை அழைப்பபதற்கு அநுமதி தருவீர்களாக. நீங்கள் கடவுளுடைய மக்கள். அமிர்தத்துவமாகிய ஆனந்தத்திற்குப் பங்கு உடையவர்கள். பரிசுத்தம் பொருந்திய பூரணர்கள். உலகிலே தெய்வங்களாக விருக்கின்ற நீங்கள் பாவிகளா? ஒரு மனிதனை அவ்வண்ணம் அழைப்பது பாவமாகும். மனித இயற்கைக்கு அஃது ஒரு நிலையற்ற பழிச் சொல்லாகும்.''

''பாவிகள் அல்லர்; தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள்'' என சுவாமிஜி கூறியதைக் கேட்டு வியப்புற்று, மகிழ்ச்சியுடன் ஒரு கவிதை அமெரிக்காவில், ''ஓபன் கோர்ட்'' எனும் பத்திரிகையில் (அக்டோபர் 12, 1893) வெளிவந்தது. கவிதையின் தலைப்பு : 'Aunt Hannah on

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Parliament of Religions'' என்பதாகும். இந்தக் கவிதையின் கருத்து வருமாறு :

''ஆரஞ்சு வண்ண உடையில் அழகுமிக்க ஓர் இந்து துறவியின் பேச்சைக் கேட்டேன். மானுடம் முழுவதும் கடவுளின் அம்சம் என்றார். நாம் பாவிகள் அல்லர் என்றார். இதைக் கேட்டதும் 'மீண்டும் கூறுக' என குரல் கொடுத்தேன். சர்வமத சபை அக்கூற்றை ஏற்றுக் கொண்டு ஆரவாரம் செய்தது.'' (சுவாமி விவேகானந்தா— புதிய கண்டுபிடிப்புகள் — ஆங்கில நூல்— மேரிலூயிஸ்பர்க்— பக்- 79)

இங்கு சுவாமிஜி 'மனிதனை, பாவம் செய்தவன்' என்று குறிப்பிடக் கூடாது என முழங்கியதற்கு ஓர் ஆன்மிகப் பின்னணி உண்டு.

1882 அக்டோபர் 27-இல் குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரிடம், பிரம்மசமாஜ இயக்கத்தைச் சார்ந்த ஒருவர் உரையாடிக் கொண்டிருந்தார். பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ சந்திரஸெஸ் காலத்தில் பிரம்மசமாஜத்தில் கிறித்துவ சமயத்தின் தாக்கம் சற்று அழுத்தமாகப் பதிந்த பிரம்மசமாஜிகளும், கிறித்துவர்களைப் போல மனிதனின் பாவங்களைப் பற்றிப் பேசி வந்தனர். இந்தச் சூழலில் குருதேவர் தமது உரையாடலில் பின்வரும் தமது கருத்தைத் தெரிவித்தார்.

''ஒரு காலத்தில் யாரோ ஒருவர் கிறிஸ்தவரது புத்தகமொன்றை எனக்குக்கொடுத்தார். எனக்கு அதை வாசித்துக் காட்டும்படி அவரை வேண்டினேன். அதில் பாவத்தைப் பற்றிய பேச்சு தவிர வேறொன்றும் இல்லை. (கேசவரைப் பார்த்து) உங்கள் பிரம்ம சமாஜத்து மக்கள் கேட்கும் ஒரே பேச்சு பாவத்தைப் பற்றியதே. 'நான் கட்டுப்பட்டவன், நான் கட்டுப்பட்டவன்' என்று திரும்பத் திரும்பக் கூறும் பேதைக்கு, கட்டுப்பட்ட நிலையே முடிவாகும். 'யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவி' 'யான் பாவி' என அல்லும் பகலும் சொல்லுபவன் உண்மையாகவே பாவியாய் விடுகிறான்.

''கடவுளிடத்துள்ள நம்பிக்கை எப்பொழுதும் ஒளி விட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அப்போது அவன் இவ்வாறு சொல்லிக் கொள்வான்: என்ன? யான் ஈசனது திருப்பெயரை ஓதி வந்துள்ளேன். இன்னும் என்னிடம் பாவம் ஒட்டிக் கொண்டிருக்க எவ்வாறு இயலும்? இனி எவ்வாறு யான் பாவியாதல் கூடும்? இனி பந்தத்திற்கு யான் உள்ளாதல் எப்படி?''

புனித பைபிளில் 'பாவங்கள்' பற்றிய பின் வரும் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

1. ''உங்கள் அக்கிரமங்களே, உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடி அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.'' [ஏசாயா, 59-2;]

2. ''எல்லோரும் பாவஞ் செய்து, தேவ மகிமை யற்றவர்களாகி'' [ரோமர், 4-29]

3. ''இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போல இதுவுமாயிற்று.'' [ரோமர் 6-12]

கிறித்துவ சமயத்தில் Original Sin' என்று குறிப்பிடப் பெறும் 'முதல்பாவம்', கிறித்துவ சமயத்தின் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளது. இயேசுகிறிஸ்துவின் அருளால் சாபவிமோசனம் பெற்று வீடுபேறு எய்துவதோ நரகத்தில் வீழ்வதோ, ''முதல் பாவ''க் கொள்கையோடு தொடர்புடையதாகச் சித்தரிக்கப்படுகின்றது. கிறித்துவ சமய வரலாற்றில் 'முதல்பாவம்' பற்றிய சமயவிவாதம் அவ்வப் பொழுது நடைபெற்றுவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முதல் பாவம்' பற்றியக் கொள்கைக்கு தெளிவான ஆதரவு பைபிளின் பழைய ஏற்பாட்டிலோ அல்லது இயேசு கிறிஸ்துவின் போதனைகளிலோ இல்லை என்று பைபிள் ஆய்வாளர்கள் பலர், கருதுகின்றனர். யூதர்களின் கடவுள் அருள் வெளிபாட்டிற்குரிய மரபுகளில் இருந்து புனித பால் அவர்கள் எடுத்துக் கொண்டார்.'' இவ்வாறு இராம கிருஷ்ண இயக்கத்துறவி, சுவாமி சிரத்தானந்தா அவர்கள் ''வேதாந்தமும் முதல் பாவமும்'' எனும் கட்டுரையில் குறிப் பிட்டுள்ளார். [வேதாந்த கேசரி, சென்னை, ஆங்கில இதழ், பொன்விழா மலர், மே, 1964, பக்- 61]

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் முதல் பாதியில் புனித அகஸ்தீன், 'முதல் பாவம்' பற்றியக் கொள்கைக்கு அசைக்க முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டார். [மேற்படி கட்டுரை, பக்-62]

'வேதாந்தமும்—முதல் பாவமும்' எனும் கட்டுரை, மேலும் கூறுவதாவது:

''முதல் பாவம்' என்பதற்குப் பதிலாக, ''தொடக்க மில்லாத அறியாமை'' என்பதனை ஒரு மாற்றாக வேதாந்தம் கூறுகின்றது........ நம்முடைய உண்மைத் தன்மையை மறைத்திருக்கும் அறியாமை, ஆத்மபோதம் தோன்றியவுடன் மறைந்து போய் விடுகின்றது. வழிபாடு, பிரார்த்தனை, தியானம் முதலான பல ஆன்மிகப் பயிற்சி முறைகள், ஆத்ம போதத்திற்குரிய சாதனங்களாகின்றன. இந்தக் கண்டு பிடிப்பால் மனிதன் பூரணத்துவத்தை எய்து கின்றான்; எல்லையற்ற இருப்பை அடைகின்றான்; ஞானத் தையும், பேரின்பத்தையும் பெறுகின்றான். இது, வேதாந்தம் காட்டும் விமோசனம்......

''இயேசு கிறிஸ்துவும் கூறுகிறார்: ஆகையால் பூரணத்துவம் பெறுங்கள்; சொர்க்கத்தில் பரிபூரணமாக யிருக்கும் உங்கள் பரமபிதாவைப் போல் பூரணத்துவம் பெறுங்கள்.'' இவ்வாறு கூறப்படுவது மனிதனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிக உள்ளாற்றலை வலியுறுத்தவில்லையா?......மேலை நாட்டு புகழ்மிக்க சிந்தனையாளர்கள் பிளேட்டோ முதல் கிறிஸ்துவ அனுபூதிஞானிகள் பலர் உட்பட மனிதனின் உள்ளொளியைப் பற்றிப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். இந்த உள்ளொளி, மனிதனுடைய தெய்விக மரபுரிமையாகும். சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வமத சபையில் குறிப்பிட்ட ''அமிர்த்தத்துவுமாகிய ஆனந்தத்தின் மக்களே'' எனும் உரையை மேற்கோளாகக் காட்டியுள்ளார், சுவாமி சிரத்தானந்தா.

### பாரதியார் கூறுகிறார்

வேதத்தையும், பைபிளையும் குறிப்பிட்டு மகாகவி பாரதியார் அழிவற்ற அமரத்துவத்தைப்பற்றி பின்வருமாறு ''The Service of God'' எனும் ஆங்கிலக் கட்டுரையில் கூறியுள்ளதாவது :

''பைபிள் காப்பாற்றுகின்றது; வேதம் அமரத்துவமாக்கின்றது. பைபிள் சிலுவை கொண்டு காப்பாற்றுகின்றது; வேதம், ஆன்மிக அமைதியான சோமரஸத்தைக் கொண்டு அமரத்துவம் தருகின்றது. கடவுளின் புனிதத் தன்மையை அடைவதற்கு துன்புறும் வாழ்க்கைக்கு பைபிள் சார்ந்து நிற்கின்றது. கடவுளின் புகழொளியை அடைவதற்கு, ஒளி வெள்ளத்தில் பாயும் வாழ்க்கையை வேதம் சார்ந்து நிற்கிறது.''

சுவாமி விவேகானந்தர், கிறித்துவ சமயம் கூறும் பாவக்கோட்பாட்டை சர்வமத சபையில் விமர்சனம் செய்ததற்கு மற்றொரு காரணமும் இருக்கக்கூடும். அதாவது சுவாமிஜி இந்து சமயம் பற்றி பேசியதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு மறைத்திரு ஜோசப்குக் எனும் அமெரிக்க அறிஞர், கிறித்துவ சமயத்தின் பாவக்கோட்பாட்டை வலியுறுத்திப் பேசினார். அவர் கூறியதாவது :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆத்மா, கடவுள், பாவத்தின் பதிவு ஆகியனவற்றை ஒருங்கிணைத்து, ஆத்மாவின் அமைதிக்கு பயன்படுத்தும் வகையில் உலகில் வேறெந்த சமயமும், கிறித்துவ சமயத்தைத் தவிர வழிவகை காணவில்லை.'' ஜோசப்குக், 1882-இல் கல்கத்தா ;வந்தபொழுது, கேசவசந்திரஸென்னுடன் தங்கியிருந்தார். அப்பொழுது, குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சர் ஜோசப்குக்கைப் பார்த்திருக்கிறார். [The Gospel of Sri Ramakrishna, Swami Nikhilanda, Second Edition 1986- Madras, P. 70] ஆனால், சிகாகோவில், சுவாமிஜி, பரமஹம்சரின் சீடர் என்பதையோ, அவரை ஜோசப்குக் சந்தித்தாரா என்பதையறியவோ ஓர் ஆதாரமும் இல்லை. ஜோசப்குக்கின் பேச்சிற்கு மறுப்பு தெரிவிப்பது போல், சுவாமியின் உரையில் ஒரு பகுதி அமைந்தது எனக் கருதலாம். இதை எழுச்சியுற, மேலும் தொடர்ந்து பேசியதில் கூறியதாவது:

''ஓ! சிங்கங்களே! எழுந்திருப்பீர்களாக. நீங்கள் ஆடுகள் என்னும் மயக்கத்தைத் தொலைத்து விடுவீர்களாக. நீங்கள் நித்தியத்துவமுடைய ஆத்மாக்கள். சுதந்திரமுள்ள சித்துருவங்கள். ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நித்தியர்கள். நீங்கள் சடப்பொருளல்ல. நீங்கள் உடல்களல்ல. சடம் உங்களுக்கு அடிமை. நீங்கள் சடத்துக்கு அடிமையல்ல. அஞ்சத்தக்க மன்னிப்பில்லாத விதிகளின் தொகுதியை வேதங்கள் கூறுவதில்லை.''

மானுட மேம்பாட்டிற்கு இன்றியமையாதத் தேவைகளாக ஆண்மையையும், ஆன்மிகத்தையும் வலியுறுத்தினார் சுவாமிஜி. இதை இந்தியத் தத்துவ ஞானம் தனது ஆன்மிக வாழ்க்கையாகக் கொண்டுள்ளது என்பதை சர்வமத சபையில் மேற்கண்டவாறு மேலை நாட்டினருக்கு விளக்கினார் சுவாமிஜி.

''சக்தி செயல்படட்டும், சக்தியாகவே இருப்போம்; ஆராய்ந்து முடிவெடுப்போம், இறைவனை வேண்டியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவோம்'' என்பது சுவாமிஜி மானுட மேம்பாட்டிற்கு அளித்த இரண்டு சால்புகள் (Excellences) என சுவாமி ரங்கநாதானந்தா ஒரு பேருரையில் குறிப்பிட்டுள்ளார். (Vivekananda And Human Excellence, Harvard University Lecture, 1985.)

'அம்ருதஸ்ய புத்ரா:' என வேதரிஷி ஏன் கூறினார், எதற்காகக் கூறினார், எப்பொழுது கூறினார் என்பதற்கு விடை காண ஒரு பின்னணியை பின்வருமாறு சர்வமத சபையில் உணர்ச்சிப் பொங்க சுவாமிஜி விளக்கியுள்ளதும், சிந்திக்கத் தக்கது.

''பெரும் புயற்காற்றிலே ஒரு சிறிய தோணியிலே பிரயாணஞ் செய்யுமொருவன் ஒரு கணத்திலே நுரையை யுடைய திரையினது உச்சியையடைந்தும், மற்றொரு கணத்திலே ஆழ்ந்த அகழியினுள்ளே வீசப்பட்டும், நல்வினை தீவினையாகிய கருமங்களினது வலிமையினாலே உந்தப்பட்டும், ஒன்றினாலும் மாறுபடாத காரண காரியத் தொடர்பாகிய அலை புரண்டோடுகிற நீரோட்டத்திலே அலைக்கழிக்கப்படுகின்றானே, அவன் போன்றவனா மனிதன்? பின்னுமவன் அகப்பட்ட அனைத்தினையும் அரைத்துத் தள்ளும் காரண காரியத் தொடர்பு என்னும் சக்கரத்தினுள்ளே அகப்பட்ட ஒரு விட்டிற்பூச்சியைப் போன்றவனா? நியதி என்னும் சக்கரமானது விதவையி னுடைய கண்ணீரையும், அநாதைகளுடைய அழுகை களையும் பொருட்படுத்தாது யாவற்றினையும் தெரிந்து கொண்டு உருண்டு செல்லுகிறது.

''இதை நினைக்கும்போது நெஞ்சம் பதைக்கின்றது. ஆயினும் இதுவே இயற்கையின் விதி. அப்படியானால் புகலிடம் ஒன்று இல்லையா? தப்புவதற்கு ஒரு வழி இல்லையா? மிகுந்த துன்பத்தினாலே வருந்திய இதயத்தின் அடியிலிருந்து ஓர் அலறல் ஓலமிட்டு எழுகின்றது. அது இரக்கமுள்ள ஆண்டவனுடைய சிங்காதனத்தைச் சேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலும், அங்கிருந்து நம்பிக்கையையும் ஆறுதலையுந் தருகின்ற சொற்கள் ஒரு வேதரிஷியினிடத்திலிருந்து எழுந்தன.''

மனிதன், செய்வதறியாது திகைத்து ஓலமிட்டு அலறும் சமயத்தில் 'அஞ்சேல்' என ஆண்மை வீறும், ஆன்மிக ஒளி வீச்சும் துலங்கச் செய்ய உரத்த குரலில் மகிழ்ச்சிப் பொங்க பிரகடனப்படுத்தப்பட்ட சொற்கள் தாம், ''அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தினது மக்களே'' எனும் சொற்கள்.

'சமயம்' என்பதற்கு சுவாமிஜி அளித்துள்ள பின்வரும் வரைவிலக்கணத்திலும் ''அம்ருதஸ்ய புத்ரா;''வின் எதிரொலியைக் கேட்கின்றோம்.

''மனிதனுக்குள் ஏற்கனவே உறைந்துள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயம்.'' [Religion is the Manifestation of the Divinity that is Already in man]. ''தெய்வங்களாகுங்கள், பிறரைத் தெய்வங்கள் ஆக்குங்கள்'' என்பது சுவாமிஜியின் அருளுரையாகும்.

## உருவ— அருவ வழிபாடு

சமரசத்தின் சாறு பிழிந்து பேசுவதில் வல்லவரான சுவாமி விவேகானந்தர், உலக சர்வமத சபையில், காலந் தோறும் விவாதிக்கப்பட்டு வரும் உருவ— அருவ வழிபாடு பற்றிய கூட்டிணைப்புத் தத்துவத்தை விளக்கிப் பேசினார்.

1897 சனவரியில் இலங்கை கொழும்பு நகரத்தில் செய்த முதல் சொற்பொழிவில், ''மற்ற நாடுகளில் மிகப் படித்தவர்கள் கூட நம் மதத்தை விக்ரக ஆராதனையென்று சொல்லி முகத்தைக் கோணிக் கொள்ளுகிறார்கள்'' என்று சுவாமிஜி குறிப்பிட்டுள்ளார். இந்து சமயம் பற்றிய தமது ஆய்வுரையில், பல தெய்வ வழிபாட்டைப் பற்றி சுவாமிஜி விளக்க வேண்டியது அவசியமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தைப் பற்றித் தவறாகப் புரிந்துக் கொண்டோருக்கு தெளிவுதர சர்வமத சபை மேடையை மிகத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டார், சுவாமிஜி.

''இந்தியாவிலே பல தெய்வ வணக்கம் இல்லை என்பதைத் தொடக்கத்திலேயே நான் உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்'' எனக் குறிப்பிட்டு பின்வருமாறு விளக்கினார், சுவாமிஜி.

''ஒவ்வொரு தேவாலயத்திலும் வந்து வழிபடுவோர் அங்குள்ள உருவங்களை நோக்கி அவற்றுக்குச் சர்வ வியாபக முதலாகக் கடவுளுக்குள்ள எல்லா குணங்களையும் ஏற்றி வழிபாடு இயற்றுவதை இன்னும் காணலாம். இது பலதெய்வ வணக்கமாகாது. ''சிறப்புத் தெய்வ வணக்கம்'' என்னும் சொல்லும் இங்கு பொருந்தாது. ரோஜா மலருக்கு எப்பேரிட்டழைப்பினும் அது தனது நறுமணத்தையே தரும்.

''விக்கிரகாராதனைக் காரரென்று சொல்லப்படுவோருள்ளே, ஒழுக்கத்திலும், ஆத்மிக சக்தியிலும், அன்பிலும் தமக்கொருவர் இணையில்லாதாரை நான் கண்டுள்ளேன். 'பாவத்திலிருந்து பரிசுத்தம் பிறத்தல் கூடுமா?' என்னும் எண்ணம் என் மனத்தில் எழுந்தது.

அரூப வழிபாட்டைப் பின்வருமாறு போற்றி சுவாமிஜி கூறியதையும் கவனிக்க வேண்டும். ''அரூபக் கடவுளின் வழிபாடு நம்மை அளவற்ற சக்தியுள்ளவர்கள் என்று நினைக்கச் செய்கிறது.''

''சகோதரர்களே, மூச்சுவிடாமல் உயிர் வாழ்தல் கூடாது. அதுபோலவே மனஞ்சார்ந்த உருவங்களில்லாமல் எதனையும் பற்றி நினைத்தல் கூடாது'' சம்யோக விதியினாலே (இயைபுவிதி) சடப்பொருள் உருவமானது மனஞ்சார்ந்த உருவத்தைப் பற்றி நிற்கிறது. ஆகையினாலே தான் இந்து, வழிபாடு செய்யும்பொழுது புறத்தேயுள்ள உருவத்தைப் பயன்படுத்துகிறான். எந்தத் தெய்வத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு செய்கிறானோ அதனை மனத்திலே அமைத்துக் கொள்ளுவதற்குப் புறவுருவம் உதவியாகின்றது. உருவம், தெய்வமல்லவென்றும், சர்வ வியாபியல்லவென்றும் நீ அறிவது போலவே அவனும் அறிந்திருக்கிறான்.

''இந்துக்கள் புனிதத்தன்மை, தூய்மை, உண்மை, எங்கும் நிறைந்தத்தன்மை போன்ற எண்ணங்களுடன் வேறு வேறாகிய உருவ பேதங்களை ஒன்று படுத்தியிருக்கின்றனர்.

''சட வணக்கமாகிய வெளி வணக்கம் மிகக் கீழாகிய நிலை. உயர்வடைய முயன்று செய்யும் மானசீக வணக்கம் அடுத்த நிலை. ஆண்டவனை நேரிற்கண்டு அடைவது மிக உயர்ந்த நிலை. விக்கிரகத்தின் முன் வணங்கும் மனிதன் ஆண்டவனையே வழிபடுகின்றான்...ஆயினுமவன் பிறருடைய விக்கிரகத்தை நிந்திப்பதில்லை; பிறருடைய விக்கிரக வழிபாட்டை பாவமென்று சொல்லுவதில்லை.

''அவ்வழிபாட்டினிடத்தே வாழ்க்கைக்கு வேண்டிய ஒருபடியை அவன் காணுகின்றான். 'குழந்தை மனிதனுக்குத் தந்தை. குழந்தைப் பருவம் பாவமுடைய தென்றாவது, வாலிபப்பருவம் பாவமுடையதென்றாவது சொல்லுவது ஒரு கிழவனுக்குச் சரியாகுமா?''

''உருவத்தின் உதவியைக் கொண்டு மனிதனானவன் தனக்கு உரிமையாகிய தெய்வத்தன்மையை அடைய முடியுமாயின் அதனைப் பாவமென்று சொல்லலாமா? அந்தப் படியைக் கடந்த பின்னர் அதனைப் பிழையென்று சொல்லலாமா?''

உருவ வழிபாட்டிலிருந்து அருவவழிபாட்டிற்கு ஆன்மிக யாத்திரை மேற்கொள்வது ''தவறில் இருந்து உண்மைக்குச் செல்லுவதாகாது. உண்மையில் இருந்து உண்மைக்குச் செல்லுவதாகும். அதாவது தாழ்படியில் உள்ள உண்மையில் இருந்து உயர்படியில் உள்ள உண்மைக்குச் செல்லுவதாகும்'' என்று விளக்கமளித்தார், சுவாமிஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருஹதாரணியக உபநிடதத்தில் (2—3—1) வரும் பின்வரும் மந்திரம், இங்கு நினைவு கூர்தற்குரியது.

''பிரம்மத்தின் நிலை இரண்டு என்பது தெளிவு—உருவம், அருவம்—அழிவுள்ளது, அழிவில்லாதது—ஓரிடத்திலுள்ளது. எங்கும் பரந்து நிற்பது—பிரத்தியக்ஷம், அபரோக்ஷம்.''

'உபநிஷத ஸாரம்' என்னும் நூலில் அமரர் 'அண்ணா' என். சுப்பிரமணிய ஐயர் ''ஸயஸ்ய—ஸத்யம்'' எனும் தொடருக்குக் கூறியுள்ள பின்வரும் விளக்கமும் இங்கு இணைத்து சிந்திப்பதற்குரியது.'

''பஞ்ச பூதங்கள் உலகிற்குக் காரணம் ஆகையால், அது ஸத்தியம். பஞ்சபூதங்களுக்குக் காரணம் பிரம்மம். ஆகையால் அது ஸத்தியத்தின் ஸத்தியம், பொய்யாகிய உடம்பு மெய்யெனப்படுவது உள்ளே மெய்ப் பொருளிருத்தலால்.''

விக்கிர ஆராதனையைப் பற்றி குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சர் அமுத மொழிகள் சிலவற்றை இங்கு நினைவு கூர்வதும், பொருத்தமாகும்.

1. ''பால பருவத்தில் பெண்கள் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடுகின்றனர். ஆனால், திருமணம் செய்து கொண்டதும் பொம்மைகளை ஒதுக்கி வைத்து விடுகின்றனர். அதே விதத்தில் விக்கிரக ஆராதனை ஈசுவரானுபதி வாய்க்கும் வரையில் நிகழ்கிறது. அனுபூதி வந்தான பிறகு விக்கிரகத்துக்குத் தேவையில்லை.''

2. ''விக்கிரக ஆராதனைக்கு அவசியம் உண்டு. மக்களின் பக்குவம் வெவ்வேறு படித்தரங்களில் இருக்கிறது. யாருக்கு எந்த ஆராதனை முறை அவசியமோ அதை இறைவன் கருணை கூர்ந்து உலகுக்குக் கொடுத்துள்ளார். தாய் ஒருத்தி தன் குழந்தைகளின் ஜீரண சக்திக்கு ஏற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு வெவ்வேறு உணவு வகைகளைச் சமைப்பது போன்று இறைவன் அந்தந்த உயிர்களுக்கேற்ற ஆராதனை முறைகளைக் கொடுத்துள்ளார்.''

''உருவங்களும், சிலுவைகளும், இளம் பிறைகளும் குறியீடுகள் மாத்திரமாக இருக்கின்றன. ஆன்மிக எண்ணங்களைத் தொங்க விடுவதற்குக் கொழுக்கள் போன்றிருக்கின்றன. இத்தகைய உதவி அனைவருக்கும் வேண்டப்படுவதல்ல. ஆயினும் அதனை வேண்டாதவர் வேண்டி நிற்போரை நோக்கி அவர் செல்லும் வழி தவறு எனக் கூறுவது முறையாகாது. மேலும் இவை இந்து சமயத்திற்கு இன்றியமையாதனவுமல்ல.'' இவ்வாறு சர்வமத சபையில் இந்து சமயத்தின் முக்கியக் கொள்கைகளுள் ஒன்றை ஐயந்திரிபற தெளிவு படுத்தினார், சுவாமிஜி.

மேலும் ஒரு முக்கியக் கருத்தைச் சுட்டிக்காட்டினார், சுவாமிஜி. பின்வரும் அந்தக் கருத்தை அறைகூவலுடன் குறிப்பிட்டார்.

''இந்துக்கள் மட்டுமே முக்தியடைவார்கள்; பிறர் அல்லர் என்னும் கருத்தமைந்த சொற்களை, சம்சுகிருத தத்துவங்கள் முழுவதிலும் தேடிப் பார்த்தால் காண முடியாது. இவ்வுண்மையை ஏற்காமல் மறுப்பவரை நான் வாதிட அறைகூவி அழைக்கின்றேன்,'' சமய அடிப்படை வாதத்திற்கு எதிரான சுவாமிஜியின் சமரச நோக்குச் சொற்கள் இந்து சமயத்தின் உலகம் தழுவிய பேருள்ளத்தைப் புலப்படுத்தியது. 'ஊருக்கு உபதேசம்' என்றில்லாமல் பாரதம் தன்னைவிலும் நடைமுறைப்படுத்தியதற்கு பின்வரும் ஒரு குறிப்பையும் சர்வமத சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

''நமது சாதிக்கும், சமயத்துக்கும் புறம்பாகப் பூரண நிலையை அடைந்த மனிதர் உளர்' என வியாஸ பகவான் கூறியுள்ளார். இன்னுமொரு குறிப்பு எழுகின்றது. ஆண்டவனையே நிலையமாகக் கொண்ட தத்துவஞானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பெற்ற இந்து, கடவுள் உண்டு என்னும் கொள்கையை கண்டறிய முடியாது எனக்கூறும் பௌத்தத்தையும், கடவுள் இல்லையென நாத்திகம் பேசும் சமணத்தையும் எவ்வாறு நம்புதல் கூடும்?

பௌத்தமும், சமணமும் கடவுட் கொள்கையை ஆதாரமாகக் கொள்ளாவிடினும், மனிதனை கடவுள் நிலைக்கு உயர்த்தப் பாடுபடுகின்றது என்பதை சுவாமிஜி பின் வருமாறு விளக்கினார்.

"பௌத்தர்களும், சமணர்களும் கடவுளை ஆதாரமாகக் கொள்ளாதவர்கள். ஆனால் அவர்களுடைய முழு சக்தியும், ஒவ்வொரு சமயத்தின் மையமாக விளங்கும். உண்மையை நோக்கிச் செலுத்தப்படுகின்றது. அதாவது மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துதல் எனும் சர்வ சமய உண்மையை நிறுவ பௌத்த, சமணம் பாடுபடுகின்றது. இவை தந்தையைக் காணவில்லை; ஆயினும் மைந்தனைக் கண்டிருக்கின்றன. மைந்தனைக் கண்டவன், தந்தையையும் கண்டவனே ஆவான்.

## உலகனைத்திற்கும் ஒரு சமயம்

அனைத்துலக சமயங்களின் பேரவையில் உலகளாவிய சமயம் (Universal Religion) தோன்ற வேண்டும் எனும் எதிர்பார்ப்பையும் வெளியிட்டார், சுவாமிஜி.

"உலகனைத்தினுக்கும் ஒரு சமயம் இருக்க வேண்டுமாயின், அது இடத்தினாலும், காலத்தினாலும் எல்லைப் படுத்தாததாக இருக்கவேண்டும். தான் போதிக்கின்ற தெய்வத்தைப் போல் அச்சமயமும் எல்லையற்றதாக இருக்க வேண்டும். கதிரவன் தனது கிரணங்களை நல்லோரிடத்தும், தீயோரிடத்தும், கிருஷ்ணனை வழிபடுவோரிடத்தும், கிறிஸ்துவை வழிபடுவோரிடத்தும் ஒரே தன்மையாகப் பரப்புதல் போல பிராம்மணம், பௌத்தம், கிறிஸ்துவம், முகம்மதியம் என்னும் வேறுபாடில்லாததாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தினையும் உள்ளடக்கியதாய், விருத்தியடை வதற்கு இன்னும் இடமுள்ளதாய், அகண்டமாகிய தன் கை களினாலே அனைத்தினையும் தழுவி நிற்கும் அச்சமய மானது ஒருபுறம் விலங்கினத்தினின்று வேறுபடாத நாகரீகமற்ற மனிதருக்கு இடந்தந்து, மற்றொருபுறம் இவன் தெய்வமோ என மக்கள் ஐயப்படத் தக்க உயர்வுடை யோருக்கும் இடந்தந்து நிற்றல் வேண்டும். மத கண்டனத் திற்கும், ஒடுங்கிய எண்ணங்களுக்கும் இடந்தராது எல்லா ஆடவரிடத்தும், பெண்டிரிடத்தும் தெய்வத்துவத்தைக் கண்டு மக்கள் தமது உண்மையாகிய தெய்வ நிலையை அடைவதற்கு உதவி புரிந்து நிற்பது அந்த சமயத்தின் இலக்காகும்.''

இவ்வாறு துல்லியமாக சுவாமிஜி உலகளாவிய சமயத்தின் குறிக்கோளைக் குறிப்பிட்டார். வேறுபட்ட நம்பிக்கைகளின் பொருளற்ற கலவைக் கூளம் அன்று, உலகளாவிய சமயம். உலக சமய அமைப்புகள் அனைத்தின் அடிப்படை உண்மையை அங்கீகரிப்பதாகும்.

## சுவாமி ரங்கநாதனந்தா பார்வையில்

உலகளாவிய சமயம் பற்றிய இரு கருத்துகளை சுவாமி ரங்கநாதானந்தா அவர்கள் பின் வருமாறு ஆய்வு செய்துள்ளார்.

''உலகளாவிய சமயம் எனும் கருத்து இரு பொருள் களில் அறியப்பட்டுள்ளது. ஒரு சாம்ராஜ்யம் தனது ஆட்சி விஸ்தரிப்புக் கொள்வது போல ஒரு சமயம் தான் தோன்றியவிடத்தைக் கடந்து அரசியல் வெற்றிகள் மூலம், மதமாற்றம் மூலம் உலகில் பரவி, தன்னை உலகளாவிய சமயம் எனக் கூறிக் கொள்வது, ஒரு கருத்து. கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம் உலகில் பரவிய மதங்கள். இவற்றுள் கிறிஸ்துவமும், இஸ்லாமும் இரக்கமற்ற கொடுமை களாலும், அடக்குமுறைகளாலும், ''நரகத்தில் ஆழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களை'', ''காப்பாற்று'' வதற்காக பரவின. பௌத்தம் மட்டும் அமைதி, அகிம்சை எனும் வழி முறைகளால் பரவியது.

''வெற்றி மூலம், வலிமை மூலமும் பரவும் மதம், உலகளாவிய மதமாகாது...... என் கடவுள்தான் உண்மையான கடவுள், அதை நீ ஏற்கவேண்டும்'' எனும் கட்டளையின் வழியாக ஒரே ஒரு சமய நம்பிக்கையை ஏற்படுத்துவது, உலகளாவிய சமயம் எனும் குறிக்கோளையே தோற்கடிப்பதாகும்.

''இரண்டாவது கருத்து, அக்பர் முயற்சியைப் பற்றியது. பல்வேறு சமயக் கருத்துகளைத் தேர்ந்து திரட்டி உருவாக்கும் இயக்கம்; இதைப் போலவே சில நவீன சமயங்களும், இயக்கங்களும் தோன்றின. பலவிதமான மலர்களைக் கொண்டு உருவாக்கப் பெறும் பூச்செண்டு போன்று, பல சமய உண்மைகளைக் கொண்டு அக்பர் ஒரு புதிய சமயத்தை உருவாக்கினார். மலர்ச்செண்டு வாடி வதங்கி உதிர்ந்து விடுவது போல, அக்பரின் புதுசமயமும் உதிர்ந்து விட்டது. 'உலக சமயம் அமைப்போம்' என்று குரல் எழுப்புவது, 'யுத்தத்தை ஒழிக்க யுத்தம்' என்று எழுப்பப் பெறும் குரலாகி விடக்கூடாது. இதுவரை விளக்கப் பெற்ற இருகருத்துகளைப் போலல்லாது, ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரின் இலட்சியமான உலகளாவிய சமயம், நடைமுறைக்கேற்ற உலகளாவிய சமயமாகும். [Eternal Values For Changing Society, Vol. II, P. P. 106—107]

## குருதேவர் குரல்

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப் போல, குருதேவர் உலக சமயங்களான கிறித்துவம், இஸ்லாம் மற்றும் சில சமயங்களின் உண்மைகளை சுய அநுபூதியாகத் தெளிவு பெற்று போற்றியவர். இதனால் உலகளாவிய சமயம் பற்றி விளக்குவதற்கான மெய்ஞானத் தகுதியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார், குருதேவதர். அவருடைய வாழ்க்கையில் மட்டு மல்லாமல், அவருடைய அமுத மொழிகள் வாயிலாகவும் உலகளாவிய சமயம் பற்றிய அவருடைய சத்திய வேட்கையை அறிகின்றோம். சான்றுக்கு பின்வரும் ஓர் அமுத மொழியை அறிவோம்.

''ஒவ்வொருவரும் அவர் சார்ந்த மதத்தைப் பின்பற்ற வேண்டும். கிறிஸ்துவர், கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்ற வேண்டும். இஸ்லாமியர், இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும்; பண்டைய ரிஷிகள் நெறியை பின்பற்றுவது இந்துவிற்கு உகந்தது. பல வழிகள் மூலம் உண்மையை நாடிச் செல்வது போல, பல மதங்கள் வழியே, அனைத்து மதங்கள் கூறும் உண்மை ஒன்றே எனும் சமய நம்பிக்கையைப் பெற வேண்டும். பிற சமயங்களிடம் மரியாதையும், மதிப்பும் கொள்ள வேண்டும்.''

சமய உண்மையைக் காண்பதற்கு ஆதிக்க வுணர்வுகள், போட்டி— பொறாமை உணர்வுகள் வழிகாட்டா. 'ஏகபோக' அணுகுமுறைக்கு சமய உண்மைத் தேடலில் இடமில்லை என்பதை சுவாமிஜி, பின்வருமாறு, மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

''புனிதத் தன்மை, தூய்மை, அருளிரக்கம் ஆகியன உலகில் உள்ள எந்த ஒரு தனி மனிதனுக்கோ அல்லது சமய அமைப்பிற்கோ தனியுடைமை ஆகாது. பண்பார்ந்த ஒழுக்க மேம்பாடுடைய ஆண்— பெண்களை ஒவ்வொரு சமய அமைப்பும் உலகிற்கு அளித்துள்ளது.''

1897-இல் தமிழகத்தில் கும்பகோணத்தில், ''வேதாந்தம் உலகிற்களிக்கும் செய்தி'' எனும் தலைப்பில் சுவாமிஜி பேசிய பொழுது, ''வேதாந்தம் மாத்திரமே உலகில் அனைவ ராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதெனவும் வேறு எந்த மதமும் அந்நிலையைப் பெறமுடியாதென்றும் நான் நினைக்கிறேன்'' எனக் குறிப்பிட்டார். இதற்குரிய இரு காரணங்களையும், பின்வருமாறு, விளக்கினார் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ''நம்முடைய மதம் தவிர மற்றெல்லா மதங்களும் அவைகளை நிறுவியர்களுடைய வாழ்க்கையில் சம்பந்தப் பட்டனவாக இருக்கின்றன...உலகின் பெரும்பான்மை யான மக்களை ஒரு மதத்தினராகச் செய்வது எப்பொழு தாவது சாத்தியமெனில், அது கொள்கைகளை அடிப்படை யாகக் கொண்டுதான் முடியுமேயொழிய, தனி மக்களுடைய வாழ்க்கைகளை அடிப்படையாகக் கொண்டல்ல.''

2. ''வேதாந்தம் உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய மதமாயிருக்கிறது என்பதற்கு இரண்டாவது காரணம் என்னவெனில், அதன் உபயோகங்கள்தான் தற் கால விஞ்ஞான சாத்திர ஆய்விற்கு முற்றிலும் ஒத்திருக் கின்றன.''

சுவாமிஜி, உலக சமயத்தைப் பற்றிய தமது பொதுக் கருத்தை, 1900-இல் அமெரிக்காவில், கலிபோர்னியாவில், நிகழ்த்திய இரு சொற்பொழிவுகளில் தெளிவுபடுத்தி யுள்ளார். ''The Way To The Realization of Universal Religion'', ''The Ideal of A Universai Religion'', என்பன அந்த இரு சொற்பொழிவுகள்.

''உலகளாவிய சமயத்தை மெய்யாகக் காண்பதற்கு உரிய வழிமுறை'' எனும் முதல் சொற்பொழிவில் சுவாமிஜி பேசியதில் ஒரு பகுதி வருமாறு :

''கடந்தகால மதங்கள் அனைத்தையும் நான் ஒப்புக் கொள்வதுடன் அவற்றை வழிபடவும் செய்கின்றேன். அந்த சமயங்களைச் சார்ந்த ஒவ்வொருவருடனும் சேர்ந்து கடவுளை வணங்குகின்றேன். அவர்கள் எந்த வடிவத்தில் கடவுளை வணங்கினாலும், நானும் அப்படியே வணங்கு கின்றேன். இஸ்லாமியருடைய மசூதிக்கு செல்லுவேன்; கிறித்து சமய சர்ச்சிற்குள் சென்று சிலுவைமுன் மண்டி யிட்டு வணங்குவேன்; பௌத்த கோயிலுக்குள் சென்று, புத்தரிடமும், அவருடைய தர்மத்திடமும் சரண்புகுவேன்; ஒவ்வொருவடைய உள்ளத்தையும் ஒளியூட்டச் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரொளியை தரிசனம் செய்ய காட்டில் அமர்ந்து தியானம் புரியும் இந்துவுடன் அமர்வேன்.

''இவைகளுக்கே அல்லாமல், எதிர் காலத்தில் தோன்றப் போகும் சமயங்களுக்கும் என் இதய வாயிலைத் திறந்து வைப்பேன். கடவுளுடையப் புத்தகம் முற்றும் பெற்று விட்டதா? அல்லது தொடர்ந்து ஞானக் காட்சிகளை வெளிப்படுத்திக் கொண்டே செல்லுகிறதா? உலக ஞானக் காட்சிகளை வெளிப் படுத்தும் இந்தப் புத்தகம், அற்புதமானப் புத்தகம். வேதம், பைபிள், திருக்குரான் மற்றம் பிற அனைத்துப் புத்தகங்களில் மிகப்பல பக்கங்கள், எல்லையற்ற எண்ணிக்கையுடைய பக்கங்கள், இன்னமும் திறந்து வைக்கப்படாமல் எஞ்சியுள்ளன. அந்தப் பக்கங்கள் அனைத்தையும் திறந்து வைக்க நான் விட்டு விடுகின்றேன்.'

உலகளாவிய சமயத்தை அவாவி நிற்போர் எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக முற்கூறிய சமரச ஞானச் சிந்தனையை மிக அற்புதமாக, கவித்தும் மிளிரும் சொற்களில் வெளிப்படுத்தி விட்டார், சுவாமிஜி. இந்தச் சொற்பொழிவிற்குப் பிறகு, ஒரு மாதம் கடந்து, இதே கருத்தோட்டத்தை மேலும் பின்வருமாறு ''உலகளாவிய சமயத்தின் இலட்சியம்'' எனும் இரண்டாவது சொற்பொழிவில், விளக்கியுள்ளார்.

''அனைத்து உள்ளங்களும் சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சமயத்தைப் பரப்ப நான் விரும்புகின்றேன். அது, சமமான தத்துவமாக, சமமான உணர்வுடையதாக, சமமான அநுபூதியுடையதாக, சமமான செயலூக்கம் தருவதாக உறுதி பெற அமையும்., இவை யாவும் ஒன்று சேர்வதே, உலகளாவிய சமயத்திற்கான அணுகுமுறைக்கு நெருக்கமான இலட்சியமாகும். கடவுள் அருளால் இத்தகைய மனிதர்கள் உருவாகட்டும்; அவர்கள் உள்ளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் தத்துவம், அநுபூதி, உணர்வு, உழைப்பு, முதலான மூலக்கூறுகள் சமச்சீராக நிறைந்து விளங்கட்டும். பரிபூரண மனிதன் பற்றிய என்னுடைய இலட்சியமும் இதுவேயாகும். இந்த மூலக் கூறுகளில் ஒன்றிரண்டை மட்டும் பெற்றுள்ள ஒவ்வொருவரையும் நான் ''ஒரு சார்புடையவராகவே'' கருதுகின்றேன். இத்தகைய ''ஒரு சார்புடையவர்களே'' பெரும்பாலும் இவ்வுலகத்தில் நிறைந்திருக்கின்றார்கள்.' 'ஒரு சார்புடைய' அறிவுடன் அவர்கள் ஒரே ஒரு வழியில் போகிறார்கள். பிற எதுவும் அபாயமாகவும், அச்சம் தருவதாகவும் அவர்களுக்குத் தெரிகிறது. சரிசமமாக ஒருங்கிணைந்து நான்கு திசைகளிலும் செல்லுவது என்னுடைய சமய இலட்சியமாகும்.''

சர்வ மத சபையில் உலகளாவிய சமய உணர்வுகளையும், தத்துவப் பார்வையையும், திரிகரண சுத்தியுடன் சுவாமிஜி வெளிப்படுத்தியது, சர்வமத சபையின் பெருமையையும், தகுதிப் பாட்டையும் உயர்த்தியது.

இந்தச் சொற்பொழிவின் முடிவிலேயும், அனைத்து சமயங்களிலும் நிறைந்து இனிது விளங்கும் இறைமையைப் போற்றி மதித்திட வேண்டுகோள் விடுத்தார், சுவாமிஜி.

### சமரசக் கொடி ஏந்துவோம்

சுவாமிஜி, தமது ஆய்வுரையின் இறுதியில், ''சமரசமென்னும் கொடியினை, நாகரீகத்தின் முன்னணிப் படையிலே ஏந்தி மேலே செல்லவேண்டும்'' என வேண்டுகோள் விடுத்தார். இந்த முன்னணிப் படையின் அணி வகுப்பில் ஆன்மிக வீரம் மட்டுமே செங்கோல் ஓச்சும். சமரசக் கொடியை ஏந்தும் கரங்கள், ''அயலாருடைய ரத்தத்திலே தோய்க்காது,'' ''அயலாருடைய செல்வத்தை கொள்ளையடித்து குறுக்கு வழியில் செல்வம் சேர்க்காது'' என்றும் சாற்றினார், சுவாமிஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முடிவுரைக்கு முன்பாக இந்தியாவில் சமயத்தின் பெயரால் முதன் முதலாக கூட்டப் பெற்ற மாமன்னன் அசோகனுடைய பௌத்த சமய மன்றத்தின் கூட்டத்தைக் குறிப்பிட்டார். சிகாகோ சர்வமத சபையில் ஒரு வரியில் அசோகனைப் பற்றிக் குறிப்பிட்ட சுவாமிஜி, அவருக்கே உரிய வரலாற்றுப் பார்வையில் பிறவிடங்களில் அசோகனுடைய சமயக் காழ்ப்பற்ற பௌத்த தருமப் பற்றை விளக்கியுள்ளார். 'தெய்வீகப் பேரரசன்' என்றும் புகழ்ந்துள்ளார். அசோகனுடைய சிலாசாசனங்கள், அயல்நாடுகளுக்கு பௌத்த சமயப் பிரசாரகர்களை அனுப்பியது முதலானவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு தமது மகன் மகிந்தனையும், மகள் சங்கமித்திரையையும் சமயப் பணித் தூதுவர்களாக அனுப்பி, அந்த நாட்டு மக்களை பௌத்த சமயத்தில் ஈடுபடச் செய்து நாகரீகமாக்கியதையும் கூறியுள்ளார். சுய சமயப் பற்று, பிற சமய வெறுப்பு என்பது கூடாது என வலியுறுத்தும் அசோகனுடைய கல்வெட்டுச் செய்தியை எடுத்துக் காட்டியுள்ளார். இதன் விவரம் அமெரிக்க நாட்டுப் பத்திரிகையான ''டெட்ராய்ட் ப்ரீபிரஸ்'' என்னும் இதழில் (பிப்ரவரி 14, 1894) ''சமய சமரசம்'' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது.

''சமயத்தின் அடிப்படைகள்'' (Fundamentals of Religion) என்னும் முற்றுப் பெறாத கட்டுரையில் சுவாமிஜி அசோகனைப் பற்றி கூறியதாவது:

''இயேசு கிறிஸ்துவிற்கு இரு நூற்றாண்டுக்கு முன்பாக சமயப் பணியாளர்களுக்கு பௌத்த சமயப் பேரரசன் அசோகன் சில வழிமுறைகளை வகுத்தளித்தான். ''மற்றவர்களை இகழாதே, மற்றவர்கள் செய்யும் தவறுகளைப் பயன்படுத்திக் கொண்டு வாழ முயற்சிக்காதே, அதற்குப் பதிலாக அவர்களுக்கு உதவி செய், பரிவுகாட்டு, அறிவுறுத்து,'' என்பன அசோகன் விதித்த வழிமுறைகள்'',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல்நாடுகளுக்கு சமயப்பணியாற்றச் செல்வோர் மேற்கொள்ள வேண்டிய அணுகு முறைகளைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில் சுவாமிஜி மேற்கண்டவாறு கூறியுள்ளார், கிறித்துவ மிஷனரிகள் கவனத்திற்கும் இந்தச் செய்தியை நினைவுறுத்தினார்.

1900 பிப்ரவரியில் கலிபோர்னியாவில் ஓர் ஊரில் ''பௌத்த கால இந்தியா'' (Buddhistic India) எனும் தலைப்பில் பேசிய பொழுது, அசோகன் சிலாசாசனத்தின் பின்வரும் கருத்தை எடுத்துரைத்தார்:

''இனிமேல் என்னுடைய சந்ததியார் எவரும் பிற இனங்களை வென்று அடிமைப்படுத்தி புகழ் பெற நினைக்கக் கூடாது. அவர்கள் புகழ்பெற விரும்பினால், பிற இனங்களுக்கு உதவி புரியட்டும்; விஞ்ஞான ஆசிரியர்களை, சமய போதகர்களை அனுப்பட்டும்; வாளினால் பெறும் புகழ், ஒரு போதும் புகழாக மாட்டாது.''

'தற்கால இந்தியா' என்னும் சுவாமிஜியின் நூலில், ''யுதிஷ்டிரர், ராமசந்திரமூர்த்தி, தர்ம அசோகன், அக்பர் முதலானவர்கள் தெய்வீக குணங்களை உடைய அரசர்கள்'' என்னும் ஒரு குறிப்பும் உள்ளது. சிகாகோ சர்வமத சபையில் அக்பரின் 'தீன் இலாஹி'யை, சுவாமிஜி ''வரவேற்பறைக் கூட்டம்'' எனக் குறிப்பிட்ட போதிலும், பிறவிடங்களில் அக்பரின் சமய சமரச நோக்கை சுவாமிஜி பாராட்டியுள்ளார். சகோதரி நிவேதிதை தமது நினைவுக் குறிப்புகள் பற்றிய சிறு நூலில், ''அக்பர் எத்தகைய மகாமேதை'' எனக்குறிப்பிட்டு குரல் நெகிழ்வுற உணர்ச்சி வசப்படுவார், சுவாமிஜி என எழுதியுள்ளார். (Notes of Some Wanderings, 1975, P. 22).

''இந்துக்கள், இஸ்லாமியர்களிடையே உறவை ஏற்படுத்த எழுதப்பெற்ற அல்லா உபநிஷத், அக்பர் காலத்தில் தோன்றியது என என்னிடம் கூறப்பட்டது'' என்றும் சுவாமிஜி குறிப்பிட்டுள்ளார். (Complete Works of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Swami Vivekananda Vol-III, 1970 P. 328) *1896*-இல் லண்டனில், 'சன்டே டைம்ஸ்' எனும் இதழிற்கு அளித்த பேட்டியில், "The Great Akbar The Mogul Emperor was Practically a Hindu எனச் சுவாமிஜி குறிப்பிட்டுள்ளதும், ஆழ்ந்த கவனத்திற்குரியது. "அக்பர் நடைமுறையில் ஓர் இந்து" எனும் கருத்தை சுவாமிஜி வெளியிட்டுள்ளது, இந்து இஸ்லாமியரிடையே மன ஒத்திசைவு காணத் தூண்டுவது. இதே கருத்தை, அதே சொற்களில், *1896*-இல் லண்டனில் இருந்து வெளிவந்த 'இந்தியா' எனும் ஆங்கில இதழிற்கு அளித்த பேட்டியிலும் குறிப்பிட்டுள்ளார், சுவாமிஜி.

வரலாற்றுச் செய்திகளை, காலத் தேவைக்கு ஏற்ப ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ள தலைசிறந்த வரலாற்றாசிரியர் எனும் பொறுப்பிலேயும் சுவாமிஜி வழி காட்டியுள்ளதை மேலே, அசோகன், அக்பர் பற்றிய குறிப்புகளில் அறிகின்றோம்.

சுவாமிஜியின் சிகாகோ உலக சர்வமத சபையில் இந்து சமயம் பற்றியப் பேருரையை சகோதரி நிவேதிதை ஓர் அணிந்துரையில் அற்புதமாக, பின்வருமாறு, விமர்சனம் செய்துள்ளார்.

"அவர் பேசத் தொடங்கியபோது, இந்துக்களின் சமயக் கருத்துக்களைப் பற்றி கூறினதாகத் தோன்றிற்று. ஆனால், அவர் பேச்சை முடித்தபொழுது இந்து சமயம் படைக்கப்பட்டுவிட்டது."

*1907*-இல் கூறப்பெற்ற இதே கருத்து, 'பால பாரதா' எனும் ஆங்கில மாத இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையில் மீண்டும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

சென்னையில் இராமகிருஷ்ணர் இயக்கத்தின் மாத இதழாக 'பாலபாரதா' நவம்பர் *3,1906*-இல் வெளிவந்தது இதன் ஆசிரியர் மகாகவி பாரதியார். 'பால பாரதா'வில் சகோதரி நிவேதிதா எழுதி வந்தார் என்பதும் நினைவிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியது. இதன் தொடர்பாக பாரதியாருக்கும், சகோதரி நிவேதிதாவிற்குமிடையே கடிதப் போக்குவரத்தும் நடை பெற்றுள்ளது.

"Swami Vivekananda, The Pioneer ot the New Spirit" எனும் தலைப்பில் தொடர் கட்டுரை 'பால பாரதா'வில் வெளிவந்துள்ளது. கட்டுரை ஆசிரியரின் பெயர் பத்திரிகை யில் குறிப்பிடப்படவில்லையென்றாலும், நடை, செய்திகள் முதலானவற்றைக் கொண்டு, கட்டுரை ஆசிரியர், சகோதரி நிவேதிதாவாக இருக்கக்கூடும் என முடிவு செய்யலாம்.

1908 மே மாத இதழில் வெளிவந்த தொடர் கட்டுரையில் சிகாகோ சர்வமத சபை சொற்பொழிவைப் பாராட்டுமிடத்தில், "That day Hinduism was defined" என்று மிக நுட்பமாகக் குறிப்பிடப்பட்டது. 1907-இல் முற்கூறப் பெற்ற கருத்தின் மூலத்தை இங்கு ஒப்பிட்டு பார்த்தல் பொருத்தமேயாகும். "When he began to speak It was of 'The Religious Ideas of the Hindus', But when he ended, Hinduism had been created."

சுவாமிஜியின் ஆய்வுக் கட்டுரையைக் குறித்து மேரி லூயிஸ் பர்க் எழுதியுள்ள பின்வரும் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

"ஆய்வுக் கட்டுரையின் சில கருத்துகள் இதற்கு முன்பே கூறப்பட்டிருந்தாலும், அவை இப்பொழுது சொல்லப் பட்டது போல் விழுமிய வீறார்ந்த சொல்லாற்றலுடன் சொல்லப்படவில்லை. இதுமட்டுமல்லாமல், இந்தப் பொழி விற்குப் பின்னே துவங்கிய தெய்வீகப் பணியின் முழுமை யான சக்தியுடனும் சொல்லப்படவில்லை. கிறிஸ்துவ சமய போதகர்களுக்கு உண்மையிலேயே எதுவும் விட்டுவைக்கப் படவில்லை. சுவாமிஜியின் கட்டுரை மட்டுமன்று, சுவாமிஜியின் ஆளுமையும், இந்துசமய தெய்வீகச் சிகரத்தை அடைய உயர்ந்தெழுந்ததற்கு சான்றாகத் திகழ்ந்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் கீழை — மேலை நாட்டுச் சீடர்களால் எழுதப்பெற்ற வாழ்க்கை வரலாற்று நூலில், இந்த ஆய்வுக் கட்டுரையில், ''சமயங்கள் வரலாற்றிலே முற்றிலும் ஈடு இணையற்ற பேச்சாற்றலாகவும், தீர்க்கதரிச உரையாகவும் விளங்குகிறது'' எனப் போற்றப்பட்டுள்ளது. ''அவர் சுயானுபூதி பெற்றவராதலால் தனித் தகுதியுரிமையுடன் பேசினார்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமரச ஞானக் கொடியை பட்டொளி வீசப் பறக்க விட்டார், சுவாமிஜி. இந்திய தேசியப் பெருமிதத்திற்குரிய விதைகளும் அன்றே தூவப் பெற்றன.

## நான்காவது சொற்பொழிவு

சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகளில் நான்காவது சொற்பொழிவான, ''இந்தியாவின் இன்றியமையாதத் தேவை, சமய போதனையன்று'' (Religion not the Crying need of India) என்பது செப்டம்பர் 20-இல் நிகழ்ந்தது. முந்தையப் பேருரைபோல், எழுதிப் படிக்கப் பெற்ற கட்டுரை வடிவமன்று, இந்தச் சொற்பொழிவு. எவ்வித முன் தயாரிப்பும் இல்லாமல் மேடையேறியதும் பொழியப்பெற்ற மிகச் சுருக்கமானப் பேச்சாகும், இது.

சுவாமிஜியின் தொகுப்பு நூலில் உள்ளவாறு இந்தச் சொற்பொழிவு பத்து வரிகளில் அமைந்துள்ளது. ஆனால் இந்தப் பொழிவு, முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என மேரிலூயிஸ்பர்க் அம்மையார் கருதுகின்றார். இதற்கு சான்றாக, 'கிறிஸ்டியன் ஹெரால்ட்' எனும் இதழில் (அக்டோபர் 11, 1893) இந்தச் சொற்பொழிவு தொடர்பாக வெளிவந்த ஒரு கட்டுரையைச் சுட்டிக்காட்டியுள்ளார். அந்தக் கட்டுரையின் பின்வரும் மேற்கோள், சுவாமிஜியின் தொகுப்பு நூலில் பதிவாகவில்லை.

''கிறித்துவ மிஷனரிகள் வந்து உதவி செய்கின்றார்கள்; ஆனால் அதுவும் நிபந்தனையின் பேரில்தான்; அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தனது மூதாதையர்கள் பின்பற்றி வந்த நம்பிக்கையைத் துறந்து, கிறிஸ்துவரானால்தான் உதவி பெறமுடியும். இது சரிதானா? நீங்கள் 'சகோதரத்துவம்' என்ற சொல்லிற்கு விளக்கம் தர விரும்பினால், இந்து சமயப் பற்றுள்ள இந்துவிடம் மிகுந்த அன்பு காட்டவேண்டும். மிஷனரிகளை அனுப்புங்கள்; அவர்கள் பசிக்கு ஒருபிடி சோறு எப்படி பெறவேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லித் தாருங்கள்; ஆனால் அவர்களிடம் சென்று சமய நுட்பங்களை போதிக்கும் முட்டாள்தனத்தை காட்டாதீர்கள்.''

சுவாமிஜி, ''இந்தியாவின் இன்றியமையாதத் தேவை சமய போதனையன்று'' என்பதை மேற்காணும் கண்ணோட்டத்தில் கூறியுள்ளார். அவர் கூறியதாவது :

''நன்முறையில் குற்றங் கூறுமிடத்தில் கிறிஸ்துவர்கள் ஏற்க வேண்டும். நான் சிறிது குற்றங் கூறினால், அதனை நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நினைக்கின்றேன். கிறிஸ்தவர்களாகிய நீங்கள் அஞ்ஞானிகளுடைய ஆன்மாவை இரட்சிக்கும் பொருட்டுப் பிரசாரகர்களை அனுப்பப் பெரிதும் விரும்புகிறீர்கள். ஆனால், அஞ்ஞானிகளுடைய உடலைப் பட்டினியிலிருந்து பாதுகாப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்காதது, ஏன்? இந்தியாவில் பயங்கர பஞ்சங்கள் ஏற்பட்டபொழுது, ஆயிரக்கணக்கில் மக்கள் பட்டினியால் இறந்தார்கள். ஆயினும் கிறிஸ்துவர்களாகிய, நீங்கள் அதற்கு உதவ ஒன்றும் செய்யவில்லை. இந்தியாவெங்கும் சர்ச்சுகளை நிறுவுகின்றீர்கள்; ஆனால் கீழைநாட்டின் உடனடியானத் துன்பம் சமய போதனையன்று; அவர்களிடம் போதிய அளவிற்கு சமய போதனைகள் உள்ளன. ஆனால், எரிந்துக் கொண்டிருக்கும் இந்தியாவில் இலட்சக்கணக்கான மக்கள் உணவிற்காகத் தான் தொண்டை உலர்ந்துபோக கூவுகின்றார்கள். அவர்கள் கேட்பது, சோறு; நாம் தருவது கற்கள். பட்டினி கிடக்கும் மனிதனிடம் சென்று சமய போதனை செய்வது, அவனை அவமதிப்பதாகும். பட்டினி கிடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனிடம் சென்று தத்துவ நுட்பங்களை போதனை செய்வது அவனை அவமதிப்பதாகும். இந்தியாவில் ஒரு சமய குரு பணத்திற்காக போதனை செய்தால் அவன் தனது சாதியை இழந்துவிடுவான்; அவன் மீது மக்கள் வெறுப்பை உமிழ்வார்கள்.

''நான் இங்கு என்னுடைய நாட்டில் வறுமையால் வாடும் ஏழை எளிய மக்கள் துயர்துடைக்க உதவி தேடும் பொருட்டு வந்துள்ளேன். கிறித்துவ நாட்டிலே கிறிஸ்துவர்களிடமிருந்து பிறச் சமயத்தார் பொருட்டு உதவி தேடுவது எவ்வளவு கஷ்டமென்பதை நான் முற்றிலும் உணர்ந்து, கொண்டேன்.''

இந்த பேச்சிலே, சுவாமிஜியை தேசபக்த மெய் ஞானியாக தரிசனம் செய்கின்றோம். சிகாகோ சர்வ மத சபையில் இந்து சமயத் தத்துவ ஞானத்தின் தன்னேரில்லாச் சிறப்புகளை எடுத்தோதிய தத்துவ ஞானியின் இதயத்தில் தேசபக்திக் கனல், அதுவும் ஏழை எளிய மக்களை தேசமாகக் கருதிய தேசபக்தியின் கனல், பல்வேறு பேச்சுகளில், எழுத்துகளில் அவரிடம் கனன்றதைப் போல, இந்தப் பேச்சிலும் கனன்றுள்ளது.

''அனைத்து தனிச் சிறப்புரிமைகளையும் எதிர்ப்பது, வேதாந்தம்'' என்பது சுவாமிஜியின் முழக்கங்களுள் ஒன்றாகும்: சாதியால், பணத்தால், கல்விச் செருக்கால், தனக்குத் தானே ஆன்மிக உயர்வு பாராட்டிக் கொள்வதால் முதலான பல தனிச் சிறப்புரிமைகளைச் சாடிச் சாய்ப்பதில் முனைந்து நின்றவர் சுவாமிஜி. சுவாமிஜியின் அனைத்து கருத்துகளின் தொகுப்பு நூல்கள், மாபெரும் பேரிலக்கியமாகும். இவற்றுள் ஏழை எளிய மக்களுக்காக அவர் எழுப்பிய போர் முழக்கங்கள் போல் வேறொருவரும், அவர் காலகட்டத்தில் எழுப்பவில்லை என்பது தெள்ளத் தெளிந்த வரலாற்று உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாமர மக்களை அலட்சியப் படுத்தியதுதான் தேசிய மகாபாவம்'' என்றும் ''ஏழைகளுக்கு இரக்கம் காட்டுபவர் தான் மகாத்மா; பிறர் துராத்மா'' என்றும் பாமரமக்கள் முன்னேற்றத்திற்கு போர்முரசு கொட்டிய முதல் ஆன்மிக ஞானி, சுவாமிஜியே தான்.

''துன்பமுறும் லட்சக் கணக்கான தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் இதய இரத்தம் சிந்தும் ரத்தத்திலே கல்வியையும், பிற போகங்களையும் அநுபவித்து, அதற்குக் காரணமாக விருக்கும் ஏழைகளைப் பற்றி எப்பொழுதுமே நினைவில் கொள்ளாதவனை நான் துரோகி என்று அழைப்பேன்.'' இவ்வாறு ஆன்ம வீரம் கொப்பளிக்க முழங்கியவர் சுவாமிஜி. [சுவாமி விவேகானந்தர் அனைத்து நூல்கள், ஆங்கிலம், தொகுதி - 8; பக். 329-30]

சமயவுணர்வையும், சமூக உணர்வையும் பின்னிப் பிணையச் செய்து இந்து சமயத்தின் சுயவிமர்சனம் செய்த சமூக விஞ்ஞானியும் சுவாமிஜியே ஆவார். இதற்கு, பின்வருவது ஒரு சான்றாகும்.

''மண்ணுலகில் மானுட மேன்மையை இந்து சமயம் போல கம்பீரமான அழுத்தத்துடன் போதனை செய்வது போல வேறெந்த சமயமும் போதிக்கவில்லை. இந்து சமயம் போல் ஏழைகள், தாழ்ந்தவர்கள் கழுத்துகளை மிதிப்பதில் இந்து சமயம் போல் மண்ணுலகில் வேறெந்த சமயமும் இல்லை.'' [Complete Works Vol 1959 Edition. PP. 15-17]

கிறிஸ்துவ சமய மிஷனரிகள் சிலரின் நடவடிக்கைகளைக் குற்றங் கூறிப் பேச வேண்டிய அவசியம் சுவாமிஜிக்கு ஏற்பட்ட போதிலும், கிறிஸ்துவ சமயத்தை கற்றுத் தெளிந்ததோடு, இயேசு கிறிஸ்து மீது, இயேசு அடியார்கள் மீதும் பெருமதிப்பு கொண்டு போற்றியவர் சுவாமிஜி. இதற்கான பல சான்றுகளை அவருடைய நூல்களில் பரக்கக் காணலாம். ''தேவகுமாரன் இப்பொழுது வந்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரால் அல்ல, என் இதய ரத்தத்தால் அவருடைய திருவடிகளை கழுவுவேன்'' எனக் கூறியவர் சுவாமிஜி.

### ''தி இமிடேஷன் ஆப் க்ரைஸ்ட்''

தமது பரிவிராஜகப் பயணக் காலத்தில் அவர் இரண்டேயிரண்டு ஞான நூல்களைத்தான் எடுத்துச் சென்றார். ஒன்று, ஸ்ரீமத் பகவத்கீதை; மற்றொன்று 'தி இமிடேஷன் ஆப் க்ரைஸ்ட்'' (The Imitation of Christ) என்னும் கிறிஸ்துவ சமய செந்நெறி இலக்கியமாகும். இதைப் படைத்தவர் ஜெர்மன் நாட்டு கிறிஸ்துவ சமய ஞானியான தாமஸ் எ கெம்பிஸ் (1380- 1471)- Thomas A Kempis —என்பவராவார். இந்த நூலின் முதல் பாகத்தின் முதல் ஆறு அத்யாயங்களில் இருந்து சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து வங்க மொழியில் அவரே மொழி பெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பு'' சங்கீத கல்ப துருமா'' எனும் வங்க மொழி மாத ஏட்டில் வெளி வந்தது.

சுவாமிஜி, அடிக்குறிப்புகளில், எடுத்துக் கொண்ட பகுதிகளுடன் ஒத்துள்ள இந்து சமயக் கருத்துகளையும், தமது விளக்கங்களையும் தந்துள்ளார். நூல் முழுவதையுமே, மொழி பெயர்த்திட முதலில் சுவாமிஜி திட்டமிட்டார். ஆனால் அது நிறைறவேறவில்லை. மொழி பெயர்ப்பிற்கு வங்க மொழியில் ஒரு முன்னுரையையும் எழுதியுள்ளார், சுவாமிஜி. இதில் ஒரு பகுதி பின்வருவது:

''இந்த நூலைப் படிக்கும் பொழுது, ஒருவர் பகவத் கீதையின் எதிரொலியை மீண்டும்—மீண்டும் கேட்பார்கள். ''எல்லா தருமங்களையும் விட்டு விடு, என்னைப் பின் பற்று'' எனும் பகவத்கீதையின் எதிரொலியைக் கேட்கின்றோம். எளிமை உணர்வு, துன்பப்படுவோரின் மூச்சுத்திணறல்கள், தாஸ்ய பக்தியின் சிறப்பான வெளியீடு, ஆகியன, மகத்தான இந்த நூலின் ஒவ்வொரு

வரியிலும் பதிவாகியுள்ளதைக் காணலாம்... வண்டிக் கணக்கில் மட்டமான நாவல்களையும், நாடகங்களையும் படிக்கும் வங்கமொழி வாசகர்கள் தங்கள் நேரத்தில் நூற்றில் ஒரு பங்கையாவது, குறைந்த அளவு, இந்த நூலைப் படிக்க ஒதுக்குவார்கள் என நம்புகிறோம்.'' [பிரபுத்த பாரதா. சனவரி, 1930, ப. 3—4]

இந்த நூலைப் பற்றிய சுவாமிஜியின் கருத்தை, 1889-இல் அவர் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தின் பின்வரும் பகுதியில் அறிகின்றோம்.

''தங்களுக்கு இந்தப் புத்தகத்தைத் தபாலில் அனுப்பியிருக்கிறேன். இது ஓர் அற்புதமான புத்தகம் துறவு, வைராக்கியம், தாஸ்யபக்தி ஆகியன கிறிஸ்துவர்களிடையே விளங்குவதை அறிய ஒருவர் வியப்புறுவார். இந்த நூலைத் தாங்கள் அன்பு கூர்ந்து படிக்கவும்; அது எனக்கு மகிழ்ச்சி தரும்.''

இந்தியாவில் கிறிஸ்துவ மிஷனரிகள் செயற்பாட்டை சுவாமிஜி விளக்கியது, சர்வமத சபையில் பலர் கவனத்தைக் கவர்ந்தது. குறிப்பாக பட்டினியால் வாடும் இந்துக்களுக்கு மிஷனரிகள் உதவி செய்ய முற்படும் பொழுது, மத மாற்றத்தில் குறியாய் இருப்பதை சுவாமிஜி அம்பலப் படுத்தியது கிறிஸ்துவர்கள் மனசாட்சியை தட்டி எழுப்பியது. சர்வமத சபையின் பதினோறாவது நாள் கூட்டத்தில் பிஷப்கேனே குறிப்பிட்ட பின்வரும் கருத்து சுவாமிஜியின் பேச்சிற்குக் கிடைத்த வெற்றியெனலாம்.

''பட்டினி கிடக்கும் இந்துக்கள், தங்கள் மனசாட்சியையும், நம்பிக்கையையும் இழக்க வேண்டிய நிலையில் அவர்களுக்கு இரக்கம் காட்டுவதாக நடிக்கும் மிஷனரிகள் மீதான கண்டனத்தை நான் ஒப்புதல் அளித்து ஏற்கின்றேன்.'' சர்வமத சபை தலைவர் பரோஸ் நூலில் குறிப்பிடப் பெற்ற முற்கூறிய கருத்தை மேரி லூயிஸ் பர்க் தமது நூலில் எடுத்தாண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வமத சபையின் பன்னிரண்டாம் நாள் கூட்டத்தில் செப்டம்பர் 22-இல் ''மிஷனரிகள் வழிமுறைகள் மீதான விமர்சனமும், விவாதமும்'' எனும் தலைப்பில் அன்றைய நாள் முழுவதும் ஒதுக்கப்பட்டது. கீழை நாடுகளின் சார்பில் தம்மபாலரும், ஜி. நரசிம்மாசார்யாவும் பிரதி நிதித்துவம் ஏற்றனர். மிஷனரிகள் சார்பில் ராபர்ட் ஹ்யூம், ஜார்ஜ் கேண்ட்லின் என்பவர்கள் பிரதிநிதிகளானார்கள். கீழை நாடுகளில் கிறிஸ்துவ திருச்சபை முன்னேற்றம் காணவேண்டுமானால் கீழை நாட்டுச் சமயங்களைப் புரிந்துக் கொள்ளவும், சகிப்புத் தன்மையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என தம்மபாலர் குறிப்பிட்டார். நரசிம்மாசாரியார் பேசும் பொழுது, ''இந்துக்களை மதமாற்றம் செய்தல்' என்பது ''மிஷனரிகள் வெற்றி, எனக் கருதப்பட்டால் அவர்கள் பணி தோல்வியுற்றது'' எனக் குறிப்பிட்டார். ஜார்ஜ் கேண்ட்லின் சைனாவைச் சார்ந்த 'மிஷனரி' எனும் பொறுப்பில் தம்மபாலரை மறுத்துப் பேசினார். இந்திய மிஷனரி சார்பில் ஹியூம் பேசிய பொழுது, ''நாங்கள் தவறுகள் செய்திருக்கிறோம். கீழை நாட்டு சமயங்களை மேலும் அறிவுபூர்வமாகவும், தொடர்ந்தும் கற்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறோம்'' என்று கூறினார்.

இந்தக் கூட்டத்தில் சுவாமிஜி கலந்துக் கொள்ள முடியவில்லை. ஏன் எனில் அன்று அவர் வேறொரு இடத்தில் நடைபெற்ற விஞ்ஞானப் பகுதி அமர்வில் கலந்துக் கொண்டார்.

## ஐந்தாவது சொற்பொழிவு

''புத்த சமயம், இந்து சமயயத்தின் நிறைவு'' Buddhism The Fulfilment of Hinduism'' என்பது சொற்பொழிவின் பொருளாகும். இந்தப் பொழிவு செப்டம்பர் 26-இல் நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சமயப் பிரதிநிதி என்ற நிலையில் தம்மபாலர் பௌத்த சமயத்தை விளக்கிப் பேசியிருந்தாலும், இந்து சமயப் பிரதிநிதியாக சுவாமி விவேகானந்தர் புத்த சமயத்தை ஒரு புதிய கண்ணோட்டத்தில் வரலாற்றுப் பரிமாணத்துடன் விளக்கினார். இந்தப் புதிய கண்ணோட்டமும் புதிய பரிமாணமும் அவருக்கு வெறும் ஏட்டுப் படிப்பில் பெற்ற பௌத்த சமயப்புலமையால் மட்டும் வாய்த்ததன்று. குழந்தைப் பருவம் முதற்கொண்டே புத்தரிடம் அவர் கொண்ட ஆழ்ந்த ஈடுபாடும், ஒரு காரணமாகும். அவர் கண்ட முதல் தெய்வீகக்காட்சி புத்தரே.

## குழந்தைப் பருவத்திலே

நாள்தோறும் தூங்குவதற்கு முன்பு குழந்தை நரேந்திரன் வியப்பிற்குரிய ஒளிக்காட்சியைக் கண்டார். இரு புருவங்களுக்கிடையே பல வண்ண ஒளிச் சுழற்சியிலே வட்டவடிவமான பந்து ஒன்று பெரிதாகி, பெரிதாகி வெடித்துச் சிதறி வெள்ளை நிறத்தில் மேனி முழுவதையும் குளிப்பாட்டிவிடுமாம். இந்த ஒளிக்காட்சியை பார்த்துக் கொண்டே குழந்தை நரேந்திரன் உறக்கத்தில் ஆழ்ந்து விடுவாராம். இந்த நிகழ்வு, தம்மைப் போல் பிற குழந்தைகளிடமும் நிகழும் என நினைத்துக் கொண்டிருந்தார், நரேந்திரன். ஆனால், அவருடைய தோழன் ஒருவன் அத்தகையக் காட்சியை எப்பொழுமே கண்டதில்லை என்று கூறியதைக் கேட்டு, வியப்புற்றார், நரேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு குருதேவர் ராமகிருஷ்ணபரமஹம்சர் ''குழந்தாய் நரேன், நீ தூங்கச் செல்லும்பொழுது ஒளிக் காட்சியைக் கண்டாயா?'' என்று கேட்டார். இயற்கையிலே அமைந்த உள்ளார்ந்த தியானப் பழக்கத்தால் ஆன்மிக, தெய்வீகக் காட்சி தோன்றும் என்பதை சுவாமி விவேகானந்தரிடம், குருதேவர் கண்டறிந்தார். இந்த ஒளிக்காட்சி, சுவாமி விவேகானந்தர் வாழ்க்கை இறுதி வரையில் இருந்தது; ஆனால், பிற்காலத்தில் இந்தக் காட்சியின் தீவிரமும், ஒழுங்கமைவும் இல்லாதொழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூழலில், விளையாட்டுப் பருவத்திலே ஓர் அறையிலே ஆழ்ந்த தியானத்தில் உறைந்திடும் வழக்கத்தைப் பெற்றிருந்தார், நரேந்திரன். ஒருசமயம், சுடரொளி வீசுகின்ற ஒருவர் அமைதி தவழும் முகத்தோற்றத்துடன், கரங்களில் துறவிக்குரிய தண்டத்தையும், கமண்டலத்தையும் ஏந்திக்கொண்டு வரும் தெய்வீகக் காட்சியைக் கண்டார். அந்தத்தோற்றம், நரேந்திரனிடம் ஏதோ சொல்வதற்கு முற்பட்டபொழுது, நரேந்திரன் பயந்துபோய் அறையைவிட்டு வெளியே ஓடிவந்துவிட்டார். பிறகு, அவ்வாறு வந்தத் தோற்றம் புத்தரின் தெய்வீகக் காட்சி என நினைத்தார். ஆகவே, சுவாமி விவேகானந்தா, இளைஞன் நரேந்திரனாக இருந்த காலத்தில், முதன் முதலில் கண்ட தெய்வீகக் காட்சி, புத்தரே என்பது தெளிவாகின்றது. இளம் வயதிலேயே மனதில் பதிந்த இந்த அரிய ஆன்மிக அனுபவக் காட்சி, சுவாமிஜியிடம் பெருங்கருணையுள்ளம் உருவாகி வளர்ந்தோங்கச் செய்திருக்கலாம் என சுவாமிஜியே பிற்காலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குருதேவரின் சீடரான பிறகு, சகோதரச் சீடர்களுடன் தியானத்தைப் பற்றிய விவாதத்தில் பகவான் புத்தரைப் பற்றிய முக்கியப் பேச்சாளராக விவேகானந்தர் விளங்கினார் என அவருடைய வாழ்க்கை வரலாற்று நூலில் இருந்து அறிகின்றோம். ஒரு சமயம் 1886-இல் விவேகானந்தர், சகோதரச் சீடர்களான சிவானந்தா, அபேதானந்தாவுடன் புத்த கயா சென்று போதிமரத்தின் அடியில் தவத்தில் ஈடுபட்டார். ஒரு சமயம் தவத்தின் பொழுது கண்களில் நீர்ப் பெருக்குடன் அருகில் அமர்ந்திருந்த சிவானந்தர் மீது தமது கரத்தை வைத்தார்! உணர்ச்சிப் பெருக்கில் தழுவினார். சிவானந்தர் வியப்புற்று, விவேகானந்தரிடம் காரணமறியக் கேட்டார். ''தாம் தியானம் செய்யும் பொழுது, புத்தரின் மேன்மை மிக்கப் பண்பு, வியப்பிற்குரிய கருணை உணர்வு, அவருடைய மானுடம் சார்ந்த போதனைகள், பௌத்த சமய மந்திரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலால் பிற்கால வரலாற்றில் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றம் முதலானவை யாவும் பல்வண்ணக் காட்சிக் கருவியில் தோன்றும் ஒளிமிக்கப் படங்களின் தெய்வீகக் காட்சியாக என்னுள் எழுந்தது. என்னால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை'' என விவேகானந்தர் தமது அற்புத அநுபவத்தை சிவானந்தரிடம் விண்டுரைத்தார்.

குருதேவருடனும் புத்தரைப் பற்றிக் கலந்துரையாடியுள்ளார், சுவாமிஜி. இவ்வாறு பல குறிப்புகள் சுவாமிஜி வாழ்க்கை வரலாற்றில் கூறப்பட்டுள்ளன.

தமக்கு முற்பட்ட இந்து சமய ஆசார்யர்களில் ஆதிசங்கரரைப் போல் சுவாமிஜி பௌத்த சமயத்தை முற்றிலும் நிராகரிக்கவில்லை. இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் ஆயிரம் ஆண்டுகளாக பௌத்த சமயம் செய்த சாதனைகளை, இந்து சமயப் பண்பாட்டின் ஓரங்கமாக ஏன் ஏற்கக் கூடாது என்பது சுவாமிஜியின் கேள்வியாகும். பௌத்த சமய சாதனைகளை மறுப்பதில் சிறிதளவே காரணம் உள்ளது என்றும் கருதினார். பௌத்த சமயக் கருணை உணர்வை இந்து சமயத்தில் ஊடுருவச் செய்து பரப்ப வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

சுவாமிஜியின் பௌத்த சமய ஈடுபாட்டை விளக்குமிடத்தில் மேரி லூயிஸ்பர்க் அம்மையார் பின்வரும் கருத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

''பௌத்த சமயத்தின் மகாயானப் பிரிவுடன் சுவாமிஜி தம்மை அடையாளங் காட்டிக் கொண்டார் என்பது யாவரும் அறிந்ததே. மகாயானம், ஹீனயானத்தின் சூன்யவாதக் கொள்கைகளை எதிர்ப்பதுடன், ஹீனயானம் அதனைப் பின்பற்றுவோரிடையே சூனியவாதம் வளர்த்த சுயநலப்போக்கையும் எதிர்த்தது... ஹீனயானத்தைக் காட்டிலும், மகாயானம் புத்தருடைய மானுட நேயத்தைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது என்று சுவாமிஜி கூறுவார். மிகவிரிந்த உணர்வான, அனைவரையும் தழுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவுணர்ச்சியான மானுட நேயம் இந்து சமயத்திற்கு தேவைப்படுவதாகும் என்றும் சுவாமிஜி கருதினார்''

பௌத்த சமயத்தை, இந்து சமயத்தில் இருந்து பிரித்தெடுப்பதை சுவாமிஜி விரும்பவில்லை. ''ஒரு சாதிக்குள் கட்டுப்பட்டிருந்த உபநிடதங்கள் கூறும் சமயத்தின் மூடிய கதவுகளை உடைத்தெறிந்து பெருவழி கண்டவர் புத்தர்'' எனச் சாற்றியுள்ளார் சுவாமிஜி. [Complete Works—Vol: 6 P. 225]

1897-இல் இந்தியா திரும்பியதும், சென்னையில் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதியில் பச்சையப்பன் மண்டபத்தில் ''இந்தியப் பெரியோர்கள்'' எனும் தலைப்பில் பேசிய பொழுது, புத்தரை, கிருஷ்ணருடன் ஒப்பிட்டு பின் வருமாறு பேசினார், சுவாமிஜி.

''அவரை நாம் கடவுளின் அவதாரமாக வணங்குகிறோம். உலகம் அதுவரை கண்டிராத உயர்ந்ததொரு நீதி மார்க்கத்தை உலகிற்கு எடுத்துரைத்த உன்னதமான மகாபுருஷர் அவர். மகத்தான கர்மயோகியாக விளங்கினார், அவர். ஸ்ரீ கிருஷ்ணனே தம்முடைய உபதேசங்களை வாழ்க்கையில் நடத்திக் காட்ட மறுபடியும் தோன்றிய மாதிரி இருந்தது, அவருடைய வாழ்க்கை. கீதையின் மூலம் உபதேசம் செய்யப் பெற்ற அதே வாக்குகள் மறுபடியும் புத்தர் பெருமான் திருவாயிலிருந்து தோன்றின. 'ஆத்மிகத் துறையில் சிறிய முயற்சி கூட மரண பயத்திலிருந்து காப்பாற்றும். பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் முதலிய எல்லோருக்கும் கடவுள் தன்மையென்ற யாவற்றிலும் உயர்ந்த பதவியை அடைய உரிமையுண்டு. தம் பாச பந்தங்களை உடைத்தெறிந்து, உயர்ந்த ஆத்மிக நிலையை அடைய அனைவருக்கும் உரிமை யுண்டென்று 'கீதையில் சொல்லப்பட்ட வாக்கு, புத்தர் உபதேசங்களிலும் காணப்படுகிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சமயம் எவ்வளவு மகத்தானதாக இருந்த போதிலும், அது நமது சமயம் பெற்றெடுத்த கிளர்ச்சி காரக் குழந்தை.'' [Ours is the Religion of which Buddhism with all It's Greatness is a Rebel Child].

இந்தக் கருத்தை 1897-இல் சென்னையில் திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கத்தில் பேசிய கூட்டத்தில் தெரிவித்தார்.

சிகாகோ சர்வமத சபையில் பௌத்த சமயம் குறித்துப் பேசுவதற்கு முன்பு தமது அருமைச் சீடர் அழகிய சிங்கப் பெருமாளுக்கு அமெரிக்காவில் இருந்து ஆகஸ்ட், 1893-இல் எழுதிய ஒரு கடிதத்தில் எழுதியதாவது :

''மதத்தை அழிக்காமல், இந்து சமயத்தின் மகத்தான போதனைகளுடன் இணைந்து வியப்பிற்குரிய பரிவு உணர்ச்சியால் தருக்க ரீதியாக வளர்த்த இந்து சமயம், பௌத்த சமயம்.''

இவ்வாறு கடிதம் எழுதிய ஒரு மாதத்திற்குப்பிறகு சிகாகோ சர்வமத சபையில், ''புத்த சமயம், இந்து சமயத்தின் நிறைவு'' எனும் தலைப்பில் பேசினார், சுவாமிஜி. அதில் ஒரு பகுதி, பின்வருவது.

''புத்தரைப்பற்றி நாங்கள் கொள்ளுகின்ற கருத்து எதுவெனில் அவருடைய போதனைகள் அவருடைய சீடர் களாலேயே சரிவர அறிந்துக் கொள்ளப்படவில்லை என்பதுவேயாம். வேதங்களிற் கூறப்படும் சமயமாகிய இந்து சமயத்துக்கும், இக்காலத்தில் பௌத்த சமய மென்று சொல்லப்படும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு யூதமதத்திற்கும் கிறிஸ்துவ மதத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை ஒத்தது. இயேசுகிறிஸ்து யூதராயிருந்தார். சாக்கியமுனி இந்துவாயிருந்தார். யூதர்கள் இயேசு கிறிஸ்துவைத் தள்ளிவிட்டார்கள்; சிலுவையில் அறைந்து விட்டார்கள். இந்துக்கள் சாக்கிய முனியைத் தெய்வ மெனக்கொண்டு அவரை வழிபடுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இக்காலத்து பௌத்த சமயத்துக்கும், புத்தர் பெருமானுடைய போதனைகள் என இந்துக்களாகிய எங்களாற் கொள்ளப்படுவனவற்றுக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடுகளாவன : சாக்கியமுனி புதியதாக ஒன்றையும் போதனை செய்யவில்லை. இயேசுநாதரைப் போல் அவரும் அழிப்பதற்கு அன்று, நிறைவேற்றுவதற் காகவே வந்தார். பழையோராகிய யூதர்கள், இயேசு நாதரைப் புரிந்துக்கொள்ளவில்லை. புத்தர் விஷயத்தில் அவரைப் பின்பற்றுவோர்கள், அவருடைய போதனை களின் கருத்துகளை உணரவில்லை.

''பழைய ஏற்பாட்டின் நிறைவுபேற்றினை யூதர்கள் புரிந்துக் கொள்ளாததுபோல, இந்துசமய உண்மைகளின் நிறைவுப்பேற்றினைப் பௌத்தர்கள் புரிந்துக்கொள்ள வில்லை. சாக்கியமுனி அழிக்க வரவில்லை; நிறைவு செய்ய வந்தாரென்று மீண்டும் சொல்லுகிறேன். இந்து சமயத்தின் தருக்கரீதியான முடிவு, தருக்கரீதியான வளர்ச்சியின் நிறைவாக அவருடைய போதனைகள் அமைந்தன.''

இந்து சமயத்தின் அடித்தளத்தை, வேதங்களில் காண வேண்டும் என சுவாமிஜி வலியுறுத்தியவர். ''வேதங்களின் முன்னிலையில் நம் சண்டைகள் அனைத்தும் முடிவிற்கு வரவேண்டும்; அவைதான் ஆத்மிகத்துறையில் நமக்கு முடிவைக் கூறும் உயர்ந்த அதிகாரம் பெற்று விளங்கு கின்றன'' என சுவாமிஜி ''இந்து மதத்தின் அடிப்படை யான கொள்கைகள்'' எனும் தலைப்பில் இந்தியாவில், லாகூரில் பேசிய பொழுது குறிப்பிட்டார். ஆகவே, பௌத்த சமயத்தினர் வேதங்களை எதிர்த்ததை சுவாமிஜி பின்வருமாறு சர்வமத சபையில் விமர்சனம் செய்தார் :

''தத்துவ ஆராய்ச்சியில் புத்தர் பெருமானின் சீடர்கள் நித்தியமான வேதங்களாகிய மலைகளை மோதினார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை நொறுக்க முடியவில்லை. மற்றொரு பக்கத்தில், நாட்டில் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் மிக விரும்பிப் பற்றிக் கொண்டிருந்த நித்தியமாகிய கடவுளைக் குறித்த நம்பிக்கையை எடுத்துவிட்டார்கள். இதன் விளைவாக இந்தியாவில் பௌத்த சமயம் இயல்பாகவே அழிந்து விட்டது.''

எப்பொழுதுமே ஒருங்கிணைப்பை வலியுறுத்துவதில் முனைப்பு காட்டும் சுவாமிஜி, பௌத்த சமய, இந்து சமய பரஸ்பர உறவிற்கு வழிகாண பின்வரும் கருத்தையும் சர்வமத சபையில் எடுத்துரைத்தார்.

''பிராம்மண சமயமும், சீர்திருத்த ஆர்வத்தை இழந்து விட்டது. அதிசயத்தக்க பரிவு, யாவரிடமும் அன்பு செலுத்துதல் எனும் அற்புத நலங்களை இழந்து விட்டது. இந்த நலங்கள் பௌத்த சமயத்தினால் இந்தியப் பொது மக்களுக்கு வழங்கப் பெற்றவை......... பௌத்த சமய மின்றி, இந்து சமயம் வாழவியாலாது. இந்து சமயமின்றி பௌத்த சமயம் வாழவியலாது. இவ்விரு சமயமும் பிரிந்து நிற்பது காரணமாக எந்த உண்மை உணர்த்தப்படுகிற தெனில், பௌத்தர்கள், பிராம்மணர்களின் அறிவாற்ற லையும், தத்துவ ஆராய்ச்சியுமின்றித் தனித்து நிற்றல் கூடாததுபோல, பிராம்மணர்களும் பௌத்தர்களுடைய இதயமின்றி தனித்து நிற்கமாட்டார்களென்னும் உண்மை இங்கு உணர்த்தப் படுகின்றது. பௌத்தரும், பிராம்மணரும் பிரிந்ததே இந்தியாவினுடைய வீழ்ச்சிக்குக் காரண மாயிற்று......... பிராம்மணனுடைய அற்புதமான புத்தி சாதுரியத்துடன், புத்தர் பெருமானின் அற்புதமான மனிதத் தன்மையை உண்டாக்கும் சக்தி, மேன்மை மிக்க ஆன்மா, பேருள்ளம் ஆகியனவற்றை இணைத்து ஒன்று படுவோமாக.''

சுவாமி விவேகானந்தரையும், புத்தர் பெருமானையும் இணைத்து சிந்தித்து, சுவாமி ரங்கநாதானந்தா கூறியுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வரும் கருத்து, மேற்காணும் சொற்பொழிவின் உயிரோட்டத்தை உள்ளவாறு புரிந்துக் கொள்ள உதவுகின்றது.

''அவருடைய பேச்சுகளிலும், உரையாடல்களிலும் சங்கரரின் மகத்தான அறிவாற்றலையும், புத்தரின் பேருள்ளத்தையும் இணைத்துக் கொள்ளும் சக்தி தற்கால இந்தியாவிற்குத் தேவைப்படுகின்றது என்பதை அவர் மிக அழகாக விளக்கியுள்ளார்......நம்முடைய காலத்தில் சமூக நலிவுகளுக்கு எல்லாம் மூலகாரணம் எது என்பதை சுவாமிஜி சுட்டிக்காட்டினார்...இதை பௌத்த உணர்வை நாம் கைவிட்ட காலத்தில் இருந்து தேடவேண்டும். சொல்லிலும் செயலிலும் புத்தருடைய மகத்தானப் பண்பாட்டை நாம் நமது உள்ளங்களில் ஏற்கவேண்டும்.''

பௌத்த சமயத்தத்துவங்கள் சிலவற்றுடன் குறிப்பாக வேத சமய எதிர்ப்பு, அனாத்மவாதம் முதலானவற்றுடன் தாம் மாறுபடுவதை பகிரங்கமாக சுவாமிஜி பிரகடனப் படுத்தினர். அதே சமயத்தில் ஆண்மை, அச்சமின்மை, பெருங்கருணை, மானுடநேயம், சீர்திருத்த வேட்கை, தியாகவுணர்வு, ஒழுக்க மேம்பாட்டை சமரசமற்ற வகையில் வலியுறுத்துதல் முதலானவற்றைக் கொண்ட புத்தர் பெருமானின் ஆளுமையை வழிபட்டார், சுவாமிஜி.

## சர்வமத சபையின்
## இறுதிக் கூட்டச் சொற்பொழிவு

1893 செப்டம்பர் 11-இல் தொடங்கி பதினேழாவது நாளில் செப்டம்பர் 27-இல் சர்வமத சபையின் கடைசிக் கூட்டம் நிகழ்ந்தது. இந்தக் கூட்டத்திலும் எவ்விதக் குறிப்புகளையும் எழுதி வைத்துக் கொள்ளாமல் பேசினார், சுவாமிஜி. பிற பேச்சுகளில் இழையோடிய சர்வசமய சமரச நோக்கு இறுதிக் கூட்டப் பேச்சிலும் இழையோடியது. சர்வமத சபையின் இலட்சியத்தை முற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலித்து, தமக்கே உரிய முறையில், சுவாமிஜி விளக்கியதுடன், வாய்ப்பளித்தமைக்கு இதய பூர்வமான நன்றியறிதலையும் தெரிவித்தார்.

சர்வமத சபை வெற்றி பெற்றுவிட்டதாக நன்றியுரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டார், சுவாமிஜி. சர்வமத சபையில் நிகழ்ந்த சொற்பொழிவுகளில், ஆதார சுருதியான சர்வசமய சமரசத்திற்கு மாறுபாடாக "சில "அபஸ்வரங்கள்" அவ்வப்பொழுது ஒலித்தாலும் அவற்றுக்கும் எனது நன்றி உரியதாகுக" எனக் குறிப்பிட்டார். ஏனெனில், "மாறுபட்டு ஒலித்த அபஸ்வரங்கள் பொதுவான ஒற்றுமைப் பாங்கை மேலும் இனிமையுறச் செய்து விட்டன" என்றும் விளக்கினார்.

சமய ஒற்றுமை என்பது ஒரு சமயத்தின் வெற்றியிலும், மற்றொரு சமயத்தின் அழிவிலும் தோன்றுவதன்று என்பதை மீண்டும் வலியுறுத்தினார். சமயம் தோன்றுவது எப்படி என்பதை மிக நுட்பமாக பின்வருமாறு விளக்கினார்.

"விதை பூமியிலே ஊன்றப் படுகின்றது. மண்ணும் காற்றும் நீரும் அதனைச் சூழ்ந்திருக்கின்றன. விதையானது மண் அல்லது காற்று அல்லது நீராகின்றதா? இல்லை. அது ஒரு செடியாகின்றது. தனக்குரிய வளர்ச்சி விதிக்கு ஏற்ப வளர்ச்சி பெறுகின்றது. காற்றையும், மண்ணையும், நீரையும் ஒன்று சேர்த்து, அவற்றை தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக்கி ஒரு செடியாய் வளருகின்றது. இவ்வாறே சமயம் தோன்றி வளர்கின்றது. அவ்வாறே கிறிஸ்துவர், இந்துவாகவோ; பௌத்தர், கிறிஸ்துவராகவோ மாற வேண்டியதில்லை. ஒவ்வொரு சமயமும், மற்ற சமயங்களின் மெய்ப்பொருளை உட்கொண்டு, அதே சமயத்தில் தன்னுடைய தனித்தன்மைகளைப் பாதுகாத்துக் கொண்டு, வளர்ச்சி விதியின்படி வளர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சமயங்கள் வரலாற்றிலேயே முற்போக்கான மாபெரும் திருப்பத்தைத் தந்த சர்வமத சபையில் கலந்துக் கொண்டு விடைபெறுவோர் மனதில் கொள்ள வேண்டிய அடிப்படையானக் கருத்திற்கும் சுவாமிஜி, தமது சொற் பொழிவின் இறுதியிலே, பின்வருமாறு விளக்கமளித்தார்:

''சர்வமத சபை உலகத்திற்கு ஏதேனும் சுட்டிக் காட்டியது என்றால், அது, இதுதான்: புனிதத்தன்மை, தூய்மை, இரக்கம் ஆகியன உலகில் எந்த ஒரு சமய அமைப்பின் உடமைகள் அல்ல என்பதை இந்தச் சபை மெய்ப்பித்துள்ளது. ஒவ்வொரு சமய அமைப்பும் மிக் குயர்ந்த ஒழுக்கமுடைய ஆடவரையும், பெண்டிரையும் அளித்துள்ளன. இந்தச் சான்று இவ்வாறாக இருக்கா, தனது சமயம் மட்டும் தனித்துப் பிழைத்திருக்க, பிற சமயங்கள் அழிந்துவிடுமென எவரேனும் பகற்கனவு காண் பாராயின், அவருக்கு எனது மனப்பூர்வமான இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''உதவி செய், சண்டையிடாதே; ஒன்றுபடுத்து' அழித்துவிடாதே; சமரசமும், அமைதியும் வேண்டும் கருத்து வேறுபாடு வேண்டாம்'' என்பதை ஒவ்வொரு சமயமும் தனது கொடியில் விரைவில் எதிர்ப்பிற்கிடையே எழுதும் என்பதை நான் அவருக்குக் சுட்டிக்காட்டுவேன்.''

சுவாமிஜியின் இந்தக் கடைசிப் பேச்சு, அதுவும் 'எவரும் மதம் மாற வேண்டியதில்லை' எனும் கருத்தை அவையில் எவ்வளவு பேர் ஏற்றுக்கொண்டிருப்பர் என்பது கேள்விக் குரியது. சுவாமிஜியின் இந்த இறுதி உரையைப்பற்றி சபைத்தலைவர் பரோஸ் கூறிய பின்வரும் கருத்து, கேள்விக்குறியை விளக்குகின்றது.

''சபையில் விவேகானந்தரின் உரை எப்பொழுதும் ஆர்வமுடன் கேட்கப்பட்டது. ஆனால், அவர் இறுதியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும்பொழுது வெளிப்படுத்திய உணர்வுகள் சிறிதளவே ஒப்புதல் பெற்றது.''

பரோஸ் இவ்வாறு கருதியபோதிலும், மக்கள் வேறு விதமாகக் கருதியதாக மேரிலூயிஸ் பர்க் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஓர் ஆதாரமாக 'கிரிடிக்' (Critic) என்னும் இதழ் (அக்டோபர் 7, 1893), சுவாமிஜியின் உரையை வெளியிட்டு, தெரிவித்த கருத்துகளை பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார்.

''சபையின் குறிக்கோளை இந்து சந்யாசிபோல, அளவுடனும், கேட்பார் பிணிக்கும் நேர்த்தியுடனும் வேறெவரும் திறமையுடன் எடுத்துரைக்கவில்லை. அவருடைய உரை முழுவதும் எழுதிக்கொள்ளப்பட்டது. நாவன்மைமிக்க பேச்சாளரான அவருடைய தாக்கம் எவ்வளவில் அவையில் அமைந்தது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர் தெய்வீக உரிமைபெற்ற நாவலர்; மஞ்சள், ஆரஞ்சு வண்ண ஆடைகளின் அழகுப்பின்னணியில் விளங்கிய அவருடைய அழுத்தமான அறிவுக்களை கொண்ட முகத்தோற்றத்திற்கு சற்றும் வித்தியாசப் படாத வகையில் அவருடைய உள்ளார்ந்த சொற்களும், செழிப்பு மிக்க இசையொழுங்குடன் கூடிய உரைத்திறனும் அமைந்தன. (மேனியழகும், சொல்லழகும் கூடிக் குலாவின.)

''...... அயல் நாட்டு மிஷனரிகளைப்பற்றி எழுந்த உணர்வுகள்தாம் சபையில் மிகவும் தெளிந்த பின் விளைவாயிற்று. ஆழ்ந்த புலமையும், விவேகமும் நிறைந்த கீழ்த்திசை வாணர்களுக்கு எடுத்துரைக்க, அரைகுறையாகப் படித்தத் துடுக்கத்தனமான சமயபோதக மாணவர்களை அனுப்புவதைப் பற்றி ஆங்கிலம் பேசும் அவையில் இதற்கு முன் அழுத்தம் திருத்தமாக மனதில் எவரும் பதியவைக்கவில்லை. சகிப்புத் தன்மையும், பரிவுணர்ச்சியும் கொண்டுதான் பிறருடைய சமய நம்பிக்கையைத் தொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு நமக்கு உரிமையுண்டு. இந்தப் பண்புகள் சமய போதனைச் செய்யச் செல்வோரிடையே அரிதாகவே உள்ளன.''

## வேறு சிலப் பொழிவுகள்

உலகச் சந்தைக் கண்காட்சியின் ஒரு பகுதியாக சர்வ மத சபை நடைபெற்றதைப் போல, விஞ்ஞானம் சார்ந்தப் பகுதியும் நடைபெற்றது. இதில் சுவாமிஜி கலந்துக் கொண்டுள்ளார். சுவாமிஜியின் சர்வ சமய சபை உரைகள் பத்திரிகைகளில் வெளியிடப் பெற்ற அளவிற்கு விஞ்ஞானம் சார்ந்த அவைப் பேச்சுகள் வெளியிடப்படவில்லை எனத் தெரிகின்றது.

சுவாமிஜியின் அனைத்து நூல் தொகுப்புகளில், எட்டாவது தொகுப்பில் சில விவரங்கள், விஞ்ஞானம் சார்ந்த அவைப் பேச்சுகள் தொடர்பாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

''சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரைகள் அனைத்தும் வெளியிடப்படவில்லை என்பதை வாசகர்கள் அறிந்தால், வியப்படைவார்கள். பல சொற்பொழிவுகள், குறிப்பாக விஞ்ஞானம் சார்ந்தப் பிரிவில் நிகழ்த்தப்பட்டச் சொற்பொழிவுகள் வெளிவர வில்லை. கொலம்பஸ் அரங்கில் ஒரே சமயத்தில் நடை பெற்ற பொது அரங்கில் இந்தப் பேச்சுகள் நிகழ்ந்தன.'' இவ்வாறு குறிப்பிடப்பெற்று, சுவாமிஜியின் சொற் பொழிவு விவரங்கள் பின் வருமாறு வழங்கப் பெற்றுள்ளன.

1. வைதிக இந்து சமயமும், வேதாந்தத் தத்துவமும்
—வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 22, 1893,
காலை 10-30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இந்தியாவின் நவீன சமயங்கள்

—வெள்ளிக் கிழமை, செப்டம்பர் 22, 1893, பிற்பகல் அமர்வு

3. பேசப் பெற்ற சொற்பொழிவுகளின் தலைப்புகள் பற்றி

—சனிக்கிழமை, செப்டம்பர் 23, 1893.

4. இந்து சமயத்தின் சாரம்

—திங்கட்கிழமை, செப்டம்பர் 25, 1893.

முதல் நாள் சொற்பொழிவைப் பற்றிய ஒரு குறிப்பு 'சிகாகோ டெய்லி இன்டர் ஓஷின்' எனும் பத்திரிகையில் (செப். 23, 1893) பின் வருமாறு வெளிவந்தது.

''நேற்று காலை விஞ்ஞானம் சார்ந்தப் பிரிவில், 'வைதிக இந்து சமயம்' எனும் தலைப்பில் சுவாமி விவேகானந்தர் பேசினார். மூன்றாம் மன்றத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. நூற்றுக் கணக்கான கேள்விகள் அவையோரால் கேட்கப்பட்டன. புகழ் பெற்ற சந்யாசியால் திறமையுடனும், தெளிவுடனும் அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டன. கூட்டத்தின் முடிவில், ஆவலுடன் கேள்வி கேட்டோர்கள் அவரைச் சூழ்ந்துக் கொண்டனர்; அவருடைய சமயத்தைப் பற்றி ஏதாவதொரு இடத்தில் பேசுமாறு வேண்டிக் கொண்டார்கள். ஏற்கனவே இந்தத் திட்டம் பற்றி தாம் யோசித்துக் கொண்டிருப்பதாக அவர் சொன்னார்.''

பரோஸ், தமது சர்வமத சபை நடவடிக்கைகள் பற்றிய நூலின் முதல் பாகத்தில் சுவாமிஜி பேசிய ஒரு கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'கீழை நாடுகளில் பெண்கள் நிலமை' என்னும் பொருளில் சிகாகோ மகளிர் மன்றத்தில் பேசியதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேச்சின் சுருக்கம், சிகாகோ டெய்லி இன்டர் ஓஷின் இதழில் (செப்., 23, 1893) பின் வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கீழ்த்திசை மகளிரின் தற்கால, எதிர்கால நிலைமையைப் பற்றி சுவாமி விவேகானந்தர், ஒரு தனிச் சிறப்புக் கூட்டத்தில், ஆய்வுரை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது: ஒரு நாட்டின் முன்னேற்றம் பற்றி அறிய உதவும் தெர்மா மீட்டர், அந்த நாட்டின் பெண்கள் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதுதான். பண்டைய கிரேக்கத்தில் ஆண்-பெண்ணிடையே தகுதியின் அடிப்படையில் முற்றிலும் வேறுபாடில்லை. பூரண சமத்துவக் கொள்கை நிலவியது. திருமணம் செய்து கொள்ளாமல் ஓர் இந்து குருமாராக இருக்க முடியாது. திருமணம் ஆகாத தனி மனிதன், அரை மனிதனாக பூரணத்துவ மற்றவனாகக் கருதப்பட்டான். பூரண பெண்மை என்பது, பூரண சுதந்திரத்தைக் குறிப்பதாகும். தற்கால இந்துப் பெண்மணி வாழ்க்கையின் மையக் கருத்து, அவளுடைய கற்பாகும். குடும்ப வட்டத்தின் மையம் மனைவி; இது அவளுடைய கற்பினால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. இந்தத் தீவிர மானக் கருத்தினால்தான் இந்து விதவைகள் உடன் கட்டை ஏறும் வழக்கத்தை மேற்கொண்டார்கள். உலகத்தில் உள்ள மற்றெந்தப் பெண்களைக் காட்டிலும், இந்துப் பெண்கள் மிகவும் ஆன்மிகமானவர்கள். மிகவும் சமயவுணர்வு உடையவர்கள். இந்த அற்புதமான குண நலன்களை காப்பாற்றி, அதே சமயத்தில் பெண்களுடைய அறிவாற்றலை வளர்த்தோமானால், எதிர்கால இந்துப் பெண்மணி, உலகத்தின் இலட்சியப் பெண்ணாகத் திகழ்வாள்.''

''கிழக்கிற்கு ஒரு செய்தியை புத்தர் கொண்டு சென்றது போல், மேற்கிற்கு நான் ஒரு செய்தி கொண்டு செல்கிறேன்'' எனக் கூறியதை சிகாகோ சர்வமத சபையில் உலகறியகச் செய்து விட்டார் சுவாமிஜி.

சுவாமிஜியை இயேசு கிறிஸ்துவுடன் ஒப்பிட்டு ஒரு கருத்து 1930-இல் 'ஆசியா' எனும் இதழில் வெளியிடப் பட்டது. நியூயார்க்கில் இருந்து வெளிவந்த இதழில் இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் சாதனையைப் பற்றி எழுதியதில் பின் வரும் கருத்தைக் குறிப்பிட்டார்.

''மேலை நாட்டு மக்களுக்கு தெய்வீகச் செய்தியை கிறிஸ்துவிற்குப் பிறகு கொண்டு வந்த முதல் கீழ்த்திசை வாணர் இவர்-'' [பிரபுத்த பாரதா, ஆகஸ்ட் 1930—ப. 410]

சிகாகோ சர்வ மத சபையில் கலந்துக் கொள்ள முடியுமா? எனும் கேள்விக்குறியை, ஒரு சமயம், எதிர் கொண்ட சுவாமிஜி, அந்தச் சபையின் குறியீடாகவே உருவகப்படுத்தப் பெற்று பாராட்டுகளை அள்ளிக் குவித்தார். இதுவும், தெய்வீகத் திருவிளையாடல்களில் ஒன்றாகும் என வியப்புறச் செய்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வ மத சபைக்குப் பிறகு

சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகளின் பண்பும், பயனும் ஆய்ந்தறிந்து மகிழத்தக்கன. இந்த ஆய்வில் முதலாவதாக எடுத்துக் கொள்ளப் படுவது அவருடைய புனிதமான நாவன்மையாகும்.

நாவன்மை

கிரேக்கத்தின் அறிஞர் அரிஸ்டாட்டல் மற்றும் சிலர் நாவன்மைக்கு முதல் அடிப்படையாக சொற்பொழிவாளரின் ஒழுக்க நியதியை வைத்தனர். உயிரினும் மேலான ஒழுக்கமும், ஆன்மிக அநுபூதியும் நிறைந்த சுவாமிஜியின் நாவன்மையிலே பிறக்கும் சொற்களுக்கு புனித சக்தி ஏற்படுவதால், கேட்போர் உள்ளங்களை கவர்ந்திழுக்கும் ஆற்றலைப் பெற்றன.

சுவாமிஜியின் நாவன்மைக்கு நலம் சேர்த்ததில் அவருடைய சங்கீதக் குரலுக்கு முக்கியப் பங்குண்டு. சுவாமிஜியை நேரில் அறிந்த அமெரிக்க நண்பர்கள் பலர் அவருடைய சங்கீதக்குரலை வயலின் ஸெல்லோ, பியானோ முதலான இசைக் கருவிகளுடன் ஒப்பிட்டுள்ளனர். குமாரி ஜோஸபைன் மெக்லியாட் என்பவர் ரோமன்ரோலந்திடம் பின்வருமாறு கூறியுள்ளார்.

''அவருடைய அருமையான குரல் வயலின் ஸெல்லோ இசைக்கருவியின் ஒலியைப்போல் இருக்கும்; ஒலியழுத்தம் இருக்கும்; ஆனால் மாறுபாடுகள் இருக்காது; ஆழமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையதிர்வுகள் மன்றத்தையும், உள்ளங்களையும் நிரப்பும்.''

ஜெர்மானிய இசை மேதைகளான பீதோவான், ஹண்டல் அமைக்கும் இசைக்கோவையைப் போன்றது சுவாமிஜியின் குரல், என ரோமான் ரோலாந்து பின்வருமாறு பொருட்செறிவு துலங்கக் குறிப்பிட்டுள்ளார்.

''His words are great music, phrases in the style of Beethoven, stirring rhythams like the march of Handel choruses.''

''அவருடைய பேச்சுகள், சங்கீதத்தைப் போன்றது; மானுட அன்பின் சங்கீதம்; மானுட ஒற்றுமையின் சங்கீதம்; மானுடத் தொண்டின் சங்கீதம்; ஒவ்வொருவரையும் எழுச்சியூட்டச் செய்யும்.'' இந்த வருணனை, சுவாமி ரங்கநாதானந்தா அவர்களுடையது.

சுவாமிஜி இன்னிசை வளம் மிக்கக் குரலை மட்டும் உடையவர் அல்லர்; சாஸ்த்ரீய ரீதியான இசைப்புலமையுடையவர்; இசைக் கருவிகளை வாசிக்கத் தெரிந்தவர். தமது தெய்வீ இன்னிசையால் குருதேவர் முதல் பலரைக் கவர்ந்தவர். இளம் வயதிலேயே நரேந்திரநாத்தத்தா எனும் பெயரில் மற்றொருவருடன் இணைந்து வங்க மொழியில் எழுதிய 'சங்கீத கல்பதரு' என்னும் நூலில் தாளம் சம்பந்தமான பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன.

சுவாமிஜிக்கு ஆங்கில மொழிப்புலமை, வெளியீட்டுத் திறன் ஆகியன அவருடைய நாவன்மைக்கு அணிகலன்களாக அமைந்தன. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர் பேசுவதுபோல பேசினார் என்று சுவாமிஜி பாராட்டப் பெற்றார்.

'மார்னிங் ஹெரால்ட்' என்னும் அமெரிக்கப் பத்திரிகையில் (அக்டோபர் 22, 1894) சுவாமிஜியின் ஆங்கில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப் பேச்சாற்றல் பின்வருமாறு பாராட்டப் பெற்றுள்ளது.

''அவருடைய பேச்சு எளிமையாக, தடங்கல் இல்லாமல் அமைந்தது. அவருடைய சொல்நடை முழு நிறைவானது; அவருடைய உச்சரிப்பு, ஆங்கில மொழியில் நன்கு தேர்ந்த இலத்தீன் இன பண்பாட்டு உறுப்பினர் உச்சரிப்பை ஒத்திருந்தது.''

சுவாமிஜி 1896 மார்ச் 23-இல் தமது அருமைச்சீடர் அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதிய கடிதத்தில், ''எனது வெற்றிக்குக் காரணமாய் இருப்பது எல்லோரும் விரும்பக் கூடியதாய் உள்ள எனது மொழி நடையேயாகும். போதகர் ஒருவருடைய மகிமை அவருடைய மொழியின் எளிய நடையிலேதான் உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

''தெய்வீக உரிமை வாய்ந்த நாவலர், அவருடைய இனத்தின் முன்மாதிரியான பிரதிநிதி. ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்ற அறிஞர், சர்வமத சபையில் பரபரப்பாகப் பேசப்பட்டவர்.'' இவ்வாறு புகழப்பட்டவர், சுவாமிஜி.

## பொருளறிவு

இளம் வயதில் கற்றுத்தேர்ந்த நூலறிவுப் புலமை, சமகால அரசியல், சமூக, பொருளாதாரத் தத்துவங்களைப் பற்றிய அறிவு, பலவிதமான சமய—பண்பாட்டு வரலாறுகளில் பெற்ற விஞ்ஞானபூர்வமான கண்ணோட்டம் முதலானவை அவர் எடுத்துக்கொண்டு பொருள் விளக்கமுற பேசுவதற்கு துணை நின்றன. அமெரிக்காவில் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்யும் பல அமைப்புகள் சுவாமிஜியை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டன.

சர்வமத சபையில் வேதசமயம், பௌத்தம், சமணம், கிறிஸ்துவம், இஸ்லாம், ஜராதுஷ்ட்ரமதம், யூதமதம் முதலான பல மதங்களையும், வேறுபல உட்பிரிவுகளையும் வேண்டிய இடங்களில் எடுத்துரைத்த ஆற்றல், அவரிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்த பொருளறிவின் ஆழ்ந்தகன்ற பரப்பை விளக்க வல்லதாகும்.

சிகாகோவிலும், பிற இடங்களிலும் பேசுவதற்குரிய பொருள்களைத் தேர்ந்தெடுப்பதில் தமக்கேற்பட்ட அநுபவங்களை சுவாமிஜி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''சிகாகோவிலும், பிறநகரங்களிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபொழுது, ஒவ்வொரு வாரமும் பத்து, பதினைந்து அல்லது அதற்கும் மேலான சொற்பொழிவுகளை ஆற்ற வேண்டியிருந்தது. அளவிற்கு அதிகமான இந்தக் கடும் முயற்சிகளால் என் உடலும், உள்ளமும் ஓரளவு பாதிக்கப் பட்டன. சில சமயங்களில் பேசுவதற்கு வேண்டிய செய்திகள் தீர்ந்துவிட்ட மாதிரி இருக்கும். அடுத்து புதிய தலைப்புகளைத் தேட வேண்டியிருந்தது. ஒருநாள் பேசி முடித்தபிறகு, அடுத்த நாளில் எந்தப் பொருளில் பேசப் போகிறோம் என நினைத்துக்கொண்டே தூங்கிப்போய் விடுவேன். இந்த நிலையில் என் பக்கத்தில் யாரோ ஒருவர் நின்றுக்கொண்டு உரையாற்றிக் கொண்டிருப்பதைப்போல் கேட்டேன். புதியக் கருத்துகள், புதிய சிந்தனை யோட்டங்கள் பல கிடைத்தன. இவற்றை மிக அபூர்வ மாகவே என் வாழ்க்கையில் கேட்டும், நினைத்தும் இருப்பேன். விழிப்புற்றதும் அவற்றை நினைவு கூர்ந்தேன்; என் சொற்பொழிவுகளில் திரும்பவும் எடுத்து வழங்கினேன். இத்தகைய உணர்வுக் காட்சிகள் எவ்வளவு நிகழ்ந்தன என்பதை என்னால் கணக்கிட்டுக் கூறவியலாது.

''படுத்துக் கொண்டிருக்கும்போது பலப்பல நாட்களில் இத்தகைய உரைகளை கேட்டிருக்கின்றேன். சில சமயங் களில் இந்த உரைகள் உரத்த குரலில் ஒலிக்கும். அப்பொழுது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கேட்டு, அடுத்தநாள் என்னிடம், ''நேற்றிரவு யாருடன் உரக்கப் பேசிக் கொண்டிருந்தீர்கள், சுவாமிஜி'' எனக் கேட்பார்கள். எப்படியோ, இந்தக் கேள்வியை நான் தவிர்த்து விடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ! எத்தகைய உணர்வுக் காட்சி, அது! [சுவாமிஜியின் அனைத்து நூல்கள், தொகுதி 7, ஆங்கிலம், ப. 124.]

மேற்கண்டவாறு சுவாமிஜி கூறியதைக் கேட்ட ஒரு சீடர், சூட்சம சரீரத்தில் (நுண்ணுடலில்) சுவாமிஜி பேசியது, சில சமயங்களில் ஸ்தூல சரீரத்தில் (பரு உடலில்) எதிரொலித்திருக்கும், எனக் குறிப்பிட்டார். 'அவ்வாறு இருக்கலாம்' என சுவாமிஜி பதிலளித்தார்.

புதிய, புதிய எண்ணங்களை, புதிய, புதிய செய்திகளை வெளியிட வேண்டும் என சுவாமிஜி அவாவியதை மேற் காணும் விளக்கத்தில் அறிய முடிகின்றது.

## இங்கர்சாலுடன் சந்திப்பு

அமெரிக்காவில் நாவன்மை படைத்து பேச்சின் மூலம் நிறைய பணம் ஈட்டிய ராபர்ட் இங்கர்சால் (1833-1899) அவர்களை சுவாமிஜி சந்தித்துள்ளார். ராபர்ட் இங்கர்சால் ஒரு வழக்கறிஞர். பைபிளைக் கடுமையாக விமர்சனம் செய்தவர்; மானுட நேயத்தத்துவத்தைப் பிரசாரம் செய்தவர். விஞ்ஞானபூர்வமான பகுத்தறிவாதி. கிறித்துவ சமய மூடநம்பிக்கைகளைச் சாடியவர். ஒரு மாலைப் பொழுது சொற்பொழிவிற்காக 3500 டாலர் பணம் பெற்றுக் கொண்டு வந்தவர். இவருடன் சுவாமிஜி பல சந்தர்ப்பங்களில் சமயத்தத்துவங்களைப் பற்றி விவாதித் துள்ளார்.

சுவாமிஜி வெளிப்படையாகவும், துணிவுடனும் பேசி வந்ததைக் குறிப்பிட்டு, இங்கர்சால், சுவாமிஜியிடம் சற்று எச்சரிக்கையுடன் இருக்கச் சொன்னார். இதற்கு, சுவாமிஜி காரணம் கேட்ட பொழுது இங்கர்சால் பின் வருமாறு பதிலளித்தார்.

"ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தாங்கள் இந்த நாட்டிற்கு வந்து போதனை செய்திருந்தால் உங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிலிட்டிருப்பார்கள் அல்லது உயிருடன் எரித்து இருப்பார்கள். சற்று பிற்காலத்தில் வந்திருந்தாலும் கிராமங்களில் கற்களை வீசித்துரத்தி இருப்பார்கள்.'' அக்காலத்தில் அமெரிக்காவில் அவ்வளவு சமய வெறியும், குருட்டுப் பிடிவாதமும் இருந்ததை சுவாமிஜியால் நம்ப முடியவில்லை. ''மிக வியப்பாக உள்ளது'' என்று இங்கர்சாலிடம் குறிப்பிட்டார்.

பிறிதொரு சமயம் வகுப்பறை பேச்சில், தமக்கும், இங்கர்சாலுக்குமிடையே நிகழ்ந்த ஓர் உரையாடலைப் பற்றிக் குறிப்பிட்டார். இதன் விவரம், வருமாறு:

''இவ்வுலகினின்றும் பெறக்கூடிய மிக உயர்ந்த அளவினில் நற்கூறுகளையெல்லாம் எடுத்து விடுவதில் எனக்கு நம்பிக்கையுண்டு; ஏனெனில் நாம் உறுதியாக அறிந்ததெல்லாம் இவ்வுலகமே'' என்று ஒரு நாள் இங்கர்சால் என்னிடம் கூறினார். நான் அதற்கு பின்வரும் மறுமொழியளித்தேன்:

''இந்த உலகத்தின் நற்கூறுகளையெல்லாம் எடுத்து விடுவதில், தாங்கள் அறிந்திருப்பதைக் காட்டிலும் சிறந்த வழியை நான் அறிவேன். தங்களைக் காட்டிலும் மிகுதியாகவும் பெறுவேன். நான் இறக்க மாட்டேன் என்பதை அறிவேன். அதனால் நான் அவசரப்படவில்லை. அச்சப்படவும் இல்லை. நற்கூறுகளை எடுப்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். எனக்கு மனைவி, மக்கள், சொத்து என்னும் கட்டுப்பாடும் இல்லை; கடமையும் இல்லை. ஆகையால் எல்லா ஆண்களிடமும், பெண்களிடமும், அன்பு செலுத்துகின்றேன். ஒவ்வொருவரையும் கடவுளாகக் காண்கின்றேன் மனிதனைக் கடவுளாகக் கண்டு அன்பு செலுத்துவதில் தோன்றும் மகிழ்ச்சியைப் பற்றி நினைத்துப் பாருங்கள்.''

இங்கர்சாலிடம் இவ்வாறு சுவாமிஜி கூறியது, சிகாகோ சர்வ மத சபையில், '' அமிர்தத்துவமாகிய ஆனந்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களே (அம்ருதஸ்யக் புத்ரா:) என்பதை நினைவு கூரச் செய்கின்றது.

இங்கர்சால் தொடர்பாக சுவாமிஜி கூறியுள்ள மேலும் ஒரு கருத்தை டிசம்பர் 6, 1899-இல் சுவாமிஜி தமது சிடர் மார்க்ரெட் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு அறிகின்றோம்.

''நான் தெய்வமாய் இருந்தால் நோய்க்குப் பதிலாக ஆரோக்கியத்தையே பிறரைப் பற்றித் தொற்றிக் கொள்ளும் பாங்குடையதாகச் செய்து விடுவேன்' என்று இங்கர்சால் ஒரு சமயம் கூறினார். நோயை விட அதிக அளவுக்கு இல்லாது போனாலும், நோயின் அளவுக்கு ஈடாகவாவது ஆரோக்கியமும் முற்றிலும் தொற்றும் இயல்புடையது என்பதை அவர் எண்ணாது போனார்! அது ஒன்றுதான் ஆபத்தாய் உள்ளது நான் சுகமாய் இருப்பதிலோ அல்லது துக்கமாய் இருப்பதிலோ உலகில் கேடு ஏதும் வாய்த்து விடாது, ஆனால், அதை மற்றவர் பற்றிக் கொள்ளக் கூடாது. இதுவே பெரிய உண்மை விஷயமாகும்.''

அமெரிக்காவில் அக்காலத்தில் பிரபல பேச்சாளர் களைக் கொண்டு சொற்பொழிகளை ஏற்பாடு செய்து பணம் சய்பாதிக்க சில நிறுவனங்கள் இருந்தன. பேச்சாள ருக்கு வசூலில் ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு, மறு பகுதியை நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளும்.

''சொற்பொழிவாற்றுவது இந்த நாட்டின் மிகவும் இலாபகரமாகத் தொழில். சில சமயங்களில் நல்ல தொகை யையும் கொடுக்கின்றது. இங்கர்சால் ஒரு சொற்பொழி விற்கு ஐந்நூறு முதல் அறுநூறு டாலர்கள் வாங்குகின்றார். அவர் இங்கு நனிமிகு புகழ் பெற்ற பேச்சாளர்.'' இவ்வாறு சுவாமிஜி சிகாகோவில் இருந்து, அழகிய சிங்கப் பெருமாளுக்கு நவம்பர் 2, 1893-இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'லெக்சர் பீரோ' (Lectu e Bureau) எனப்படும் நிறுவனங்கள் சுவாமிஜியிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு பெருந்தொகையை ஈட்டின. சுவாமிஜிக்கு ஒரு சொற்பொழிவிற்கு 2500 டாலர்கள் வசூலாகியுள்ளது. இவற்றில் சுவாமிஜிக்கு சற்று தாராளமாக பணம் செலுத்தி வந்த நிறுவனங்கள் போகப் போக ஏமாற்றவாரம்பித்தன. இந்த நிலையில் சுவாமிஜி ஒப்பந்தத்தை விலக்கிக் கொண்டு சொந்த முயற்சியிலேயே சொற்பொழிவாற்றினார்.

தமக்கு பேராதரவு அளித்த பேராசிரியர் ரைட் அவர்களுக்கு அக்டோபர் 26, 1893-இல் எழுதிய கடிதத்தில், தமக்குக் கிடைத்து வரும் மக்கள் ஆதரவைப் பின் வருமாறு சுவாமிஜி எழுதியுள்ளார்.

''சிகாகோவில் பெருமளவில் மக்கள் பாராட்டுதலுக்குரியவனாகயுள்ளேன். ஆகையால், மேலும் சிறிது காலம் தங்கி சொற்பொழிவுகள் மூலம் பணம் திரட்ட விரும்புகின்றேன்.''

இந்திய ஏழை மக்கள் துயர் துடைப்பு நிதிக்காக, சுவாமிஜி, சொற்பொழிகள் மூலம் கிடைத்தப் பணத்தை அளித்து வந்தார் என்பது நினைவில் கொள்ள வேண்டிய முக்கியச் செய்தியாகும்.

'சொற்பொழிவு வசூல் மன்னர்' இங்சர்காலுக்குத் திரண்ட கூட்டத்தைக் காட்டிலும், சுவாமிஜிக்குக் கூடுதலாகத் திரண்டது என்னும் உண்மையை, ''பே சிட்டி டைம்ஸ் பிரஸ்'' எனும் இதழின் வாயிலாக (மார்ச், 19—1894) பின்வருமாறு அறிகின்றோம்.

''டெட்ராய்ட்டில் டி. ஜி. இங்கர்சாலுக்குக் கூடும் கூட்டத்தைவிட இந்து சந்நியாசிக்குப் பெருங்கூட்டம் கூடியது. அவருடைய அற்புதமான நாவன்மை, முழு நிறைவான ஆங்கில மொழி ஆற்றல், சிந்தனையின் ஆழம் ஆகியன நாடெங்கிலும் படித்த மக்களைக் கவர்ந்தன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காணும் செய்தியே யல்லாது, சுவாமிஜியின் வாக்காலேயே அவர் பெற்றிருந்த மக்கட் செல்வாக்கை அறியமுடிகின்றது. சிகாகோவில் இருந்து, இந்தியாவில் இருந்த தமது புலமை சான்ற நண்பர் ஹரிதாஸ் விஹாரிதாஸ் தேசாய்க்கு நவம்பர் 5, 1894-இல் எழுதிய கடிதத்தில் சுவாமிஜி கூறியதாவது :

''வீணான தற்பெருமை கொள்ள எனக்கு அவசியம் ஏதுமில்லை. வேறு எந்த இந்துவும் அமெரிக்காவில் என்னைப் போல் மக்கள் மனதைக் கவரவில்லை.''

சமய நம்பிக்கையற்ற லோகாயதவாதிகள் தொடுத்த கிறிஸ்துவ சமய எதிர்ப்புப் பிரசாரத்தை தமது நிலைக்கு ஆதரவாகப் பயன்படுத்தியவர் அல்லர், சுவாமிஜி.

சுவாமிஜியின் தகுதியை மதிப்பீடு செய்து ஒரு சமயம், சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சார்ந்த ஓர் இயற்பியல் பேராசிரியர் சிகாகோவிற்கு, சுவாமிஜியின் முகவரிக்கு, ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்தை தமக்கு எதிராகப் பரப்பப் பெற்ற பொய்ப் பிரசாரத்தை மறுக்க சுவாமிஜி ஒரு சான்றாகப் பயன்படுத்திக் கொண்டார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி அக்காலத்தில் பிரிட்டிஷ் நாத்திகரான சார்லஸ் பிராட்லா, அமெரிக்காவின் இங்கர்சால் ஆகியோரின் செல்வாக்கில் கட்டுண்டது. இதனால், கிறிஸ்துவ சமய எதிர்ப்பு மையமாகவும் செயல் பட்டது. சார்லஸ் பிராட்லா (1833-1891), இங்கர்சால் (1833-1899) கருத்துகள் சிறு-சிறு வெளியீடுகளாக வெளியிடப்பட்டன. இந்தச் சூழலில் திளைத்த அந்தக் கல்லூரியின் பேராசிரியர் ஒருவர் தமக்கு ஆதரவாக அனுப்பிய கடிதத்தை மட்டும் பயன் படுத்திக் கொண்டார், சுவாமிஜி ஆனால் லோகாயத வாதத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியைச் சார்ந்தவர்களின் பிரசாரத்தை சுவாமிஜி மறுத்து பகிரங்கமாக கருத்து வெளியிட்டதாக மேரி லூயிஸ் பர்க் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு பெயர் குறிப்பிடப்படாமல் கூறப்பட்டிருக்கும் பேராசிரியர் இவர் பி. லட்சுமிநரசு பி. ஏ., என்பவராவார். சென்னை கிறித்துவக் கல்லூரியிலும், பச்சையப்பன் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றியவர். விஞ்ஞான நோக்கு வளர்ச்சிக்கு பாடுபட்டவர். பகுத்தறிவு வாதத்தைப் பரப்பியவர். பௌத்த சமயத்தவர்; இவருடைய ''பௌத்த சமயத்தின் சாரம்'' [The Essence of Buddhism] எனும் நூல் (1911), அறிஞர்கள் பாராட்டுதலைப் பெற்றது. இவர் சுவாமிஜியை 1897 சென்னை திருவல்லிக்கேணி 'ஐஸ் ஹவுஸ்' மாளிகையில் சந்தித்திருக்கின்றார். அப்பொழுது, சுவாமிஜி இவரிடம், ''தாங்கள் கடவுள் மறுப்புக் கொள்கையாளரா?'' எனக் கேட்டதாகவும் கூறப்படுகின்றது. மகாகவி பாரதியார் பேராசிரியர் லட்சுமிநரசு அவர்களை ''தமது நாத்திக நண்பர்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நாத்திகர்களுடன் சொற்போர்

சிகாகோ சர்வமத சபைக்குப் பிறகு, சுவாமிஜியின் பெயரும், புகழும், செல்வாக்கும் வளர்ந்தோங்கின. நண்பர்கள் பெருகினர்; பகைவர்களும் தோன்றினர். சுவாமிஜி சந்திக்க வேண்டிய சக்தி வாய்ந்த பகைவர்களில் நாத்திகர்கள், பொருள் முதல் வாதிகள், பகுத்தறிவு வாதிகள், சுதந்திரச் சிந்தனையாளர்கள், லோகயத வாதிகள் ஆகியோர் அடங்குவர். கடவுளுடன், சமயத்துடன் தொடர்பு கொண்ட எதையும் எதிர்ப்பவர்கள், இவர்கள். மேலைநாட்டு விஞ்ஞானம், தத்துவம் ஆகியனவற்றைக் கொண்டு சுவாமிஜியை வென்று விடலாம் எனக் கருதியவர்கள், இவர்கள், இந்த நோக்கத்துடன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூயார்க்கில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, சுவாமிஜியை பேசுமாறு அழைத்தனர். இந்தக் கூட்டத்தில் சுவாமிஜி பேசியதை நினைவு கூர்ந்து அவருடைய அமெரிக்க சீடர் ஒருவர் கூறியதாவது.

''அன்றைய அந்த நினைவிற்குரிய மாலைப் பொழுதை மறக்க முடியாது. சட்டம், காரணம், தருக்கம், பொது அறிவு, பேச்சுக்குரிய செய்தி மூலம், வலிமை, அறியாதவர் களை மருளச் செய்யும் சொல்லடுக்குகள் முதலான சக்தி வாய்ந்த படைக்கலன்களாகக் கொண்ட எதிர் தரப்பை சுவாமிஜி, மற்றொருவர் துணையின்றி, சந்தித்தார். பொருள் முதல் வாதத்தையும், அத்வைத வேதாந் தத்தையும், கொண்டு சொற்போர் புரிந்தார், சுவாமிஜி. நாத்திக வட்டாரத்தினர், சுவாமிஜியின் பேச்சாற்றலைக் கேட்டு வியப்புற்றனர். தங்கள் வழிக்கு, சுவாமிஜியைக் கொண்டு வரமுடியாது என்றும் கண்டார்கள். [Vivekananda a Biography—Swami Nikhilaananda, 1953, P O. 72].

'வெல்லாமல் விரட்டும் வித்தையைக் காட்டியவர் களிடம், வென்று இணைக்கும் வித்தையைக் காட்டினார், சுவாமிஜி.

விஞ்ஞான நோக்கிற்கு வரம்புகள் உண்டு; அதைக் கொண்டு மெய்ஞானத்தை அளந்துவிட முடியாது என்பதை சுவாமிஜி விளக்கினார். 'சுதந்திரச் சிந்தனையாளர்கள்' பலர் சுவாமிஜியின் உரையாற்றலில் ஆர்வம் கொண்டு அடுத்த நாளில் சுவாமிஜி கடவுள், சமயத்தைப் பற்றிப் பேசியக் கூட்டங்களில் கலந்துக் கொண்டனர்.

### அமெரிக்காவில்

### தொடர்ந்தப் பிரசாரம்

சர்வமத சபை முடிவுற்றப் பிறகு, அமெரிக்காவின் கிழக்கு, மத்திய மேற்கு மாநிலங்களில் சுவாமிஜி உரை யாற்ற அழைக்கப்பட்டார். சர்வமத சபையின் நோக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு மறந்தும் ஊறுதேடாமல் உரையாற்றிய சுவாமிஜி, பிறகு இந்து சமயத் தத்துவங்கள் பலவற்றைப் பற்றி விரிவுரையாற்றினார். வேதாந்தத் தத்துவப் பிரசாரத் திற்கு முன்னுரிமை கொடுத்தார்.

'வேதாந்தம்' எனும் சொல்லை சுவாமிஜி எந்த நோக்கில் பயன்படுத்தினார் என்பதும் கவனிக்கத்தக்கது.

சுவாமிஜிக்கு முன்பு வேதாந்தத்தை ஓர் உலகளாவிய சமய மாக அறிவித்துஎவரும் பொருள் கொள்ளச் செய்யவில்லை.

உலகில் உள்ள ஒவ்வொரு சமய நம்பிக்கையையும், தத்துவத்தையும், விழுமிய மனித முயற்சி ஒவ்வொன் றையும், ஆன்மிக, பொருளாதார முன்னேற்றத்தை இணைக்கும் போக்கையும், காரணகாரிய நோக்கையும், விஞ்ஞானத்தையும், அநுபூதி நிலையையும், தொண்டுள்ளத் தையும், இறைவனுடன் சாட்சாத்காரத்தையும் 'வேதாந்தம்' எனும் சொல்லிற்குரியப் பொருளாக விரிவடையச் செய்தார், சுவாமிஜி, ஒருவர் தமது சமயத்தை விடாமலேயே, வேதாந்த சமயத்தை ஏற்க இயலும் என்றும் விளக்கமளித்தார், சுவாமிஜி.

## அனைத்து நாட்டுப் பல்கலைக்கழகம்

அமெரிக்காவின் பால்டிமோர் நகரத்தில் பேசிய கூட்ட மொன்றில், "அனைத்து நாட்டுப் பல்கலைக்கழகம்" பற்றிய தமது கருத்தைக் குறிப்பிட்டார். சமயங்களிடையே ஒற்றுமையுணர்வை வளர்க்கும் திட்டங்களில் ஒன்றாகத் தமது கருத்தை விளக்கினார். International University or 'Temple Universal' என்றும் தாம் விரும்பிய பல்கலைக் கழகத்திற்கும் பெயர் சூட்டினார், சுவாமிஜி. இதை பாஸ்டன் நகரத்திற்கு அருகில் அமைக்கலாம் என்றும் கருதினார்.

உலக சமயங்கள் ஒவ்வொன்றில் இருந்தும் தேர்ந் தெடுக்கப் பெற்றப் பேராசிரியர்களை நியமித்து, அவர்

களைக் கொண்டு உலக சமயத் தத்துவங்களைக் கற்பிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்பினார். இந்தப் பல்கலைக்கழகத்தில் தேர்வு பெற்றவர்கள் இந்தியாவிற்கு சென்று சமயப் பணியாற்றலாம் என்றும் குறிப்பிட்டார்.

சுவாமிஜியின் கனவு, நனவாகக் காலச்சூழல் வாய்ப்பளிக்கவில்லை. ஆனால் வேறுவகையில் ஒத்திசைவான முயற்சி, சுவாமிஜியின் சீடர்கள் இருவரால் மேற்கொள்ளப் பட்டது.

குமாரி சாரா ஃபார்மர், டாக்டர் லூயிஸ் ஜி. ஜேன்ஸ் எனும் சுவாமிஜியின் இரு சீடர்கள் 1896-இல் ''Monsaluat School for the Study of Comparative Religions'' எனும் பெயரில் சமய ஒப்பாய்வுக் கல்வி நிறுவனத்தை கிரீன்ஏக்கர் என்னுமிடத்தில் அமைத்தனர். இந்த நிறுவனத்தின் குறிக்கோள் ஒன்றைப்பற்றி குமாரி சாரா ஃபார்மர் கூறியதாவது :

''அயல் நாடுகளுக்குச் செல்லும் மிஷனரிகளுக்கு கல்வி கற்பிக்கப்படும். அவர்கள், அங்கு சென்று சண்டை-சச்சரவுகளில் ஈடுபடாமல், சமயங்களிடையே பொது அம்சங்களைப் பேசப் போதிக்கப்படும்.''

## ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில்

உலகப் புகழ் பெற்ற ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் சுவாமிஜி உரையாற்றியதை, சுவாமிஜியின் ''அமெரிக்க வாழ்க்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் ஒன்றாகும்'' என அவருடைய வாழ்க்கை வரலாற்று நூல்களில் குறிப்பிடப் பெற்றுள்ள ஒரு கருத்தாகும். மிகத் தலைசிறந்த தத்துவ அறிஞர்களையே, பல்கலைக் கழகத்தின் தத்துவத்துறை உரையாற்ற அழைக்கும். 1896-களில் இந்தத் துறையில் புகழ் பெறறவர்களின் பெயர்கள், வருமாறு : ஜார்ஜ் எச். பால்மர், வில்லியம் ஜேம்ஸ், ஜோசய்யா ரோய்ஸி, ஹ்யூகோமுன்ஸ்டன்பெர்க்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜார்ஜ் சான்ட்யானா. இவர்களுள் வில்லியம் ஜேம்ஸ், ஜோசய்யா ரோய்சி, சுவாமிஜியின் சொற்பொழிவுகளை ஏற்கனவே கேட்டுள்ளனர். வில்லியம் ஜேம்ஸ், தமது நண்பருக்கு எழுதிய கடிதத்தில், ''அந்த மனிதர் நாவன்மைச் சக்தி பெற்ற அதியற்புதமானவர்'' எனக் குறிப்பிட்டுள்ளார். The Varieties of Religious Experience' எனும் புகழ் பெற்ற நூலின் (1902) ஆசிரியர் வில்லியம் ஜேம்ஸ், ''இந்த நூலின் தோற்றத்திற்கு பெருமளவில் மறைமுகமாக சுவாமிஜி பங்களித்துள்ளார்'' என ரோமன் ரோலாந்து குறிப்பிட்டுள்ளார். (The Life of Vivekananda and the Universal Gospel, 1979, P-80) இந்த நூலில் குருதேவர், சுவாமிஜியைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இத்தகையப் பேரறிஞர்களைக் கொண்ட பல்கலைக் கழகம் 1896 சனவரியில் ஹார்வார்ட் தத்துவ பட்டதாரிகள் மன்றத்தில் உரையாற்றுமாறு சுவாமிஜிக்கு அழைப்பு விடுத்தது. சுவாமிஜியும் அழைப்பை ஏற்று மார்ச் 25-இல் 'வேதாந்தத்தத்துவம்' எனும் தலைப்பில் பேசினார். இந்தப் பேருரை சுவாமிஜி நூல்தொகுப்பின் முதல் தொகுதியில் வெளிவந்துள்ளது.

ஹார்வார்ட் பல்கலைக் கழகம், சுவாமிஜியின் சொற்பொழிவை தனி நூலாக வெளியிட்டது. சுவாமிஜியே மூலப் படிவத்தைச் செப்பனிட்டு அளித்ததும் குறிப்பிடத் தக்கது.

சொற்பொழிவைத் தொடர்ந்து அவையோர் எழுப்பிய வினாக்களுக்கும் விளக்கமளித்தார், சுவாமிஜி. இதன் விவரம் சுவாமிஜி நூல் தொகுப்பில், ஐந்தாவது தொகுதியில் உள்ளது.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சுவாமிஜியின் அரிய தத்துவப் பொழிவை மாந்தி மகிழ்ந்ததுடன், பல்கலைக் கழகத் தத்துவத்துறையின் கீழை நாட்டுப் பிரிவில் பேராசிரியர் பதவிப் பொறுப்பை ஏற்குமாறு வேண்டினர். பல்கலைக் கழகத்தின் மிக உயர்ந்த கௌரவமான பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிப் பொறுப்பை சுவாமிஜி ஏற்கவில்லை. சுவாமிஜி, சந்யாசி என்ற காரணத்திற்காகவும், இன்னும் வெளியிடங்களில் ஆற்றவேண்டிய மாபெரும் பணிகளுக்காகவும் பல்கலைக்கழகத்தின் கோரிக்கையை ஏற்கவில்லை.

கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் சுவாமிஜி உரையாற்றினார் என்றும், அங்கும் சுவாமிஜியின் அறிவாற்றலில் ஈர்ப்புண்டு, நிருவாகிகள் சம்சுகிருதத்துறையின் பேராசிரியர் பொறுப்பை ஏற்குமாறு சுவாமிஜியிடம் வேண்டுகோள் விடுத்ததாகக் கூறப்படுகின்றது. மேரிலூயிஸ்பர்க், இதை தமது நூலில் மறுத்துள்ளார். 1895-இல் சம்சுகிருதத்துறை மூடப்பட்டதென்றும், சுவாமிஜி உரையாற்ற அழைக்கப் பட்டதற்கும், சம்சுகிருதத்துறையின் பேராசிரியர்பொறுப்பு வழங்க முற்பட்டதற்கும் சான்றுகள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். [Swami Vivekananda in the West and New Discoveries, The World Teacher, part 2, P. 104]

## வேதாந்தா சொஸைடி

வேதாந்தத் தத்துவத்தை விளக்கி சுவாமிஜி அமெரிக்காவில் நிகழ்த்திய அரிய சொற்பொழிவுகள் ஈடு இணையற்ற மகிழ்ச்சியைத் தோற்றுவித்தன. வேதாந்த சொஸைடியை அமெரிக்கர்களே தொடங்க வேண்டும் என்று சுவாமிஜி கூறிவந்தார். சுவாமிஜியின் சீடர்கள் சிலர், சேர்ந்து ''நியூயார்க் வேதாந்தா சொஸைடி'' எனும் ஓர் அமைப்பை சுவாமிஜியின் வழிகாட்டுதலுடன் ஏற்படுத்தினர். குறுகிய மனப்பான்மைக்கு இடம் தராத இந்த அமைப்பு வேதாந்தத்தைப் போதிக்கவும், நடைமுறையில் பின்பற்றவும் சிறப்பாக வழிவகுத்து, அனைத்து மதங்களுக்கும் வேதாந்தத்தைப் பொதுவாக்கியது. அனைத்து மதங்களையும் ஒப்புக்கொள்வது, சமயப் பொறை இரண்டையும் ஆதாரக் குறிக்கோள்களாகக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் மதங்களை மாற்றிக்கொள்ளாமல் இந்த அமைப்பில் இணையுமாறு அழைப்பு விடப்பட்டது. ஆர்வலர்கள் சேர்ந்து சொஸைடியை வலிமையுறச் செய்தனர்.

சுவாமிஜியின் சொற்பொழிவுகளை சிறு-சிறு வெளியீடுகளாகவும் நூல்களாகவும் வெளியிட பதிப்புக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இத்துறையில் மிஸ்.எஸ். எலன்வால்டோவின் பணி மகத்தானது.

வேதாந்தா சொஸைடியை சுவாமிஜி வேறொரு நோக்கிலும் பயன்படுத்த விரும்பினார். அதாவது கிழக்கும் மேற்கும் பரஸ்பர நலன்களுக்காக கருத்து பரிமாற்றம் செய்துகொள்ளப் பயன்படும் மையமாகவும் 'சொஸைடி' விளங்க வேண்டும் என்பதும் அவருடைய நோக்கமாகும்.

நியூயார்க் வேதாந்தா சொஸைடி காரணமாகப் பரவிய வேதாந்த இயக்கம் மேலும் பல 'சொஸைடி'களை உருவாக்கியது. தற்சமயம் சுமாராக பன்னிரண்டு வேதாந்தா சொஸைடிகள், அமெரிக்காவின் பல இடங்களில் இயங்கி வருகின்றன.

இவையாவும் சுவாமிஜியின் புனிதத் திருப்பணியின் நினைவுச் சின்னங்களாகும்.

1895 பிப்ரவரி முதல் நியூயார்க் நகரத்தில் ஓர் ஒதுங்கிய இடத்தில் வேதாந்த வகுப்புகளை நடத்தி வந்தார் சுவாமிஜி.

**'சந்நியாசி கீதம்'**

சுவாமிஜியின் கவித்துவ உணர்வையும், அவர் சாற்றிய துறவு நெறியின் தன்னேரில்லா அளப்பரிய மேன்மையையும் அவருடைய அத்வைத அனுபவத்தையும் வெளிப்படுத்தும் 'சந்நியாசி கீதம்' (The song of sannyasin) பிறப்பெடுத்ததும் அமெரிக்காவில்தான். நியூயார்க் நகரத்திற்கு மூன்னூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ''ஆயிரம் தீவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்கா'' [Thousand Island park] எனும் அமெரிக்காவின் பெரிய தீவில் ஏழுவாரங்கள் தங்கியிருந்து, பிரம்ம சூத்திரம், உபநிடதம், பகவத்கீதை, அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் முதலான இந்து சமய ஞானக்களஞ்சியங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

சிகாகோ சர்வமத சபையிலும், பிறவிடங்களிலும் தமது குருநாதரைப் பற்றி பொது மேடைகளில் பேசாத சுவாமிஜி முதன் முதலில் இங்குதான் 'என் குருநாதர்' எனும் தலைப்பில் விரிவாகப் பேசினார். [முற்கூறிய சுவாமி ஜோதிர் மயானந்தாவின் நூல், ப-519]

இந்தத் தீவில் ஒருநாள் ஆன்மிக எழுச்சி, கவிதை எழுச்சியாக வடிவெடுத்தது. சுவாமிஜியின் எழுதுகோல், ''சந்நியாசி கீத'' த்தைப் படைத்தது.

எழில் கொஞ்சும் கவிதைப் பண்புகளை அறிய, பாடல் முழுவதையும் கற்க வேண்டும். ஆயினும் ''பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்பதற்கேற்ப பின்வரும் ஒரு பகுதியைச் சுவைத்து மகிழ்வோம்.

'' Strike off thy fetters! Bonds that bind thee down,
Of shining gold, or darker, baser ore;

Love hate—good, bad—and all the dual throng.

Know, slave is slave, caressed or whipped, not free;

For fetters though of gold, are not less strong to bind;

Thus be thou calm sannyasin bold ! say—''OM TAT SAT, OM !''

இந்த இணையற்ற கவிதையை 1904-இல் மதுரை விவேகானந்தர் சபையைச் சார்ந்தவரும் புகழ்பெற்ற தமிழறிஞருமான ம. கோபால கிருஷ்ணய்யர் தமிழாக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, தனி வெளியீடாக வெளியிட்டார். [இராம கிருஷ்ணர் இயக்கமும், தமிழ்நாடும், முதற்பதிப்பு, 1990, பெ. சு. மணி, ப. 313]

சுவாமிஜியின் 'ராஜயோக'ச் சொற்பொழிவுகள் 1895- சூலையில் அமெரிக்காவில் தனி நூலாக வெளியிடப் பட்டது. நூல் வெளிவந்த சில வாரங்களுக்குள் மூன்று பதிப்புகள் வெளிவந்தன. சுவாமிஜியின் செல்வாக்கிற்கும், ஞானப் புலமைக்கும் இது ஓர் எடுத்துக்காட்டு. பலமொழி களில் பல நாடுகளில் மொழி பெயர்ப்புப் பெற்றுப் பெருமை யையும் கண்டது இந்நூல். பிரபல அமெரிக்க உளவியல் பேராசிரியரான வில்லியம் ஜேம்ஸ், சுவாமிஜியை நியூயார்க்கில் சந்தித்து தோழமை பூண்டார்.

கர்ம யோகம், பக்தி யோகம், உலகளாவிய சமயத்தின் இலட்சியம் எனும் பேருரைகளும் அமெரிக்காவில் நிகழ்த்தப் பட்டவை.

சுவாமிஜியின் செல்வாக்கு 'புயற்காற்றாக'ப் பரவியது. தமது சகோதரத் துறவி சுவாமி இராமகிருஷ்ணானந்தருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் கூறியதாவது :

''அவர்கள் எனக்கு ''புயற்காற்று இந்து'' (Cyclonic Hindu) என்று பெயரிட்டிருக்கின்றார்கள். 'அது கடவுளு டைய விருப்பம், உருவமற்ற குரல்தான் நான்' என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.''

சுவாமிஜி இந்தப் 'புயற்காற்று' வருணனையைப் பற்றி 1884 மார்ச் 15-இல் ஹேல் சகோதரிகளுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கருத்து தெரிவித்துள்ளார்.

''Iam Really not 'Cyclonic' at all —far from it. What I want is not here- nor can I longer Bear this cyclonic atmosphere. Calm, cool, nice, deep, Penetrating, Independant, searching thought- a few noble, pure mirrors

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which will reflect it back, catch it until all of them sound in unison.''

அமெரிக்காவில் சுவாமிஜி வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று வந்ததைப் பாராட்டி சென்னையிலும், கல்கத்தாவிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப் பெற்றன. முதல் பாராட்டுக் கூட்டம் சென்னை நகரத்தில் ஏப்ரல் 28, 1894-இல் நடந்தது சுவாமிஜிக்கு நன்றி கூறும் தீர்மானத்தை நிறைவேற்றி அவருக்கு அனுப்பியது. இதையடுத்துதான், கல்கத்தாவில் செப்டம்பர் 5, 1894-இல் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற கூட்டத்தின் விவரங்கள், தீர்மானங்கள் அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளிவந்தன. இதைப் பற்றி சுவாமிஜி தமது சகோதரத் துறவிக்கு செப்டம்பர் 25, 1894—இல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதே சென்னையில் 1895-ஆம் ஆண்டில் 'சென்னை கிறிஸ்டியன் லிடரச்சர் சொஸைடி' எனும் கிறிஸ்துவ மிஷனரிகள் அமைப்பு, 'சுவாமி விவேகானந்தர்' எனும் தலைப்பில் ஒரு சிறுநூலை வெளியிட்டு சிகாகோ வீரரை ஏளனம் செய்தது சென்னையைச் சார்ந்த டாக்டர் மர்டோ என்பவர் சுவாமிஜியை கண்டனம் செய்து கட்டுரைகள் எழுதினார். ஆனால் டாக்டர் வில்லியம் மில்லர் எனும் கிறிஸ்துவ சமய போதகர், ''இந்து சமயத்திற்கு ஒரு குறிக்கோள் பணியிருக்கின்றது; உலக கிறிஸ்துவ நாடுகளுக்கு போதிக்க சிறப்பார்ந்த பாடங்களை வைத்துள்ளது என சுவாமிஜி பிரகடனப்படுத்தினார்'' என்று பெருந்தன்மையுடன், நடுநிலையில் எழுதினார்.

சிகாகோவைத் தொடர்ந்து சுவாமிஜியை அமெரிக்கப் பத்திரிகைகளும், இந்தியப் பத்திரிகைகளும். பாராட்டியது தனி நூலுக்குரிய விஷயமாகும். அதுபோல் பொறாமைப் புழுக்கத்தால் தூற்றிய தியோசாபிஸ்டுகள், கிறிஸ்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரிகள், பிரதாப் சந்திர மஜூம்தார் ஆகியோரின் 'கூட்டணி' கண்டனங்களைப் பற்றிய ஆய்வும் தனி நூலுக்குரியது.

ஆனால், அமெரிக்க அறிஞர் மெர்வின் மேரிஸ்நெல் என்பவர் 'பயனீர்' எனும் இதழிற்கு, சுவாமிஜியைப் பற்றி எழுதியக் கடிதம் மிக முக்கியமானது. மெர்வின் மேரிஸ்நெல் சிகாகோ சர்வமத சபையின் விஞ்ஞானப் பகுதிக்குத் தலைமை தாங்கியவர். சர்வமத சபையில் பல சமயப் பிரதிநிதிகள் பேசிய பேச்சுகளை நேரில் இருந்து கேட்டவர். இதனால் சுவாமிஜியின் பேச்சையும், மற்றவர்கள் பேச்சுகளையும் சீர்தூக்கிப் பார்த்து எழுதக்கூடிய வாய்ப்பு இவருக்கு சிறப்பாக அமைந்தது. இவருடைய கடிதத்தை இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'இந்து சாதனம்' எனும் இனிய தமிழ் இதழ், தமிழாக்கம் செய்து 21-3-1894-இல் வெளியிட்டது. இதில், பின்வருவது, ஒரு பகுதியாகும்.

''கடந்த செப்டம்பர் மாசத்திலே இந்நகரத்திலே கூட்டப்பட்ட சர்வ சமய மகாசபையினால் கிறிஸ்த தேசமெல்லாம்—அவற்றுள்ளும் இவ்வமெரிக்கா தேசம் அறிந்து கொண்ட விஷயம் யாதென்றால் கிறிஸ்துவ சமயத்திலும் மிக மேலோங்கிய சமயங்கள் சில உலகிலுண்டென்பதேயாம்... இம்மதங்களுள்ளே அமெரிக்காவை வசீகரித்துத் தன்னை மோகிக்கச் செய்து கொண்ட மதம் இந்து மதமொன்றேயாம், இந்து மதப் பிரசாரகர்களாகச் சென்ற மகாபாண்டிதர்களுள்ளும் விவேகானந்த சுவாமிகள் சிரேஷ்டராயினார். அவர் அங்கே கூடியிருந்த சபையோர் யாவராலும் புகழ்ந்து கொண்டாடப்பட்டார். நான் அக்கிராசனம் பெற்றிருந்த சாஸ்திர சபையிலும், ஏனைய சபைகளிலும் அடுத்தடுத்துப் பன்முறை பிரசங்கஞ் செய்தார்.

''மகாசபை முடிந்த பின்னரும் யூநயிட்டஸிலுள்ள பட்டணங்கள் தோறுஞ் சென்று, அத்தியற்புத பிரசங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கள் செய்தார். ஆங்காங்கும் பெருந்திரளான சன சமூகங்கள் போற்றிக் கேட்டன. கிறிஸ்த பிரசங்க பீடங்களிலும் வீற்றிருந்து பிரசங்கிக்குமாறு சிற்சில விடங்களில் வரிக்கப் பட்டார். ஆங்கும் புகழ் மாலையே பெற்றார்......

''இவரைக் கண்டது முதல், அமெரிக்கர் மனசிலே, பாதிரிமார் தங்களுக்கு இந்துக்களது மதத்தைப் பற்றி இழிவாகக் கூறிய காரியங்களெல்லாம் அறியாமை காரணமாகச் சொன்ன வார்த்தைகளென்னும் எண்ணம் பதிந்து விட்டது.... 'இத்துணைச் சிறந்த பெரியோர் களையா பாதிரிகள் நாகரிகம் சிறிது மில்லாதிருந்த அறிவில்லாத அஞ்ஞானிகளென்று எமக்குரைத்தார்கள்?' என்றும் இனி அப்பாதிரிகளுக்கும் அவர்கள் கட்டுக்கதை களுக்கும் வந்தனம், என்றும் கூறுகின்றார்கள்......

''ஆங்கிலேய பாதிரிகளாலும் பிறராலும் திரித்துரைக் கப்பட்ட இந்து மதத்தினது உண்மை விளக்கம் இவ் விவேகானந்த சுவாமிகள் இங்கே வராதிருந்தால் ஒரு காலத்தும் கிடைக்கப்போவதில்லை. இவரைப்போலச் சிறந்தவர்கள் இதற்குமுன் வந்ததில்லை. இவர் பிரிவால் அமெரிக்கர் வருந்தாது போகார்.'' [இலங்கையில் சுவாமி விவேகானந்தர், நூற்றாண்டு விழா வெளியீடு, 1963, யாழ்ப்பாணம், பக். 2-4].

## இங்கிலாந்தில் சுவாமிஜி

சுவாமிஜியை இங்கிலாந்திற்கு வருமாறு ஆர்வமுடன் அழைத்தவர்கள், குமாரி ஹென்ரியட்டா முல்லர், இ-டி- ஸ்டர்டி ஆகியோராவார். இவர்கள் இருவரும் அமெரிக்கா சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரத்தால் பெற்ற பயனை, இங்கிலாந்தும் பெறவேண்டும் என விரும்பினர். இவ்விருவர் அழைப்பை ஏற்று சுவாமிஜி, தமது அமெரிக்க நண்பர் பிரான்ஸிஸ் எச். லெக்கட் என்பவருடன் நியூயார்க்கில் இருந்து ஆகஸ்ட் 17, 1895-இல் லண்டனுக்கு புறப்பட் டார். வழியில் பாரீஸில் சிலநாள் தங்கினார். லண்டனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்டம்பர் 10-இல் வந்தார், சுவாமிஜியின் இந்த லண்டன் வருகை, முதலாவதாகும்.

குமாரி மில்லர் அமெரிக்காவில் சுவாமிஜியைச் சந்தித்துள்ளார்; ஸ்டர்டி, சம்ஸ்கிருதம் கற்றவர்; இந்தியாவில் இமாலயச் சாரலில் சிறிதுகாலம் ஆன்மிகச் சிந்தையுடன் தவமியற்றியவர்.

சுவாமிஜிக்கு முன்பு பிரம்மசமாஜத் தலைவர்களான ராஜா ராம்மோகன்ராயும், கேசவசந்திர ஸென்னும் லண்டனில் தங்கள் அறிவாற்றலால் அறிஞர்கள் பலரைக் கவர்ந்துள்ளனர்.

லண்டனில் அக்டோபர் 22-இல் சுவாமிஜி, பிரின்ஸஸ் அரங்கில் பொதுமேடைப் பேச்சாக, 'ஆத்ம போதம்'' (Self Knowledge) எனும் தலைப்பில் பேசினார். இந்த அரிய ஆன்மிக அருளுரை மகத்தான வரவேற்பைப் பெற்றது. அமெரிக்காவைப் போலவே, லண்டனிலும் பத்திரிகைகள் சுவாமிஜியின் நாவன்மையைப் பாராட்டி எழுதின.

'லண்டன் ஸ்டாண்டர்ட்' எனும் இதழில் வெளிவந்த பாராட்டுச் செய்தியின் ஒரு பகுதி, வருமாறு:

''ராம்மோகன்ராய் காலத்திற்குப் பிறகு, கேசவசந்திர ஸென் ஒருவர் நீங்கலாக, வேறு எவரும் நேற்று பிரின்ஸஸ் அரங்கில் மிகக் கவர்ச்சியாகப் பேசிய இந்து சந்யாசி போல் இங்கிலீஷ் மேடையில் பேசவில்லை.''

மேடைப் பேச்சுடன், ஆன்மிக வகுப்பறைகளிலும், நேர்காணல்களிலும், ஆர்வலர்களுடன் நிகழ்ந்த சந்திப்புகளிலும், சுவாமிஜியின் ஆன்மிக ஆளுமையை தரிசனம் செய்து பயன் எய்தியவர்கள், பலர். இவர்களுள் குமாரி மார்க்ரெட் எலிஸபெத் நோபிள் ஒருவராவார். இவர்தான் சகோதரி நிவேதிதையாக வரலாற்றுப் புகழ் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டர்டியுடன் இணைந்து நாரதபக்தி சூத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கியதும் இந்தக் கால கட்டத்தில்தான் என சுவாமி நிகிலானந்தா குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மக்கள் மீது வலுவான பிடிப்பை ஏற்படுத்திக் கொள்ள உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்ட சடங்குகளை உருவாக்க வேண்டும் எனும் கருத்தும் சுவாமிஜிக்கு இந்தக் காலத்தில் தோன்றியது என்றும் சுவாமி நிகிலானந்தா கூறியுள்ளார். [Vivekananda, A Biography, 1953, P. 93]

**மாக்ஸ்முல்லருடன் சந்திப்பு**

முதல் வருகையையொட்டி நான்கு மாதங்கள் இலண்டனில் தங்கிய பிறகு நியூயார்க் திரும்பினார், சுவாமிஜி. மீண்டும் ஏப்ரல் 1896-இல் லண்டனுக்கு இரண்டாவது முறையாக விஜயம் செய்தார், சுவாமிஜி. இந்தச் சந்திப்பிற்கு முன்பு மாக்ஸ்முல்லர், 'பத்தொன்பதாம் நூற்றாண்டு' (Nineteenth century) என்னும் இதழில் குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி, ''ஓர் உண்மையான மகாத்மா'' எனும் தலைப்பில் எழுதினார். மாக்ஸ்முல்லர், சுவாமிஜிக்கு தமது இல்லத்தில் மே 28, 1896-இல் விருந்தளித்து உரையாடினார். குருதேவர் பரமஹம்சரைப்பற்றி விரிவாக எழுத விரும்பிய மாக்ஸ்முல்லர், சுவாமிஜியிடம் விவரங்கள் அறிய விரும்பினார். பிறகு, சகோதரத் துறவி சுவாமி சாரதானந்தா அவர்களிடம், மாக்ஸ்முல்லருக்கு வேண்டிய விவரங்களை வழங்குமாறு பணித்தார். இதைப் பற்றி சுவாமி சாரதானந்தா பல ஆண்டுகளுக்குப் பிறகு எழுதியதாவது:

''ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி விரிவாக எழுத விருப்பதாகவும், அதற்குரிய விவரங்களை அளிக்குமாறு மாக்ஸ்முல்லர் சுவாமியிடம் கேட்டுக் கொண்டார். சுவாமிஜி, வீடு திரும்பியதும் இந்தப் பணியை ஏற்குமாறு என்னிடம் கூறினார். குருதேவர் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், அருளுரைகளையும் பாடுபட்டுத் திரட்டினேன். கையெழுத்துப் பிரதியை சுவாமிஜியிடம் கொடுத்தேன். அவர் வேண்டிய திருத்தங்களையும் செப்பமுறச் செய்வார் என எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சொற்களை மாற்றி அப்படியே மாக்ஸ்முல்லரிடம் அனுப்பி விட்டார். சுவாமிஜி அனுப்பிய கையெழுத்துப் பிரதியில் எவ்வித மாற்றமும் செய்யாமல் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் தமது நூலில் இணைத்து விட்டார் என்பது நினைவிற்கு வருகின்றது'' [Glimpses of A Great Soul, A Portrait of Swami Saradananda, 1982 by Swami Aseshananda, P-20]

''ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்வும் வாக்கும்'' [The Life and Sayings of Sri Ramakrishna] என்னும் பேரறிஞர் மாக்ஸ்முல்லரின் நூல் 1898-இல் வெளி வந்தது. இந்த நூலை விரிவாக விமர்சனம் செய்து, ''உத்போதன்'' என்னும் வங்க மொழி இதழில் (மார்ச் 14, 1899) சுவாமிஜி எழுதியுள்ளார். இந்த நூலைத் தமிழில் முதன் முதலாக மொழி பெயர்த்து வெளியிட வேண்டிய உதவியைச் செய்தவர் வாணியம்பாடி க. வேங்கடசாமிநாயுடு எனும் இராமகிருஷ்ண இயக்கத் தொண்டர் திலகம் ஆவார். 1904—இல் வெளிவந்த இந்தத் தமிழ் நூலை அமெரிக்காவில் இருந்த சுவாமி அபேதானந்தருக்கு அனுப்பி வைத்தார், வேங்கடசாமி நாயுடு.

## பேராசிரியர் பால்டாய்சனுடன் சந்திப்பு

இலண்டனின் இருந்த காலத்தில், 1896 செப்டம்பரில் ஜெர்மனி சென்றார், சுவாமிஜி. அங்கு கீல் பல்கலைக் கழகத்தில் தத்துவத்துறைப் பேராசிரியராக யிருந்த பால் டாய்சனைச் [Paul Deussen] சந்தித்தார் சுவாமிஜி.

சுவாமிஜியின் ஆன்மிக மேதாவிலாசத்தையும் சுய சிந்தனையையும் அறிந்தவர், பேராசிரியர் பால்தடாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியுடன் சமயத்தத்துவங்களின் நுட்பங்களைப் பற்றி விவாதிக்க பேராவல் கொண்டிருந்த பேராசிரியருக்கு சுவாமிஜியின் சந்திப்பு பெரிதும் பயன் தந்தது. ஹம்பர்க்கில் மீண்டும் சுவாமிஜியைச் சந்தித்தார். அவருடன் லண்டன் சென்று இருவாரங்கள் உடன் இருந்தார்.

வேத இலக்கியப் பதிப்பில் சாதனை படைத்த மாக்ஸ் முல்லரையும், வேதாந்த ஞான வேட்கை கொண்ட பால் டாய்சனைப் பற்றியும் சுவாமிஜி தனித்தனியே இரு கட்டுரைகள் எழுதி பாராட்டியுள்ளார்.

## ஸ்டர்டியின் தொண்டு

1896-இல் லண்டனில் சுவாமிஜி வகுப்புகளில் பேசிய பன்னிரண்டு பேச்சுகளை ஸ்டர்டி சிறு வெளியீடுகளாக வெளியிட்டார். இவற்றின் விவரம் வருமாறு.

1. சமயத்தின் தேவை

2. உண்மையான மனிதனும் தோற்றமளிக்கின்ற மனிதனும்

3. மாயையும், கடவுள் பற்றியக் கொள்கையின் வளர்ச்சியும்

4. மாயையும் விடுதலையும்

5. ஒவ்வொன்றிலும் கடவுள்

6. ஆத்ம சாட்சாத்காரம்

7. வேற்றுமையில் ஒற்றுமை

8. ஆத்மாவின் விடுதலை

9—12 ; செயல்முறை வேதாந்தம்.

சுவாமிஜி அமெரிக்காவில் பேசியதைப் போலவே லண்டனிலும் தமது குருநாதரைப் பற்றி உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும், அமெரிக்காவில் பேசியதும் சேர்க்கப்பெற்று ''எனது குருநாதர்'' (My Master) எனும் தனி வெளியீடாக வந்தது.

சுவாமிஜி அமெரிக்காவில் பேசிய பேச்சுகள் பலவற்றையும் ஸ்டர்டி வெளியிட்டுள்ளது, இங்கு நினைவு கூரத் தக்கது. அந்த வெளியீடுகளின் பெயர்கள் வருமாறு:

1. வேதாந்தத் தத்துவச் சொற்பொழிவுகள்—தொகுதி 1

2. கர்மயோகம்—தொகுதி 2

3. பக்தியோகம்—தொகுதி 3

4. உலகளாவிய சமயத்தின் இலட்சியம்—4

5. அண்டமும்—பிண்டமும்.

'விவேகானந்தர் தொடர்' எனும் வரிசையில் சிறு வெளியீடுகளைக் கொணரவும் விரும்பினார். ஆனால் இவ் விருப்பம் செயல்படவில்லை நாரத சூத்ரங்களை 1896-மார்ச்சில் வெளியிட்டார்.

## ஜே. ஜே. குட்வின்

சுவாமிஜி அமெரிக்காவில் இருந்த பொழுதும், லண்டனில் இருந்த பொழுதும், அவருடைய பேச்சுகள் காற்றோடு கலந்து போகாமல் எழுத்துருவம் பெற்று அச்சாகின என்றால் அதற்கு முதற் காரணகர்த்தா ஜே. ஜே. குட்வின் என்னும் ஆங்கிலேயர் ஆவார். முதலில் சுவாமிஜியின் பேச்சுகளை சுருக்கெழுத்தில் எடுக்க வேலையில் அமர்த்தப் பட்ட இவர், சுவாமியால் ஆட்கொள்ளப்பெற்று அவருக்கே தம்மை வாழ்நாள் முழுவதும் ஒப்படைத்து விட்டவர், குட்வின். ''My Faithful Goodwin'' என்று சுவாமி அவ்வப் பொழுது கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி இறுதிக் காலம் வரையில் பேசியதையெல்லாம் சுருக்கெழுத்தில் வடித்து, நூல்கள் பல வெளிவர மூலவராக விளங்கியவர் குட்வின். குட்வின் 1898 சூன் 2-இல் இறந்ததை அறிந்தவுடன், ''என் வலக்கரம் போய்விட்டது; என்னுடைய இழப்பு அளவிட முடியாதது'' என தமது ஆற்றாமையை வெளிப்படுத்தினார். சுவாமிஜி குட்வின்னைப் பற்றிய தமது இரங்கல் கவிதையை, குட்வின்னின் அன்னைக்கு அனுப்பி வைத்தார்.

கிறிஸ்துவ மிஷனரிகள் தொடர்பாக அமெரிக்கா, இங்கிலாந்துக்கிடையே தமக்கேற்பட்ட அநுபவ வேறுபாடுகளை சுவாமி பின்வருமாறு விளக்கியுள்ளார்:

''இங்கிலாந்தும், அமெரிக்காவும் நான் செயலாற்றும் முக்கியமான வட்டாரங்கள் ஆகும். (அமெரிக்காவில்) சமயத்தின் பெயரால் எதையும் பாதிரிமார்கள் செய்யத் துணிவார்கள் என்னும் அனுபவம் என் கண்களை நன்கு திறந்து விட்டது. இங்கிலாந்தில் சமயப் பிரசாரகர் இருக்கிற இடம் தெரியவில்லை. ஒருவரும் என்னோடு வாதாட வரவில்லை, ஆங்கில மடத்தைச் சார்ந்தவர் அனைவரும் பெருந்தன்மை வாய்ந்தவர். பெரும்பான்மையரான பாதிரிகளை அப்படிச் சொல்வதற்கில்லை— அவர்கள் என்னிடத்தில் மிகுந்த பரிவு காட்டினார்கள். ஆங்கில மடத்தைச் சார்ந்த சுமார் முப்பது பாதிரிமார்கள், சமயச் சர்ச்சைகளில் எல்லா அமிசங்களிலும் முற்றிலும் என் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆங்கிலப் பாதிரிகள் என் கருத்திற்கு முரண்பட்டவர்களாய் இருந்தாலும், அவர்கள் என்னைப் பற்றிப் புறங்கூறவில்லை. மறைவிலிருந்து என்னைத் தாக்கவுமில்லை....

''இங்கிலாந்தைவிட அமெரிக்காவில் பெருந்தொகையான மக்கள் எனக்குப் பரிவு காட்டினார்கள். கீழினப் பாதிரிகள் கூறிய கொடிய வசை மொழியே நான் எடுத்துக் கொண்ட செயல் வெற்றிகரமாய் முடியத் துணை செய்தது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1893 முதல் 1896 வரையில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் சுவாமிஜி வேதாந்தத்தை முன் நிறுத்தி இந்து சமய ஞானத்திற்கு வெற்றி முரசு கொட்டினார். அமெரிக்காவில் அவர் விட்ட பணியைத் தொடர்ந்து சுவாமி சாரதானந்தரும். இங்கிலாந்தில் சுவாமி அபேதானந்தரும் மேற்கொண்டனர். அந்தத் தொடக்கப் பணியின் வெற்றி ஐரோப்பாவிலும், பிறநாடுகளிலும் வளர்ந்தோங்கி பல கிளை அமைப்புகளைக் கண்டது. சுவாமியின் சிகாகோ பணி தொடர் பயணமாக முன்னேறி வருகின்றது.

இந்தியாவில் தொடங்க வேண்டியப் பணிக்காக, சுவாமி, 1896 டிசம்பர் 16-இல் லண்டனில் இருந்து தாயகத்திற்குப் புறப்பட்டார். அவருடன் அவருடைய ஆங்கிலேயச் சீடர்கள், சேவியர் தம்பதிகள், புறப்பட்டனர். வழிப் பயணத்தில் தேபில்சில் குட்வின் சேர்ந்துக் கொண்டார். சிகாகோ வீரராக வெற்றியுலா வரத் தொடங்கியவரை முதலில் இலங்கை வரவேற்று வணங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சுவாமிஜி

## வருகைக்குமுன்

சுவாமிஜியின் சிகாகோ சாதனைகளின் எதிரொலியை இலங்கையில் தமிழர்களிடையே 1894-லேயே கேட்க முடிந்தது. ''ஈழத்துத் தமிழ் சைவத்தின் தனிச்செங் கோலாகத்'' தோன்றியது ''இந்து சாதனம்'' எனும் இதழ். 1889-இல் இருமொழி இதழாக (தமிழில், 'இந்து சாதனம்' ஆங்கிலத்தில், Hindu Organ') தோன்றிய இந்து சாதனம் சிகாகோ சாதனைச் செய்திகளை ஆதரவுடன் வெளியிட்டு மகிழ்ந்தது. கிறித்துவ சமயத்தின் புகழ் பரப்ப 1841-இல் தோன்றிய 'உதயதாரகை', சிகாகோ சாதனைகளை ஏற்காமல் திரித்துக்கூறி எதிர்த்து எழுதியது. யாழ்ப்பாணத்தின் இந்த இரு இதழ்கள் சுவாமிஜி தொடர்பாக தம்முள் கருத்துப்போரையே நிகழ்த்தி யுள்ளன. கருத்துப்போர் இல்லாமல் சிகாகோ செய்திகளை 'சிலோன் அப்சர்வர்', 'சிலோன் இன்டிபெண்டெண்ட்' எனும் ஆங்கில இதழ்கள் வெளியிட்டன.

மெர்வின் மேரிஸ்நெல் என்பவர் சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி புகழ்பெற்றதைக் குறிப்பிட்டு 'பயனீர்' பத்திரிகைக்கு எழுதியக் கடிதத்தை 'இந்து சாதனம்' மொழி பெயர்த்து தனது 21—3—1894-ஆம் இதழில் வெளியிட்டது. 'அமெரிக்காவில் இந்து மதம்' எனும் தலைப்பில் இந்த மொழிபெயர்ப்பு பின்வரும் குறிப்புரை யுடன் வெளிவந்தது.

''அமெரிக்காவிலே சிக்காக்கோ என்னும் நகரத்திலே இன்றைக்கு ஐந்து மாசங்களுக்கு முன்னே கூட்டப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சமய மகாசபையிலே சாஸ்திரப்பகுதிக்கு அக்கிரா சனாதிபதியாக வீற்றிருந்து, அங்கே உலகத்துப் பலதிசை களினின்றும் போயிருந்த பற்பல சமயக் கொள்கைகளை யெல்லாம் கேட்டுச் சீர்தூக்கிய மெஸ்டர்மேர்வின் மேரிஸ் நெல் என்னும் அமெரிக்க பண்டிதர் பயோனியர்ப் பத்திரிகைக்கு எழுதிய விஷயத்தைச் சங்கிரகித்து இங்கே மொழி பெயர்த்துக் கூறுகின்றோம்.'' (இலங்கையில் சுவாமி விவேகானந்தர், நூற்றாண்டு விழா வெளியீடு, 1963, யாவ்ப்பாணம், ப. 1).

இந்த மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி வருமாறு :

''இவரிடத்திலே இவ்வளவு அபிமானத்துக்குக் காரணம் அமெரிக்காவுக்கு இந்தியர்கள் இவர் மூலமாக அனுப்பிய ஆன்ம ஞானத்தின் மீதுண்டாகிய பெருங்காதலன்றி மற்றியாது? உலக விவகாரத்திலும், அறியாமையிலும், கிராமியப் பழக்கத்திலும் அமிழ்ந்திக் கிடக்கும் பலதிறப் பட்ட அமெரிக்கருள்ளே ஆங்காங்கும் பலர்க்கு இப்போ தொருவாறு ஆன்ம ஞானத்தின் மீது பெருங் காதலெழுந் திருக்கின்றது... இங்ஙனம் இங்கே பரந்து வருதலைப் பெற்ற இந்துமதவுணர்ச்சியாகிய படர்கொடிக் கொழுந்துக்கு விவேகானந்த சுவாமிகளது பிரசங்கங்கள் கொளு கொம்பாயின...

''இவ் விவேகானந்த சுவாமிகளுடைய இனிய பிரசங் கத்தையும் அவரைச் சனங்கள் புகழ்ந்து கொண்டாடு வதையும் காதில் வீழ்த்தப் பொறாமை கொண்டவர். புரோடெஸ்டாண்டுக் கிறிஸ்தவருள்ளும் றெவரெண்டுக் குருமார் சிலரினும் சிலரேயாம். அவர்கள் பொறாமை முதலியனவெல்லாம், பாரத வருஷமாகிய இந்தியாவி னின்றும் வந்த பச்சைப் பீதாம்பரதாரியும் பரமசாதுவு மாகிய விவேகானந்த சுவாமிகளது மாறாக் கருணை, மாறாச் சாந்தம், மாறாப் பெரும்பொறை, கலங்காக் கல்வி, குளிர்ந்த மலர்ந்த முகம், மதுர பாஷணம் முதலிய நற்குணங்களின் முன்னே சூனியமாகி நசித்து விட்டன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலங்கையில் சுவாமி விவேகானந்தர்' நூலாசிரியர் திரு. ச. அம்பிகைபாகன் நூலின் முன்னுரையில் பின்வரும் செய்தியையும் குறிப்பிட்டுள்ளார்.

''இதை மொழி பெயர்த்து இந்து சாதனம் வெளியிட்டதோடு, மகாநாட்டுத் தலைவர் டாக்டர் பரோஸ் எழுதிய கட்டுரையையும் சேர்த்துத் தனிப் பிரசுரமாக வெளியிட்டது.''

இந்து சாதனத்தில், 'A Hindu' என்பவர் எழுதிய ஒரு கடிதம் வெளியிடப்பட்டது. அதில் 'உதயதாரகை'யில் 'ஓர் வேதன்' என்பவர் எழுதிய கடிதம் விமர்சனம் செய்யப் பட்டுள்ளது. ''ஸ்ரீ விவேகானந்த சுவாமி அவர்களும் உதய தாரகைக் கடிதரும்'' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட கடிதத்தின் முக்கியப் பகுதிகள் சில, பின்வருவன :

''இந்த மாதம் 1-ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 'உதய தாரகை' இருபதாம் இலக்கப் பத்திரிகையில் 'ஓர்வேதன்' எனக் கைச்சாத்திட்டு, ஒருவர் ''விவேகானந்த சுவாமியும் நாலாயிரம் பெயரும்'' என்ற முகவுரையோடு ஓர் கடிதம் வரைந்திருக்கின்றார். இக் கடிதம் மிக நீடித்த தொன்றாயினும் கட்டுரை மிகச் சுவல்ப்பமே. அன்றியும், கடிதர் தோளின் மீதிருந்து செவியைக் கடிப்பது போல, விவேகானந்த சுவாமியவர்கள் செய்யும் கிருத்தியங் களையும், அவரது கீர்த்திப் பிரதாபங்களையும் பற்றிப் புதினப் பத்திரிகைகள் பல பகர்ந்திருக்கும் சாக்ஷியங்களை ஒருவாறு நிராகரிப்பவர்போல் நடித்து எமது சமயத்தின் மீது தூஷண அஸ்திரங்களைப் ப்பிரயோகிக்கின்றார்.

''அமெரிக்கா, இங்கிலாந்து ஆதியாம் தேசங்களில், ஸ்ரீ விவேகானந்த சுவாமியவர்கள் செய்து வரும் இந்து மதப் பிரசங்கங்களைக் கேட்டு, அநேகாயிரவர் இந்து மதாநுசாரிகளாய் விட்டனர் என்ற சங்கதி அபத்த மென்பதும், சுவாமியவர்களுடைய பிரசங்க மண்டபங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே சனங்கள் திரண்டு குழுமுதல் அவர் செய்யும் போதனையில் அபிமான முற்றன்று, வேடிக்கை பார்த்துக் களிப்புறற்கே யென்பதும், ''இந்து தேச மார்க்க கிரியா சாரங்களை நன்குணர்ந்த கிறிஸ்த சுதேசி அவர் பிரசங்கத்திற் சமூகமாயிருப்பின்'' சுவாமியவர்கள் தலை குனிந்து பயந்தொடுங்கி விடுவாரென்பதுமே ''வேதன்'' கடிதத்துட்டுறை......

''இனி விவேகானந்த சுவாமியவர்கள் தமது முயற்சியிற் சித்தியடைந்து வருகின்றனரோ அன்றோ என்பதை உலகமே தூக்கியறியட்டும். முழுப் பூசனிக் காயைச் சோற்றில் மறைக்கும் சக்தி எம்மிடத்துமில்லை. வேதனிடத்துமில்லை... சுவாமியவர்களினது பிரசங்க மண்டபங்களிலே எமது மதாசார நியமங்களை நன்குணர்ந்த ஓர் சுதேசக் கிறிஸ்தன் சமூகனாயிருந்தால், சுவாமியவர்களுடைய பேச்சு 'கீச்சுக் கீச் சென்னுங் கிளி போன்றிருக்குமோ' என்று 'வேந்தன்' மனப்பால் குடித்து மகிழ்வெய்துகின்றார்......

''அப்படியாயின் கிறிஸ்த மிஷனரிகள் எம் மூருக்கு வந்து தம்மதத்தைப் பிரசங்கித்துத் திரியும் சமயங் களிலெல்லாம் மேலைத் தேசச் சமயாசார நியமங்களை நன்குணர்ந்த இந்து ஒருவர் பிரசன்னராயிருப்பின் மிஷனரி களெல்லாம் சிங்க சந்நிதானத்துற்ற சம்புகங்களை நிகர்த் திருப்பரே என்று நாமும் சொல்லி விடலாமே. இதனா லுள்ள பயனென்னோ?''

இந்த 'கடிதப்போர்' தொடர்ந்து நடந்தது. 'உதய தாரகை' பத்திரிகை, சுவாமிஜியின் சாதனைகளை அமெரிக்கப் பத்திரிகைகள் வாயிலாக அறியட்டும் என்று மீண்டும் 'A Hindu' என்பவர் தம்முடைய மற்றொரு கடிதத்தில் (இந்துநேசனில்) பின் வருமாறு கூறியுள்ளார்.

''சுவாமியவர்கள் சங்கதிகளை வெளியிட்ட பத்திரிகை களின் நாமங்களை ஈண்டு தருகின்றோம் அப்பத்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபர்களுக்கு கடிதம் நேரே யெழுதியவர்கள் அறியாமையை நீக்கிக் கொள்ளட்டும். அங்ஙனமின்றி சமய தூஷணத்தில் மீண்டும் தலையிட்டுக் கொண்டு அவதிப்படல் புத்தியன்று.

பத்திரிகைகளின் நாமங்கள் வருமாறு :—

''Iowa State Register''

''New York Critic''

''The Interior, Chicago''

''Chicaco Daily Interior Ocean''

''The Newyork Herald'';

'Westminister Gazette''

உதயதாரகை கடிதர் ஆங்கில அமெரிக்க பத்திராதிபரை அறியாமையுள்ளார் என்று காட்டப் புகுந்த மதி குருவுக் குபதேசிக்க துணிந்த சிஷன மதியை யொக்கு மென்க.''

சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்த பொழுதும், இந்து சாதனம், உதயதாரகை கருத்துப்போர் தொடர்ந்தது.

**யாழ்ப்பாணத்தில்**
**'நாவலர் மரபு'**

சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகையின் தாக்கத்தை அறிவதற்கு முன்பு, அங்கு செல்வாக்கு செலுத்தி வந்த 'நாவலர் மரபு' பற்றிய சுருக்கமான அறிமுகம் இன்றியமை யாததாகும்.

குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சம காலத்த வரான யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான் (1824—1879) யாழ்ப்பாணத்தில் சைவ சமயப் பேரெழுச்சியை ஏற்படுத்தியவர். சைவ சமய எழுச்சியை, தமிழ் எழுச்சியாகவும், தேசிய அடையாளங்களின் எழுச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் முதன்மைப்படுத்தியவர் நாவலர் பெருமான். இந்த ஒருங்கிணைப்பை 'நாவலர் மரபு' எனக் கூறத் தகுந்தது.

நாவலர் மரபின் ஊற்றுக்கண்களாக அவர் தொடங்கிய ''சைவப் பிரகாச வித்தியாசாலை''யும், அவருடைய மாணவ பரம்பரையினரும், யாழ்ப்பாணத்து சைவ பெரு மக்களும் தொடங்கிய 'சைவ சமய பரிபாலனசபை'யும் விளங்கின.

சைவ மாணவர்கள் திருநீறு அணிந்து வந்தால், அவர் களுக்கு அநுமதி மறுத்தன, கிறிஸ்துவ கல்வி நிறுவங்கள். இதற்கு வழிகாணவே, ''சைவப் பிரகாச வித்தியாசாலை களை'' பல இடங்களில் நிறுவினார், நாவலர் பெருமான். அக்காலத்தில் கிறித்தவப் பாடசாலைகளில் சேர்க்கும் சைவப்பிள்ளைகளுக்கும் ஒரு கிறித்தவப் பெயரை முன் வைத்தே பாடசாலைப் பதிவேடுகளில் பதியும் வழக்கம் இருந்தது என்பதும் இங்கு நினைவிற்குரியது.

சைவ வழிபாட்டுணர்வை விளக்க, பரப்ப பின் வரும் சிறு-சிறு வெளியீடுகளை வெளியிட்டார் நாவலர்பெருமான்

அனுட்டான விதிமுதற் புத்தகம் (நித்திய கன்மவிதி), அனுட்டானவிதி இரண்டாம் புத்தகமும், குருவாக்கியமும், சிவலாய தரிசன விதி, சைவ சமய சாரம், சைவ வினா— விடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம் (1875), திருக்கோயிற் குற்றங்கள் (1878)

சைவ சமயத்தைக் கண்டனம் செய்து கிறிஸ்துவர் களால் தொடுக்கப் பெற்றப் பிரசாரத்தை முறியடிக்க நாவலர் வெளியிட்ட நூல்களாவன: சைவ தூஷண பரிகாரம் (1854), சுப்பிரப்போதம் (1853) வச்சிர தண்டம்.

நாவலர் மாணவர் பரம்பரையினர், அத்வைத வேதாந்தத்திற்கு மறுப்பாக சைவ சித்தாந்த உயர்வை நிலைநாட்ட பத்திரிகைகளிலும், நூல் வெளியீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் பெரும் முனைப்பு காட்டினர். 29-4-1888-இல் நிறுவப் பெற்ற ''சைவ சமய பரிபாலன சபை'' யும், அதன் பிரசார முரசாக 11-9-1889-இல் வெளி வந்த ''இந்து நேசன்—இந்து ஆர்கன்'' நாவலர் மரபை முன்னெடுத்துச் சென்றன. சைவசித்தாந்தத் தத்துவப் பிரசாரப் போரில் ''இந்து சாதனம்'' முன் நின்றது.

தமிழகத்தில் சிதம்பரம் 'பிரம்மவித்யா' (1887). சென்னை ''ஹிந்து ஜன பூஷணி'', திருச்செங்கோடு 'விவேகதிவாகரன்' ஆகியன அத்வைத வேதாந்தப் பிரசாரப் போர் நிகழ்த்த; ''நாகை நீலலோசனி'' (1890), ''ஞானாமிர்தம்'' (1888), இரண்டும் சைவ சித்தாந்தம் பிரசாரப் போரை நிகழ்த்தின. அக்காலத்தில் யாழ்ப்பாணம், தமிழகத்திடையே சமூக- பண்பாட்டு உறவுகள், பரிமாற்றங்கள் மிக நெருக்கமாக இருந்தன.

இத்தகைய சமய வாதங்களுடன் நாத்திகவாதமும் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டியுள்ளது. 1880-இல் சென்னையில் இருந்து வெளி வந்த ''தத்துவ விசாரணி'' எனும் இதழின் வாயிலாக நாத்திகப் பிரசாரம் நிகழ்ந்தது. சார்லஸ் பிராட்லாவின் நாத்திகக் கருத்துகள் பிரசாரம் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் இந்த முயற்சி அரும்பியுள்ளது. இதைக் கண்டனம் செய்து சைவசமயச் செம்மல் ச. சபாரத்தின முதலியார், 'உதய பானு' எனும் சைவ சமய இதழில் எழுதி வந்தார். இவ்வாறு இவர் எழுதியது 1896-இல் ''ஈச்சுர நிச்சயம்'' எனும் நூலாக வெளிவந்தது. சார்லஸ் பிராட்லாவின் நாத்திக வாதம் இந்து சாதனத்திலும் கண்டிக்கப்பட்டது.

இந்தச் சூழலில் சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தைப் பற்றி ஆற்றிய விளக்கவுரை, யாழ்ப்பாண இந்துக்களையும் கவர்ந்தது. புறப் பகையை வென்றெடுப்பதில், உட்குழுப் பூசலில் திளைப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனும் நோக்கு முன்நின்றது. சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய உணர்வுடன், இந்து சமய உணர்வையும் வளர்ப்பதில் வேதாந்த—சித்தாந்தப் பூசலுக்கு சற்றே விடை கொடுத்து, சுவாமிஜியின் சிகாகோ சாதனை காரணமாகத் தோன்றிய இந்துசமயப் பெருமிதத்தை வகித்துக்கொள்ள யாழ்ப்பாண இந்துக்கள் முன்வந்தனர்.

## பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வுரை

சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரம், யாழ்ப்பாண சைவர்களிடையே எவ்வித மாற்றத்தை ஏற்பட வைத்தது என்பதைப் பற்றி நடுநிலைமையுடன் பேராசிரியர் கைலாசபதி ஆய்வு செய்துள்ளார். ஆங்கிலத்தில் வெளி வந்த ஆய்வுரையின் தமிழாக்கத்தின் ஒரு பகுதி, வருமாறு:

''நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள், இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறித்துவ சமயத்தின் மதமாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர். கிறித்துவம், தகுதியற்றது என்று நிறுவப் போராடினர். ஆனால், விவேகானந்தரின் அணுகுமுறை வித்தியாச மானது. தமது குருநாதரின் போதனைகளுக்கு ஏற்ப அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால், இந்து மதம் பிறமதங்களுக்குத் தாழ்வானது அன்று என்பது விளக்கமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத் திற்கிடமின்றி தெளிவாக்கப்பட்டது.

''இவ்வாறு விவேகானந்தரால் பிரசாரம் செய்யப் பெற்ற வேந்தாந்தம் அனைத்துப் பிரிவினரையும் சமயக் கோட்பாடுகளையும் சமமாகக் கருதியது. இதனால் ஒருவர் இருவித அங்கீகாரத்தையும் பெறமுடிந்தது. ஒருவர் சைவராகவும் அதே சமயத்தில் விரிந்த பொருளில் ஓர் இந்துவாகவும் அங்கீகாரம் பெறுவார். இவ்வாறே வைணவரும் இருவேறு அங்கீகாரம் பெறத்தக்கவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யாழ்ப்பாண இந்துக்களில் பெரும்பான்மையினர் சைவர்கள். சைவசமயப் பற்று மிகுந்தவர்கள். சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல-மெல்ல வேதாந்தத்தை ஒப்புக்கொள்ளாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுவாமி விவேகானந்தரின் போதனைகளும் இராமகிருஷ்ணர் இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக்கொள்ளச் செய்யாவிட்டாலும் பெரும்பாலோரின் குறுகிய நோக்கையும், கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது.'' [''The Impact of Swami Vivekananda on Hinduism In Sri Lanka''—Prof K. Kailaspathy, Golden Jubilee of the Ramakrishna mission, Sri Lanka centre, 1980, P. 2.]

## இலங்கையில் வெற்றியுலாத் தொடக்கம்

சிகாகோ சர்வமத சபையில் கலந்துக் கொள்வதற்காக சென்றபொழுது 1893 மே மாதத்தில் ஒருநாள் அவர் சென்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமி கொழும்பு நகரைச் சுற்றிப் பார்த்தார். ஆனால், அன்று அவரைச் சூழ்ந்துப் பார்க்க எவருமிலர். 1897 சனவரியில் அந்தக் காட்சி மாறி விட்டது.

இந்தியா தம்மை வெற்றி விழாக் கோலம் பூண்டு வரவேற்கும் என்பதை, இந்தியா திரும்புவதற்கு பல மாதங்களுக்கு முன்பாக தமது நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு கூறினார்.

''இந்தியா எனக்குச் செவி சாய்க்கத்தான் வேண்டும். அதன் அஸ்திவாரத்தையே அசைக்கப் போகின்றேன். அதனுடைய தேசிய ரத்த நாளங்களிலே மின்சார அதிர்வைப் பாய்ச்சப் போகின்றேன். இந்தியா எம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி வரவேற்கப் போகின்றது என்பதைப் பொறுத்துப் பார். வேதாந்த உணர்வை, என் உயிர்ச் சக்தியுடன் இங்கு எவ்வளவில் வாரி வழங்கியுள்ளேன் என்பதை என் தாய்த் திருநாடான இந்தியாவிற்கு உண்மையிலேயே மதிப்பிடத் தெரியும். இந்தியா எம்மை வெற்றி விழாக் கோலம் பூண்டு வரவேற்கும்.''

இவ்வாறு ஒரு பக்கம் உணர்ச்சியுடன் சுவாமி சாற்றிய போதிலும், மறுபக்கம் என்ன நடக்குமோ என்று சற்று சோர்வுடன் இருந்ததாகவும் குட்வின் குறிப்பிட்டுள்ளார். 1896 நவம்பர் 14-இல் ஓலிபுல் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் குட்வின், சுவாமியிஜின் சோர்வை பின்வருமாறு கூறியுள்ளார்.

''இந்தியாவில் தாம் எவ்வாறு வரவேற்கப்படுவார் என்பதைப் பற்றி சுவாமி நிச்சயமற்ற வுணர்வைக் கொண்டுள்ளார். பெருமளவில் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்றும் நினைக்கின்றார். அப்படியானால், இந்தியாவில் சிறிது காலம் தங்கி மீண்டும் அமெரிக்கா, இங்கிலாந்திற்கு போவதுதான் உகந்ததாகும். போகும்பொழுது ஜப்பானிலும், சீனாவிலும் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.'' [Swami Vivekananda, His Life and Legacy, Swami Tapasyananda, P.87]

சுவாமிஜியை வரவேற்க மக்கள் எழுச்சி எவ்வாறு திரண்டெழுந்து ஏற்றிப் போற்றிப் பக்திப் பரவசத்தால் ஆரவாரம் செய்தது என்பதை வரலாறு மிக விரிவாக பதிவு செய்து விட்டது. இதை முதன்முதலில் தொடங்கி வைத்த பெருமை இலங்கை இந்துக்களுக்கு வாய்த்து விட்டது.

## கொழும்பில் சுவாமிஜி

சுவாமிஜி சிகாகோ வீரராகத் திரும்பி ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிடப் பெற்ற நூலிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொழும்பு முதல் அல்மோரா வரையில்'' எனும் பெயரிட்டனர் இந்தப் பெயர் பொருத்தத்தைப் பார்க்கும் பொழுது கொழும்பு நகரம் பெற்ற முதற் சிறப்பையும் அறிகிறோம்.

சுவாமிஜி 1897 சனவரி 15-ந் தேதியன்று, மாலையில் சேவியர் தம்பதிகள், குட்வின் புடைசூழ கொழும்பு துறைமுகத்தில் வீரக்கழல்களைப் பதிப்பித்தார். கொழும்பு நகர இந்துக்கள் சுவாமிஜியை வரவேற்க ஆயிரக்கணக்கில் திரண்டனர். சுவாமிஜியை வரவேற்க சென்னையில் இருந்து அவருடைய சகோதரத் துறவி சுவாமி நிரஞ்சனானந்தா வரவேற்புக் குழுவின் சார்பில் வந்திருந்தார். கொழும்பு இந்து சமய மக்கள் வரவேற்புக்குழுவின் தலைவா பொ. குமாரசுவாமியும், செயலாளர் ஏ. குலவீரசிங்கமும் வந்திருந்தனர்.

சுவாமிஜிக்கு வரவேற்பு குழுத்தலைவர், மல்லிகை மலர் மாலையை அணிவித்ததும், மக்கள் திரள் சுவாமிஜியின் திருவடிகளைத் தொட்டு வணங்க அலை அலையாய் முன்னேறியது. மக்கள் உணர்ச்சி ஒலியும், கர ஒலியும், துறைமுகத்தையடுத்த கடல் அலையோசையை அடக்கி விட்டது. சுவாமிஜியை கறுவாக்காடு என்னுமிடத்தில் ஓர் கவின் மாளிகையில் எழுந்தருளச் செய்ய நீண்ட ஊர்வலம் தொடங்கியது. இரு குதிரைகள் பூட்டிய அணிசேர் இரதத்தில் ஞான சூரியனாக சுவாமிஜி அமர்ந்தார். வழி நெடுகத் தோரணங்கள், அலங்கார வளைவுகள், மக்களின் பக்திப் பரவச வாழ்த்தொலிகள் மாளிகையில் மலர் சொரிய சுவாமிஜி எழுந்தருளியதும், தமிழ்ப் பண்பாட்டிற்கேயுரிய இசை தவழ்ந்தது. தமிழ் பக்தி இலக்கியத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மலர்ந்து தெய்வீக மணம் பரப்பிக் கொண்டு வரும் தேவாரப் பண் இசை, சுவாமிஜியை வரவேற்றது. சுவாமிஜிக்கு இது ஓர் புதிய அனுபவம்; அற்புத அனுபவம். இதையடுத்து சம்சுகிருத துதிப்பாடல் ஒன்று ஓதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புக் குழுத் தலைவர் பொ. குமாரசுவாமி சுவாமிஜியிடம் சமர்ப்பித்த வரவேற்புரையின் ஒரு பகுதி, வருமாறு :

"அனைத்து சமய நெறிகளையும் சமரசப்படுத்தும் இந்து சமயத்தின் இலட்சியமான உலகளாவிய சமயத்தைத் தாங்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் அறிவுறுத்தினீர்கள்... ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் பேரருளினாலும், தங்களுடைய தன்னலமற்ற பற்றார்வக் கிளர்ச்சியாலும் மேலைநாடுகள், இந்தியாவின் ஆன்மிக ஞானத்தின் உயிரோட்டமுள்ள விலைமதிக்கவியலாத வரத்தைப் பெற்றுள்ளன. மேல்நாட்டு நாகரீக வெளித் தோற்றத்தில் மயக்கமுற்ற பெரும்பான்மையான நம் நாட்டு சகோதர மக்கள், தங்கள் முன்னோர் தேடிவைத்த புகழார்ந்த பாரம்பர்யத்தின் அருமையறிந்து உய்ந்தார்கள்."

சுவாமிஜி தமது ஏற்புரையில் உளம் நெகிழ்ந்து இந்து சமயப் பண்பாட்டின் சாரம்சத்தை தமக்களிக்கப் பெற்ற மாபெரும் வரவேற்பில் கண்டதாக பின்வருமாறு கூறினார்.

"ஓர் ஏழைச் சந்நியாசிக்கு அளிக்கப்பட்ட அரசர் மரியாதைக்குரிய வரவேற்பில் இந்துக்களின் ஆன்மிகம் வெளிப்பட்டது."

அடுத்த நாள் 16-ந் தேதி சுவாமிஜி பொதுக் கூட்டத்தில் பேசுகையில், இந்தியா புண்ணிய பூமியென்பதையும், இந்தியாவின் உயிர்நாடி சமய வாழ்க்கை என்பதையும், ஒரே இறைவனை மக்கள் பல பெயரால் வணங்குகிறார்கள் என்பதையும் விளக்கினார்.

சுவாமிஜி இலங்கையில் பத்து நாட்கள் தமது வெற்றியுலாவை நிகழ்த்தினார். கொழும்பு, கண்டி, வெளவுனியா, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் சுவாமிஜிக்கு வரவேற்புரைகள் படித்தளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சில கிறிஸ்துவர்களும், சில பௌத்தர்களும் தமிழ் இந்துக்களின் மத்தியில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆராவாரத்தைக் கண்டு பொறாமையுற்று தொல்லை கொடுத்தனர். அநுராதபுரத்தில் சுவாமிஜி பேசியது தமிழுடன், சிங்களத்திலும் மொழி பெயர்க்கப் பெற்றது. பௌத்தர்கள், சொற்பொழிவின் இடையே இடையூறு விளைவிக்கும் வகையில் பலவித ஒலிகளை எழுப்பினர். தமிழர்—சிங்களவர் இடையே மோதல் உருவாகும்போல் இருந்தது. சுவாமிஜி, தமிழர்களிடையே கட்டுப்பாட்டை வலியுறுத்தி அமைதியை நிலை நாட்டினார். பின்பு அங்கிருந்த பௌத்தர்களே வெட்கமுறும் வண்ணம் பகவான் புத்தரைப் பற்றி மிக உயர்வான உரையாற்றினார். அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்றார், சுவாமிஜி.

## யாழ்ப்பாணத்தில் சுவாமிஜி

அக்காலத்தில் ரயில் பயணத்திற்கு வாய்ப்பில்லாததால், அநுராதபுரத்தில் இருந்து 120 மைல் தொலைவில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு குதிரை பூட்டிய 'கோச்' வண்டியிலே, படுமோசமான பாதையில், மிக்க சிரமத்துடன் சுவாமிஜி பயணித்தார். சுவாமிஜியுடன் சேவியர் தம்பதிகள், குட்வின், சகோதரத் துறவி சுவாமி நிரஞ்சனானந்தா ஆகியோரும் வந்தனர். சனவரி 24-இல் காலை பத்து மணி அளவில் சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

திரு. சி. நாகலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்களைச் செயலாளராகவும் கொண்ட வரவேற்றக் குழு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது. சுவாமிக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பை 'இந்து சாதனம்' (3-2-1897) பின்வருமாறு வருணித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பல்லாயிரவர் புடைசூழ, மேளவாத்திய கோஷங்கள் திசாமுகங்களை அதிரச் செய்ய, தீவர்த்திகளெல்லாம் வானசோதிகளை அதிரச் செய்ய இரு துரகங்கள் பூட்டிய வண்டிமீதமர்ந்து இந்துக் கல்லூரியிலியற்றப் பட்டிருந்த அலங்காரப் பந்தலுக்குச் சுவாமியவர்கள் எழுந்தருளிய போது பெரிய கடை முதல் கல்லூரி ஈறாகச் செய்யப்பட்டிருந்த வீதியலங்காரம் அம்மம்ம! எம்மாற் சொல்லத்தக்கதன்று, எங்கணுந் தோரணங்கள்! எங்கணும் பூரண கும்பங்கள்! எங்கணுந் தீப தூபங்களுமாயே இருந்தது.''

யாழ்ப்பாண மக்கள் சார்பில் அ. சபாபதிப்பிள்ளை, வரவேற்புரையை வாசித்தளித்தார். இதில் ஒரு பகுதி, வருமாறு :

''எமது சமய உண்மைகளைத் தங்கள் சுயநலமற்ற சேவை மூலம் பரப்பி வருவதற்கும், சர்வசமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்திய தத்துவ சாஸ்திரத்தை அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலே பரப்பி மேலைத் தேசங்களுக்கும், கீழைத் தேசங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். சமய உண்மைகளில் நம்பிக்கை குறைந்து உலோகாயதக் கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் நமது பழம்பெரும் சமய உண்மைகளைப் பிரசாரம் செய்வதற்குத் தாங்கள் ஆரம்பித்திருக்கும் இயக்கத்திற்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

வரவேற்புரையை ஏற்று சுவாமிஜி பதிலளித்ததைநப் பற்றி 'இந்து சாதனம்' சைவ சமய எழுச்சியுடன் பின் வருமாறு வருணித்தது.

''அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப் பிரசங்களினது அலங்காரமே அலங்காரம்! புத்தரை வாதில் வென்ற ஸ்ரீமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமியவர்களினது திருவவதாரமே அன்றிச் செக்கர் வானிறத்தானாகிய எம்பிரானே எமக்கு உபதேசஞ் செய்யுமாறு மானுடச் சட்டை பூண்டெழுந் தருளிய குருவடிவந்தானோ எம் முன்னே நிற்கும் வடிவ மென்று ஐயுறக் கிடந்ததெனில் சுவாமி அவர்கள் மகத்துவம் எம்மாற் சொல்லுந்தகைத்தோ!''

25-ந் தேதியன்று இரவு 7 மணி அளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுவாமிஜி 'வேதாந்தம்' எனும் தலைப்பில் ஒரு மணி 40 வினாடிகள் நேரம் பேசினார்.

## யோக சுவாமிகள் நினைவுக் குறிப்புகள்

யாழ்ப்பாணத்தில் சைவ சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த நாவலர் பெருமானுக்குப் பிறகு சைவப் பெருமக்களால் பெரிதும் கொண்டாடப் பெற்றவர் யோக சுவாமிகள் (1872—1964). சைவ சமயத்தைப் பேணுவதில் மிகுந்த கண்டிப்புடையவராயிருந்த அதே சமயத்தில் சமயங் கடந்து நின்று, தத்துவப் பூசல்களுள் அகப்படாத தத்துவா தீதனாகவும் திகழ்ந்தவர் யோக சுவாமிகள்.

'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம் நாமே' என்றும் கூறியவர் யோக சுவாமி. 1925-ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பலரும் யோகசுவாமிகள் திருநாமத்தை பக்தி சிரத்தையுடன் கூறத் தொடங்கிவிட்டனர். யோகசுவாமி களின் போதனைகள் ''நற்சிந்தனை'' எனும் நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்து ஞான மலராக ஆன்மிக மணம் வீசிய யோக சுவாமிகள், சிகாகோ வீரராக சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்த சமயத்தில் அவருடைய தரிசனத் தையும், சொற்பொழிவையும் கண்டு கேட்ட பேறு பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி ஏறி வந்த வண்டியை, யோக சுவாமிகள் இழுத்ததாக, பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தின் சுவாமி சித்ரூபானந்தா ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள் ளார். ['ஆத்மீகமும் யாழ்ப்பாண மக்களும்' — தமிழோசை, லண்டன், 31-7-1992, ப.15]

யோக சுவாமிகள் பற்றிய ஒரு நூலில், அவர் சுவாமிஜி யைக் கண்டது, கேட்டதைப் பற்றிக் கூறியது பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது.

''சுவாமிகள் கிளி நொச்சியில் தொழில் புரியும் காலத்திலேயே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது (1897). அப்பெரியாருக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் உற்சாகத்துடன் பங்கு பற்றினர். கோட்டையிலிருந்து இந்துக் கல்லூரி வரை சென்ற ஊர்வலத்திலும் பின்னர் கல்லூரியில் நடை பெற்ற பொதுக் கூட்டத்திலும் சுவாமிகள் கலந்து கொண்டனர் பின்னாட்களில் அவர் தம் அன்பர்களிடத்து ''விவேகானந்தர் மேடையின் இரு பக்கங்களிடையேயும் சிங்கக்குட்டி போல் உலாவிக் கொண்டு பேசினார்'' எனவும், ''அவர் பேசினார் என்பதிலும் சிங்கம் போல் கர்சித்தார் என்பதே சரி'' எனவும் கூறி மகிழ்வார். அவர் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகளில் அன்பர் களுக்குக் கூறியிருக்கிறார். ''விடயம் பெரிது நேரமோ குறுகியது'' [The subject is Vast, But time is short] என்பதே அவ்வாசகமாகும். [யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும், முதற்பதிப்பு, 1991, ஆக்கம், 'சிவத் தொண்டர்', சிவதொண்டன் நிலையம், செங்கலடி, இலங்கை, ப. 17].

சுவாமிஜி மேடையில் உலாவிக் கொண்டே பேசும் பழக்கமுடையவர் என்பதை மேரி லூயிஸ் பர்க்கும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவர்கள் தூண்டியப்பிரசாரம்

"சுவாமிகளின் பிரசாரத்தினால் தங்கள் ஏகபோக நிலைக்கு ஆபத்து ஏற்படுவதைக் கண்ட கிறிஸ்தவர்கள் சுவாமிகளைப் பலமாகத் தாக்கினர். வேதாந்தத்துக்கும் சித்தாந்தத்துக்கும் உள்ள வித்தியாசத்தை மிகைபடக் கூறி இந்துக்களுக்குள் மித்திர பேதஞ் செய்ய எத்தனித்தனர்." இவ்வாறு "இலங்கையில் விவேகானந்தர்" எனும் நூலின் ஆசிரியர் ச. அம்பிகை பாகன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிஜி இலங்கை வருவதற்கு முன்பே, சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி நிகழ்த்திய சொற்பொழிகள் இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்தக் காலத்திலேயே கிறிஸ்துவ சமய இதழ்கள் சுவாமிஜியை எதிர்த்து எழுதியதை முன்பு கண்டோம்.

சுவாமிஜியை வேதாந்தி எனக் சுட்டிக் காட்டி, சித்தாந்தம் பேசும் தமிழர்கள் வரவேற்கலாமா என 'மித்ர பேதம்' செய்ய முற்பட்ட பொழுது, சைவ சமயப் பிரசார முரசான 'இந்து சாதனம்' அந்தச் சூழ்ச்சியை சாடியது. 17-2-1897—இல், "ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளும் கிறிஸ்துவர்களும்" எனும் தலைப்பில் 'இந்து சாதனம்' எழுதியக் கட்டுரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

"ஆயிரஞ் சுணங்கன்கள் கூடிச் சந்திரனைப் பார்த்துக் குரைத்துக் குரைத்து ஊளையிட்டாலும் அதற்கு யாதும் குறைவுண்டாகுமா? ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் மீது எண்ணிறந்த கிறிஸ்தவர் சீறிச் சினந்து அவர்க்கும் அவர் பிரசங்கிக்கும் மார்க்கத்திற்கும் விரோதமாகப் போலிக் கண்டனங்கள் எழுதித் தங்கள் பத்திரிகைகளை நிரம்பி விடுவதால் அவர் மாட்சிக்கு இம்மியளவேனுந் தாழ்ச்சியுண்டாகுமா? உண்டாகா! உண்டாகா!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுவாமியவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா ஆதியா மிடங்களிலே எமது மார்க்கத்தைப் பிரசங்கித்து அங்குள் ளாரநேகரை எமது மத அனுசாரிகளாக்கினாரென்று நாம் கூற அதனை மறுத்து, அங்ஙனமன்று 'வினோதக் காட்சிப் பிரியாராயுள்ளோர் சிலர் மாத்திரமே அவர் பிரசங் கத்தைக் கேட்டு போயின' ரென்று எம்மோடு வாதாடின கிறிஸ்தவர்கள், அவர் தமது ஆங்கில சீடரோடும் நம் மத்தியில் வந்துதித்து, துயின்றிருந்த எம்மை விழிக்கச் செய்து ஒரு பெருங்கிளர்ச்சியை எம் மதத்தினர்க்குள் உண்டாக்கிச் சென்றதைக் கண்ணுற்று மனம் பொறுக்க லாற்றாண்தவராய்க் கிறிஸ்து மதத்திற்கு இடையூறு நேரிட் டிருக்கின்றதே எனுமச்சங்காரணமாய் நம் பத்திரிகைகள் மூலம் ஆகச் சில வெற்றுரைகள் பகர்ந்து எம் நாட்டினரை இதுவரையும் வஞ்சித்தது போதாதென்றாக்கும் இன்னும் வஞ்சிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்.''

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூண்டெழுந்த வேதாந்த சித்தாந்தத் தத்துவப் போராட்டம், இந்து சமயத்திற்குள் நிகழ்ந்த பல்வேறு போராட்டங்களில் ஒன்றாகும். கிறிஸ்துவத்தில் கத்தோலிக்க, பிராட்டஸ் டண்ட், யூனிட்டேரியனிஸம் முதலான பலவேறு கருத்துப் போர்களைப் போன்றும், இஸ்லாத்திலும் ஷியா, சன்னி, அகமதியா எனும் பிரிவினர்களிடையே நிகழ்ந்தத் தத்துவப் போராட்டங்கள் போன்றும், இந்து சமயத்திலும், வேதாந்த, சித்தாந்தத்தத்துவப் போராட்டம் எழுந்தது. இது, இந்து சமயத்தை அழிப்பதற்கன்று. 'அவரவர் தம தம தறி தறிவகை வகையால், இந்து சமயத்திற்கு ஆக்கம் தேடுவதற்கும்தான். இந்தப் போராட்டத்தை இந்து சமய ஒற்றுமைக்கு ஊறு தேடுவதற்காக, பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும், கிறிஸ்துவ மிஷனரிகள் பயன் படுத்தியதுண்டு.

சுவாமிஜிக்கு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் படித்தளிக்கப் பெற்ற வரவேற்புரைகளில், ''சகல சமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளையும் சமரசப்படுத்தியதாய், ஆன்மாக்களது பக்குவத்துக்கேற்ற படிப் படியாகக் கொள்ளத்தக்க ஞானவமுதத்தையுடையதாய்'' என்றும், ''சர்வ சமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்'' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன.

அழுத்தமான சைவ சித்தாந்த உணர்வை போர்க்குணமாகக் கொண்ட யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மையான சைவர்கள், புத்தெழுச்சி பெற்று மேலும் சமய வலிமை பெறுவதை கிறிஸ்துவ மிஷனரிகள் சிலர் விரும்பவில்லை. ஆகவே, வேதாந்த சித்தாந்த 'மோதல்களை' மீண்டும் நினைவு படுத்தி, அவற்றை முன் நிறுத்தி சுவாமிஜியின் வளர்ந்தோங்கி வந்த செல்வாக்கைத் தடுத்து நிறுத்த வீண் முயற்சி செய்தனர். சுவாமிஜி கிறிஸ்துவ சமயத்திற்கு எதிரி அல்லர்; கிறிஸ்துவ மிஷனரிகளின் தவறான பிரசார— செயற்பாடுகளுக்குத்தான் எதிரி என்பதை கருத்தில் கொள்ளாமல் யாழ்ப்பாணத்து கிறிஸ்துவர்கள் சிலரும், அமெரிக்காவில் கிறிஸ்துவ மிஷனரிகள் கிளப்பிவிட்ட திரிபுவாதத்தைப் பின்பற்றினர்.

இதற்காக, தமிழகத்தில் சிதம்பரத்தில் இருந்து வெளி வந்த 'பிரமவித்யா'வும், திருச்செங்கோட்டில் இருந்து வெளி வந்த ''விவேகதிவாகர''னும், சைவசித்தாந்தப் பிரசாரப் போரிற்கு பதிலளித்து எழுதி வந்தது; தாக்கியும் எழுதின. இந்தக் 'தாக்கு'தலை யாழ்ப்பாண கிறிஸ்துவ மிஷனரிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதையும் உள்ளடக்கி, 'இந்து சாதனம்' மேலும் எழுதியதாவது:

''......பத்திராதிபர் இந்துக்களாகிய எமக்கு இந்து மதம் போதிக்கத் துணிந்த துணிவே துணிவு! வேதாந்தம் சித்தாந்தங்கட் கிடையேயுள்ள பேதாபேதங்களை ஏதோ நன்குணர்ந்தவர் போன்று நடிக்கும் நடிப்பே நடிப்பு! தாம் கையாண்டிருக்கும் கிறிஸ்த மதத்தினது உண்மை பொய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது மயங்குமிவர் பரசமய ஆராய்ச்சி செய்ய நினைத்த மருளே மருள்! ''பிரம வித்தியா'', ''விவேக திவாகரன்'' ஆகிய இந்தியப் பத்திரிகைகளில் அத்துவைத விஷயமாய் ஆங்காங்கு பலமுறைகளிலும் எழுதப்பட்டவற்றையெல்லாம் திரட்டி எடுத்துச் சென்று......பிரசுரித்து விட்டு, தாம் ஏதோ அத்துவைத நூல்களை விசாரித்துக் கரை கண்டார் ஒருவர் போலக் கபட நாடகஞ் செய்யும் நாடகமே நாடகம்!......எமக்குள்ளே பிரிவினையுண்டாக்கிச் சுவாமிகள் வரவாற் கிளர்ந்திருக்கும் மதாபிமானத்தைக் கெடுத்து விடுவதற்கோ! ஏதுக்கிவர் இவ்வளவு பதை பதைக்கின்றார்! இவர் வெற்றுரையால் எடுபட எமது சமயிகள் அத்தனை மூட சிரோமணிகளன்று.''

''சுவாமிகள் வரவாற் கிளர்த்திருக்கும் மதாபிமான''க் கண்ணோட்டத்தினால் வேதாந்த—சித்தாந்த நல்லுறவிற்குக் குரல் கொடுத்தது, 'இந்து சாதனம்'. சுவாமிஜியின் வருகையால் விளைந்த இந்தப் புதிய மாறுதலை 'இந்துநேசன்' பின்வருமாறு எதிரொலித்தது.

''வேதாந்த சித்தாந்தங்களை உண்மை ஞானிகள் ஒருபோதும் இரண்டெனார். சுத்தாத்துவிதமே சித்தாந்தம் என்பது எமக்கெல்லாம் ஒத்த துணிவு. ஆகவே வேதாந்த சித்தாந்தங்கள் உண்மையளவில் ஒன்றேயாம். கிரியா விஷயங்களில் இவையிரண்டிற்கும் சிறிது பேதமுண்டேயாயினும் அதனால் உண்மை பேதிக்குமா? மாயாவாதத்துக்கும் சித்தாந்தத்துக்கும் மிக்க பேதமுண்டு. இவ்வுண்மைகளை அறியாது பத்திராதிபர் தாமே மயங்குகின்றாரன்றிப் பேதைகளை மயக்கவும் எத்தனிக்கின்றார்.''

## 'சிவ புண்ணியத் தெளிவு'

சுவாமிஜியின் சொற்பொழிவுகளில் சிந்தாந்தச் சாத்திர நூல்களுள் ஒன்றான ''சிவ புண்ணியத் தெளிவு'' எனும் நூலில் ஓதப்பட்டிருக்கும் கருத்துகள் ''மிகுதியும் செறிந்து கிடத்தலைப் பாலரும் இனிது விளங்கிக்கொள்வர்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்து சாதனம்' தனது கருத்துப்போரில் தொடர்ந்து வலியுறுத்தி, பின்வரும் பாடலையும் 'சிவ புண்ணியத் தெளி'வில் இருந்து எடுத்துக்காட்டியது.

சீவனை சிவத்தினொன்றாய்ச் சேர்க்கும்
சித்தாந்தோர்க்கும்
சீவனை பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத்தோர்க்கும்
பாவனை இரண்டுமொன்றே பரம
ஞானத்தோர்க்கெல்லாம்
மேவிய கருமகாண்டம் விளம்பிடிற் பேதமாமே.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும், இந்நூலை அருளியவர் உமாபதிசிவாசாரியார் ஆவார்.

ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் என்னும் மூன்று நிலைகளில் இந்து சமயத்தத்துவங்கள் அனைத்திற்கும் விளக்கங்கள் காண்பதற்கு வாய்ப்புகள் பெருமளவில் இருக்கும் பொழுது, வேதாந்த-சித்தாந்தங்களிடையே ஒற்றுமை அம்சங்களைக் காண்பதே உகந்ததுமாகும். 'சிவ புண்ணியத் தெளிவு' சாத்திர நூலைக்கொண்டு 'இந்து சாதனம்', சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரத்திற்கு ஆதரவளித்ததும், குறிப்பிடத்தக்க ஒரு விளக்கமாகும்.

## 'உதய தாரகை' யின் பார்வையில்

யாழ்ப்பாண கிறிஸ்துவ சமயத்தினர் மீது 'இந்து சாதனம்' தொடுத்த விமர்சனத்திற்குரிய காரணத்தை அறிவதற்கு, 'உதய தாரகை'யின் போக்கை அறிய வேண்டும். சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகையைப் பற்றி, 'உதயதாரகை' விரிவானச் செய்தியை 1897 மாசி மாத 4-ந் தேதி வியாழக் கிழமை இதழில் வெளியிட்டது. இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்கே காழ்ப்புணர்ச்சியுடன் திரிபுவாதத்தைத் தெரிவித்தது, உதயதாரகை. சில சான்றுகளைப் பார்ப்போம்.

''வேதாந்தம் தமிழ் நாடுகளுட் புகுந்த காலத்துச் சைவ சித்தாந்த ஆதினத்தார் குமிறொலி செய்தெழும்பச் சித்தாந்திகளுக்கும் வேதாந்திகளுக்குமிடையில் பெரும் பூசலுண்டாயிற்று. இப்பூசலிடையறாது நடந்து கொண்டே வருகின்றது.'' அத்வைத தூஷணங்கள்,'' ''பரிகாரங்கள்'', ''நிராகரணங்கள்'' மெத்த! மெத்த! திருச்செங்கோட்டு விவேக திவாகரனாதியாம் பத்திரங் களிலுமிச்சமர் நடக்கின்றது. திராவிட தேயத்தரவர்களில் மிகுதியானோர் சைவ சித்தாந்த பட்சத்தாராகவே விவேகானந்த சுவாமியின் அத்துவைத பிரகாரண மெவ்வள விலங்கிகாரம் பெறுமோ அறியோம்.''

''விவேகானந்த சுவாமியின் அவிவேக சாலப் பிரசாரணம்'' எனும் தலைப்பில் 'சத்திய நேசன்' என்பவர் எழுதிய கடிதத்தையும், வெளியிட்டது 'உதயதாரகை'. இதில் சுவாமிஜியை, 'இந்து சாதனம்' பாராட்டியதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பின்வரும் சில கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

''அமெரிக்க கிறிஸ்த மதம், மாணிக்கவாசக சுவாமி காலச் சைவமாயிருப்பின் சுவாமி அங்கு பிரசங்கிக்கவும் பின்னர் திரும்பி வரவும் விடுவரா? கழுவேற்றிவிடுவாரே. சமய இட்டங்கொடுப்பதும், பரமத வேறுபாடின்றிச் சகலரிலும் அனுதாபப்படச் செய்வதும் கிறிஸ்து மதமே யென்பதை அனுபவமாத்திரையாய் பூரணமாயறிந்தும் இவ்வாறு போலி சாலம்விடல் அவர்க்கு விவேகமாகுமா?''

''எட்டி எட்டிப் பார்ப்பாரும், ஏணி வைத்துப் பார்ப்பாரும் குட்டிச்சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும் என்றாற்போல நம் யாழ்ப்பாணத்துள்ள சைவரும் பிறரும் விவேகானந்த சுவாமியை வலிந்தழைத்தும் எட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தும் வணங்கிப் பார்த்தும் பெற்றுக்கொண்ட நற்பலன் தானென்ன? விவேகானந்த சுவாமி போதிக்கின்ற மதத்துக்கும் அவரதாசாரத்துக்கும் யாழ்ப்பாணத்துள்ள சைவர் அனுசரிக்கின்ற மார்க்க ஒழுக்கங்களுக்கும் ஏதும் ஒற்றுமை பற்றுமா? முத்திறத்தார்க்கே விசேஷ சலாக்கியமும் பாக்கியமுமாகச் சமைத்துள்ள ஆலயங்களும் நூல்களும் எத்திறத்தார்க்கும் இயைதற்குகந்த விதி உபதேசத்தால் மாற்றினால் வாய்ப்புத்தான்.''

உதயதாரகை, இந்துநேசன் இரண்டும் நிகழ்த்திய கருத்துப்போர், யாழ்ப்பாண கிறிஸ்துவ சமய, சைவ சமய வரலாற்றின் போக்குகளை அறிய வாய்ப்பளித்தது. ஆறுமுக நாவலர், வேதாந்தத்தை எதிர்த்தது போலவே, கிறிஸ்துவ சமயத்தையும் எதிர்த்தார். அவருக்குப்பின் அவருடைய மரபின் வழிநின்றோர், வேதாந்த சமய எதிர்ப்பில் முனைப்பு காட்டாமல், சுவாமிஜி வேதாந்த சமய அணுகுமுறையைப் புரிந்துக் கொண்டனர். கிறிஸ்துவ சமய எதிர்ப்பையும், வேதாந்த சமய எதிர்ப்பையும் இரட்டைக்குழல் துப்பாகியாகக் கொள்ளாதது; சுவாமிஜியின் காரணமாக ஏற்பட்ட மாற்றம், இதுவென்றும் கூறலாம்.

சுவாமிஜிக்கு முன்பு கூட ஆங்கிலம் படித்த, சைவசமய அறிஞர்கள், வேதாந்த, சித்தாந்த சமரச நோக்குடன் விளங்கினர். சேர் முத்துகுமாரசுவாமி (1834—1879), பொன்னம்பலம் ராமனாதன் ஆகியோர் வேதாந்த, சித்தாந்த சமரச நோக்குடையவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வகையில் அவர்கள் தாயுமான சுவாமிகள் (1706-1744) சமரச நெறி வழியே நின்றனர் என்றும் கருதலாம்.

சேர் முத்துகுமார சுவாமியிஜின் சமரச நோக்கைப் பற்றி பேராசிரியர் கைலாசபதி எழுதியதாவது!

''தாயுமானவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த முத்துகுமாரசுவாமி அவர்கள் அந்த நூலிற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தத் தலைப்பு குறிப்பிடத்தக்கது. "Taumanavar—or Hindu-Philosophic Poems of the Vedanta–Siddhantic School'! சித்தாந்தத்தில் இருந்து வேதாந்தத்திற்குச் சென்ற பிறகு முத்து குமாரசுவாமி 1874-இல் பௌத்த சமய நூலொன்றை பாளிமொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்தார். அந்த மொழிபெயர்ப்பு நூலின் பெயர்: "Sutta Nipata or Dialogues and Discourses of Gotama Buddha'', ...... பொதுவாக மற்ற மதங்களிடத்திலும் குறிப்பாக இந்து சமயத்தினிடமும் அவர் மேற்கொண்ட அணுகுமுறை, அவர் காலத்தில் இருந்த படித்தோரிடையேயும் விளங்கியது.''

இவ்வாறு பேராசிரியர் கைலாசபதி விளக்கமளித்து விட்டு, ''விவேகானந்தரின் உயிர்த்துடிப்பானப் பேச்சுகளுக்கு முதலில் ஆதரவளித்தவர்கள் ஆங்கிலம் படித்த மேல்தட்டுவர்க்கம் முக்கியமாகத் திகழ்ந்தது'' என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சேர். பொன்னம்பலம் ராமனாதன் அமெரிக்காவில் சொற்பொழிவாற்றிய பொழுது, சுவாமி விவேகானந்தர் நெறியிலே நின்றார் என்று கூறப்படுகின்றது. சுவாமிஜி மேலை நாடுகளில் செய்த இந்து சமயப் பணியின் அற்புத விளைவுகளை நேரில் கண்டு, அவ்வழியைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொன்னம்பலம் ராமனாதன் விரும்பியதாகவும் தெரிகின்றது.

இலங்கையில் சுவாமி விவேகானந்தர் வழியைப் பின்பற்றி இராமகிருஷ்ணர் இயக்கம் செழித்திடப்பாடுபட்டவர் சுவாமி விபுலானந்தர் (1892-1947) என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது. இதன் விவரத்தை ''சுவாமி விபுலானந்தர்'' எனும் நூலில் [ஆசிரியர், பெ. சு, மணி, சுவாமி விபுலானந்தர். நூற்றாண்டு விழா வெளியீடு, 1992] அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் இலங்கை விஜயத்தின் விளைவாக நிகழ்ந்த அற்புதங்களில் ஒன்று, சுவாமிஜியின் சொற்பொழிவு ஒன்று நிகழ்ந்த சில மாதங்களுக்குள்ளேயே (1897) அது தமிழாக்கம் செய்யப்பெற்று கொக்கு வெள்ளை எனும் ஊரில் வெளியிடப்பட்டதாகும். இந்தச் சாதனையை நிழ்த்தியவர் ஏ. முத்துத்தம்பிபிள்ளை (1858-1917) என்பவராவார். அவர் வெளியிட்ட நூலின் பெயர், "சுவாமி விவேகானந்தர் பிரசங்கம்". கொழும்பு நகரில் சுவாமிஜி, 'தியோச்பி' பற்றிய ஆற்றியச் சொற்பொழிவின் தமிழாக்கம், இந்த நூலாகும். இந்த நூலிற்கு மற்றொரு வரலாற்றுச் சிறப்புண்டு; அதாவது சுவாமிஜியின் முதல் மொழிபெயர்ப்பாகவும், தமிழாக்கமாகவும் வெளிவந்த நூல், இந்த நூல்.

## இலங்கை அனுபவம் பற்றி சுவாமிஜி

1900-ஆம் ஆண்டில் சுவாமிஜி இரண்டாவது முறையாக மேலைநாடுகளிற் பயணம் செய்தபொழுது, தமது நினைவுக் குறிப்புகளைப் பற்றி சகோதரத் துறவியும், கல்கத்தா 'உத்போதன்' எனும் வங்கமொழி இதழின் ஆசிரியருமான சுவாமி திரிகுணாதீதா அவர்களுக்கு வங்க மொழியில் எழுதியனுப்பினார்: 'உத்போத'னில் வெளிவந்த நினைவுக்குறிப்புகளின் ஆங்கில மொழியாக்கத்திற்கு "Memoirs of European Travel" எனப் பெயரிடப்பட்டது. இதில் சுவாமிஜி தமது இலங்கை அனுபவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்துக்களைக் குறித்து சுவாமிஜி எழுதியதாவது :

"இங்கு எல்லா இந்து வகுப்பினரும் ஒன்று கலந்து ஒரே இனமாய் வாழ்கின்றனர். இவர்கள் பஞ்சாபிய ஜாட்டுகளைப்போல எந்த ஜாதிப்பெண்ணையும் (ஐரோப்பியப் பெண் உட்பட) மணந்து கொள்ளலாம். ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்குச் சென்று புனிதமான முப்பட்டைத் திருநீற்றை நெற்றியில் அணிந்து, 'சிவசிவா' என்று கூறினால் உடனே இந்துவாக மாறிவிடுகிறான். கணவன் இந்துவாகவும் மனைவி கிறிஸ்துவ மதத்தினளாகவும் இருக்கலாம். ஒரு கிறிஸ்தவன் நெற்றியில் வெண்ணீற்றைப் பூசி, 'நம பார்வதிபதயே!' என்றதும் இந்துவாக மாறிவிடுகிறான். இதுதான் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு மிகுந்த கோபமூட்டு கிறது. இலங்கைக்கு நீங்கள் வந்ததிலிருந்து அநேக கிறிஸ்தவர்கள் நெற்றியில் நீறணிந்து 'சிவனே போற்றி' என்று கூறித் தங்கள் பழைய இந்து மதத்திற்குச் சென்று விட்டார்கள்.

''இங்கு அத்துவைதமும், வீர சைவமும் அனுஷ்டிக்கப் படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவன் எனக் கூறவேண்டும். ஸ்ரீ சைதன்னிய தேவர் வங்காளத் திலே பரவச் செய்த இறைவனின் திவ்விய நாம சங்கீர்த் தனமும் நடனமும் ஆதியிலே தென்னாட்டிலே தமிழர் களிடையே பிறந்தன. இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமானத் தமிழாகும். மதமும் கலப்பற்றத் தமிழ் மதமே யாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறைநூல்களை ஓதுதலும், சிவனைப் பரவி பாடுதலும் ஆயிரக்கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிறந்த அடியாரான அனுமனை யொத்தத் தோற்றமும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறுபூசி, கழுத்திலே உருத்திராக்க மாலைகளணிந்து மெய்ம் மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பாராமல் ஒருவரால் புரிந்துக் கொள்ள இயலாது.''

சுவாமிஜி, மிகச் சரியாகவே இலங்கை இந்துக்களைப் புரிந்துக் கொண்டார் என்பதை மேலே காண்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகாகோ வீரரின் வரவேற்பில் தமிழகம்

## பாம்பனில் சுவாமிஜி

யாழ்ப்பாணத்திலிருந்து பாம்பனுக்கு சுவாமிஜி 1897 சனவரி 26-இல் இரவு ஒரு மணிக்குப் புறப்பட்டார். யாழ்ப்பாணத்துக்கும் பாம்பனுக்கும் இடையே உள்ள தூரம் ஐம்பது மைல். ஒரு தோணியில் சுவாமிஜியின் பரிவாரம் பயணத்தைத் தொடங்கியது. பாம்பனில் பகற் பொழுதுக்குச் சற்றுமுன் தமிழக மண்ணில் திருவடிப் பதிக்க பாம்பன் வந்தடைந்தார். ஆனால், சுவாமிஜி மூன்று மணி வரையிலும் தோணியை விட்டு இறங்கவில்லை. மாலை ஆறு மணி அளவில் ராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி சுவாமிஜியை தமது சமஸ்தானத்துப் படகிலே எழுந்தருளச் செய்து எதிர்கொண்டு வரவேற்றார்.

'ஸ்ரீ விவேகானந்த விஜயம்' (1907) என்னும் தமது நூலிலே பேரறிஞர் மகேசகுமார் சர்மா,சுவாமிஜி- பாஸ்கர சேதுபதி சந்திப்பை பின்வருமாறு வருணித்துள்ளார்.

''சேதுபதி மன்னர், சுவாமிகளை, 'என் பிரபுவே' என்றழைத்து அவரது திருவடிகளிலே மலர்மாரி பொழிந் தார். சுவாமிகள் படகில் ஏறினவுடனேயே சேதுபதி மன்னர் பரிவார சகிதமாய் சுவாமிகளின் சேவடிகளிலே அடிசாய்ந்த மரமாக விழுந்து வணங்கினார்.

''சிகாகோவிற்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தை முதன் முதலில் சுவாமிகளுக்கு உண்டாக்கி அதைச்

இ. த—14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முடிக்கும்படி அவரைத் தூண்டித் துணை நின்றவர் பாஸ்கர சேதுபதி மன்னரே யாதலால், சுவாமிகள், தாம் பாரத பூமியில் வந்திறங்கியவுடன் அம்மன்னரையே முதலில் சந்திக்க வேண்டுமென்றுதீர்மானம் செய்து கொண்டதாகச் சொன்னார்.''

பாம்பன் நகர வாசிகள் சார்பில் சுவாமிஜிக்கு அலங்கரிப்பெற்ற பந்தலில் வரவேற்பு நிகழ்ச்சி நடை பெற்றது. இலங்கையைச் சார்ந்த நாகலிங்கம்பிள்ளை அவர்கள் வந்திருந்தார். சுவாமிஜியை வரவேற்று எஸ். கே. நாயுடு என்பவரும் பாஸ்கர சேதுபதியும் பேசினர். சேதுபதி மன்னர், சுவாமிஜியை வரவேற்று மக்களை நோக்கி பேசுகையில் கூறிய உணர்ச்சி மயமான கருத்து வருமாறு:

''பதினைந்து தினங்களும் உங்கள் வீதிகளிலும், சாலைகளிலும் திரு விளக்குகள் வைக்குமாறு நீங்கள் பெற்ற லௌகீகப் பிரகாச பாக்கியமானது பின் வரப் போகும் ஞானப் பிரகாசத்துக்கு அறிகுறியாய் அமைந்த தென்றும், அந்த ஞான தீபமே இன்று உங்கள் உள்ளங் களையும், ஆத்மாக்களையும் ஜ்வலிக்கச் செய்ய வந்திருக் கின்றது.''

பாஸ்கர சேதுபதியின் வரவேற்புரைக்குப் பிறகு சுவாமிஜிக்கு ஆங்கிலத்தில் வரவேற்பு மடல் பாம்பன் நகர வாசிகள் சார்பில் படித்தளிக்கப்பட்டது. மேலை நாடு களில் இந்து சமயத்தத்துவத்தை வெற்றிகரமாக எடுத்துரைத்ததைப் பாராட்டி விட்டு, ''நமது தாய் நாட்டில் துயரார்ந்த ஆழ்துயிலில் உள்ள சகோதரர்களை விழித்தெழச் செய்ய மேற்கு நாடுகளில் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு சற்று கூடுதலாக முயற்சியெடுக்க மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்வதாகவும்'' வரவேற்பு மடலில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வரலாற்று கால உதயம் முதல், இந்தியாவிற்கு வெளியே இந்து சமயக் கொள்கைகளையும், தத்துவங் களையும் பரப்ப எவரும் செல்லவில்லை, ஆனால் இப் பொழுது நம்மிடையே ஓர் அற்புதமான மாறுதல் ஏற்பட்டுள்ளது'' எனும் கருத்தை சுவாமிஜி தமது ஏற்புரையில் குறிப்பிட்டார்.

வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும், சேதுபதி மன்னரின் மாளிகைக்கு சுவாமிஜி குதிரை வண்டியில் அழைத்துச் செல்லப்பட்டார். குதிரைகள் அவிழ்த்து விடப்பட்டு வண்டியை மன்னரும், அவருடைய பரிவாரமும் வீதிகளில் இழுத்து வந்தனர். தேரோட்டத்தில் பக்தர்கள் தாங்களே வடம் பிடித்து புண்ணியத்தொண்டு செய்ததை ஒத்திருந்தது, மன்னரின் வியப்பிற்குரியச் செயல். பாம்பனில் சுவாமிஜி மூன்று நாட்கள் தங்கி, மக்களை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தார்.

பாம்பனில் பாஸ்கர சேதுபதி சுவாமிஜியின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வருகையை என்றும் எடுத் துரைக்கும் வண்ணம் அற்புதமான திட்டம் ஒன்றையும் உருவாக்கினார். பாம்பனில் நாற்பது அடி உயரத்தில் ஒரு வெற்றித் தூணை நிறுவினார். இந்தக் கற்றூணில் கல்வெட்டுச் செய்தியாக பின்வரும் செய்தியைப் பொறிந் தார். ஆங்கிலத்தில் அமைந்த அந்தச் செய்தியின் தமிழாக்கம், வருமாறு:

> ''சத்தியமேவ ஜெயதே. அருள் திரு புண்ணிய மூர்த்தி சுவாமி விவேகானந்தர், மேற்கு நாடுகளில் வேதாந்தச் சமயத்தைப் பரப்பும் புனிதத் தொண்டில் வரலாறு காணாத மகத்தான வெற்றி பெற்று, ஆங்கிலேயச் சீடர்கள் புடைசூழத் திரும்பி பாரத மண்ணில் திருவடி பதிந்து வாழ்த்தியருளியதைக் குறிக்கும் இந்த நினைவுச் சின்னம், ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதியால் நிறுவப்பட்டது. சனவரி 27, 1897.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சென்னையில் உள்ள சுவாமி விவேகானந்தரின் புத்திசாலித்தனமான ஆர்வலர்களால்தான், சுவாமி விவேகானந்தரின் அறிவாற்றலும், தார்மிகத் தகுதியும் முதன் முறையாக பகிரங்கமாக இனங்காணப்பட்டது'' என சுவாமி இராமகிருஷ்ணானந்தர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1902 ஜூலை 25—இல் குறிப்பிட்டார். இதைப் போன்று, சிகாகோ மாவீரரின் மீள் வரவை முதன் முதலில் இந்தியாவில் கல்வெட்டுச் செய்தியாகப் பதிவு செய்து வழி காட்டியதும், தமிழகம்தான் என்பதை பாஸ்கர சேதுபதி நிலை நாட்டினார்.

பாம்பனில் இருந்து சுவாமிஜியின் வெற்றிகர முன்னேற்றப் பயணம், இராமநாதபுரத்தில் தொடர்ந்தது.

## இராமநாதபுரம் முதல் சென்னை வரையில்

இராமநாதபுரத்தில் சுவாமிஜியின் வெற்றித் திருவளர் வருகையை விளக்கும் வண்ணம் பொருட் சிறப்புடைய ஓர் ஐரோப்பிய இசைப் பாடலை இசைக் கருவிகளில் பாட வைத்தார், பாஸ்கர சேதுபதி. ''See the Conqureing Hero Comes'' என்பது அந்த இசைப் பாடலின் முதலடியாகும். ''வெற்றி கொண்ட வீரர் வருவதைப் பாருங்கள்'' எனும் அந்தப் பொருத்தம் வாய்ந்த இன்னிசையும், வரவேற்பில் புதுமையைக் கண்டது.

25-1-1897-இல் இராமநாதபுரத்தில் சுவாமிஜிக்கு அளிக்கப் பெற்ற வரவேற்புரை முதல் கும்பகோணத்தில் அளிக்கப் பெற்ற வரவேற்புரை வரையில் சுவாமிஜி சிகாகோவில் இந்து சமயத்தின் தனித்தன்மையை, உலகளாவிய வேதாந்த சமயத்தின் மேன்மையை எடுத்துரைத்ததின் வாயிலாக இந்து மக்கள் பெற்ற பெருமிதம் குறிப்பிடப்பட்டிருந்தது. இராமநாதபுரம், பரமகுடி, மானாமதுரை, மதுரை, கும்பகோணம் ஆகிய ஊர்களில் சுவாமிஜியின் பதிலுரைகளும் வெற்றியுலாவின் வரலாற்றுச் செய்திகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜிக்கு அளிக்கப் பெற்ற வரவேற்புரைகளில் சுவாமிஜியின் ஆன்மிகப் பணி நன்றியறிதலுடன் போற்றப் பட்டிருக்க, சுவாமிஜியின் பதில் உரைகளில் ஆன்மிக உணர்வுகளுடன் சமூகவுணர்வுகள் பொங்கி எழுந்தன.

இராமநாத புரத்தில் பேசிய பொழுது, 'வலிமை பெற வேண்டும், வலிமை பெற வேண்டும்'' என வற்புறுத்தினர். ''உலகத்தில் ஏதாவதொன்றை பாவம் என்று சொல்ல வேண்டுமானால், அது பலவீனம் தான்; பலவீனம் அனைத்தையும் அகற்றுக; பலவீனம் பாவமாகும்; பலவீனம், இறப்பாகும்'' என விளக்கினார். ''அச்சமும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில்'' கொண்டிருந்த அன்றைய அடிமைப்பட்ட பாரத மக்களுக்குத் தேவைப்படும் அடிப் படையான உபதேசத்தை அருளினார், சுவாமிஜி.

''இந்தியாவுக்கு வந்தவுடன், இந்திய சமூகத்திற்கு ஊக்கத்தையும், உயிரையும் அளிக்க வேண்டுமென்ற கருத்துடன் தேசாபிமானப் பிரஸங்கம் செய்தார்'' என தமிழக தேசபக்தர் திலகம் 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவம் (1884-1925) கூறியுள்ளதையும், இங்கு நினைவு கூர வேண்டும். சுவாமிஜி தேசிய மாவீரராகப் பேசத் தொடங்கி விட்டதை ராமநாதபுரத்தில் அவருடைய உரையின் பின் வரும் தொடக்க வரிகளே முரசறைந்தன.

''மிக நீண்ட நீள் இரவு கடந்துக் கொண்டிருக்கின்றது. கடுந்துயர் தரும் துன்பத்திற்கு முடிவு நெருங்கிக் கொண்டு இருக்கிறது. பிணம் போலத் தெரிந்தது விழித்தெழுந்து குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டது...நமது தாய் நாடான இந்தியா, தனது நீண்ட ஆழ்துயிலில் இருந்து விழிப்பு பெறத் தொடங்கி விட்டது. இனி எவரும் இந்தியாவைத் தடுத்து நிறுத்த முடியாது. இனியும் இந்தியாவும் உறங்கப் போவதில்லை. வெளிச் சக்திகள் எதுவும் இந்தியாவைத் தடை செய்ய முடியாது. எல்லையற்ற பேராற்றலுடன் எழுந்து விட்டது, இந்தியா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புரைகள் சிலவற்றில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பக்தி வெளிப்படுத்தப் பட்டது. ''சர்வமத மகாநாட்டிலே இந்தியத் தத்துவக் கொடியை பறக்க விட்டு வெற்றி வீரராகத் திகழும் தாங்கள் விரைவிலே சூரியன் மறையாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் போன்றதொரு பெரிய சாம்ராஜ்யத்தின் அதிபராகத் திகழ்வீர்கள்; செங்கோல் செலுத்துவீர்கள் என்று நம்புகிறோம். ஒரே ஒரு வித்தியாசம்; பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சட உலகின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது. தங்கள் சாம்ராஜ்யமோ மனவுலகில் அழுத்தமாக ஆதிக்கம் செலுத்தும். அரசியல் சரித்திரத்திலேயே அதிக காலம் நிலைத்து அதிக நலன் செய்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் போல தாங்களும் நீண்ட காலம் இவ்வுலகில் இருந்து, தங்கள் அன்புப் பணி வெற்றி பெறச் செய்து, ஆன்மிக சரித்திரத்திலேயே காணப் பெறும் மற்றையோரிலும் சிறந்து விளங்க அருளுமாறு இறைவனை வேண்டுகின்றோம்.'' இவ்வாறு மானாமதுரை வரவேற்பில் 'ராஜபக்தி' வெளிப்பட்டது.

இது, சுவாமிஜியின் தேசபக்தி உணர்விற்கு, சற்று மாறு பட்டதாகும். அமெரிக்காவில் பேராசிரியர் ரைட் வீட்டில் சுவாமிஜி ஆற்றிய 'வரலாறு கண்ட வஞ்சம்' எனும் சொற்பொழிவை நினைவு கூர வேண்டும். இத்துடன் 1897 சூன் 14-இல் தமது சகோதரத்துறவி சுவாமி பிரம்மானந்தா அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் பின்வரும் பகுதியையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

''மகாராணியாருக்கு அனுப்பப்பட இருக்கின்ற உபசாரப் பத்திரத்தில் சில விவரங்களை கவனிக்கவேண்டும். மிகைபடக் கூறுதல் இருக்கக்கூடாது; அதாவது தாங்கள் இறைவனுடைய பிரதிநிதி என்பது போன்ற பொருளற்றக் கூற்றுகள் கூறுவது நமது இனத்தவரின் சுபாவமாயிற்றே? அது கூடாது.''

கும்பகோணத்தில் பேசியபொழுது, ''கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஒரு கைப்பிடியளவுள்ள அந்நியர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களது காலடிகளில் வீழ்ந்து வணங்கியவர்கள் மீது நடந்து ஆட்சி செய்து வந்தார்களே, அதற்கு என்ன காரணம்? மக்களிடம் தன்னம்பிக்கை இல்லாமைதான் காரணம்'' எனக் கூறினார். இந்த அவல நிலை ஒழிய வேண்டுமானால், ''இரும்பை ஒத்தத் தசைகளும், எஃகை ஒத்த நரம்புகளும், எதனாலும் எதிர்க்கப்பட முடியாத மகத்தான மனவுறுதியும், வேண்டுமானால் கடலின் அடி ஆழத்திற்கே சென்று, மரணத்தை நேருக்கு நேர் சந்தித்து உலகின் விளங்கிக் கொள்ள முடியாத ரகசியங்களை ஊடுருவிப் பார்க்கத்தக்க மனவாற்றலே இப்பொழுது நமக்கு வேண்டும்'' என்றும் சுவாமிஜி ஆன்ம பலத்தின் தேவையை உணர்த்தியுள்ளார்.

பாமர மக்கள் நசுக்கப்பட்டக் கொடுமையைப் பற்றியும் தமக்களிக்கப் பெற்ற வரவேற்புரைக்குப் பதிலாக முழங்கிய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார், சுவாமிஜி.

''நமது முன்னோர்களாகிய மேற்குடி மக்கள், நம் நாட்டு மக்களை காலடியில் போட்டு மிதித்தார்கள்; ஆம்; அவர்கள் ஆதரவற்றவர்களாகப் போகும் வரையில் மிதித்தார்கள். இந்த மக்கள் தாங்கள் மனிதர்கள் என்பதையே மறந்து போனார்கள்.''

இந்து சமயத்தில் புரையோடிப் போயிருக்கும் தீண்டாமைக் கொடுமையையும், நமது பேச்சில் பின்வருமாறு சாடியுள்ளார்.

''நமது மதம் சமையலறை மதமாகிவிட்டது. ஆபத்தை உணருங்கள்; நம்மில் பெரும்பாலோர் தற்போது வேதாந்திகளுமல்லர்; பௌராணிகளுமல்லர்; தாந்திரிகளும் அல்லர்; 'தீண்டாதே', 'தீண்டாதே' என்று ஓலமிடுவராகி விட்டோம். நமது மதம் இப்பொழுது சமையல் அறையில் அடங்கி விட்டது. நமது கடவுள் இப்பொழுது சோற்றுப் பானையில் அடங்கி விட்டார். 'என்னைத் தொடாதே, நான் புனிதமானவன்' என்பது தற்போது நம்முடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாயிருக்கிறது. இன்னும் நூறாண்டு இவ்விதமே நடைபெற்றால், நாம் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியவராவோம்.''

ஆன்மிகத்தின் பெயரால் தனியுரிமைக் கோருவதை எதிர்த்தும் சுவாமிஜி தமது பதிலுரை ஒன்றில் கூறியதாவது :

''ரிஷிநிலை பெறுதல் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, சாதிக்கோ, காலத்திற்கோ, யுகத்திற்கோ உரியதன்று.''

## சென்னை நகரத்தில் சுவாமிஜி

1897 பிப்ரவரி 6-இல் சுவாமிஜி சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் வந்திறங்கினார். அவருடன் சகோதரத் துறவிகளான சுவாமி நிரஞ்ஜானானந்தா, சுவாமி சிவானந்தா, ஜே. ஜே. குட்வின் ஆகியோரும் வந்தனர். ஒருநாள் முன்னதாக வந்த சேவியர் தம்பதியினர் வரவேற்க வந்திருந்தனர். எழும்பூர் ரயில் நிலையத்தில் வரவேற்புக் குழுவினர் வரவேற்றனர். திருவல்லிக்கேணி கடற்கரைக்கு எதிரில் உள்ள 'கேஸல்கெர்னான்' என்னும் மாளிகையை நோக்கி சுவாமிஜியின் ஊர்வலம் புறப்பட்டது. வழியெங்கும் பதினேழு அலங்கார வளைவுகள், பின்வரும் வாசகங்களுடன் அமைக்கப்பட்டிருந்தன.

''கடவுளின் தொண்டர் வாழ்க!, நடந்த காலத்தின் மகரிஷிகளின் தொண்டர் வாழ்க!, விழிப்புற்ற இந்தியாவிற்கு இதயங்கனிந்த வாழ்த்துகள்!, சுவாமி விவேகானந்தருக்கு வாழ்த்துகள்!, அமைதிக்குக் கட்டியங்கூறும் தூதுவரே வாழ்க!, ஸ்ரீராமகிருஷ்ணரின் தகுதிபெற்றப் புதல்வரே வாழ்க!, மனிதர்களுள் இளவரசே வருக!...''

அன்னாளில் சென்னை நகரத்தின் முக்கியப் பெருந்தலைவர்களுள் ஒருவரான நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் மூன் நின்று ஏற்பாடுகளைக் கவனித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி அமர்ந்து வந்த குதிரை வண்டியின் குதிரைகள் அவிழ்த்து விடப்பட்டன. மாணவர்கள் வண்டியை பேரின்பப் பெருமிதத்துடன் இழுத்து வந்தனர். எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஊர்வலம், நேப்பியர் பூங்கா, சிந்தாதிரிப்பேட்டை, மவுண்ட் சாலை, வாலாஜா சாலை வழியாக சேப்பாக்கம் சென்று, இறுதியாக பைகிராப்ட்ஸ் சாலையைக் கடந்து தெற்குக் கடற்கரை சாலை வழியே, அங்கிருந்த பிலிகிரி அய்யங்காரின் மாளிகையான 'கேஸல் கெர்னானை' அடைந்தது.

ஒருநாள் ஓய்விற்குப் பிறகு 8-ந் தேதியன்று 'விக்டோரியா பப்ளிக்ஹால்' எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்றத்தில் வரவேற்புக்குழுவினரின் வரவேற்புரையை சுவாமிஜி ஏற்றுக் கொண்டார். மன்றத்தின் வெளியே திரண்டிருந்த மக்களுக்காக, வெளியே வந்து 'கோச்' வண்டியின் மீதேறி நின்று பேசினார்.

மகாபாரதப் போர்க்களத்தில் கீதாசார்யன் தேர் மீதிருந்து உபதேசம் அருளியதை ஒத்தக் கோலத்தில் சுவாமிஜி 'கோச்' வண்டியின் மீது ஒளிர்ந்தார். இதைப் பற்றி அவரே பின் வருமாறு விளக்கியுள்ளார்.

''நாம் ஒன்று நினைக்கிறோம்; தெய்வம் மற்றொன்று நினைக்கிறது. இந்த வரவேற்பும் சொற்பொழிவும் ஆங்கில முறையைப் பின்பற்றி நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடவுள் வேறு வகையில் திருவுளங் கொண்டார். சிதறி நிற்கும் இக்கூட்டத்திலேயே கீதாசாரியன் முறையைப் பின்பற்றி இந்த ரதத்தில் இருந்து பேசுகிறேன். இவ்வண்ணம் நிகழ்வதற்கு நன்றி. இதனால் சொற்கள் உணர்ச்சியுடனும், வலிமையுடனும் பிறக்கும். என் குரல் அனைவருக்கும் கேட்குமா என்பது ஐயமேயானும், முயற்சி செய்து பார்க்கின்றேன். திறந்த வெளியில் இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் பேசியதில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையில் சுவாமிஜி ஒன்பது நாட்கள் தங்கினார். 'கேஸல் கெர்னான்' எனப்படும் 'ஐஸ் ஹவு'சில் நாள்தோறும் நேர்காணல்களும், சந்திப்புகளும் நிகழ்ந்தன. சுவாமிஜி தங்கியதால், ஐஸ் ஹவுஸ், 'விவேகானந்தர் இல்லம்' எனப் பிற்காலத்தில் அதிகார பூர்வமாகப் பெயர் பெற்றது.

சிகாகோ சொற்பொழிவுகளைத் தொடர்ந்து, பெரும் புகழ்பெற்ற பேச்சுகள், சென்னையில் நிகழ்ந்த நான்கு பேச்சுகளாகும். சிகாகோ சொற்பொழிவுகளுடன் தொடர்புடைய கருத்துகள் சென்னை நகரப் பேச்சுகளில் ஒலித்தன.

## சென்னை நகரப் பேருரைகள்

சுவாமிஜியின் ஆன்மிகக் கண்ணோட்டம், தேசியக் கண்ணோட்டம், சமூக சீர்திருத்தக் கண்ணோட்டம் ஆகியனவற்றின் பல்வேறு பரிமாணங்களை அவருடைய சென்னை நகரப் பேருரைகள் விளக்குகின்றன. இந்தப் பேருரைகளின் தலைப்புகள், பின்வருவன.

1. எனது போர்முறை— My Plan of Campaign— விக்டோரியா பப்ளிக் ஹால் நடைபெற்றது: 11—2-97.

2. வேதாந்தமும் இந்திய வாழ்க்கையும்— Vedanta in It's Application to Indian Life— பச்சையப்பன் மண்டபம்; 12-2—1897.

3. இந்தியப் பெரியோர்கள்— The Sages of India— விக்டோரியா பப்ளிக் ஹாலில்; 13—2—1987.

4. வருங்கால இந்தியா— The Future of India— ஹார்ம்ஸ்டன் சர்க்கஸ் பந்தல்; 14—2—1897.

மேற்காணும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் நுழைவுக் கட்டணங்கள் விதிக்கப்பட்டிருந்தன. 'ரிசர்வ்' கட்டணம் ரூ. 2; 'ஸ்பெஷல்' கட்டணம் ரூ. 1; சாதாரண கட்டணம் எட்டணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாபெரும் நான்கு சொற்பொழிவுகளுடன் சென்னபுரி அன்னதான சமாஜ ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்தும், திருவல்லிக்கேணி இலக்கியச் சங்கத்தில் சொற்பொழிவாற்றியும், 'மெட்ராஸ் இந்து சோஷல் ரிபார்ம் அசோஷியன்' எனும் சமூக சீர்திருத்த அமைப்பில் கலந்துரையாடியும் தமது பொது நிகழ்ச்சிகளை நிறைவு செய்தார், சுவாமிஜி.

## எனது போர்முறை

இந்தச் சொற்பொழிவில், சிகாகோவில் தமக்குத் தொல்லைகள் தந்து தூற்றிய கிறிஸ்துவப் பாதிரிமார்கள், தியோசாபிகல் சங்கத்தினர், பிரம்ம சமாஜத்தினர் ஆகியோர்களைப் பற்றி விரிவாகப் பேசிக் கண்டனம் செய்துள்ளார்.

சமூக சீர்திருத்தத்தில் தமது அணுகு முறையையும் இந்தச் சொற்பொழிவில் விளக்கியுள்ளார். ''நான் விரும்புவது அடி முதல் உச்சி வரையில் சீராகக்கூடிய ஒரு பெரிய சீர்திருத்தமாகும்'' எனச் சாற்றியுள்ளார். சீர்திருத்த முறையில் அழிவு முறையைக் காட்டிலும், ஆக்க முறையே உகந்தது என்றும் கருத்துத் தெரிவித்தார்.

''அரசியல் ஞானத்தையும், சமூக சீர்திருத்தங்களையும் இந்தியாவில் பரப்ப வேண்டுமானால், முதலில் தெய்வீக மான ஆன்மிகச் சிந்தனைகளை நிரப்புங்கள். இதுவே முதன் முதலில் நடைபெற வேண்டியதாகும்''. இவ்வாறு குறிப்பிட்டதுடன்; ''தேச பக்தியில் எனக்கு நம்பிக்கை யுண்டு, தேசாபிமான விஷயத்தில் எனக்கென்று தனியான நோக்கம் உள்ளது'' என்றும் கூறினார்.

## வேதாந்தமும்—இந்திய வாழ்க்கையும்

''சுவாமி விவேகானந்தரின் வேதாந்தப் பிரசாரமே, நமது தேசபக்தியின் தாய் முயற்சியாகும்'' எனக் குறிப்பிட்டார் மகாகவி பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்தத்தின் மூலம் தேசிய வாழ்க்கையில் ஆண்மை, அச்சமின்மை, தன்னம்பிக்கை, செயல்திறன் அனைத்தையும் பெறமுடியும் என்பதை எடுத்துரைத்தார்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக சாதிக் கொடுமையும் அரசர் கொடுங்கோன்மையும், அன்னிய அரசாட்சியும் மக்கள் சக்தியையெல்லாம் அழித்து விட்டன என்பதை எடுத்துக்காட்டி, வேதாந்தம் வழிகாட்ட ஆன்மாவிற்கு, உடலுக்கு, மனதிற்கு பூரண சுதந்திரம் பெறப் பாடுபட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்.

''வேதாந்தத்திலிருக்கும் உயர்ந்த கருத்துகள் காடுகளிலும், குகைகளிலும் வசிக்கும் துறவிகளிடம் மட்டுமல்லாமல், உலகெங்கும் பரவி ஏழை மக்கள் உள்ளத்திலும், மீன் பிடிக்கும் செம்படவர்களிடத்திலும், பள்ளியில் பயிலும் மாணவர்களிடத்திலும் இன்னும் எல்லா மக்களிடத்திலும் குடிகொள்ள வேண்டும்......மீன் பிடிப்பவன் தன்னை ஆத்மாவென நினைத்தால் அவன் இன்னும் திறமையுள்ள மீன் பிடிப்பவனாவான். ஒரு மாணவன் தன்னை ஆத்மாவென நினைத்தால், அவன் இன்னும் ஆற்றல் படைத்த மாணவனாவான். ஒரு வக்கீல் தன்னை ஆத்மாவென நினைத்தால் அவன் இன்னும் சிறந்த வக்கீலாவான். இவ்விதம் எல்லா ஜாதியாரும் மக்களும் இதன் மூலம் மேம்பாடடைவார்கள்''. இவ்வாறு சுவாமிஜி வேதாந்தம், வெறும் வாய் வேதாந்தமாக இல்லாமல் செயல்முறை வேதாந்தமாக விளங்க வல்லது என்று புதிய பார்வையில், புதிய மொழியில், புதிய ஊக்க உரையில் உணர்த்தினார்.

## இந்தியப் பெரியோர்கள்

''இந்தியப் பெரியோர்கள் எண்ணற்றவர்கள் என்றாலும், அவர்களுள் புகழ் சான்றவர்களை, புதிய சகாப்தங்கள் படைத்தவர்கள் சிலர் வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறேன்'' எனத் தமது உரையைத் தொடங்கினார், சுவாமிஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மதம் ஒன்றுதான் தனி மனிதர்களை விட்டு தத்துவங்களை மட்டும் போதிக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார். ஆயினும் அவதார புருஷர்களை வழிபடு தெய்வங்களாகக் கொள்ளவும் பெரியோர்கள் மிகப் பழங் காலத்தில் இருந்தே உணர்ந்ததைக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் மட்டும் அல்லாமல் உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் தோன்றியிருக்கும் அவதாரபுருஷர்களை வழிபடும் உரிமையை புனித பகவத்கீதை அளித்துள்ளதை பின்வரும் எடுத்துக்காட்டு வாயிலாக விவேகானந்தர் சுட்டிக் காட்டியுள்ளார்.

''எங்கெங்கு மனிதனால் அபூர்வமான ஆன்மிக சக்தி வெளிப்படுகிறதோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன் என்பதை உணர்க. என்னிடமிருந்துதான் அச்சக்தி தோன்றுகிறது.'' அவதார புருஷர்களை அடுத்து ரிஷிகளின் ஆத்மிக வாழ்க்கையின் சிறப்பை விளக்கினார். ரிஷிகள், ரிஷித்துவம் பற்றிய சுவாமிஜியின் விளக்கம் வருமாறு:

''ரிஷித்துவம்— ரிஷிகளாகும் அந்நிலை— ஒரு சிறு கூட்டத்தாருக்கு மாத்திரம் உரியதல்ல. எல்லா காலத்திலும், எல்லா இடங்களிலும், எல்லா மக்களும், ஆண்-பெண் வேறுபாடின்றி ரிஷிகளாகலாம். ஞானிகளாயிருப்பவர்களின் சந்ததியில் பிறந்தவர்கள், அல்லாதவர்கள், ஆரியர்கள், ஆரியரல்லாதவர்கள், மிலேச்சர்கள் முதலிய அனைவரும் ரிஷிகளாக உரிமையுண்டு என்று வத்சாயனர் பகிரங்கமாக உரைத்திருக்கிறார். வேதங்களில் சொல்லப் பட்டிருந்த ஞானிகளின் நிலையென்பது இதுதான். இதை நாமும் இதர நாட்டினரும் நினைவில் வைத்துக் கொண்டோமானால், மதத்தின் பேரில் நடக்கும் சண்டை சச்சரவுகள் குறையும்.

## குருதேவர் அவதார மகிமை

ஸ்ரீகிருஷ்ணர், புத்தர், சங்கரர், ராமானுஜர், சைதன்யர் முதலானோரின் வரலாற்றுச் சிறப்புகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி விட்டு, குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி பின்வருமாறு விளக்கமளித்தார், சுவாமிஜி.

''சங்கரருக்கு அதிநுட்பமான மூளையிருந்தது. ராமாநுஜருக்கு அதிவிசாலமான இருதயமிருந்தது. இத்தகைய நுட்பமான மூளையும், விசாலமான இருதயமும் ஒன்று சேர்ந்து ஒருவர் பிறப்பதற்கு காலம் ஏற்றதாக விருந்தது. சங்கரருடைய அதிகூர்மையான அறிவும், சைதன்யருடைய அதிஅற்புதமான பரந்த எல்லையற்ற கருணையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஒரு மகான் தோன்றுவதற்குக் காலம் கனிந்தது. எல்லா மதங்களிலும் அந்த ஒரே பரம்பொருளைக் காணக்கூடிய ஒருவர்— ஏழை களுக்காகவும், பலவீனர்களுக்காகவும், சமூகத்தில் இருந்து தள்ளப்பட்டவர்களுக்கும், இந்தியாவிலோ அல்லது வெளி நாடுகளிலோ, இவ்வுலகிலிருக்கும் ஒவ்வொரு உயிரிலும் கடவுளைக் காணக் கூடிய ஒருவர்— அத்துடன் ஒன்றுக் கொன்று வாதமிட்டுக் கொண்டிருக்கும் இவ்வுலகிலுள்ள எல்லா மதங்களையும் சமரசப்படுத்தப்படக் கூடிய உயர்ந்த கருத்துகளையும், உலக முழுவதும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு மதத்தையும் உண்டாக்கக் கூடிய மகத்தான அறிவுச் சுடர் பொருந்திய ஒருவர் இக்காலத்தில் தோன்ற வேண்டியது அவசியமாகவிருந்தது.

''அத்தகைய மனிதர் ஒருவர் பிறந்தார். அவருடைய திருவடிகளில் அமர்ந்து, அவருடைய உபதேசங்களைப் பெறக்கூடிய கிடைத்தற்கரிய நற்பேறு எனக்கு வாய்த்தது. அத்தகைய ஒரு மகாபுருஷர் தோன்றுவதற்குக் காலமும் சமயமும் ஏற்றதாகவிருந்தது. எனவே அவரும் தோன்றி யருளினார். அதில் மிக ஆச்சரியமான விஷய மென்னவெனில், மேல்நாட்டு நாகரிகத்தையே தன் குறியாகக் கொண்ட ஒரு நகரத்திற்கு அருகிலே அவர் வாழ்க்கையின் வேலையை நடத்தி வந்ததுதான். அவருக்கு எந்த ஒரு புத்தகப் படிப்பும் இருக்கவில்லை. தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் போடக் கூட அவர் கற்றுக் கொள்ள வில்லை. ஆனால், அவர் அறிவு, மகத்தானதாகவிருந்தது.

''நமது பல்கலைக் கழகங்களில் மிகத்திறமை வாய்ந்த வர்கள் என்று பட்டம் பெற்றவர்கள் கூட அவர் அறிவின் திறனைக் கண்டு வியப்புற்றார்கள். இந்த ராமகிருஷ்ண பரமஹம்சர் ஓர் அற்புதமான மனிதராக விருந்தார்...

''அவர் இதுவரையில் இந்தியாவில் தோன்றிய மகரிஷிகள் அனைவருடைய ஞானத்தையும் ஒருங்கு பெற்று, தற்காலத்திற்கு அவசியமான தருமத்தை உபதேசம் செய்யத் தோன்றியிருக்கிறார்.''

## வருங்கால இந்தியா

சென்னை நகரத்தில் சிகாகோ வீராக சுவாமிஜி பேசிய இறுதிப் பொதுக்கூட்டப் பேச்சு, 'வருங்கால இந்தியா' வாகும். இந்தப் பேச்சை நேரில் கண்டு, கேட்டு அனுப வித்த சுவாமிஜியின் நண்பர் பேராசிரியர் கே. சுந்தரராமய்யர் எழுதியுள்ளதாவது :

''இவ்வளவு பெரிய கூட்டத்தையோ அல்லது மகிழ்ச்சி ஆரவாரத்தையோ நான் பார்த்ததில்லை. சுவாமிஜியின் அன்றைய வாக்கு வன்மை மிகச்சிறந்திருந்தது. மேடையின் ஒரு பக்கத்தில் இருந்து மற்றொரு பக்கம் சிங்கம் போன்று பீடு நடைபோட்டுக் கொண்டே பேசினார். அவருடைய குரலின் முழக்கம் எங்கும் எதிரொலித்தது; அனைவரையும் கவர்ந்தது. அவருடைய பேருரையில் குறிப்பிடப் பெற்ற ஒரு செய்தியை நான் என்றும் மறவேன். இது சுவாமிஜியின் தீர்க்க தரிசனத்தையும், அனைத்தையும் அறியும் பேரறி வையும் எடுத்துக் காட்டியது அமைதி, சமயம், மொழி, அரசாங்கம்-இவையாவும் ஒரு நாட்டை உருவாக்குகின்றது. இவற்றுள் ஏதேனும் ஒன்று அடிப்படையாகின்றது. அதன் மீது பிற கட்டமைப்பு தோன்றுகின்றது. இந்திய வாழ்க்கையின் ஆதாரம் சமயம். இந்த ஆதாரத்தின் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேசிய இனம் எழுப்பப்படுகின்றது என் சுவாமிஜி குறிப்பிட்டது மறக்கவியலாதது'' [Reminiscences of Swami Vivekananda, By His Eastern and Western Admiriers, Third Edition, 1983, P. 96.]

இந்தச் சொற்பொழிவில்தான் தேசபக்த மெய் ஞானியாக சுவாமிஜி பின்வரும் தேசபக்தி உரை வீச்சை வெளியிட்டார் :

''அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு, இந்தப் பரந்தகன்ற இந்தியத் தாய் திருநாடு பற்றிய சிந்தனையே உங்களுடைய ஆதார சுருதியாக அமையட்டும். இக்காலத்தில் பயனற்ற மற்றெல்லா தெய்வங்களும் (Vain Gods) நம் மனதை விட்டு நீங்கட்டும். நமது தேகம், நமது மக்கள்— இவைதான் நம்முடைய உயிருள்ள தெய்வங்களாக விருக்கின்றன. இத்தெய்வத்தின் கைகளும், கால்களும், கண்களும், சரீரமும் நாடங்கும் பரவியிருக்கின்றன. மற்ற தெய்வங் களனைத்தும் இப்பொழுது உறங்கிக் கொண்டிருக்கின்றன. நம்மைச் சுற்றிலும் பரவி, எங்கும் திகழ்ந்து கொண்டி ருக்கும் இவ்விராட புருஷனை வழிபடுவதை விடுத்து, நாம் வேறு தெய்வங்களை நாடிச் செல்ல வேண்டுமா?'' இந்திய தேசிய விடுதலையில் சுவாமிஜி காட்டிய பேரார்வத்தை அறிய பல செய்திகள் பதிவாகியுள்ளன. இவற்றுள் ஒன்று அவர் சென்னை திருவல்லிக்கேணி சிங்கராச்சாரி தெருவில் பாலாஜிராவ் எனும் அன்பர் வீட்டில் பகவத் கீதையைப் பற்றி உரையாற்றிய பொழுது, இந்திய விடுதலையுணர்வுடன், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மற்றும் பல வழிகளிலும் இந்தியா சீர்குலைந்து போய் இருந்தாலும், அந்நியர்களையும், அந்நிய ஆட்சியையும் எதிர்த்துக் கிளர்ந்தெழக் காலம் கடந்து விடவில்லை; குறுகிய மனப்போக்குகளும், பொறாமை உணர்வுகளும், வகுப்பு வாதமும் இன்று நாட்டைப் பிளவுபடுத்தியிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும், இந்தியா விரைவில் புத்தெழுச்சி பெற்று விடுதலைப் பெறப் போகிறது.'' [Samwith- Half Yearly Journal- Sri Saradha mutt, March, 1984].

1897 பிப்ரவரி 15-இல் சுவாமிஜி, சென்னையில் இருந்து கல்கத்தா புறப்பட்டார்.

**சுவாமிஜீ பயணத்தின் விளைவாக சென்னையில் வெளிவந்த சில முதல் நூல்கள்**

'கொழும்பு முதல் அல்மோரா வரையில்' எனும் சுவாமிஜியின் சொற்பொழிவுத் தொகுப்பு நூல் முதன் முதலில் சென்னையில் 1897-லேயே வெளியிடப்பட்டது. சென்னை எழும்பூர், ''வைஜயந்தி பிரஸ்'' எனும் நிறுவனம் இந்த நூலை வெளியிட்டது. ''The Only Authorised Edition of The Lectures' என்று நூல் இந்த கல்கத்தா 'இந்தியன் மிரர்' எனும் இதழில் வெளிவந்த ஒரு செய்தியில் (ஆகஸ்ட் 22, 1897) பாராட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் பல இடங்களில் சுவாமிஜி ஆற்றிய பதினேழு பேருரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. சுவாமிஜியின் ஆங்கிலேயச் சீடர்களுள் ஒருவரான குமாரி எப். ஹென்ரீட்டா முல்லர் இந்நூலின் முன்னுரையில் கூறியுள்ளதாவது :

''அனைத்து கீழைநாட்டு மாணவர்களும், இவர்களைக் காட்டிலும் குறிப்பாக இங்கிலாந்து, அமெரிக்காவில் உள்ள வர்கள் இந்நூலை வரவேற்பார்கள். சுவாமிஜியின் சுடர் விட்டு ஒளிர்கின்ற தேசபக்திப் பேருரைகள் அண்மையில் இந்தியர்களுக்காக கூறப்பட்டவை, இந்த நூலில் அடங்கி யுள்ளன. உலகத்தையே தமது தாயகமாகக் கொண்டு சுவாமிஜி பேசிய விரிந்தகன்ற தேசபக்தி உரைகள் இங்கிலாந்து, அமெரிக்காவில் உள்ளவர்களுக்கு உரியன வாகும். சுவாமிஜியின் சொற்பொழிவுகளை அச்சிட்டு வெளிவந்த அதிகாரபூர்வமான ஒரே ஒரு வெளியீடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் என்பதினால் இதன் மதிப்பு அளவிட முடியாதது. ஆனால், சுவாமிஜிக்கு அளிக்கப் பெற்ற எழுச்சிமிக்க வரவேற்பு போதிய அளவில், இந்த நூலில், பதிவாக வில்லை. இந்தியாவின் பலவிடங்களில் சுவாமிஜிக்கு அளிக்கப் பெற்ற வரவேற்புகள் முழுமையாக வழங்கப் பெற்றிருந்தால், இந்தத் தொகுப்பு மேலும் நிறைவெய் திருக்கும்.'' [சுவாமி ஜோதிர்மயானந்தாவின் முற்கூறிய ஆங்கில நூல், பக். 569].

## ஞானத் திரட்டு

தமது சொற்பொழிவுகளை, மொழி பெயர்க்கப் பெற்று பரப்ப வேண்டும் என்று சுவாமிஜி விரும்பியதை நிறை வேற்ற சென்னையில் வெளியிடப் பெற்ற வெளியீடு, 'ஞானத் திரட்டு'.

1898—இல் இரு பாகங்களாக வெளிவந்தது, 'ஞானத் திரட்டு'. ''விவேகானந்த சுவாமிகளின் உபன்யாஸங் களாகிய ஞானத்திரட்டு'' என்பது நூலைப் பற்றிய ஒரு குறிப்பாகும்.

இந்த நூலை மொழி பெயர்த்து வெளியிட்டவர், ''லோகோபகாரி'' வி. நடராஜ ஐயர், பி. ஏ; இவர் 1895 டிசம்பரில் சென்னையில் 'லோகோபகாரி' எனும் மாத இதழைக் தொடங்கினார். இந்த இதழ் 1896-இல் மாதம் மூன்று முறையாகவும், 1897—இல் வார இதழாகவும் வெளிவந்தது.

இந்தியத் தத்துவஞானத்தை எளிதில் தமிழில் புரிய வைக்க பழமொழிகள் நிறைந்த செந்தமிழ் நடையை இவர் பயன்படுத்தினார். இதே நடையில் சுவாமிஜியின் மேலை நாட்டுச் சொற்பொழிவுகளை தமிழாக்கம் செய்துள்ளார்.

இந்த நூல் சுவாமி விவேகானந்தருக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. சுவாமி இராமகிருஷ்ணானந்தர் 'அனுமதியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியும்' இந்த நூலிற்கு வாய்த்ததையும் நூலாசிரியர் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். முகவுரையில் ஒரு பகுதி, வருமாறு:

''உலகெங்கும் கியாதி பெற்று ஆங்காங்கே நம்முடைய ஆரிய மத சித்தாந்தங்களையும், வேதாந்தங்களையும் அநாரியர்களும் தெரிந்து கொள்ளுமாறு ஆங்கிலேயே பாஷையில் உபன்யஸித்து நமது இந்து மதத்தின் பெருமையைப் பிற கண்டங்களிலும் விளக்கிக் காட்டிய மகாபரிசுத்தராகிய ஸ்ரீமான் விவேகானந்த சுவாமிகளின் கருத்துப்படி அவர்களுடைய உபன்யாஸங்களை தமிழ் நாட்டார் எளிதிலுணர வேண்டுமென்னும் ஆசையால் மொழி பெயர்த்தேனேயன்றி வேறல்ல.''

முதல் பாகத்தில் முதலிரு கட்டுரைகள் 'எதார்த்த மனிதன்,' ''போலி மனிதன்''; இதையடுத்து 'சிகாகோ சொற்பொழிவுகள்''; பிறகு 'ஹிந்து மதம்', 'கர்மயோகம்' 'ஆராதனை', 'நன்மை—தீமை, 'முக்தி' 'பக்தி' எனும் தலைப்புகளில் சுவாமிஜியின் அருளுரைகள் அமைந்துள்ளன.

''உலகெங்கும் கீர்த்தி பெற்ற ஓர் அவதார புருஷன் போல் விளங்கி வரும் ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள்'' எவ்வளவுத் தெளிவாக, செறிவாக பயனுள்ளதாகவும் பேசியுள்ளார் என்பதை நூலாசிரியர் பின்வருமாறு வருணித்துள்ளார்.

''சரீரத்துக்கு ஆரோக்கியமான மருந்தைத் தேனிலும், பாலிலும், சர்க்கரையிலும், சேர்த்துப் பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பதுபோல், வேதாந்தமாகிய அரிய மருந்தை சமயோசித்தமான நற்கதைகளுடனும், அற்புதமான சரித்திரங்களுடனும், திவ்வியமான உதாரணங்களுடனும் விவேகானந்தர் நமக்கு அளித்திருக்கிறார். ஆதலினால் இப்புத்தகத்தைப் படித்தறிவது சற்று கஷ்டமாயிருக்குமென்று கொஞ்சமேனும் நினைக்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதா சாஸ்திரத்தையும், உபநிஷத்துகளையும் பல உதாரணங்களுடன் சிறுவர்கள்கூட எளிதில் அறிந்து ஆனந்தம் கொள்ளுமாறு சுவாமிகள் பிரசங்கித்திருக்கிறார்.''

ஞானத்திரட்டின் இரண்டாம் பாகத்தில் சுவாமிஜியின் பக்தியோகமும், ஞானயோகத்தின் ஒரு பகுதியும் அடங்கியுள்ளது. ஞானத்திரட்டின் மூன்றாம் பாகத்தை வெளியிடவும் திட்டமிட்டிருந்தார், 'லோகோபகாரி' வி. நடராஜ ஐயர். ஆனால், வெளிவந்ததாகத் தெரியவில்லை.

'ஞானத்திரட்'டை, அப்பொழுது டார்ஜிலிங்கில் தங்கியிருந்த சுவாமிஜிக்கு நடராஜ ஐயர் அனுப்பினார். சுவாமிஜி நூலைப் பெற்றுக் கொண்டு 15-4-1898-இல் பின் வரும் கடிதத்தை எழுதிப் பாராட்டியுள்ளார்.

''அன்பார்ந்த ஐயா,

நிகழும் மாதம் 7 ஆம் தேதியன்று நீர் வரைந்து விடுத்த கடிதத்தையும் எனது உபன்யாஸங்கள் சில வடங்கிய ஞானத் திரட்டு புத்தகத்தையும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டேன்.

உண்மையாகவே நீர் பொதுவாய் தமிழ் பேசும் ஜனங்களுக்கும் முக்கியமாய் எனது பிரசங்கங்களைப் படிக்க விரும்பிய உமது பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கும் மிகப் பெரிய உபகாரம் செய்து இருக்கிறீர்.

நான் சொன்ன விஷயங்களைச் சகல ஜனங்களுக்கும் அறிய வேண்டுமென்பது என்னுடைய முக்கிய கருத்து. சுதேச பாஷைகளில் என்னுடைய உபன்யாஸங்களைப் மொழிபெயர்ப்பதுதான் அதற்குத் தகுந்த வழி.

இவ்விஷயத்தில் நீர் மிகுந்த ஆவலுடன் முயற்சி செய்து எல்லோருக்கும் முதன்மையாய் எனது உபன்யாஸங்களைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக உம்மை நான் மிக மெச்சுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையைத் தரதக்க உம்முடைய பிரயத்தனம் நன்றாகப் பலிக்குமாறு நான் கோருவதுடன், இக் கடிதம் மூலமாய் உமக்கு அனேக ஆசிர்வாதம் செய்கிறேன்.

உமது உண்மையுள்ள விவேகானந்தர்"

மேற்காணும் கடிதம் நூலாசிரியரால் மொழி பெயர்க்கப் பெற்று, புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்கில மூலமும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தமது சொற்பொழிவுகளின் இந்திய நாட்டு மொழிகளில் மொழியாக்கம் பெற வேண்டும் என்பதை சுவாமிஜி சுட்டிக்காட்டியுள்ளது கவனிக்கத்தக்கது.

'சிகாகோ சொற்பொழிவுகள்' மொழி பெயர்ப்புகள் பற்றிய ஆய்வடங்கலில் நடராஜ ஐயரின் 'முதல் முயற்சி' இடம் பெறுகின்றது.

"ஸ்ரீமத் சுவாமி விவேகானந்த சுவாமிகள் தோத்திர மாலை"

பதினெட்டு பக்கங்களைக் கொண்ட கையடக்கப் பதிப்பான இந்த நூல் 1899-இல் வெளி வந்தது. சென்னை வியாசர்பாடியைச் சார்ந்த அரிகரபாடி சின்னைய முதலியார் என்பவரால் இயற்றப் பெற்றது, இந்நூல். வெண்பா யாப்பில் அமைந்த இந்த நூல், நூலாசிரியரின் நேரடி அனுபவத்தில் விளைந்தது. அ. சின்னையா முதலியார் 1897-இல் சுவாமிஜியை தொலைவில் நின்று பார்த்து தரிசனம் செய்தவர். சுவாமிஜியை அணுக்கத்தில் சென்று பார்க்க முடியாதச் சூழ்நிலையும் கவிதையில் வெளியிட்டுள்ளார். ஆங்கிலம் கற்றோர் வகுத்த வளையத்திற்குள் பிரவேசித்து 'சாந்நித்யம்' பெற தமிழ் மட்டுமே அறிந்த இந்த எளியவரால் இயலாது போயிற்று என உய்த்துணர முடிகின்றது. அவருடைய தயக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணமாகலாம். பின்வரும் பாடலில், இதை அறிகின்றோம்.

ஏழையெதிர் வந்தேயென்
குறையெலாஞ் சொல்லிப்
பாழை யொழித்துய்யும்
பண்பின்றிக் கூழைக்
குடிப்பேணும் மாசனத்தின்
கூட்டத்தில் கூடில்
தடிப்பயலென்றே யுணர்ந்தேன்
றாழ்ந்து.

1897-லேயே பாமாலை இயற்றத் தொடங்கியதற்கான குறிப்பை பின்வரும் பாடலில் அறிகின்றோம்.

ஆசையினாற் பாமாலையன்
பாகவே செய்து
ஜாகையினிற் கொண்டு
வந்து தாழ்ந்துமே — தாகமுடன்
சாத்தி நமஸ்கரித்துச்
சங்கதியெல்லா முரைத்துத்
தோத்திரஞ் செய்யத் துணிந்தேன்
தோய்ந்து

சுவாமிஜி 'கேஸல் கெர்னான்', 'விக்டோரியா பப்ளிக்ஹால்' முதலான இடங்களில் பேசியதையும் நேரில் கண்டு, கேட்டதை கவிதையில் குறிப்பிட்டுள்ளார், சின்னைய முதலியார். 'கெர்னா' னில் சுவாமிஜியின் உரையாடற் கலைப் பாங்கைப் பற்றியத் தமது கணிப்பைப் பின் வருமாறு வெளியிட்டுள்ளார், நூலாசிரியர்.

கடலோரத்தின் வாழ்
கனவான் நன்வீட்டில்
தடைசெய்து கேட்டோர்க்குச்
சார்பாய்—படபடென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவை கூறியுளங்
களிக்கவே செய்து
சிந்தை மகிழ்ந்தாய் நீயே
தேர்ந்து.

சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி வென்று நின்றதை, விளக்கும் பாடலில், மகாபாரதக் கண்ணனை தனது மனதிலே கட்டிப்போட்ட சகாதேவனுடன் ஒப்பிட்டுப் பின்வருமாறு இசைத்துள்ளார் :

சிகாகோ நகரத்திற்
சேர்ந்த கூட்டத்தில்
சகாதே வனோயாரு
வன்றானே—மகாதேவன்
என்று விளங்குவது இந்து
மதத் தீர்ப்பென்று
சென்றுநிலை நாட்டினாய்
தேர்ந்து.

இந்தத் 'துதிமாலை'யின் இரண்டாம் பாகத்தையும் வெளியிட எண்ணமிட்டவர் போல், இந்நூலிற்கு முதல் பாகம் என்று பெயரிட்டார் எனத் தெரிகின்றது. ஆனால், இரண்டாம் பாகம் வெளிவரவில்லை.

சுவாமிஜியின் சிகாகோ சர்வமத சபை சாதனைகளை உரிய பின்னணியுடன், இயற்றப்பட்ட முதல் கவிதை நூல், இந்நூலே என்பது இராமகிருஷ்ண இயக்கத்தின் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியச் செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of ...
04 JAN 2022
LIBRARY

# தற்காலப் பயன்பாட்டிற்கு சிகாகோ சொற்பொழிவுகள்

மாறிக் கொண்டே வரும் சமூக-ஆன்மிகச் சூழல்களுக்கிடையே என்றுமுள விழுமியச் செய்திகளைக் கொண்டவை, சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகள். முதல் சிகாகோ சர்வமத சபைக்குப் பிறகு காலவோட்டத்தில் நூறாண்டுகள் கழிந்தபோதிலும், சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகள் தற்காலப் பயன்பாட்டிற்கு பயன்படத் தக்கனவாகும்.

1893-ஆம் ஆண்டு சர்வமத சபைக்குப் பிறகு சில சர்வமத சபைகள் கூடியுள்ளன. இவற்றைப் பற்றியச் சுருக்கமான அறிமுகம் இங்கு தேவைப்படுகின்றது.

## 1937-இல் ஒரு சர்வமத சபை

குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்கத்தாவில் 1937-இல் மார்ச் மாதம் ஒன்றாம் தேதியில் இருந்து எட்டாம் தேதி வரையில் ஒரு சர்வமத சபை ஏற்பாடாகியது. சுவாமி அபேதானந்தர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தமது சொற்பொழிவின் இறுதியில் சுவாமி அபேதானந்தர் கூறியதாவது: ''வகுப்புவாதச் சண்டைகளுக்கும், துன்பங்களுக்கும் சாவுமணி இந்தச் சர்வமத சபையில் அடிக்கப்படட்டும். பல சமயத்தவர்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர உணர்வு மேலோங்க ஒரு பெரும் வாய்ப்பை இந்தச் சபை ஏற்படுத்தட்டும்.''

## 1963-இல் ஒரு சர்வ மதசபை

சுவாமிஜியின் பிறந்த நூற்றாண்டு விழாவின் ஓர் அங்கமாக சர்வ மதசபை ஒன்று கல்கத்தாவில் 1963-இல் கூட்டப்பெற்றது. சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் இந்த சர்வ மதசபை கூடியது. டிசம்பர் 29, 1963-இல் இருந்து, சனவரி 5, 1964 வரையில் கல்கத்தா பார்க் சர்க்கஸ் எனுமிடத்தில் நிறுவப்பெற்ற மிகப் பெரிய பந்தலிலே இந்த சர்வமத சபை நடைபெற்றது.

இராமகிருஷ்ண மடம்—மிஷனின் தலைவர் சுவாமி மாதவானந்தாஜி மகராஜ் சர்வமத சபையைத் தொடக்கி வைத்தார். துணைத்தலைவர் சுவாமி யதீஸ்வரானந்தாஜி மகராஜ் சர்வமத சபைக்குத் தலைமை வகித்தார். பதினொறு அயல் நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

1893-இல் சுவாமிஜி ஆற்றிய அற்புத உரைகள், எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற சர்வமத சபையை வழிநடத்தின. இந்தச் சபையில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளில் ஐம்பத்தெட்டுக் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று தனி நூலாக, நூற்றாண்டு விழாக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரைகள் சிலவற்றின் பின்வரும் தலைப்புகள், சுவாமிஜியை மைய மாகக் கொண்டவை.

''சுவாமி விவேகானந்தரும், இன்றைய மானுட விழுமங்களும்; தற்கால உலகத்திற்கு சுவாமி விவேகானந்தர் செய்தியின் முக்கியத்துவம்; சுவாமி விவேகானந்தரும் எதிர்கால இந்தியாவும்; தெய்வீகமானுடநேயம் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜியின் அருளுரை; அமெரிக்கர் பார்வையில் சுவாமி விவேகானந்தர்; சுவாமி விவேகானந்தரும் மேலைநாடுகளும்; சுவாமி விவேகானந்தரின் வேதாந்த, சமூகத் தத்துவம் உலக அமைதியும் இராமகிருஷ்ணர்- விவேகானந்தரும் உலகளாவிய சமயமும், சுவாமி விவேகானந்தரும்; தெய்வீக விழிப்பை ஏற்படுத்திய சுவாமி விவேகானந்தர்.''

சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிவுகளின் காலத் தேவைக்கேற்ற அம்சங்கள், இந்த சர்வமத சபையில் எடுத்துரைக்கப்பட்டன.

### சிகாகோ சர்வமத சபை—1993

நூற்றாண்டிற்குப் பிறகு, சர்வமத சபை, சிகாகோவில் 1993, ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 5 வரையில் நடைபெற்றது. உலகெங்கிலுமிருந்து 6000 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர். [The Chicago Parliamen tof Religions 1993, A Personal View Brahmacharini Ishni Vedanta Kesari, November 1993 P. 448]

சிகாகோ விவேகானந்தா வேதாந்தா சொஸைடியின் உறுப்பினர்கள் திட்டத்திலே உருவானது இந்த சர்வமத சபை. மேலும் பல அமைப்புகள் இணைந்து, சர்வமதசபை திட்டக்குழு அமைக்கப்பட்டது. 1893—இல் நிகழ்ந்த, சர்வமத சபையில் அமெரிக்க சுதேசி மக்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படவில்லை. அத்துடன் அவர்கள் கடுமையான ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டிருந்தனர். இவர்கள் 1993-இல் சிகாகோ சர்வமத சபையில் பங்கேற்றது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த அமெரிக்க சுதேசிகளின் பாரம்பர்ய சமயங்கள் நீண்ட காலமாக தடை செய்யப்பட்டிருந்தன என்பதும் நினைவிற்குரியது. 1978—இல் இந்தத் தடை நீங்கியது. இந்தச் சூழலில் அமெரிக்காவின் பழங்குடி சுதேசி மக்கள் சமயப் பிரதிநிதித்துவம் சர்வமத சபையில் ஏற்பட்டது, பாராட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலுக்குரியது. ''பரம் பொருளை உணர்வதற்காக ஆன்மா செய்யும்'' முயற்சிகளில், ''மிகவும் தாழ்ந்த ஆவி வழி பாட்டிருக்கும்'' இடமளித்து சுவாமிஜி சர்வமத சபையில் பேசியது, இங்கு அமெரிக்க பழங்குடி மக்களின் சமய நம்பிக்கைக்கு சர்வமத சபையில் வாய்ப்பளிக்கப்பட்டதை அங்கீகரிக்கின்றது, எனலாம்.

வேதாந்தம் பற்றி சுவாமி கஹனானந்தாஜி பேசினார். மற்றும் இராமகிருஷ்ணா இயக்கத்தின் பல மூத்தத் துறவி களும், ஸ்ரீ சாராத மடத்தைச் சார்ந்தவர்களும் சர்வமத சபையில் உரையாற்றினர். இந்த விவரங்கள் 'வேதாந்த கேசரி'யில் (நவம்பர், 1993) வெளிவந்தவை.

சென்னை தினப்பத்திரிகைச் செய்திகள் வாயிலாக சிகாகோ சர்வமத சபை நடவடிக்கைகள் பற்றி சில விவரங்கள் அறியப்படுகின்றன. சென்னை 'இந்து' ஆங்கில நாளிதழில் ''சிகாகோ உலக சமயங்களின் இரண்டாவது மாநாடு'' பற்றி வெளிவந்துள்ள செய்தியின் சாராம்சம் வருமாறு :

உலகப் பொதுமையான அறவியல் கோட்பாடுகள் பற்றிய அறிக்கை ஒன்று சர்வமத சபையின் சார்பில் வெளியிடப்பட்டது. ஒன்பது பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கை, உலக சமயங்கள் அனைத்தும் பின்பற்ற வேண்டிய மிகச் சிறந்த ஒரு விதிமுறையை வலியுறுத்தியது. அதாவது ''நம்மை, பிறர் எவ்வாறு நடத்த வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அவ்வாறு நாம் பிறரை நடத்த வேண்டும்'' என்பது, அந்த விதிமுறையாகும். இந்த விதிமுறையின் தத்துவ வடிவத்தை பகவத் கீதையின் அத்யாத்ம யோகத்தில் பின்வருமாறு அறிகின்றோம்.

''யோகத்தில் கலந்தவன் எங்கும் சமப் பார்வை யுடையவனாய், எல்லா உயிர்களிடத்தும் தானிருப் பதையும், தன்னுள் எல்லா உயிர்களுமிருப்பதையும் காணு கின்றான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத் தலைவர்கள், மதங்களின் பெயரால் வெறித்தனம், வெறுப்பு, ஆக்ரமிப்பு முதலானவற்றைப் பரப்புவதைக் கண்டு வேதனையுறுவதாகவும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கையைத் தயாரித்த ஸ்விட்சர்லாந்து நாட்டு சமயபோதகர் ஹான்ஸ்குங், அறிக்கையில் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார். 'கடவுள்' என்ற சொல் அறிக்கையில் இடம் பெறாதது. ஒரு புதுமை. பரம்பொருள் ஒன்று இருப்பதை ஏற்க மறுப்பவர்களை விலக்க வேண்டாம் எனும் நோக்கத்துடன் 'கடவுள்' எனும் சொல், அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என ஹான்ஸ்குங் காரணம் காட்டியுள்ளார். கடவுள் நம்பிக்கையற்றவர்களும் ஒழுக்க நெறிகளைப் புரிந்துக் கொள்வதற்குரியக் கோட்பாடுகள், மனித சமுதாய வரலாற்றில் முதன் முறையாக, சர்வமத சபையை ஒட்டி உருவாக்கப் பெற்றதாகவும் ஹான்ஸ்குங் கூறியுள்ளார்.'' ['இந்து', சென்னை ஆங்கில நாளிதழ், செப்டம்பர் 5, 1993, ப. 6]

'இந்து' வில் வெளி வந்த சர்வமத சபையின் செய்தி மேற்கண்டவாறு இருக்க, சென்னை, 'தினமணி' நாளிதழில் வெளி வந்த பின் வரும் செய்தி சற்று வித்தியாசமாக உள்ளது.

''சுமார் 250 விதமான மதங்கள், பிரிவுகள், நம்பிக்கைகளை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் 7,700 பிரதிநிதிகள் இந்தப் பேரவையில் கலந்து கொண்டனர். இதே சிகாகோ நகரில் சுவாமி விவேகாநந்தர் கலந்து கொண்ட முதல் பேரவை 1893-இல் நடைபெற்றது. ஆனால் 100 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட மத மாச்சரியங்கள் குறையவே இல்லை; மாறாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை உணர்த்தும் வகையில் இந்தப் பேரவையிலே சில சம்பவங்கள் நடந்தன.

''சூனியக்காரர்கள் என்று தங்களால் அழைக்கப்படும் 'விக்குகளுக்கும்' மாநாட்டில் இடம் தரப்பட்டதை ஆட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேபித்து வரவேற்புக்குழுவிலிருந்து ஆசாரக் கிறித்துவர்கள் விலகிவிட்டனர். 'இஸ்லாமிய தேசம்' என்ற அமைப்பின் அமைச்சர் என்ற நிலையில் லூயி பராக்கன் என்பவர் கலந்து கொண்டதை ஆட்சேபித்து 4 யூத அமைப்புகள் பேரவைக்கான தங்களுடைய உதவிகளை ரத்து செய்து விட்டன. (உண்மையில் இஸ்லாமிய தேசம் என்று எதுவுமில்லை).''

ரோமன் கத்தோலிக்கர்களின் மதத் தலைவர் ஜோசப் பெர்னார்டினும், தலாய்லாமாவும் மற்றும் பல தலைவர்கள் கையெழுத்திட்ட ஓர் அறிக்கையும் வெளியிடப் பட்டது.

உலக அமைதியும், நீதியும் தழைப்பதற்கு அனைத்து மதங்களின் ஒத்துழைப்பை வேண்டும் இந்த அறிக்கை பின் வரும் உறுதி மொழியை எடுக்க வற்புறுத்தியது.

''மதத்தின் பெயரால் மற்றவர்களை அடக்கி ஆள மாட்டோம்; புண்படுத்த மாட்டோம்; மனித உயிர் களைக் கொல்ல மாட்டோம்; சித்திரவதையில் இறங்க மாட்டோம்.''

## 1993-இல் கல்கத்தாவில் கூடிய சர்வமதசபை

இராமகிருஷ்ண மடம், மிஷன் சார்பில் கல்கத்தாவில் செப்டம்பர் 11, 12, 18, 19 தேதிகளில், சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்த சர்வ மதசபை, சுவாமிஜியின் சீரிய சிந்தனைகளின் தற்காலப் பயன் பாட்டிற்கு ஆக்கம் சேர்த்துள்ளது.

நான்கு நாட்களின் அனைத்து அமர்வுகளிலும், ''சுவாமி விவேகானந்தரின் சமரசம் பற்றியக் கருத்தமைப்பு : எதிர் பார்ப்புகளும், சிக்கல்களும்'' (Swami Vivekananda's Concept of Harmony: Prospcts and Problems) எனும் தலைப்பு ஒன்றிலேயே அனைவரும் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உதவி செய்க, சண்டையிடாதே; ஒன்று படுத்துக, அழித்து விடாதே; சமரசமும் சாந்தமும் வேண்டும், கருத்து வேறுபாடு வேண்டாம்'' எனும் சுவாமிஜியின் சிகாகோ செய்தியை கல்கத்தா சர்வமத சபை முன் நிறுத்தி ஒளிரச் செய்தது.

இருபது அயல் நாட்டுப் பிரதிநிதிகள் மட்டுமல்லாது, பலவகைப்பட்ட சமயங்களைச் சார்ந்த சுமார் 1200 பிரதிநிதிகள், கல்கத்தா சர்வமத சபையைச் சிறப்பெய்தச் செய்தனர். கிறிஸ்துவரும், இஸ்லாமியரும் இரு அமர்வு களின் தலைவர்களாகப் பொறுப்பேற்றதும், குறிப்பிடத் தக்கச் செய்தியாகும். மக்கள் சீனா, ரஷ்யப் பிரதிநிதிகள், சுவாமிஜியைப் பற்றிப் பேசியதும் குறிப்பிடத்தக்கதாகும். ஓர் இந்தியக் கிறிஸ்துவப் பெண் பிரதிநிதி தமது பேச்சை ''ஓம்சக்தி'' என ஓதித் தொடங்கினார். (வேதாந்த கேசரி, நவம்பர், 1993, ப. 446)

இந்தச் சர்வமத சபையில் பிரார்த்தனைகள் வேதங் களில் இருந்து மட்டுமல்லாமல், கிறிஸ்துவ, இஸ்லாமிய, பௌத்த, யூத சமயப் பிரார்த்தனைகளில் இருந்தும் ஓதப்பட்டன. சமய சமரசவுணர்வு, நடைமுறையிலேயும் இங்கு நிகழ்த்திக் காட்டப்பட்டது.

சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் தமது சிறப் புரையில், இந்தியாவில் பின்பற்றப்படும் சமய சமரசத்தைச் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பேசினார். ''இந்தியாவில் நாத்தி கர்களும், கடவுள் இருப்பைப் பற்றிப் பேச மறுப்பவர் களும் மற்றவர்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழும் இந்த நடைமுறை அனுபவத்தை உலகில் வேறெங்கும் காண வியலாது'' என அவர் சுட்டிக் காட்டினார். இந்தியாவில் தற்சமயம் தலையெடுத்துள்ள சமய அடிப்படைவாதம் விரைவில் அகன்று விடும்; பண்டைய சமரச உணர்வை மீண்டும் பெற்று விடுவோம் என்றும் கூறினார், சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் ['இந்து', நாளிதழ், சென்னை, 12—9—93.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண மடம், மிஷன் தலைவர் சுவாமி பூதேசானந்தாஜி மகராஜ், சுவாமிஜியின், "சமயங்கள் தம்முள் முரண்பட்டவை அல்ல; ஒன்றுக்கொன்று நிறைவு செய்வது" எனும் அருளுரையை மேற்கோளாகக் காட்டி சமய சமரசத்தை விளக்கிப் பேசினார்.

இராமகிருஷ்ண மடம், மிஷனின் பொதுச் செயலாளர் சுவாமி ஆத்மஸ்தானந்தாஜி மகராஜ் பேசிய பொழுது சமயத்தின் பெயரால் இன்று நிகழும் மதப் போராட்டங்களையும், இரத்தக்களரியையும் குறிப்பிட்டார். சமயம் என்றால் முரட்டுப் பிடிவாத லட்சியங்களும், சடங்குகளும்தான் என்று கருதுவோரால் புனித இடங்கள் அழிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தற்காலப் பயன்பாட்டிற்குச் சுவாமிஜியின் சிகாகோ சொற்பொழிகள்

தற்கால உலக நடப்புகளில் சமயங்கள் பெயரினால், பரஸ்பர துவேஷங்களினால், நடக்கும் போராட்டங்கள், அழிவுகள் உலக அமைதியைச் சீர்குலையச் செய்து வருகின்றன.

சிகாகோ சொற்பொழிவுகளில் முதல் நாள் சொற்பொழிவில் சுவாமிஜி எடுத்துரைத்த பின்வரும் கருத்துகள், தற்காலச் சிந்தனைக்கும், தீர்விற்கும் ஓர் அவசரத் தேவையாகின்றது.

"மதவிகற்பங்களும், மதச்சண்டைகளும், அவற்றினின்று ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் அழகிய பூவுலகத்தை நெடிது பற்றியிருந்தன. இந்த மண்ணுலகத்தை அவை கொடுஞ் செயலினாலே நிறைத்துவிட்டன. மீண்டும், மீண்டும் மானிட உதிரத்தை எங்கும் பரவச் செய்து நாகரிக வாழ்க்கையை அழித்து மக்கட் கூட்டத்தினரை திகைக்கும்படிச் செய்துவிட்டன......வாளினாலோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுகோலினாலோ ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ்செயலானது அகன்றுவிடுக.''

சிகாகோவில் இந்த ஆண்டில், 1993-இல் நடைபெற்ற சர்வமத சபையில் டாக்டர் பர்னி என்பவர் பேசிய பேச்சின் பின்வரும் பகுதி, இங்கு, கவனத்திற்குரியதாகின்றது.

''மானுடப் பிரச்னையின் மையப்பகுதியாக இன்று நமது பாரம்பர்ய சமய நம்பிக்கைகள் அமைந்துவிட்டது என மக்கள் கருதுகின்றார்கள். நமக்கு அமைதி அவசரமாகத் தேவைப்படுகின்றது. சமயங்களிடையே நிலவும் வெறுப்பினால் தற்காலத்தில் ஐம்பது போர்கள் மூண்டு முன்னேறி வருகின்றன.''

இந்தக்கருத்து, சுவாமிஜியின் முற்கூறப்பெற்ற சிகாகோ உரையின் தற்காலப் பயன்பாட்டை உணர்த்தவல்லது.

இந்தியாவிலும், வேறுசில கீழைநாடுகளிலும் அரசியலுக்கும், சமயத்திற்கும் இடையே நிலவும் ஒட்டுறவும் பெரும் பிரச்னையாக உள்ளது. இந்தியாவில் அரசியலில் இருந்து சமயத்தைப் பிரித்தெடுக்க ஒரு சட்டத்தைக் கொண்டு வரவும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. இந்தக் குழப்பத்திற்குக் காரணம் 'சமயம் என்றால் என்ன?' என்பதைப்பற்றித் தெளிவான, திட்டவட்டமான விளக்கத்தை அறியாமற் இருப்பதே ஆகும். இந்தியாவின் ஆதாரமே சமயவுணர்வுதான் என்று சுவாமிஜி கூறியதை சமய அடிப்படை வாதத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வழியே இல்லை. சமய சகிப்புத்தன்மையுடன், பிற சமயவுண்மையை ஒப்புக்கொள்ளும் ஆன்மிக நோக்கை அடிப்படையாகக் கொண்டது, சுவாமிஜி குறிப்பிடும் சமயமாகும்.

சர்வ மத சபையின் நிறைவு நாள் உரையில் கூறப்பெற்ற சுவாமிஜியின் பின் வரும் நற்சிந்தனைகள் தற்காலப் பயன்பாட்டிற்குரியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சர்வ மத சபை உலகத்திற்கு ஏதேனும் சுட்டிக் காட்டியது என்றால், அது, இது தான் : புனிதத் தன்மை, தூய்மை, இரக்கம் ஆகியன உலகில் எந்த ஒரு சமய அமைப்பின் உடமைகள் அல்ல என்பதை இந்தச் சபை மெய்ப்பித்துள்ளது. ஒவ்வொரு சமயமும் மிகச் சிறந்த ஒழுக்கமுடைய ஆடவரையும், பெண்டிரையும் அளித் துள்ளது. இந்தச் சான்று இவ்வாறு இருக்க, தனது சமயம் மட்டும் தனித்துப் பிழைத்திருக்க, பிற சமயங்கள் அழிந்து விடுமென எவரேனும் பகற்கனவு காண்பாராயின், அவருக்கு எனது மனப்பூர்வமான இரக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன்.''

தற்காலத்தில் மக்கட் சமூகத்தில் மன வளமும், தன்னம்பிக்கையும் குன்றிப்போயுள்ளது. மன வளமும், தன்னம்பிக்கையும் சமயவுணர்வால் பேணி வளர்த் தெடுக்கப்படுவதற்குரியன என்பதை சுவாமிஜி ''அம்ருதஸ்ய புத்ரா: '' எனும் வேத மந்திரத்தின் சாறு பிழிந்து தமது சிகாகோ சொற்பொழிவொன்றில் எடுத்துக் காட்டி யுள்ளார்.

''மனிதனுக்குள் ஏற்கனவே உறைந்துள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே சமயம்'' என்று சூத்திர மாக உரைத்த சுவாமிஜி, ''தெய்வங்களாகுங்கள், பிறரைத் தெய்வங்களாக ஆக்குங்கள்'' என்றும் உணர்த் தினார். இக்காலத்திற்கு மிக அவசியமான சமயக் கோட்பாடாகும், இது.

சமயத்தின் பெயரால் தன் மதிப்பும், தன்னம்பிக்கையும் ஏற்படுத்த சுவாமிஜி கூறியதாவது :

''ஓ! சிங்கங்களே! எழுந்திருப்பீர்களாக! நீங்கள் ஆடுகள் என்னும் மயக்கத்தைத் தொலைத்து விடுவீர் களாக. நீங்கள் நித்தியத்துவமுடைய ஆத்மாக்கள். சுதந்திரமுள்ள சித்துருவங்கள். ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; நித்தியர்கள்; நீங்கள் சடப் பொருள் அல்ல.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையைக் கெடுத்தொழிக்கும் மூட நம்பிக்கைகளையும், மதவெறியையும் பின்வருமாறு சாட்டியுள்ளார், சுவாமிஜி.

''மூடநம்பிக்கை, மனிதனின் பெரும் பகைவன்தான்; ஆனால் மதவெறி அதைவிட மோசமானது.''

தற்காலத்தில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி, விண்வெளி ஆய்வின் மூலமும், புதிய—புதிய தொழில் நுட்பப் படைப்புகள் மூலமும் தனது எல்லைகளை பாய்ச்சல் வேகத்தில் பரப்பிக் கொண்டே செல்கின்றது. இந்தச் சூழலில் சமயம் எதிர்கொள்ள வேண்டிய 'பிரச்னை'களும் பெருகிக் கொண்டே வருகின்றன. விஞ்ஞானமும், சமயமும் ஒன்றையொன்று முரண்பட்டு நிற்காமல், இணக்கம் கண்டு மானுட சமூதாய மேம்பாட்டிற்கு உதவ வேண்டும். விஞ்ஞானிகள், சமய ஞானிகள் உறவு மேலும் வலிமை பெறவேண்டியதை இரு தரப்பினருமே உணர்ந்து வருகின்றார்கள்.

''சமய உணர்வற்ற விஞ்ஞானம், முடமாகும்; விஞ்ஞான உணர்வற்ற சமயம் குருடாகும்'' என அமெரிக்கத் தத்துவஞானி எமர்சன் குறிப்பிட்டது முன்பே எடுத்துக் காட்டப் பெற்றது. (ப. 110). உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டினும் விஞ்ஞானத்தின் வரம்பைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

''புளுடோனியத்தின் இயற்பண்புகளை விஞ்ஞானத்தால் சிதைக்க முடியும். ஆனால் மனித இதயத்தில் உள்ள தீமையை அது சிதைக்க இயலாது.''

விஞ்ஞானம் வளர, வளர அத்வைத வேதாந்தத்தை போற்றும் விஞ்ஞானிகளின் எண்ணிக்கையும் கூடி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான வளர்ச்சிக்கு, சமயம் தடையாகவுள்ளது என்றும், தடையாக இல்லை என்றும் ஒரு விவாதம் சென்னையில் 1916-இல் நிகழ்ந்துள்ளது. அக்காலத்தில் புகழ்பெற்ற நாத்திகரான பேராசிரியர் லட்சுமிநரசுவிற்கும், கிறிஸ்துவப் பேரறிஞரான வி. சக்கரை செட்டியாருக்கும் இடையே இந்த விவாதம் நடைபெற்றது. (விவரமறிய, பார்க்கவும், ''பாரதியாரும் சமூக சீர்திருத்தமும்'', ஆசிரியர், பெ. சு. மணி). இவ்விருவரின் விவாதச் சுருக்கம் ''சோஷல் ரிபார்ம் அட்வகேட்'' எனும் ஆங்கில இதழில் வெளிவந்தது இந்த விவாதத்தை அப்பொழுது புதுச்சேரியில் இருந்த மகாகவி பாரதியார் படித்துவிட்டு, தமது கருத்தை ஒரு கடிதத்தின் வாயிலாக 'சோஷல் ரிபார்ம் அட்வகேட்'டில் வெளியிட்டார். மகாகவியினுடைய கடிதம் ஏப்ரல், 1916-ம் இதழில், ''Religion and Progress: A defence of Professor Narasu's Views by C. Subramanya Bharati'' எனும் தலைப்பில் வெளிவந்தது. இதன் ஒரு பகுதி வருமாறு :

''பேராசிரியர் நரசுவின் பேச்சை நான் படித்த பொழுது, என்னுடைய மத நம்பிக்கையைப் புண்படுத்தும் அம்சம் அதில் மிகக்குறைவே இருக்கிறது. திரு. சக்கரை செட்டியாருக்கு புதிய ஏற்பாட்டில் எவ்வளவு பற்று உண்டோ, அவ்வளவு பற்று எனக்கு வேதங்களில் உண்டு. பாரபட்சமற்ற வகையில் மதச்சார்பற்ற உணர்வுடன் செய்யப்படும் விஞ்ஞானப் பூர்வமான ஆய்விற்கு எதிர்ப்பு காட்டப்படுவதை என்னால் ஏற்க முடியவில்லை.

''விஞ்ஞான உணர்வுடைய பகுத்தறிவுவாதி இந்த நவீன உலகத்தின் மிக அண்மைக் காலக்காட்சியாகும். கடந்த நூற்றாண்டில்தான், மேலைநாடுகளில் இந்தப் பகுத்தறிவுவாதி தோன்றினான். இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த யூதசமயப் புனித நூல்களைக் கொண்டும், ஐயாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்தியப் புனித நூல்களைக் கொண்டும், நாற்பது ஆண்டு கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமைவாய்ந்த விஞ்ஞானவுணர்வுடைய பகுத்தறிவு வாதத்தைக் காலத்திற்குப் பொருந்தாது என்று தாக்கக் கூடாது......

''மதச்சார்பற்ற பகுத்தறிவு உணர்வுடையவர்களை தெய்வங்கள் அனுப்பி வைப்பதை வரவேற்று நன்றி கூறுபவர்களில் நானும் ஒருவன். மதச்சார்பற்ற ஆய்வு, கடவுள் மறுப்பைக் கூறுகின்றதா? இருந்து போகட்டும்; இதனால் கடவுளுக்கு ஒன்றும் இழப்பில்லை. உண்மை யான சமயம் அசைக்க முடியாதது...பொய்ம்மைகள் மாய்க்கப்படும்; உண்மையான சமயம் நிலைத்து நிற்கும்; தெய்வங்கள் மகிழ்ச்சி கொள்ளும்......

''விஞ்ஞானம் அல்லது பகுத்தறிவு விமர்சனத்தை இழித்துரைக்க வேண்டாம் என திரு. சக்கரை செட்டியாரை கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் அவை சமயத்திற்கு மிகவும் இன்றியமையாதத் தேவைகள்.''

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே, பிறந்த வேகத்திலே, விஞ்ஞானம், சமயத்தின் பெயரால் நிலவிய மூடநம்பிக்கை களைத் தாக்குவதில் கொண்ட ஆவேசம், கடவுளையே மறுப்பதில் ஆர்வம் காட்டியது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் மனிதகுலப் பிரச்னைகளைப்பற்றி அமைதி யாகச் சிந்தித்தபொழுது புறவுலகு மட்டுமல்லாமல், அகவுலகும் ஆய்விற்குரியது; தீர்வுகாண வேண்டியது என விஞ்ஞானிகள் உணரத் தொடங்கினர். இந்த மாற்றத்தின் தேவையை மிகத்தெளிவாக எடுத்துரைத்த முதல் இந்தியத் தத்துவஞானியாக சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் உயர்வெய்தினார்.

இந்து சமயத் தத்துவத்தை விளக்கி வந்த பொழுது, விஞ்ஞானத்தையும், சமயத்தையும் இணைத்து மிக அற்ப மாக ஒப்பாய்வு செய்தார் சுவாமிஜி. ''Manifestation, and not Creation, is the word of science to day'' எனத் தொடங்கி சுவாமிஜி கூறியதாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''படைப்பு அல்ல, ஒடுங்கியுள்ளது வெளிப்படுவது என்பது இன்றைய விஞ்ஞானத்தின் மொழியாகும். தனது நெஞ்சத்திலே நீண்ட காலமாகப் போற்றி வந்த கொள்கையானது நிறைந்த ஆற்றலுள்ள மொழிகளினாலே விஞ்ஞான முடிவுகளுடன் தெளிவுபடுத்தப்படப்போவதைக் கண்டு இந்து சமயத்தைச் சார்ந்தவன் பெரு மகிழ்ச்சி கொள்கிறான்.''

முற்கூறப் பெற்ற மகாகவி பாரதியாரின் கடிதத்தில் வெளிப்பட்ட விஞ்ஞான நோக்கிற்கான ஆதரவு, சுவாமிஜியின் அணுகுமுறையின் வழிப்பட்டதாகும். 'Reason and Religion'' (1896) எனும் பேருரையில் உண்மையான சமயம், காரண—காரிய ஆய்வை எதிர்க்காதது என்பதை விளக்கியுள்ளார், சுவாமிஜி. 'சமயம் தன்னுள் ஒரு விஞ்ஞானம்' என்பதை வலியுறுத்த 'Sceince of Religion' எனும் சொற்றொடரை ஆள்வதற்கு வழிகாட்டியவரும் சுவாமிஜியே ஆவார். சமயம் வேறு; புரோகிதக் கட்டுப்பாடு வேறு என்பதை உணர்த்தி சமயத்தின் விஞ்ஞானப் பார்வைக்கும் வழி வகுத்த சுவாமிஜியின் கருத்துகள் தற்காலப் பயன்பாட்டிற்கு உரியனவாகும்.

''மனிதனின் அகவுலகத்தைச் சார்ந்த விஞ்ஞான உண்மைகள் எவ்வாறு பண்டைய இந்தியச் சிந்தனையில் கூறப் பெற்றுள்ளது என்பதை தற்காலத்தில் விளக்கிய சுவாமி விவேகானந்தரின் கருத்துகளும் இன்றைய விஞ்ஞான ஆய்விற்கு பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.'' இவ்வாறு சுவாமி ரங்கநாதானந்தாஜி மகராஜ் குறிப்பிட்டுள்ளார். [Science and Religion, Fourth Impression, 1992, Swami Ranganathananda, P.7].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதச் சார்பின்மையைப் பற்றிய பல்வேறு தவறானக் கருத்துகளைப் புறந்தள்ள சுவாமிஜியின் 'இந்து சமயம்' எனும் சிகாகோ பேருரை வழி காட்டுகின்றது.

சிகாகோ சொற்பொழிவுகளில் சுவாமிஜி தூவிய சமயக் கருத்து விதைகள், பிறகு அவருடைய அருளுரைகளில் மலர்ச்சியுற்று, தற்காலப் பயன்பாட்டிற்கு ஆக்கம் அளிக்கின்றன. இஃது, தனி ஆய்விற்குரியது. சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ஸ்மரணானந்தா அவர்கள் ஒரு கட்டுரையில் (வேதாந்த கேசரி, செப்டம்பர், 1993) குறிப்பிட்டுள்ளது போல, 1993-ஆம் ஆண்டை ''சமய சமரச ஆண்டாக'' ஐக்கிய நாடுகள் சங்கம் அறிவிக்க வேண்டும். அத்துடன் சமய சமரச உணர்வு வலிவும்—பொலிவும் பெற்றுப் பரவிட ஓர் உலக இயக்கத்திற்கு சுவாமிஜியின் சிகாகோ பேருரைகளை வழி காட்டும் நெறிகளாகக் கொள்ள வேண்டும்.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பு

# 'சிகாகோ சாதனை'—இருவர் பார்வைகள்

''சென்ற சில வருஷங்களாக இந்தியாவிலே ஓர் புதிய எழுச்சி தோன்றியதற்கு முன் அடையாளமாக சுவாமி விவேகானந்தரும் அவரது கூட்டத்தாரும் தோன்றி உலக முழுதற்கும் ஹிந்துமத உண்மைகளை பட்டினத்தார் தமது பணத்தைச் சூறை கொடுத்தது போல வாரியிறைக்கத் தொடங்கினார்கள். லௌகீக இன்பங்களிலும், நாஸ்திக கோட்பாடுகளிலும் மூழ்கிக் கிடந்த அமெரிக்காவிலே போய் தமது 'ஸர்வதியாக' கோட்பாடுகளையும் எல்லா வஸ்துக்களின் ஏகத்துவத்தையும், விவேகானந்த சுவாமி ராஜமேகம் போல் நின்று வருஷிக்கத் தொடங்கினார்.''

: — மகாகவி பாரதியார்; 'இந்தியா'—வார இதழ்;
10-11-1906, சென்னை.

''ஸ்வாமி விவேகானந்தர் சிகாகோவில் நடைபெற்ற ஸர்வமத ஸபையில் நமது பாரத நாட்டு, ஆரிய சனாதன தர்மத்தை, சப்தமேகங்கள் ஒன்று கூடி வருஷித்தது போல் சண்ட மாருதமாய்ப் பிரசிங்கித்துப் பிற மதங்களை வென்று ஜயசீலராய் இந்தியாவிற்குத் திரும்பினார்.''

: — மகாகவி பாரதியார்; 'இந்தியா'—வார இதழ்
5-3-1910, புதுச்சேரி

''பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பிய நாகரீகத்துக்கு ஆதர்ச பூமியாக விளங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஹிந்து தர்மம் தன் வெற்றிக் கொடியை நிலை நாட்ட வேண்டுமென்று ஈசனுடைய ஸங்கல்ப மிருந்தது. அதற்கு விவேகானந்தர் கருவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.''

— மகாகவி பாரதியார், சுதேசமித்திரன்
வருஷ அநுபந்தம், 1920, பக். 27.

''அமெரிக்காவில் சென்று ஹிந்துமதப் பிரசாரம் பண்ண வேண்டுமென்ற நோக்கத்துடன் சுவாமி விவேகானந்தர் இந்தியாவிலிருந்து புறப்பட்டு ஜப்பானுக்குப் போன மாத்திரத்திலேயே, வேத சக்தியாகிய பாரத சக்தி அவருக்கு ஞானச் சிறகுகள் அருள்புரிந்து விட்டாள். ஜப்பானிலிருந்து அவர் இந்தியாவுக்கு எழுதிய கடிதங்களில் புதிய ஜ்வாலை தோன்றத் தொடங்கி விட்டது. நவீன ஹிந்து தர்மத்தின் அக்நி சக்தி அவருடைய உள்ளத்தில் இறங்கி நர்த்தனம் செய்யத் தொடங்கி விட்டது.''

—மகாகவி பாரதியார், முற்கூறிய அநுபந்தம்

''அமெரிக்காவுக்கு விவேகானந்தர் செல்வதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது; சௌகர்யங்களும் ஏற்பட்டன; சென்றார், அமெரிக்காவுக்கு; 'நாவாடினால் நாடாடும்' என்னும் பழமொழி இவர் விஷயத்தில் உண்மையாய் விட்டது. அங்கு கூடிய சர்வமத மகா சபையில் விவேகானந்தர் பேசுவதற்கு வாய்திறந்து இரண்டே வார்த்தைகள் கூறினார்; அமெரிக்கா தேசம் ஆடிவிட்டது! இந்து மதத்தின் உயர்ந்த கொள்கைகளை அமெரிக்கர்கள் கேட்டு ஆனந்தித்தார்கள்; பூர்வத்தில் ஸ்ரீசங்கரர் திக்விஜயம் செய்தது போல இப்பொழுது விவேகானந்தர் திக்விஜயம் செய்தார்.

— 'வீரமுரசு' சுப்பிரமணியசிவா, 'முன்னுரை'
சுவாமி விவேகானந்தர் கடிதங்கள்,
முதல்பாகம், 1916.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*APPENDIX :*

# SWAMI VIVEKANANDA'S MESSAGE OF A COMPREHENSIVE SPIRITUALITY

SWAMI RANGANATHANANDA

Vedanta in its application to daily life, individual and collective, forms one of the many contributions of Swami Vivekananda. The Spiritual message of Vedanta was interpreted for centuries as relevant only for those who have renounced the struggles of mundane life; and to those engaged in that mundane struggle, religion was presented, in all religions, as a static piety or a pietyfringed worldliness. Such piety can often co-exist with any amount of immorality, wickedness, intolerance, and violence. Thus there was a wide gulf between life and religion. The same religious devotee who will weep before his God in temple, church, mosque, or gurudwara will not hesitate to do harm to others, or exploit them, in the field of daily life. When questioned, the usual answer is: we are after all *samsaris*, worldly people: we are not saints!

Both life and religion, and all interhuman relationships, have suffered grievously from this separation. Life became self-centred and bereft of humanist values, and religion became a static piety of do's and don'ts. Such an idea of religion became less and less appealing to increas-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ing numbers of people, as well as utterly irrelevant, in the modern age. Swami Vivekananda has well described this deplorable state of so high a science as the science of spirituality which deals with the super-sensory (not super-natural) dimension of human life, and has also expounded that science, and the philosophy that synthesises life at the sensory and super-sensory levels in a unifying vision. Says he in one of his letters written from New York in March 1895:

'My master (Shri Ramakrishna) used to say that these names as, Hindu, Christian, etc., stand as great bars to all brotherly feelings between man and man. We must try to break them down first. They have lost all their good powers, and now stand as baneful influences, under whose black magic even the best of us behave like demons. Well, we will have to work hard and must succeed.'[1]

Again writing to Sister Nivedita from London in June 1896, he says:

'My ideal indeed can be put into a few words and that is: to preach unto mankind their divinity, and how to make it manifest in every movement of life.

'This world is in chains of superstition. I pity the oppressed, whether man or woman, and I pity more the oppressors.

'One idea that I see clear as daylight is that misery is caused by *ignorance* and nothing else. Who will give the world light? Sacrifice in the past has been the Law: it

---

1. *The Complete Works of Swami Vivekananda* (Calcutta: Advaita Ashrama, sixth edition), Vol. VI. pp. 303.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

will be, alas, for ages to come. The earth's bravest and best will have to sacrifice themselves for the good of many, for the welfare of all. Buddhas by the hundred are necessary with eternal love and pity.

'Religions of the world have become lifeless mockeries. What the world wants is character. The world is in need of those whose life is one burning love, selfless. That love will make every word tell like thunderbolt.'[2]

The great sages of India had developed the philosophy of the Upanishads, known as Vedanta, as *the science of human possibilities;* they knew the various urges and needs of man, sensory as well as super-sensory, and proved for them in their scheme of life through the two-fold values of *abhyudaya* and *nihshreyasa*– individual and social welfare, on the one hand, and spiritual emancipation, on the other. Vedanta is pervaded by a deep passion for truth and a deeper passion for human happiness and welfare; it does not deal with men as cut up into tribes, creeds, races and nations; it takes man as man gently by the hand, in his primitive state of childish exuberance, and leads him, through the delights and restraints of culture and civilisation, to the peace and fullness of perfection. It upholds the spiritual freedom of every man, woman, and tolerance and gentleness as its motto. The Advaitic vision of Vedanta is called by Gaudapada, the teacher of Shankaracharya's teacher Govindapada, as *Asparsha-yoga,* the yoga of non-separateness, the scope of which Gaudapada expounds thus:

---

2. Ibid., Vol. VII. pp. 489.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Asparsha yogo vai nama*
*Sarva-sattva sukho hitah;*
*Avivado aviruddhascha*
*deshitah tam namamyaham—*

'I salute this well-known yoga of non-separateness, which strives for the happiness and welfare of all beings and is free from all strife and contradiction.'[3]

It was this comprehensive philosophy of Vedanta that found living expression, with all its force and charm, in our time, in the lives and teachings of Shri Ramakrishna and Swami Vivekananda. They represent the Vedantic passion for total human welfare in all its phases, material and moral, cultural and spiritual.

The greatest teaching of Vedanta, the central teaching of this science of human possibilities, is summed up by Swami Vivekananda in a compressed utterance:

'Each soul is potentially divine. The goal is to manifest this divine within by controlling nature, external (through the physical sciences and social sciences) and internal (through morality, art, and religion). Do this either by work, or worship, or psychic control, orphilosophy—by one, or more, or all of these—and be free. This is the whole of religion. Doctrines, or dogmas, or rituals, or books, or temples, or forms, are but secondary details'[4].

Herein we find his clarion call to make Vedanta practical; if we are all essentially divine, and basically one with each other in that innate divine dimension, we

---

3. *Mandukya Upanishad Karika*
4. *The Complete Works*. Vol. I. p. 124.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have to manifest or unfold that divinity, in the context of our life, work, and inter-human relations. What a great purpose Vedanta thus keeps before human life! And how rich and lofty human life becomes when yoked to such a purpose! All ethical and moral values, the sprit of service and dedication, strength and fearlessness, and all work-efficiency, appear in man as a by-product of this manifestation of his or her innate divinity. When we begin to manifest our innate divinity, we begin to grow spiritually; we then also begin to transcend our separatist self which is the focus of tension, peacelessness, violence, crime, and exploitation. As the *Isha Upanishad* proclaimed it: 'Whoever sees the One Self in all beings and all beings in the One Self, cannot hate anyone'. This vision of spiritual unity bridges the gulf between sect and sect, and religion and religion, between man's external life and his internal life, between secular and the sacred, and action and contemplation. This many-sided expression, this comprehensiveness of Vedantic spirituality had earlier been expounded by Shri Krishna in the Gita; but it had not been grasped and implemented by our people. But this time it comes to us with a new authenticity and force through Shri Ramakrishna and Swami Vivekananda. Shri Ramakrishna expresses this Advaitic vision in a simple sentence as 'seeing God with eyes closed (in meditation) and with eyes open (while in action)'. Sister Nivedita brings out the practical implications of Swami Vivekananda's exposition of this Advaitic vision in two famous passages of her Introduction to the *Complete Works of Swami Vivekananda*,

'It is this which adds its crowning significance to our Master's life, for here he becomes the meeting point, not



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

only of East and West, but also of past and future. If the many and the One be indeed the same Reality, then it is not all modes of worship alone, but equally all modes of work, all modes of struggle, all modes of creation, which are paths of realisation. No distinction, henceforth, between sacred and secular. To labour is to pray. To conquer is to renounce. Life is itselt religion. To have and to hold is as stern a trust as to quit and to avoid.

'This is the realisation which makes Vivekananda the great preacher of Karma, not as divorced from, but as expressing, Jnana and Bhakti. To him, the worship, the study, the farmyard, and the field are as true and fit scenes for the meeting of God with man, as the cell of the monk or the door of the temple. To him there is no difference between service of man and worship of God, between manliness and faith, between true righteousness and spirituality.'[5]

Again: 'All his words, from one point of view, read as a commentary upon this central conviction:

"Art, science, and religion", he said once, "are but three different ways of expressing a single truth. But in order to understand this, we must have the theory of Advaita." '[6]

Writing to an Indian disciple from America in February 1896, Vivekananda expounded the first of his two life objectives thus:

5. Ibid., Vol. I (Our Master and His Message), p. xv.
6. Ibid., p. xvi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'To put the Hindu ideas into English and then maker out of dry philosophy and intricate mythology and quee, startling psychology, a religion which shall be easy simple, popular and, at the same time, meet the requirements of the highest minds—is a task only those can understand who have attempted it. The abstract Advaita must become living—poetic—in everyday life; out of hopelessly intricate mythology must come concrete moral forms; and out of bewildering Yogi-ism must come the most scientific and practical psychology—and all this must be put in a form so that a child may grasp it. That is my life's work.'[7]

On his second life objective, he wrote from America in January 1894 thus:

'My whole ambition in life is to set in motion a machinery which will bring noble ideas to the door of everybody, and then let men and women settle their own fate. Let them know what our forefathers as well as other nations have thought on the most momentous questions of life. Let them see specially what others are doing now, and then decide. We are to put the chemicals together, the crystallisation will be done by nature according to her laws.'[8]

Swamiji felt it deeply as a blot on India that, while her people *talked* high Advaita Vedanta, their daily life and human interactions in society proceeded from narrow and self-centred attitudes, and bore no impress of this high philosophy and spirituality; and he summoned our

7. Ibid., Vol. V, p. 104.
8. Ibid., p. 29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

people, in his Lahore lecture on Vedanta in 1897, *to wipe off this blot!* He showed how Vedanta can help us to transform what we usually call worldly or secular activities into spiritual ones—activities in the various fields such as secular education, management, industry, business, industrial labour, work of the housewife, farming, art, shoe-making, weaving, politics, administration. Spirituality is everyone's birthright, says Vedanta. To go here and there for spirituality is like proposing to go here and there for breathing! In some of his lectures, Vivekananda has indicated how spirituality can be comprehensive of all life and work. One of his five famous lectures, delivered in Madras in 1897 on his return from the West, has this very title: *Vedanta and Its Application to Indian Life*. There he says:

'These conceptions of the Vedanta must come out, must remain not only in the forest, not only in the cave, but they must come out to work at the bar and the bench, in the pulpit, and in the cottage of the poor man, with the fishermen that are catching fish, and with the students that are studying. They call to every man, woman, and child, whatever be their occupation, wherever they may be.....If the fisherman thinks he is the Spirit (the Atman), he will be a better fisherman; if the student thinks he is Spirit, he will be a better student; if the lawyer thinks he is the Spirit, he will be a better lawyer, and so on..... If you teach Vedanta to the fisherman, he will say: "I am as good a man as you; I am a fisherman, you are a philosopher, but I have the same God in me as you have in you." And that is what we want; no privilege for anyone, equal chances for all. Let everyone be taught that



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Divine is within, and everyone will work out his own salvation.'[9]

In the light of this Vedantic teaching of the innate divinity of one and all, and man's nature-given organic capacity to realise it in life, faith in oneself, *Atma-Shraddha*, ranks as the foremost virtue to be cultivated by man. One who has no faith in oneself cannot have faith in others. Tracing the downfall of India to the continuing sapping of this faith in themselves in our people, through a wrong understanding of religion, and also to the sad neglect, by our people, of their physical body, Vivekananda said:

'What we want is this *Shraddha*. Unfortunately, it has nearly vanished from India, and that is why we are in our present state. What makes the difference between man and man is this *Shraddha* and nothing else. What makes one man great and another weak and low is this *Shraddha*. My Master used to say: he who thinks himself weak will become weak, and that is true. This *Shraddha* must enter into you. Whatever of material power you see manifested by the Western races is the outcome of this *Shraddha*, because they believe in their muscles, and if you believe in your Spirit, how much more will it work! Believe in that infinite soul, the infinite power, which, with consensus of opinion, your books and sages preach. That Atman, which nothing can destroy, in it is infinite power, only waiting to be called out. For here is the great difference between all other philosophies and the Indian philosophy. Whether dualistic, qualified

9. Ibid., Vol. III 9th edition, pp. 245-46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

monistic, or monistic, they all firmly believe that everything is in the soul itself. Therefore, this *Shraddha* is what I want, and what all of us here want, this faith in ourselves; and before you is the great task to get that faith. Give up the awful disease that is creeping into our national blood, that idea of ridiculing everything, that loss of seriousness. Give that up. Be strong and have this *Shraddha*, and everything else is bound to follow.'[10]

Indian religious history shows that high spirituality and sainthood has been achieved by many working people like housewives, shoemakers, weavers etc. Shri Krishna, in the past, and Swami Vivekananda, today, go to all working people and whisper to them how to convert their work situation so as to ensure general social welfare, on the one hand, and their own spiritual growth, on the other. Here we see Vedanta going to man in his or her life and work situation, and not expecting man to leave his or her life and work situation to go to Vedanta. This is Swami Vivekananda's message of a comprensive spirituality which finds eloquent expression in one of his famous utterances:

'Teach yourselves, teach everyone, his real nature; call upon the sleeping seul and see how it awakes. Power will come, glory will come, goodness will come, purity will come, and everything that is excellent will come, when this sleeping soul is roused to selfconscious activity.'[11]

---

10. Ibid., pp. 319-20
11. Ibid., 4th edition, p. 193.

Courtesy: Prabuddha Bharata, January, 1989.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY



704836
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' இன்று காலையிலே இந்த மகாசபை கூடும்பொழுது அடித்த மங்கல மணியானது, மூடக் கொள்கைகளின் சாவு மணியாகும். வாளினாலோ, எழுது கோலினாலோ ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ் செயலானது அகன்று விடுக. ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்லுகின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக. ''

— சுவாமி விவேகானந்தர்
முதல்நாள் சொற்பொழிவு, செப்டம்பர் 11, 1893.

'' சர்வ மத சபை உலகத்திற்கு ஏதேனும் சுட்டிக் காட்டியது என்றால், அது இதுதான். புனிதத் தன்மை, தூய்மை, இரக்கம் ஆகியன உலகில் எந்த ஒரு சமய அமைப்பின் உடமைகள் அல்ல என்பதை இந்தச் சபை மெய்ப்பித்துள்ளது....தனது சமயம் மட்டும் தனித்துப் பிழைத்திருக்க பிறசமயங்கள் அழிந்துவிடுமென எவரேனும் பகற்கனவு காண்பாராயின், அவருக்கு எனது மனப்பூர்வ மான இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'உதவி செய், சண்டையிடாதே; ஒன்றுபடுத்து, அழித்துவிடாதே; சமரசமும் அமைதியும் வேண்டும், கருத்து வேறுபாடு வேண்டாம்; என்பதை ஒவ்வொரு சமயமும் தனது கொடி யில் விரைவில் எதிர்ப்பிற்கிடையே எழுதும் என்பதை நான் அவருக்குச் சுட்டிக் காட்டுவேன். ''

— சுவாமி **விவேகானந்தர்**
நிறைவுநாள் சொற்பொழிவு, நவம்பர் 27, 1893.

Wrapper Printed at : M.K. Color Process, Madras-14.
Phone : 84 14 78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org